
அ. காளாப்பூர்

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டுவிழாச் சிறப்புமலர்

23.4.2008





உ

அ. காளாப்பூர்

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில்

திருக்குட நன்னீராட்டுவிழாச் சிறப்பு மலர்

திருவள்ளுவராண்டு 2038 (சர்வதாரிஆண்டு)

சித்திரை மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை

23.04.2008

<u>வெளியீடு</u>

மலர்க்குழுவினர்

அ.காளாப்பூர்- 630 501

சிவகங்கை மாவட்டம்

அ.காளாப்பூர்

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில்
திருக்குடநன்னீராட்டுவிழாச் சிறப்பு மலர்

திருவள்ளுவராண்டு 2038 (சர்வதாரிஆண்டு)
வைகாசி மாதம் 28ஆம் நாள்
10.06.2008 செவ்வாய்க்கிழமை மண்டலபூசையன்று
வெளியிடப்பெற்றது.

அச்சாக்கம்
சொ.அருணன். எம்.ஏ

வடிவமைப்பு
கபிலன் பதிப்பகம் & கிராபிக்ஸ்
புதுச்சேரி

அச்சமைப்பு
சூர்யா பிரிண்டர்ஸ் சொலுாசன்ஸ்
சிவகாசி

மலர் மற்றும் திருக்கோயில் பற்றிய
தொடர்புகளுக்கு...

இரா.செல்வக்குமாரி
ஊராட்சிமன்றத் தலைவர்
(திருப்பணிக் குழுத் தலைவர்)
அ.காளாப்பூர்- 630 501
சிவகங்கை மாவட்டம்
பேச.- 9865045511

மலர்க்குழுவினர்

கௌரவத் தலைவர்

இராம.அருணகிரி Ex. M.L..A.

திருப்பணிக்குழுத் தலைவர்

திரு. **இரா.செல்வக்குமார்** B.A

மலர்க்குழுத் தலைவர்

முனைவர் **இரா.சேது** M.A. Ph.D

துணைத்தலைவர்கள்

திரு. **சுப.பார்த்திபன்** ஊர் அம்பலம்

திரு. **இராம.இராசுத்தேவர்,** நாட்டாண்மை

திரு. **சிங்கை ம.மந்திரி** M.A. P.Ed.

புலவர் **அ.பாண்டியன்** M.A. M.Phil, B.Ed. D.S.Y.M, (Ph.D)

செயலர்கள்

முனைவர் **சொ.சேதுபதி** M.A. M.Phil, B.Ed. Ph.D

நிருபர் திரு. **வே.அழகப்பன்**

துணைச்செயலர்கள்

திரு. **கரு.பிச்சையா அம்பலம்**

திரு. **ச.சேதுராமன் அம்பலம்**

பொருளாளர்

திரு. **கரு.சி.இராமநாதன்**

விளம்பரக் குழு

புலவர் **சே.காந்தி அம்பலம்**

புலவர் **நா.குழந்தைவேலு** M.A. B.Ed.

திருப்பணிக் குழுவினர்

திரு. சொ.சி.இராமன்

திரு. கரு.பிச்சையா அம்பலம்

திரு. சொ.சாமிநாதன்

திரு. கரு.சி.இராமநாதன்

திரு. பெரி.பெருமாள்

திரு. சுப.சேது

திரு. அழ.பழனிச்சாமி

திரு. கரு.ராஜாமணி

திரு. சொ.பெரியசாமி

திரு. அ.கலையரசு

திரு. பெரி.முத்தழகு

திரு. மு.கதிரேசன்



திரு. ம.அ.சி. சக்திவேல் அம்பலம்

திரு. ச.சேதுராமன்

திரு. ம.க.வே.அழகு

திரு. ம.வெ.மகாலிங்கம்

திரு. ச.க.பழ.இராமசாமி

திரு. ச.சி.சேவுகரெத்தினம்

திரு. சி.பெரி.கணேசன்

திரு. சி.பு.கரு.சேவுகப்பெருமாள்


திரு. ச.பெ.சி.வேலுச்சாமி

திரு. தி.சி.செல்வசேகரன்

திரு. ச.க.பழ.சே.தமிழரசு

திரு. சு.மனோகரன்





எங்கெங்கும் நிறைந்திருக்கும் எல்லையற்ற பரம்பொருளுக்கு இதயத்திலும், இருப்பிடத்திலும் கோவில்கள் அமைத்து வழிபாடு செய்வது வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாகி இருக்கின்றது. வாழையடி வாழையென வளர்ந்துவரும் மனித குலம், தமது சிந்தனை மற்றும் வாழ்வியல் போக்குகளுக்கு ஏற்பக்காலந்தோறும் வழிபாட்டு நெறிகள் புதுமையும் பொலிவும் பெற்றுத்திகழ்கின்றன. அவை குறித்த ஆய்வுகளும், விவாதங்களும், விளக்கங்களும் பெருகி வருகின்றன. உருவ, அருவ, அருவுருவ நிலைகளில் வைத்துப்போற்றப்பெறும் இறைவனுக்குத் திருக்கோவில் எழுப்பி வழிபாடு செய்து வரும் வழக்கம், பழங்காலந்தொட்டே தமிழகத்தில் நிலவிவருகின்றது. காலப்போக்கில் அது சிறுதெய்வ, பெருந்தெய்வ வழிபாடெனக் கருதப்பெற்ற போதிலும், அவ்வழிபாடுகளில் சிறுமை, பெருமை என்ற பேதமில்லை என்பதைப் பக்திஉணர்வுடையோர் நன்கு உணர்வர். பொதுவாய், சாதிய அடிப்படையில் பிரித்துக்காட்டுவதாகக் கருதப் பெறும் இவ்வழிபாட்டுமுறைகள் சாதிகளையும், சமயங்களையும் கூட ஒன்றுதிரட்டுகின்ற, மக்கள் பொதுமை காணுகின்ற ஆக்கவயப்பட்ட அமைப்பாகவே காணமுடிகின்றது. அவ்வகையில், ஐயனார் வழிபாடு, சாதி, சமய, இன பேதங்களைக் கடந்து மனிதர்களை ஒருங்கிணைப்பதோடு, இயற்கை பேணலை வழிபாட்டுமரபாக்கி இந்த அறிவியல் நூற்றாண்டில் இன்னும் அதிக கவனத்தை ஈர்ப்பதாய்த் திகழ்கின்றது. கல்முளைத்த கட்டடங்களைப் புறக்கணித்து இயற்கை மரநிழலும், இனிய வானமும், கொட்டும் மழையும், கொளுத்தும் வெயிலுமே தமக்கினியன என்று தனிச் சிறப்புடன் ஊர்ப்புறத்தே இருந்து காவல்காக்கும் ஐயனார், பரிவாரதெய்வங்கள் என்றைக்கும் வழிபாட்டிற்குரியவர்களாகத் தமிழர்களின் வாழ்வில் மையம் கொள்கின்றனர். அந்த வகையில் வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப என்னும் சங்கத்தொடர் இன்னும் உயிர்ப்புடன் திகழ்கின்றது.

காவல் தெய்வங்களைக் கூடித் தொழவும், கொண்டாடவும் தத்தம் வசதிகளுக்கேற்ப, வழிபாட்டுத் தலங்களை எழுப்பினர் மக்கள். கல்,மண் முதலான பொருட்களோடு காலப்போக்கில் புதுமையாய்த்திகழும் அனைத்து அறிவியல் சாதனங்கள், பொருட்களைக் கொண்டு கட்டுமானப் பணிகள் அமைக்கப்பெறுகின்றன. இளங்கோவில் எழுப்பி, மூலவர்திருவுருக்களைச் சேதமின்றிக் காத்தும், வழிபட்டும் வரும் மக்கள் குறித்த நிலையில் திருக்கோவில் எழுப்பி உரிய நாளில் வேள்விச்சாலைகள் அமைத்து மந்திரம் வல்ல பெரியோரைத் துணைக்கொண்டு வழிபாடுகள் நிகழ்த்தி, திருக்குடமுழுக்கு நன்னீராட்டுச் செய்வது மரபு. அதுபோது. அந்தத் திருக்கோவிலின் வரலாறு மற்றும் பெருமைகளைக் கூறுமுகமாக, வழிபாட்டுணர்வு மற்றும் நெறிகளை விளக்கும் வகையில் தக்க சான்றோர்களிடம் கட்டுரைகள், அருளாளர்களிடம் ஆசியுரைகள், பெரியோர்களிடம் வாழ்த்துரைகள் பெற்று அச்சிடுதல் வழக்கமாக அமைகின்றது. நிலைபெற்ற வழிபாட்டு நிலையமாகத் திருக்கோவிலும், நடமாடி அருள்பாலிக்கும் அருள் இயக்கமாக, திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுவிழாச் சிறப்புமலரும் அமைந்துவிடுகின்றன.

அந்த வகையில் அ.காளாப்பூர், அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுவிழாச்சிறப்புமலர் உருவாக்கம் பெறுகின்றது. ஐயனாரின் அருளுரு, பரிவார தெய்வங்களின்

திருவுருக்கள், திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் காட்சிகள், இத்திருப்பணிக்கு அடித்தளமாகி அமரராகிய அருளாளர் திரு. சொ.சி.இராமன் அவர்களின் படம் முதலியவற்றைக் கொண்ட இம்மலருள் பெரியோர்களின் வாழ்த்துரைகள், நடமாடும் இறைமூர்த்தங்களாகத் திகழும் அருளாளர்களின், வணக்கத்திற்குரிய குருமகா சந்நிதானங்களின் அருளுரைகள் மலர்ந்து தெய்வ மணம் பரப்புகின்றன.

இம்மலரின் தனித்தன்மைக்குத் துணைசெய்யும் 32 தலைப்புகளிலான கட்டுரைகள் மையமாக அமைந்துள்ளன. தொடக்கத்தில் அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில் பற்றியும், அக்கோவில் திருப்பணிகள் பற்றிய கட்டுரைகளும் அமைகின்றன.

உள்ளூர் தொடங்கி உலக நாடுகள் வரையிலும் பரவிவிளங்கும் ஐயனார் வழிபாடு மற்றும் திருக்கோவில் அமைப்பு மரபுகள், புதுமைகள் பற்றிய விளக்கங்களையும், ஆய்வுகளையும் முன்வைத்து ஏழுகட்டுரைகள் இடம்பெறுகின்றன. ஐயனார் குறித்து அறிந்துகொள்வதற்கும், மேலாய்வுகள் மேற்கொள்வதற்கும் இக்கட்டுரைகள் துணைசெய்யும்.

பொதுவான நிலையில் தெய்வங்கள் பற்றியும், தெய்வமாந்தர்கள், சித்தர்கள், அருளாளர்கள், அருள் தொண்டர்கள் பற்றியும் பேசும் பன்னிரு கட்டுரைகள் திருமுறைகள், சித்தர்பாடல்கள், சங்கஇலக்கியம் மற்றும் வேத உபநிடதங்களின் பின்னணியில் உருவாக்கம் பெற்றிருக்கின்றன. அந்தந்தத் துறைவல்லுநர்களின் ஆக்கங்களாகத் திகழும் இப்படைப்புகள் பல புதிய செய்திகளைக் கொண்டு தருவது உறுதி.

வழிபாட்டின் பயனும் பெருமையும் மானுடர்க் கன்றி தெய்வத்திற்கு இல்லை என்பது வரலாற்று உண்மை. உணர்ச்சிப்போக்கில், பக்தி சார்ந்த அறியாமைகளில் சிக்கிப் பெருமைக்குரிய பண்புகளைப் புறந்தள்ளுவதும், இகழ்வதும், புகழ்வதுமான போக்குகள் மலிந்து வரும் இக்காலத்தில், வழிபாட்டுத் தலங்கள் கடவுள் மறுப்பாளர்களைா விடவும், கடவுள் பக்தர்களாலேயே சீர்கேடுகள் அடைந்துவருவதையும், அவற்றை மாற்றித் தம்ம யும், தம்சூழலையும் திருக்கோவில் –களையும் புனிதப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைகளையும் முறைகளையும் சுட்டுகின்ற கட்டுரைகள் ஏழு இவற்றில் அமைந்திருக்கின்றன. இவை எல்லாத்தரப்பினரையும் எட்டும்போது நிகழும் மாற்றங்கள் தமிழர் பண்பாட்டிற்கும் ஒழுங்கிற்கும் வளம் சேர்ப்பதாக அமையும்.

நிறைவாக இடம்பெறும் பகுதி, இம்மலர் உருவாகக் காரணமான, அ.காளாப்பூரின் தொன்மைச்சிறப்பை விளக்கும் வரலாற்று ஆய்வின் சுவடுகளைத் தாங்கி உள்ளது. அழிந்துபோன அருவியூர் பற்றிய ஆய்வுகளை முன்வைத்து விளக்குவதோடு, இந்த ஊருக்கே உரிய இலக்கியத்தைப் பற்றியும் விளக்குவதாகவும் அமைகின்ற நான்கு கட்டுரைகள் அமைந்துள்ளன.

இவையெல்லாம் நமது வேண்டுகோளை ஏற்றுப் படைப்புகள் நல்கிய படைப்பாளர்களின் அருள் உணர்வால் நிகழ்ந்த அற்புதங்கள்.

மிகக்குறுகிய காலத்தில் இவற்றைத் தேடிப் பெறவும் தொகுக்கவும் பெரிதும் உதவிய குன்றக் குடித் திருவண்ணாமலைஆதீனத் தலைவர் குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களின் பாதமலர்களுக்கு நமது நன்றி மலர்கள். உடல்நலம் உதவாத நிலையிலும் ஓய்வின்றி அருளுரைகளையும், படைப்புகளையும் பெற்றுத்தந்த அத்திருமடத்தின் பணியாளர், அடிகளாரின் இலக்கியப்பிரிவு உதவியாளர் கவிஞர் மரு.பரமகுரு அவர்களுக்கும் எமது நன்றி மலர்கள். வேண்டியவுடன் வேண்டிய வண்ணம் அருளுரைகளையும், வாழ்த்துரைகளையும், படைப்புகளையும் நல்கிய அருட்பண்புடைய பெரியோர்களுக்கும், சான்றோர்களுக்கும் நன்றி என்றும் உரியது. இவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கும் பணியில் உறுதுணையாகி நின்று உதவிய மலர்க்குழுவின் சிறப்புத்தலைவர், தலைவர், திருப்பணிக்குழுத்தலைவர், மலர்க் குழுவின் துணைத்தலைவர்கள், பொருளாளர், ஒருங்கிணைப்பாளர், உருவாக்கத்திற்கு உற்ற துணையான விளம்பரங்களைத் தேடித் தொகுத்தோர், அச்சிட்டோர், படிப்போர், பயன்பெறுவோர் அனைவருக்கும் எமது நன்றி எப்போதும் உரியது.

இம்மலர் உருவாகக் காரணமாகிய அனைத்து அன்பர்களும் எல்லாவளநலன்களும் எய்தி இன்புற்றிருக்க அருள்தரு இலங்கமுடைய ஐயனார் அருள் புரிய வேண்டுகிறோம். நன்றி.

சேதுபதி

மலர்க்குழுச்செயலர்

உள்ளடக்கம்

பூரணைபுட்கலை உடனாய ஐயனார் திருவுரு

பரிவார தெய்வங்கள்

திருக்குடநன்னீராட்டுவிழாக் காட்சிகள்

திருப்பணிச் செம்மல்

வாழ்த்து மலர்

மாண்புமிகு **கே.ஆர். பெரிய கருப்பன்** அவர்கள் 9
இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

மேதகு ராணி **டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார்,** 10
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர்

திரு. **தி.சுவாமிநாதன்** 11
இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் , சிவகங்கை

திருமிகு. **இராம. அருணகிரி** 12
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

திரு. **மா.இளங்கோ** 13
தேவஸ்தான மேலாளர்

கவிஞர் **இரா.மீனாட்சி,** 14
இயக்குநர், தமிழ்மரபுமையம் ஆரோவில்

எழுத்துச்சுடர் **கா. நாகேந்திரன்,** 16
நிறுவனர் ஆன்மிகப் பேரவை, எஸ்.எஸ்.கோட்டை

திரு. **சுப. பார்த்திபன்,** 17
ஊர் அம்பலம் அ.காளாப்பூர்

அருள்மலர்கள்

தருமபுரஆதீனம் 18
திருவாவடுதுறை ஆதீனம் 19
குன்றக்குடி ஆதீனம் 20
திருப்பனந்தாள் திருமடம் 21
பேரூர் ஆதீனம் 22
கௌமார மடம் 23
ஸ்ரீநாராயணர் திருமடம் 24

காணிக்கை **25**

கட்டுரைகள்

ஐயனார் வழிபாடும் வரலாறுகளும்

1. ஐயனார் கோயில் அமைப்பும் வரலாறும். – முனைவர் சொ.சேதுபதி 26
2. திருக்கோயில் திருப்பணிகள் – நிருபர் வே.அழகப்பன் 31
3. ஐயனார் வழிபாடு – மரு.பரமகுரு 34
4. புறம்பணையான் கோட்டம் – 'தமிழாகரர்' தெ.முருகசாமி 37
5. ஐயனாரின் காவலும் கருணையும் – முனைவர் அ.அறிவுநம்பி 39
6. அய்யனாரா? ஐயனாரா? – காளைராசன் 41
7. ஐயனார் பேரும் புகழும் – முனைவர் இரா.பொன்னுத்தாய் 45
8. புவிகாக்கும் புத்துப்பட்டு ஐயனார் – சொ.அருணன் 47
9. அயல்நாடுகளில் ஐயனார் வழிபாடு – இரா.குறிஞ்சிவேந்தன் 50

தெய்வங்களும் மரபுகளும்

10. தெய்வங்களும் மரபுகளும் – சோ.முருகேசன் 53
11. மருத நில மாந்தரின் தெய்வம்– கவிஞர் சிற்பிபாலசுப்பிரமணியம் 57
12. முருகன் எம் அருளரசு – புலவர் சு.சாவித்திரி 62
13. அப்பர்தேவாரத்தில் பிச்சைத்தேவர்– 'தமிழாகரர்' முனைவர் பா.சுந்தர் 65
14. வெந்து அறும் வினையும் நோயும்– முனைவர் சிவ.மாதவன் 70
15. திருநாவுக்கரசர் பார்வையில் நாயன்மார்கள்– பொ.கருப்புசாமி 72
16. அன்பிலக்கியத்தின் ஓர் அத்தியாயம் – முனைவர் இரா.செல்வக்கணபதி 78
17. குற்றாலக்குறவஞ்சியும் திருமுறைப்பெருமையும்– முனைவர் மு.பழனியப்பன் 80
18. எக்காலம்? – முனைவர் இரா.சேது 82
19. ஸ்ரீவராகிச் சித்தர் வாத்தியார் ஐயா – புலவர் அ.பாண்டியன் 85
20. குன்றக்குடி அடிகளார்கள் – அருட்திரு ஊரனடிகள் 89
21. பேரூரடிகளின் அருள்வரலாறு– கா.திருநாவுக்கரசு 92
22. பழுத்த மனத்து அடியார் – புலவர் நா.குழந்தைவேலு 97

வாழ்வும் வழிபாடும்

23. இல்லாத இடமே இல்லை– 'நற்றமிழ் நாவலர்' சுகி.சிவம் 101
24. கொங்கேழ் தலங்கள்– முனைவர் இரா.சந்திரசேகரன் 104
25. யார் காரணம்? – டாக்டர் இரா.கலைக்கோவன் 110
26. ஆழ்வார்கள் காட்டும் சமுதாயநெறி– இரா.அகிலா 115
27. பொய்யும் மெய்தான் – முனைவர் சோ.சத்தியசீலன் 117
28. மனிதா நீ புனிதமடைய வேண்டுமா? – சிங்கை ம.மந்திரி 119

வரலாற்றுச் சுவடுகள்

29. அருவியூர் ஆராய்ச்சி – டாக்டர் சி.ஜெயபாரதி 122
30. அருவியூர்ப் பட்டணம் ஓர் ஆய்வு – அமரர் புலவர் சீ.இலட்சுமணன் 123
31. வரலாற்றின் சுவடுகள் தேடி... – கிருங்கை சேதுபதி 127
32. மருதுநாயுடு காதல் – தேசிய நல்லாசிரியர் அ.பாண்டியன் 130
33. செவிட்டையனார் மாணிக்கக் கும்மி– பதிப்பாசிரியர் நிருபர் வே. அழகப்பன் 134

விளம்பர மலர்கள்




அருள்மிகு பூரணை புட்கலை உடனாய இலங்கமுடைய ஐயனார்

திருக்குட நன்னீராட்டு விழாக் காட்சிகள்



















விநாயகர்



முருகன்



முப்புளிக்கருப்பர்



சோனையன்



நாகர்



பெரியகருப்பர்
சின்னக்கருப்பர்



ஆண்டித் தெய்வங்கள்



பேச்சியம்மன்- சப்தகன்னியர்



பட்ட தெய்வம்-
பேச்சி-பாப்பாத்தி-இராக்கு

பரிவார தெய்வங்கள்







அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில்

திருப்பணிச் செம்மல்

அமரர் திரு. **சொ.சி.இராமன் யாதவ்** அவர்கள்

அ. காளாப்பூர்

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் துணை



எமது தந்தை தெய்வத்திரு **சொ.சி.இராமன்** திருப்பணிக்குழுத் தலைவர் அவர்களின்
பெருமுயற்சியால் கட்டி முடிக்கப்பட்ட அருள்மிகு இலங்கமுடைய ஐயனார்
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த
மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர்
திரு.**கே.ஆர்.பெரியகருப்பன்**B.Com.B.L அவர்களுக்கும்,
தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கும்
அருள்திரு **கோவிந்தானந்தா சுவாமிகள்** அவர்களுக்கும்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்
திருமிகு.**இராம.அருணகிரி**, திருமிகு. **கே.கே.உமாதேவன்** ஆகியோருக்கும்
ஒன்றியக் குழுத்தலைவர் **பி.ஆர்.பெருமாள்** அவர்களுக்கும்,
எங்களுடன் இணைந்து பணியாற்றிய
கோப்பனதெரு, யாதவர் தெருப் பொதுமக்களுக்கும்
எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த கிராமப் பொதுமக்களுக்கும்
மற்றும் பக்த கோடிகளுக்கும் திருப்பணிக்கு நன்கொடை வழங்கிய
அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சொ.சி.இரா.பூஞ்சோலை அம்மாள்
இரா. உமாமகேஸ்வரன்
உ. சரஸ்வதி
உ. இராஜேஸ்
உ. பூஜா

இரா. செல்வக்குமார்
ஊராட்சி மன்றத் தலைவர்
செ. இலங்காதேவி
செ. சௌமியா
செ. ஸ்ரீராம்
காளாப்பூர்





கே.ஆர். பெரியகருப்பன்
இந்து சமய மற்றும் அறநிலையத்
துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

வாய்மையே வெல்லும்



நாள்............05.04.2008.......

வாழ்த்துச்செய்தி

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி மேதகு டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட அ.காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா (23.04.2008) அன்று நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறேன்.

எத்திசையும் புகழ்மணக்கும் இருந்தமிழ் பாண்டிய நன் நாட்டின் மாரியாம் பாரி புகழுடன் வாழும் பறம்பு மலைக்கு தென் திசையிலும், சீரோங்கு சிங்கம்புணரி கீழ் திசையிலும், தேவாரப்பாடல் பெற்ற திருப்பத்தூர் திருத்தலத்திற்கு மேற்கிலும், ஆழ்வார் பெருமக்களால் மங்களா சாஸசனம் பெற்ற திருக்கோஷ்டியூருக்கு வடமேற்கிலும், திகழும் அயன் காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் – சூழ்ந்து திகழும் மங்கள நன்மக்களுக்கு காவலாகவும், குல தெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும், கிராம தெய்வமாகவும் விளங்குகிறது.

ஆலயத்திருப்பணி குழுவினரின் தளராத முயற்சியால் நடைபெறும் இவ்வாலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவும், ஆன்மீகத் தொண்டு மற்றும் ஆலய பணிகள், இறைப்பணிகள் மென்மேலும் தொடரவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

அன்புடன்,

கே.ஆர். பெரியகருப்பன்
5/4/08

Rani sahiba Gowri Vallaba
Rani **D.S.K.MADHURANTAKI NACHIYAR**
Rani of Sivaganga

HEREDITARY TRUSTEE
SIVAGANGA DEVASTHANAM & CHATRAMS

PRESIDENT
RAJAH'S HIGHER SECONDARY &MIDDLE SCHOOL
ALICE MILLER GIRLS HIGH SCHOOL & PRIMARY SCHOOL

Place : Sivagang

Date : 01.06.2008



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த அ.காளாப்பூர் அருள்மிகு ஸ்ரீ இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் குடமுழுக்கு விழா 23.04.2008 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதனையொட்டி குடமுழுக்கு மற்றும் மண்டலாபிஷேக விழா சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அவ்வகையில் நாட்டோரும், நல்லோரும் கூடி வணங்கும் இவ்விழா சிறக்கவும், சிறப்பு மலர் பொலிவு பெறவும் எல்லாம் வல்ல இறையருளை சிந்தித்து வாழ்த்துகிறேன்.

D.S.K.மதுராந்தகி நாச்சியார்
பரம்பரை அறங்காவலர்
சிவகங்கை ராணி
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
சிவகங்கை.

வாழ்த்துரை

தி.சுவாமிநாதன்
இணை ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சிவகங்கை

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர்வட்டம் காளாப்பூர் கிராமத்தில் அமையப் பெற்றுள்ளதும், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டதுமான அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருந்த நிலையில் உழைப்பால், உயர்ந்த தொழிலதிபர் அனைவராலும் நெல்கடைராமன் என அழைக்கப்படும் திரு.சொ.சி.இராமன் அவர்களின் பெருமுயற்சியினால் திருப்பணிகள் துவங்கி, செவ்வனே செய்திட்டார்கள். திருப்பணிகள் நிறைவு பெறும் முன்னரே மதிப்பிற்குரிய திரு.சொ.சி. இராமன் அவர்கள் எதிர்பாராதவிதமாக இயற்கை எய்தினார் என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

அன்னார் விட்டுச் சென்ற பணிகளை மிகுந்த சிரத்தையோடு பொறுப்பேற்று,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்

எனும் திருக்குறளுக்கு ஏற்ப, அவரது இளையமகன் திரு. ரா.செல்வக்குமார் அவர்கள் அனைத்துத் திருப்பணிகளையும் நன்கொடையாளர்கள் உதவியுடன் சிறப்பாக நிறைவுசெய்து 23.04.2008 அன்றைய தினத்தில் வெகு விமர்சையாக கும்பாபிஷேகம் செய்து முடிக்க உதவியுள்ளார் என்றால் மிகையாகாது.

திருப்பணி சிறப்பாக நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவதற்குப் பெருமுயற்சியும் நற்பணியும் ஆற்றிய திரு.ரா.செல்வக்குமார் அவர்களுக்கும், கிராமப்பொதுமக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அரசு மானியம் பெற்றுத் தந்த மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு.கே. ஆர். பெரிய கருப்பன் அவர்களுக்கும், துறையில் சார்பாக அரசுத்துறை செயலர் திரு.கோ.சந்தானம் அவர்களுக்கும், சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த.பிச்சாண்டி அவர்களுக்கும் மற்றும் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மேதகு ராணி டி.கே.எஸ். மதுராந்தகி நாச்சியார் அவர்களுக்கும், இத்திருப்பணி செவ்வனே நடைபெற உதவிய கிராம மக்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



இராம.அருணகிரி Ex. M.L.A.
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி
சிங்கம்புணரி - 630 502
சிவகங்கை மாவட்டம்
04577 - 243080, செல் - 9486447864

வாழ்த்துச்செய்தி

பாரிவள்ளல் ஆண்ட பறம்புமலைப்பகுதியில், பேரூராக அமைந்துள்ள சிங்கம்புணரியைச் சுற்றிலும் பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்கள் நிறைய உள்ளன.

பொதுவாக, பெருந்தெய்வ வழிபாடு என்பது உயர்சாதிக்குரியதாகவும், சிறுதெய்வவழிபாடு என்பது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரியதாகவும் அமைந்துள்ளன. இலக்கியங்களிலும், கலைகளிலும்கூட இந்த வகைப்பாட்டினைக் காணலாம்.

பொதுவாக, இந்த மரபினைத் தாண்டி, அனைத்துச் சாதியினரும் இணைந்து வழிபாடு செய்யும் தலங்களாக இப்பகுதியில் உள்ள திருக்கோயில்கள் அமைந்துள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இன்னும் சொல்லப்போனால், சிங்கம்புணரி அருள்தரு சேவகப்பெருமாள் ஐயனார் கோவில் பிற மதத்தவரும் வழிபடும் பெருமைக்குரியது. பெருந்தெய்வ வழிபாட்டுக்குரிய அனைத்துக் கூறுகளையும் உடைய இத்திருக்கோயிலின் அண்மையில் உள்ள அ.காளாப்பூரில் அருள்தரு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில் அமைந்துள்ளது.


மிகத்தொன்மையான நகரமான அருவியூர்ப்பட்டணத்தில் அமைந்துள்ள அந்தத் திருக்கோயிலைப் புதுக்கித் திருப்பணிமேற்கொண்டவர், நமது அன்பிற்கும் பாராட்டுக்கும் உரிய திரு.சொ.சி.இராமன் அவர்கள். அக்கோவிலின் திருக்குடநீராட்டுவிழாக் காணுமுன்பே அவர் இறையடிநீழலை அடைந்துவிட்டார் எனினும் அவர்மேற்கொண்ட முயற்சிகளில் சற்றும் தளராமல், திருப்பணிக்குழு அன்பர்களுடன் இணைந்து மிகச்சிறப்பானத் திருக்குடநீராட்டுவிழாவினை நடத்தியிருக்கிறார், அவரது அன்புப்புதல்வர் திரு.ரா.செல்வக்குமார். அவருக்கும் அவருடன் இணைந்து பணிபுரிந்துள்ள அனைத்து அன்பர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திருக்குடநீராட்டுவிழாவினை முன்னிட்டு, ஒரு சிறப்புமலர் வெளியிடப்பெறுவதும் பொருத்தமானதே. அம்மலர் இனிது சிறக்கவும் எனது வாழ்த்துகள்.

அன்புடன்
இராம.அருணகிரி

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சகாயம்

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்



பா.இளங்கோ பி.காம்., பி.எல்
பழைய அரண்மனை வளாகம்,
சிவகங்கை 630561.

நாள்: 01.06.2008

வாழ்த்துரை

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ராணி மேதகு டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட திருப்பத்தூர் வட்டம், சிங்கம்புணரி ஒன்றியம், அ.காளாப்பூர் அருள்மிகு ஸ்ரீ இலங்கமுடைய அய்யனார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா மற்றும் மண்டலாபிஷேக விழா, இதனையொட்டி வெளியிட இருக்கும் விழா சிறப்பு மலர் பொலிவு பெற இறைவனை வேண்டுகிறேன்.

பா.இளங்கோ பி.காம்., பி.எல்
தேவஸ்தான மேலாளர்
சிவகங்கை

889

கவிஞர். **இரா.மீனாட்சி**

இயக்குநர். தமிழ்மரபு மையம்
பாரத்நிவாஸ்,
ஆரோவில்

இளைஞர்கள் கல்வி மையம்
ஆரோவில் - 605 101
பேச- 0413- 2623773
email: tamil@auroville.org.in

யாதும் ஊரே யாவரும் கேளிர்

இல்லம்:- மாத்ரிமந்திர் நர்சரி, ஆரோவில்- 605 101, தமிழ்நாடு.

ஐயனார் கோயிலும் மக்களின் அடைக்கலவீடும்

கடவுள்களைத் தம் வாழ்க்கையோடு இணைத்துக்கொண்டு மேற்செல்லும் வாய்ப்பு இந்திய மண்ணிற்கே உரியது. பரம்பொருள் ஒன்று, பரம்பொருளின் சிறுதுகள்களே நாம் என்பது அடிநாதம். அவனன்றி அணுவும் அசையாது என்பதே நம்பிக்கை. இந்த அனுபவத்தின்மீது கட்டப்படும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஒவ்வொரு ஆற்றலும் ஒரு ஆகர்ஷண சக்தியைத் தருவதால் ஒவ்வொன்றும் மனிதருக்குக்குத் தெய்வங்களாகி விடுகின்றன. படைக்கும் கடவுள், வளர்க்கும் கடவுள், அழித்து ஆக்கும் கடவுள் இவர்களோடு இயைந்து வினை இயற்றும் கருவிக் கடவுள், நன்னீர்க் கடவுள், மழைக்கடவுள், எதிரிகளை வெல்லும் ஆற்றல் தரும் கடவுள் என்று எல்லா நிலைகளிலும் நம்மைத் தாங்கிப் பிடித்து, நிலைநிறுத்தி வாழ்க்கையை நம்பிக்கையுடன் வழிநடத்திச் செல்ல நிறைய கடவுள்களை இந்திய உள்ளம் உருவாக்கியுள்ளது.

மகான் ஸ்ரீஅரவிந்தர் கூறுவதுபோல, பாரதஅன்னை உருவாக்குகிறாள்; உருவாக்கிக் கொண்டேயிருக்கிறாள். ஏனெனில், அவளுடைய ஆற்றல் அபரிமிதமானது. புதிதுபுதிதாக உருவாக்குவதை நிறுத்துவதே இல்லை. கோவில் கோபுரம் என்றாலும் வைப்பதற்குச் சிறிது இடம் கிடைத்தாலும் ஒரு தெய்வீக அம்சம் மிகுந்த, சிற்பத்தைச் செய்து வைத்து விடுவாள். அந்த ஆற்றலை இந்திய மனங்கள் உள்வாங்கித் தங்களது அனைத்து வாழ்க்கைத் துறைகளிலும் இந்தப் படைப்பாற்றலைச் சிறப்பிக்கச் செய்து விடுகின்றனர்.

மனிதத்தன்மை இயற்கையின் சீற்றத்திடமிருந்தும், செயற்கையான போர்களின் அழிவுகளிலிருந்தும், தம்மை அச்சுறுத்தும் நோய்களிலிருந்தும் தப்பித்து உயிர்வாழவும், மனத்திண்மை பெற்று, வருவதை எதிர்கொள்ளவும் இறையருளை நம்புகின்றது. தலைமையேற்று வழிகாட்டும் தெய்விகத் தலைவர்களுக்கும் நமது அன்றாட வாழ்வில் மிகமிக முக்கியமான இடம் ஒதுக்கியிருக்கிறோம்.

ஐயனார் வழிபாடும் அத்தகையதே. ஐயனார் காக்கும் தெய்வம்; பாதுகாக்கும் தெய்வம்; வழிகாட்டும் தெய்வம்; வாழவைக்கும் தெய்வம்; தீமையை அழிக்கும் தெய்வம்; நன்மையை வளர்க்கும் தெய்வம்.

தமிழகக் கிராமங்களின் நிரந்தர முகவரி எல்லையில் விளங்கும் ஐயனார் கோயில். சிற்றூர்களில் மண்சுதைச் சிற்பங்களாக ஐயனார், வெயிலுகந்தும் மழையை அபிஷேகமாய் ஏற்றுக் கொண்டும், எந்த நேரத்திலும் எந்த உயிரிலும் தம்மிடம் வருபவர்க்குப் புகலிடம் தந்து வெட்ட வெளியில் திகழ்வார்.

அவர்களைச் சுற்றிலும் ஒவ்வொரு கிராமத்திலும் தான் எத்தனை பாடல்கள், நாடகங்கள், கர்ண பரம்பரைக் கதைகள், கூத்துகள், உடுக்கைப்பாட்டுகள் எனப் பலவகைக் கலை வெளிப்பாடுகளைக் காணலாம்.

ஸ்ரீஅரவிந்தஅன்னையின் கனவுபூமியான ஆரோவில்லின் அருகிலுள்ள கீழ்ப்புத்துப்பட்டில் பசுமையானதரைக்காட்டில்வங்கக்கடற்கரையோரம் ஓர் ஐயனார் கோயில் உள்ளது. அவருக்கு வாகனமாக ஒரு கல்யானை அமைக்கப்பட்டுள்ளது. ஆதியில் இவ்வூரைப்பற்றிய கதையைக் கேட்பதற்கு நான் போனதுபோது அவ்வூர்ப் பெரியவர் சொன்னதாவது, “இவ்வூர்க் கோயிலில் மண்குதிரைகள் மற்றும் பிற பரிவார தேவதைகளை ஊர் எல்லையில் வைத்திருப்பார்கள். ஆனால் ஐயனாருக்கு மட்டும் சந்நிதிக்கு முன்னே யானை வாகனம்.” அப்போது அங்கிருந்த தமிழாசிரியர் சொன்னார், “யானைமேல் துஞ்சிய தலைவனுக்கு இப்படி வைப்பது வழக்கம்” என்று. இன்றைய திண்டிவனம் அன்றைய கிடங்கில். நல்லியக்கோடன் தலைநகராக வைத்து ஆண்ட இடம். அங்கும் இதுபோலச் சிறுசிறு கல்யானைகள் நிறைந்த நினைவிடங்கள் இன்றும் காணப்படுகின்றன.

பொதுவாகவே, கிராமப்பகுதிகளில் ஐயனார் என்றால் குற்றங்களைத் தண்டிப்பவர், குலங்காப்பவர் என்பது நம்பிக்கையாக உள்ளது.

ஐயனார் என்றால் ஆசிரியர். குரு, தந்தை, அரசர், மூத்தோர் எனப் பல பொருளைக் கொண்ட ஐயனார் பெண் எனில் ஐயை எனப்படுகிறாள். ஐயை எனில் தலைவி, மகள், சிலை, காளி, பார்வதி, துர்க்கை என்று பல பொருள் உண்டு.

ஐயனார் நல்ல நீதிமான் என்கிற நம்பிக்கை மக்களுக்கு ஆழமாகப் பதிந்துள்ளது. கீழ்ப்புத்துப்பட்டு ஐயனார் கோயிலின் பின்புறம் அழகிய வண்ணமயமான இரண்டு பிரம்மாண்ட சுதைக்குதிரைகள் நிற்கின்றன. மக்கள் தங்களது கோரிக்கைகளை எழுதி ஐயனாரின் குதிரைகள்வசம் ஒப்படைக்கிறார்கள். இந்த சந்நிதியில் என்றும் ‘சத்தியமே வெல்லும், தர்மமே ஓங்கிடும்’ என்று பக்தி மேலீட்டு அன்பர்கள் அனுபவப்பூர்வமாகக் கூறுகிறார்கள்.

பலநூறு குடும்பங்களுக்கு ஐயனார்தான் குலதெய்வம். எனவே, முடிகாணிக்கை தந்து, காதுகுத்தி, பொங்கலிட்டு சுப காரியங்களை குடும்பம் குடும்பமாக ஐயனார் சந்நிதியில் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இங்குள்ள ஐயனார் கோயில் தரைக்காடு அபூர்வமானது. பலவிதமான மூலிகைகளும் புதர்ச்செடிகளும் கருங்காலி போன்ற நெடிய மரங்களும் கோயில் காட்டில் பாதுகாப்பாக வளர்ந்துள்ளன. இறைவனின் வனம் என்பதால் பொதுவாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றாலும் மக்களின் பயபக்தியும் பசுமையைக் காத்து வந்துள்ளது என்று சொல்லலாம்.

ஆனால், இப்பொழுதெல்லாம் பக்திநோக்கம் குறைந்தவர்களின் கூட்டம் அதிகரிப்பதாலும் பிளாஸ்டிக் குப்பை பூமியின் மேற்பரப்பில் குவிவ தாலும் கோயில்காடுகள் அழியவும் அபூர்வமான மரக்கன்றுகள் கருகிடவும் ஒவ்வாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதனைத் தவிர்த்துத் தூய்மையான சுற்றுப்புறம் அமைய ஆரோவில் வனத்துறையினர் தகுதியான உள்ளூர் இளைஞர்களின் உதவியால் இக்கோயில்காட்டினைப் பராமரித்து வருகின்றனர்.


கிழக்குக்கடற்கரைச் சாலையின் புதிய வளர்ச்சியினாலும், சுனாமிக்குப் பின் கரைவாழ் மக்கள் தரைநிலம் நோக்கிக் குடியிருப்புகளுடன் நகர்ந்து வருவதாலும், வேகவண்டிகளின் நச்சுப்புகையினாலும் ஐயனார் கோயில்காடு மெதுவாகத் தன்னளவில் குறைந்து வருகிறது.


நன்றாக ஆய்வு செய்து பார்த்தால் நமது ஊர்களிலும் கோயில்காடு, நந்தவனம், புனிதத் தீர்த்தங்கள், நன்னீர்த் தாமரைக்குளங்கள், நாழிக் கிணறுகள் இவை காரணமாகத்தான் இயற்கையின் அன்பும் வனப்பும் நமக்குப் புலனாகின்றன. இத்தகைய பாரம்பரியச் செல்வங்களைப் பாதுகாத்து எடுத்துச் செல்ல வேண்டும் என்றுதான் உலக சபையின் யுனெஸ்கோ– கல்விக் கலாசார அமைப்பு தனது சாசனத்தில் பிரகடனப்படுத்தியுள்ளது. பாரிஸ் யுனெஸ்கோ மாநாட்டில் ஆரோவில் சார்பில் கலந்து கொள்ளச் சென்றபோது, நாம் தெரிந்து கொண்ட முக்கியமான கருத்துக் கருவூலம் இதுதான். “எங்கே, உள்ளூர் மக்கள் தலைமையேற்றுத் தங்களது பாரம்பரியச் சின்னங்களைப் பாதுகாக்கும் செயற்களம் இறங்குகிறார்களோ, அங்கேதான் வாழ்க்கையே ஒளிபெற்று இலங்கும்”.

நமது காளாப்பூர் ஸ்ரீஇலங்கமுடைய ஐயனார் கோயில் இத்தகைய பழம்பெருமையும் மரபுச் சிறப்பும் வரலாற்றுப் பதிவும் பெற்றிலங்குவதாக நாம் தெரிந்து மகிழ்ச்சி கொள்கிறோம். எனவே, இக்கோயிலையும் கோயில் சுற்றுச்சூழலையும் தக்கவாறு பாதுகாத்து நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதே நமது ஆரோவில் தமிழ்மரபு மையத்தின் வேண்டுகோள். இத்துறையில் முனைப்புடன் செயல் படும் உங்கள் திருக்கூட்டத்துடன் இணைந்து வரலாற்றுப் பதிவு தொடர்பான வேண்டிய உதவிகளைச் செய்யவும் மரபுச் செல்வங்களைப் பாதுகாப்பதில் உங்களுடன் உறுதுணையாக நிற்கவும், நாம் ஆவல் கொண்டுள்ளோம். ஆரோவில்லின் பன்னாட்டு மக்களுடைய அனுபவங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறோம்.

வாழ்த்துகளுடன்....

இரா. மீனாட்சி





எழுத்துச்சுடர் **க. நாகேந்திரன்**
நிறுவனர்
ஆன்மீகப் பேரவை
எஸ்.எஸ்.கோட்டை – 630 211
சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் வட்டம்

காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா

வாழ்த்துக் கவிதை

பெருமைக் குரிய சரித்திரம் கொண்ட
திருப்புத் தூரைச் சார்ந்த பொற்பதி
நன்செய் புன்செய் பயிர்த்தொழில் பெருக
நன்மை தந்திடும் அறச்செயல் வளரப்
பிறர்நிலம் காக்கப் பிழைக்கும் நல்ல
சிறப்புடை மக்கள் வாழும் நற்பதி
நீள்புகழ் மிக்க நெறிவழி நடக்கும்
காளாப்பூர் எனும் கவின்மிகு திருப்பதி
ஊரைக் காத்து உறவைச் சேர்த்துச்
சீரும் செல்வமும் அளிக்கும் தெய்வம்
அருள்மிகு இலங்க முடைய அய்யனார்
உரிமைக் கோவில் திருப்பணி முடித்துத்
திருக்குட முழுக்கு காணும் நன்னாள்
திருநாள் ஒருநாள் புதுநாள் பொன்னாள்
திருப்பணி முடியப் பொறுப்புடன் குழுவில்
இருந்து உழைத்த நல்லோர் என்னும்
பல்வழி நின்று திருப்பணி சிறக்க
எல்லா நிலையிலும் இணைந்த வல்லார்
ஊரைச் சேர்ந்த உயர்மிகு மக்கள்
சீர்மிகு விழாவில் கலந்து கொண்டோர்
அருள்மிகு அய்யனார் திருவரு ளாலே
நிறைவுடன் வளர்க வாழ்க இனிதே!

வாழ்த்துக் கவிதை



மு.சுப. பார்த்திபன் அம்பலம்
முதல்கரை அம்பலகாரர்
அ.காளாப்பூர்.

வேலோடும் வில்லோடும்
வெஞ்சமர் புரிந்து வாழ்ந்த
வீரமிகு மங்கையெங்கள் வேலுநாச்சியார் ஆண்ட
சிந்துகவி எங்கும் பொங்குமந்த
சிவகங்கைச் சீமையி லமைந்த
நாடி வருவோரை நாடியவர்
களைப்பைப் போக்குகின்ற காளாப்பூர் மண்
தெற்குத் திசையோரம் வீற்றிருந்து
அடியவர் குறை களையும் ஐயனார்
பெயர் கூறு! கூறு! கூறு!

தாங்கா மனச்சுமையோடு
தன்வாசல் கால் தான் பதித்து
தனை மறந்து நினையுருகும்
இறையன்பர்க்கு அருள்பாலிக்குமவர்!

மேதகு சிவகங்கை ராணியம்மா – எங்கள்
மானமிகு மதுராந்தகி நாச்சியாரம்மா
ஆளுகைக்குட்பட்ட அருள்மிகு
இலங்கமுடைய ஐயனாரென்றுபெயர்பேரு! பேரு!

வெண்புரவி தானேறி
ஊர் காக்கும் எல்லைச் சாமி
சோலை வனத்துக்குள்ளே –பின்னி
ஊடாடும்கொடிகளுக்கிடையே
ஊஞ்சலாடி மகிழ்வாரெங்கள்
இலங்கமுடைய ஐயனார் சாமி!

உதிக்கும் திசைமுகம் பார்த்தமர்ந்து
உள்ளச் சுமையோடு வருவோர்க்கு
இடர்படும் அடியவர் துயர் களைவார் –எங்க
இலங்கமுடைய ஐயனார் சாமி!

சுனைக்கண்மாய் நீரலைகள் தாலாட்ட–
பாறையில்
வற்றாத சுனை ஊற்று இங்குண்டு
வல்வினைகள் தீர்த்து வைப்பான் அருள்கொண்டு–
ஐயனார்
ஆலயமும் இதைப்போல இப்புவியில் எங்குண்டு?

அகலிகைக்கு மறுவாழ்வு – அன்று
சீதாராமனின் பாதம் பட்டது –
ஸ்ரீ இலங்கமுடைய ஐயனார்
ஆலயம் புதுப்பொலிவு – மாமா
சொ.சி.இராமனின் எண்ணம் பட்டது
ஐயனுக்குகந்த கரையார்கள் – பொதுமக்கள்
ஒற்றுமை தொட்டது.

ஸ்ரீஇலங்கமுடைய ஐயனார்
ஆலயம் புதுப்பொலிவுறவே – நிதி
அள்ளித் தந்தோரை எந்நாளும்
அருள்முகம் காட்டியே
அரவணைத்துக் காத்திடுவாய்

மும்மாரி பொழிய வேணும்
முன் வினைகள் தீர வேண்டும்
ஐயா உன் மகிமையெல்லாம் – இந்த
அகிலமெலாம் தெரிய வேண்டும்– ஐயனார்
மங்கல குடநீராட்டுவிழா சிறப்புமலர் –பாடுபட்ட
தமிழறிஞர்கள் சிந்தனையால் சிறக்கட்டும்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001

......13.......... 2002

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே "



தமிழக மக்கள் தங்கள் வாழ்விடங்களை வகுத்தமைக்கும்போது ஊரின் நடுவே தாங்கள் போகம், மோட்சம் ஆகிய பயன்களைக் கருதிச் சிறப்பாக வழிபடும் சிவாலயத்தை அமைத்தும், அவ்வப்போது தங்கட்கும் தங்களுக்குதவும் கால்நடைகளை நோயின்றிக் காக்கும் நோக்கிலும் ஐயனார், மாரி, பிடாரி முதலிய சிறுதெய்வங்களுக்குக் கோயில்கள் வகுத்தும் வழிபட்டு நலம் பெற்றனர். அவ்வகையில் அமைந்தனவே கிராமதேவதைக் கோயில்களாகும். அத்தெய்வங்களில் ஐயனார்– ஹரிஹரபுரத்திரர், சாஸ்தா, ஐயப்பன் முதலிய பெயர்களால் வழிபடப்பெறும் தெய்வமாவார்.

கிராமங்களில் மழையில்லாத காலங்களிலும் அம்மை, காலரா, கோமாரி முதலிய பிணிகள் ஏற்படும் காலங்களிலும் மக்கள் இத்தெய்வங்களைச் சிறப்பாக வழிபட்டு நன்மைகள் எய்துவதைக் காணலாம். ஐயனாரின் தோற்றத்தைக் கந்தபுராணம் விரித்துச் சொல்கிறது.

முன்னொரு காலத்தில், திருமால் முதலிய தேவர்களும் அசுரர்களும் அமுதம்பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் அமுதக்கலசம் தோன்றிற்று. அதைக்கண்ட தேவாசுரர்கள் அதனை அடைவதற்குத் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். திருமால் மூவுலகத்தாரும் மையல் கொள்ளும் மோகினி அவதாரம் எடுத்தார். அம்மோகினியின் அழகைக் கண்டு மயங்கிய அவுணர்கள் அமுதம் பெறும் முயற்சியைக் கைவிட்டு அம்மோகினியின் பின்னே சுற்றிவர முற்பட்டனர். திருமால் தன்னைச் சுற்றிவரும் வீரர்களை நோக்கி உங்களுக்குள் சிறந்தவீரன் எவனோ, அவனே என்னை அடைதற்கு உரியவன் என்றார். அவுணர்கள் நானே வீரன் என்று கூறிக்கொண்டு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இறந்தனர். திருமால் தேவர்களுக்கு அமுதமளித்து அவர்களை வாழ்வித்துத் திருப்பாற்கடலின் கரையில் அமர்ந்திருந்தனர்.

சிவபிரான் தனது நால்வகைச் சத்திகளில் திருமால் ஒருவர் என்பதை அறிவித்தருளும் பொருட்டு அழகிய திருவுருவோடு அங்கு வந்தார். மோகினியைக் கண்டு காதல் கொண்டார். அவரைத் தழுவ வந்தார். திருமால், நான் ஆடவன் என்னைத் தாங்கள் தழுவுதல் முறையோ எனக் கூறினார். பெருமான் திருமாலை நோக்கி நீ நமது நால்வகைச் சத்திகளில் புருஷ சத்தியாவாய் எனக் கூறி அவரைத் தழுவினார். அப்போது ஐயனார் அவர்களுக்குத் திருமகனாகத் திருவவதாரம் செய்தார். சிவபிரான் அவருக்கு ஹரிபுத்திரர் எனப்பெயர் சூட்டி உலகங்கள் அனைத்தையும் காத்தருளும் பெரும்வரம் அளித்தருளினார். சிவபிரான் ஆணைப்படி விநாயகர், முருகன் ஆகியோருக்கு இளவலாகும் சிறப்பைப் பெற்றுத் தலங்கள்தோறும் அனைத்து உயிர்களையும் காத்தருளும் சிறப்பைப் பெற்றார். இவரது வாகனம் யானை.

ஐயனாருக்கு இரு மனைவியர் உள்ளனர். கந்தபுராணத்தில்,

காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புறம் மேவ
வாரணம் ஊர்பவன் முன்னுற வந்தான்


எனக் கச்சியப்பர் கூறுகின்றார்.

இத்தகைய சிறப்போடு சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் காளாப்பூரில் எழுந்தருளியுள்ள இலங்கமுடைய அய்யனார் திருக்கோயிலை அன்பர்கள் திருப்பணி செய்வித்துத் திருக்குட நன்னீராட்டு விழா நடத்துவது அறிந்து மகிழ்வெய்துகின்றோம்.

விழா சிறப்புற நிகழவும், காளாப்பூர் அன்பர்களும் திருப்பணியில் பங்குகொண்டோரும் எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803, நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - 232021



நாள்: 20-03-2008

"அருள் வாழ்த்துரை"

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் நாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே
– அப்பர் தேவாரம்

உலகில் பல சமயங்கள் தோன்றி வளர்ச்சி பெற்று வருகின்றன. அச்சமயங்களுள் மிகவும் தொன்மையானது இந்து சமயமாகும். சைவம், வைணவம் உள்ளிட்ட பிரிவுகளைக் கொண்டது அச்சமயமாகும். சைவ சமயத்துள் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்ற வகையில் வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றது. தமிழக கிராமங்கள் தோறும் மாரியம்மன். காளியம்மன், அய்யனார் முதலான தெய்வங்களை வணங்கும் சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் பெரும் வளர்ச்சி பெற்று வந்த வண்ணம் உள்ளது. அவ்வகையில் சிவகங்கை மாவட்டம்,திருப்பத்தூர் வட்டம்,அ. காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடையார் அய்யனார் திருக்கோயில் திருப்பணிகள் யாவும் நிகழ்ந்தேறி குடமுழுக்கு நிகழ்வது அவ்வளர்ச்சியை உணர்த்துகின்றது. குடமுழுக்கு நிகழ்வுகள் யாவும் சிறப்புற நிகழவும், விழா நாளில் வெளிவரும் மலர் மலர்ந்து பக்திமணம் கமழவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பெறுதல்:

தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்.
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை



உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
✆ : 04577 - 264227

<u>வாழ்த்துரை</u>

நாள் : 5-6-2008

அ. காளாப்பூரில் உள்ள அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில் குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றுள்ளது. பறம்புமலை அருள்மிகு மங்கைபாகர் பார்வையும், திருப்பத்தூர் திருத்தளிநாதர் திருநோக்கும் உள்ள எல்லையில் இலங்கமுடைய ஐயனார் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். ஆணவ இருளை அடக்கி அறிவு ஒளியை ஏற்றும் ஒளியின் வடிவமாய் இலங்கமுடைய ஐயனார் அருள்புரிந்து கொண்டிருக்கின்றார். அ.காளாப்பூர் மக்கள் ஐயன் மீது கொண்டிருக்கும் பக்தி அளப்பிற்கு அரியது! திருப்பணியை தெய்வப் பணியாய் தவப்பணியாய் ஆற்றிய திருப்பணிச் செல்வர்களின் பணிகள் போற்றுதலுக்கு உரியவை! ஐயன் மீது அளவற்ற ஈடுபாடு, அறவழியில் தேடிய செல்வத்தை திருப்பணிக்கு செலவழித்த அன்பு உள்ளங்களின் தொண்டும் பக்தியும் பாராட்டுக்குரியன. ஐயனின் அருள் ஒளி அனைவருக்கும் பரவட்டும்! உலகைக் காக்கும் காவல் தெய்வமாய் விளங்கும் அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருவடி போற்றிப் போற்றிப் பரவுவோம்!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
என்றும் வேண்டும் இன்ப அன்பு.

0435 · 2456655·
PHONE : ~~56655~~

"KAILAI MA MUNIVAR "
THIRU VALAR THIRU KASIVASI
MUTHUKUMARASWAMI TAMBIRAN
SWAMIGAL



SIVA SIVA

HEAD OF KASITHIRU MADAM
TIRUPANANDAL - 612 504.
THANJAVUR DISTRICT

DATE: 6.3.08

வாழ்த்துரை

'சிறப்பொடு பூசனை' என வள்ளுவரும், நைமித்திகத்தொடு கூடிய நித்யம் எனப் பரிமேலழகரும், 'பருவ நாள் விழாவாடு' 'அத்தன் ஆதிரை நாளால்' எனச் சமய குரவரும், அன்பு வயப்பட்ட அடியார் ஆற்றிட்ட பல வகை வழிபாடுகளை, பூஜைகளை, விழாக்களைக் குறிப்பிட்டுப் போற்றுவர். பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை நிகழவேண்டிய திருக்குடநீராட்டு விழா எல்லாவற்றிலும் சிறப்பு மிக்கதாகும்.

மனவேறுபாடுகள் நீக்கி, ஒருமித்த உணர்வுடன், தன்னலம் ஒதுக்கிப் பொது நலத்துடன், நுண்கலை வித்தகர்களின் திறன் வெளிப்பாடுகளுடன், மந்திர ஒலிகளின் மகத்தான சக்தியுடன், மங்கல இன்னியங்களின் ஆர்ப்புடன் திருமுறைவாணர்களின் விண்ணப்பத்துடன், ஒப்பிட்டுச் சொல்ல முடியாத உன்னத உணர்வைக் கூட்டிடும் வேள்விச் சாலை அமைப்புகளுடன், அ.காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயிலின் திருக்குடநீராட்டு விழா 23.4.08அன்று நிகழ்வதும், விழாச் சிறப்பை மேலும் மிகுதியாக்கும் 'மலர்'ஒன்று வெளியிடப்பெறுவதும் அறிந்து மகிழ்கிறோம்.

வாய், நெஞ்சு, சென்னி, ஆகியவற்றின் உண்மைப் பயனை அறிந்து வாழ்த்தி, எப்போதும் பரம்பொருளைச் சிந்தித்து, சிரம் குவித்து உள் வணங்கி அடியார் செய்திடும் திருக்குடநீராட்டு விழா மாண்புற நிகழவும், 'மலர்' பக்திச் சுவையுடன் பைந்தமிழ்க்கட்டுரைகளுடன் வண்ணமிகு பொன் மலராய் மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

ஜெ./

6/3/08

தொலைபேசி : 2607995, 2608678
கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010, தமிழ்நாடு.
இணையதளம் : www.Peruradinam.com
மின்அஞ்சல் : peruradigal@yahoo.com
: perurmutt@ yahoo com

Telephone : 2607995, 2608678
Kailai - Ma - Munivar - Vidwan
Santhalinga Ramasamy Adigal
Peruratheenam, Perur (P.O.)
Coimbatore - 641 010, Tamilnadu
webpage : www.Peruradinam.com
Email : peruradigal@yahoo.com
: perurmutt@ yahoo com

சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

வாழ்த்துரை

நாள்: 27.2.08



திருநெறிய தமிழ்மரபு, சமயத்தோடு இணைந்தது. தொல்பழங்காலம் முதல் சமயநெறியில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வழிபாட்டில் மனநெகிழ்ச்சிக்கும், வாழ்வியல் மேம்பாட்டிற்கும், உரிய திருவுருவங்களைப் போற்றினர். 'வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப' என்னும் தமிழியல் நெறியில் குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் பல்வேறு திருவுருவங்கள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப அமைந்தன. மலைவாழ் மக்கள் காடு திருத்தித் தினை விதைத்தனர். மழை பெய்யவில்லை. அனைவரும் வழிபாட்டிடத்தில் கூடினர். மழைக்குரிய மேகம் மலைப்பகுதியில் தங்க வேண்டும், மழை பொழிய வேண்டும் என்பதற்காக உயர்வான மலர்களைத் தூவி வழிபட்டனர் என்பதை,

"மலைவான் கொள்கென உயிர்ப்பனிதூய்
மாரியான்று மழை மேக்குயர்கெனக்
கடவுள் பேணும் குறவர் மாக்கள்" எனச் சங்கப்பாடல் கூறுகிறது.

வேண்டும் அளவு மழை பெய்தது. அளவுக்கு அதிகமாகப் பெய்யும் மழையை நிறுத்த வேண்டும் என்று வேண்டினர் என்பதை, "மாரியான்று மழை மேக்குயர்" – எனக்கடவுளைப் பேணினர்.

இத்தகைய வழிபாட்டு முறையால் வாழ்வாங்கு வாழ்ந்தனர். இதனால் ஒன்றுபட்டு மனமுருகி வழிபடும் தாய்மொழி வழிபாடு வேண்டியதனைத்தும் தரும் என்பதை அறிகிறோம்.

ஊர்தோறும் மக்கள் விழாவெடுத்து வழிபட்டனர் என்பதைச் சிறப்புமிக்க விழாவெனத் திருமுருகாற்றுப்படை நூலால் அறிகிறோம். மக்கள் தங்கள் ஊர்த்தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் பல்வேறு வடிவத்தில் வழிபடுவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். அத்தகைய வழிபாட்டில் அய்யனார் கோயில் ஊர்களில் சிறந்து விளங்கின. தங்கள் காவல் தெய்வமாகவும் போற்றி வருகின்றனர்.

நமது வழிபாட்டில் அருளாளர்கள் பாடிய பாடல்கள் கடவுள் அருளைப் பெறத் துணைபுரியும். அவை மந்திரங்களாகும். இடைக்காலத்து அயலார் நமது நாட்டில் ஆட்சியைப் பிடித்து வேற்று மொழிகளை வழிபாட்டில் இடம் பெறச் செய்தனர். அதுவே தெய்மொழி என்று மயங்கவைத்துத் தமிழைப் புறக்கணித்தனர். நமது திருக்கோயில்களில் பக்தர்களை இரண்டாம் தர மக்களாக்கி வழிபாட்டுரிமையை மறுப்பதை எப்படி ஏற்க முடியும்.

அருளாளர்கள் பாடிய செந்தமிழ்ப் பாடல்கள் கடவுளை நேரே காண வழிகாட்டியது. அருட்செயல்கள் பல நிகழ்ந்தன. 'வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொண்டார்' கடவுள். அந்தப் பாடல்களால் போற்றி வழிபடுவதே வாழ்வுக்கு உகந்தது. தமிழ்ப் பாடல்களால் கடவுள் அருளைப் பெறலாம்.

திருநெறிய தமிழ்ப்பாடல்களால் திருக்குட நன்னீராட்டுச் செய்வது இறையருளைப் பெற வாய்ப்பளிக்கும் புரியாத மொழியில் செய்யும் பூசை மனதில் பதியாது. ஆதலின் நமது மொழியால் பாடிப் போற்றி வழிபடுவதே உலக நலத்துக்கும் குடும்ப நலத்துக்கும் ஏற்றதாகும். அ. காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் அன்பர்கள் காலங்காலமாக வழிபட்டு வரும் பெருமைக்குரியது.

அய்யனாருக்குத் தமிழில் வழிபாடு செய்து பொன்னும் மெய்ப்பொருளும் பெற்றுப் போகமும் செல்வமும் சேர்ந்து நல்வாழ்வு வாழ அம்பலவாணர் திருவடி போற்றி வாழ்த்துகின்றோம்.

உ
குருவே துணை

Thavathiru Kumaragurubara Swamigal
HEAD OF THE MUTT
Siravanampuram
KAUMARA MATALAYAM
Chinnavedampatti (PO)
Coimbatore - 641 006
Phone 0422 2666370,

www.Kaumaramutt.org

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
மடாதிபதி
சிரவணபுரம்
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 006. தமிழ்நாடு

27. 02. 2008

வாழ்த்துரை

..............................முராரியும்
அந்தி வண்ணத்து அமலனும் ஆகிய
முந்து கூடி முயங்கிய எல்லையில்
வந்த னன்எமை வாழ்விக்கும் ஐயனே.

அன்புடையீர்,

வணக்கம். திருப்பெருந்திரு குன்றக்குடி சந்நிதானங்கள் திருமுன்புக்கு,

தங்களின் அருளார்ந்த தலைமையின்கீழ் திருப்புத்தூர் காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுவது, அதன் நினைவாக தமிழ் மணம் கமழும் மலர் ஒன்றும் மலர்வது அறிந்து மகிழ்ந்தேன்.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். 'வேண்டத்தக்கது அறிவோனாக'வும், வேண்ட முழுதும் தருபவனாகவும் உள்ளவன் இறைவன். அவ்விறைவன் அன்பர்களின் அன்பிற்கு இறங்கி அருளும் தன்மையன். கருணையின் வடிவாகவுள்ள அவ்விறைவன் காளாப்பூரில் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் வடிவிலே எழுந்தருளியுள்ளார். அய்யனாரின் திருவருளால் அன்பர்கள் அருள்வளமும், பொருள்வளமும் பெற்று, மண்ணில் நல்லவண்ணம் வாழ வாழ்த்துகின்றோம்.

உ
சிவமயம்



அருட்டிரு. **அ.கோவிந்தானந்தா**
ஸ்ரீநாராயண ஆஸ்ரமம்
பிள்ளையார்பட்டி

வாழ்த்துரை

அ.காளாப்பூரின் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ இலங்கமுடைய ஐயனாரின் அன்புக்கு அடிமையாய் வாழ்ந்து கொண்டிருக்கும் காளாப்பூர் மக்களைப் பார்த்து நாம் வியப்புற்றோம்.

ஏன் என்றால், அவர்கள் அக்கோவிலின்பால் கொண்ட அன்பு, நம்பிக்கை, ஈடுபாடு மற்றொன்று திரு.சொ.சி.இராமன் யாதவ்பால் கொண்ட நம்பிக்கை, அதேபோல் ஊர் முக்கியப் பிரமுகர்கள் அக்கோவிலின்பால் ஈடுபாடு காட்டியவர்கள் எல்லோரிடத்திலும் கொண்ட நம்பிக்கை.

இவ்வாறு நம்பிக்கை கொண்ட மக்களைக் கண்டிப்பாக ஸ்ரீ இலங்கமுடைய ஐயனார், அவர்களுக்கு நல்வழிகாட்டியும், எல்லாவிதமான நன்மைகளையும் நிச்சயமாகச் செய்வார் என்று நாம் நம்புகிறோம். அனைவருக்கும் நல்வாழ்த்துகள்.

காணிக்கை

இரா. செல்வக்குமார் பி.ஏ
திருப்பணிக்குழுத் தலைவர்

பேரன்புடையீர்,

வணக்கம்.

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில் திருப்பணிகள் எனது தந்தையார் திரு.சொ. சி.இராமன் யாதவ் அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றுச் சிறப்புற நடந்துவந்தது. அப்பணி நிறைவுறும் முன்பே அவரை இறைவன் தன்னடிக்கு அழைத்துக்கொண்டான். தொடர்ந்து அவரது பணிகளைத் தொடர்வதில் எனக்குப் பெரிய தயக்கம் இருந்தது. ஐயனாரின் அருளும், அ.காளாப்பூர்ப் பெரியவர்கள், பொதுமக்கள் அளித்த அன்பும், ஆதரவும் என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்திற்று.

எல்லாநிலைகளிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்த தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களின் உதவி என்றும் போற்றுதற்கு உரியது. இளைஞர்களின் எழுச்சியில் அதிக அக்கறையும் நம்பிக்கையும் கொண்ட தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மேதகு ராணி டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார், அருள்திரு கோவிந்தானந்த சுவாமிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு கே.கே. உமாதேவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் இம்மலர்க்குழு கௌரவத் தலைவரும் ஆகிய திருமிகு. இராம. அருணகிரி, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத் தலைவர் உயர்திரு பி.ஆர்.பெருமாள், இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.தி.சுவாமிநாதன், சிவகங்கை தேவஸ்தான மேலாளர் திரு. மா.இளங்கோ, காளாப்பூர் கிராம அம்பலகாரர் திரு.பார்த்திபன் மற்றும் நன்னீராட்டுவிழாச்சிறப்பு மலர்க்குழுப்பெரியவர்கள், உள்ளிட்ட பலருக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மிகச் சிறப்பான நிலையில் திருப்பணிகள் நடைபெற நன்கொடைகளை வாரிவழங்கிய இறையன்பர்கள், குறிப்பாக, உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாட்டிலுள்ள அன்பர்கள் அனைவரையும் போற்றி மகிழ்கிறேன். திருப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்ட காலங்களில் முழுமூச்சோடு, குடும்பத்தோடு வந்து ஊழியமாக, உடல் உழைப்பு நல்கிய உள்ளூர்மக்களின் தொண்டு காலகாலத்திற்கும் நிற்கும். அவர்களுக்கும் என் நன்றி.

எனது தந்தையாருக்குப் பிறகு எடுத்துக்கொண்ட எல்லாமுயற்சிகளுக்கும் எனக்குத் தோள்கொடுத்துத் துணை நின்ற நண்பர்கள், பெரியவர்கள் மற்றும் நல்லுள்ளங்கொண்ட அனைத்து அன்பர்களுக்கும் எனது நன்றியை, எனது குடும்பத்தார் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பணிகளைச் சிறப்புற நிறைவுபடுத்தி திருக்குடநன்னீராட்டுவிழா, மண்டலாபிஷேக விழா என எல்லா நிலைகளிலும் ஐயனார் திருக்கோவில் அருட்பணியில் ஒத்துழைத்த அன்பர்கள், பொதுமக்கள், பத்திரிகையாளர்கள், இம்மலரைச்சிறப்புற உருவாக்கிய பெரியவர்கள், அவர்களது வேண்டுகோளை ஏற்றுப் படைப்புகளை அளித்த சான்றோர்கள், பதிப்பித்து உதவிய நண்பர்கள், விளம்பரங்களைத் தந்துதவிய நிறுவனங்களின் உரிமையாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

பரபரப்பான வேளையில் நன்றி கூறும் இந்த நேரத்தில் இதில் எவருக்கேனும் விடுபட்டுப்போய் இருந்தால் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, எல்லாம் வல்ல இலங்கமுடைய ஐயனார் அனைவருக்கும் நல்லருள் புரிய வேண்டிப் பணிகிறேன். இந்த நேரத்தில் என்னுள் இருந்து இயக்கும் என் தந்தையார் திரு. சொ.சி.இராமன் யாதவ் அவர்களை நினைந்து போற்றுகின்றேன்.

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும்

முனைவர் சொ.சேதுபதி

தமிழ் விரிவுரையாளர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) புதுச்சேரி-3

ஐயனார் வழிபாட்டுச் சிறப்பு

தமிழர்தம் வழிபாட்டுமரபுகளுள் தொன்மை வாய்ந்தது ஐயனார் வழிபாடாகும். இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டிருந்த தமிழர்தம் வழிபடு தெய்வமும் இயற்கை சார்ந்ததாக, இயற்கையைக் காத்து இன்பம் நல்குவதாகவே அமைந்திருந்தது. பொதுவாக, நானிலம் எனக் கருதப்பெற்ற தமிழகத்தில் சேயோன், திருமால், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்களோடு ஐந்தாம் நிலமாகிய பாலைக்குரிய கொற்றவையும் வழிபாட்டிற்குரியதாகஅமைந்திருப்பினும் அனைத்து நிலப்பரப்புகளிலும் வழிபாட்டிற்குரிய கடவுளாக ஐயனார் விளங்குகின்றார். சான்றாக, மலையும் மலைசார்ந்தநிலமுமாகிய பறம்புமலைப் பகுதியிலும், முல்லையும், மருதமும் ஆன காளாப்பூர் போன்ற நிலப்பகுதிகளிலும், நெய்தல் நிலமான புதுச்சேரிப் பகுதியிலும், வறண்ட நிலப்பகுதியிலும் கூட ஐயனார் கோவில்களும் அதற்குரிய வழிபாடுகளும் நிகழ்ந்து வருவதைக் காண முடிகின்றது. அதுமட்டுமன்றி, இத்தெய்வம் ஒன்றே இன்றளவும் சமஸ்கிருதப் பெயர் பெறாமல் தூயதமிழ்ப் பெயர் கொண்டமைகின்றது. தலைவன் என்ற பொருளுடைய 'ஐ' எனும் சொல்லை முதலாக்கொண்டு, அமைந்த ஐயன், மரியாதைக்குரிய 'ஆர்' விகுதி பெற்று 'ஐயனார்' என்று அமைகின்றது. இதனோடு 'அப்பன்' எனும் சொல் இணைத்து 'ஐயனாரப்பன்' என்று வழங்கும் மரபு புதுச்சேரிப்பகுதியில் நிலவுகின்றது. ஐயனார் என்ற பொதுப்பெயரோடு அந்தந்த ஊருக்குரிய சிறப்புப் பெயர்களும் பொருந்த ஐயனார் தமக்கான பெயர்களைக் கொண்டமைகின்றார். இப்பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே அமைகின்றன எனலாம்.

ஊருக்குப் புறத்தே இயற்கை சார்ந்த மலை, காடு, வயல் சூழ்ந்த பகுதிகளில் நீர்நிலை சார்ந்து நிழற்பாங்கான பகுதிகளில் அமைந்துள்ள ஐயனார் கோயில்களில், தொன்மைக்காலத்தில் யானைவாகனமும், பின்னர் புரவிவாகனமும் ஐயனா்ருக்குரியதாக அமைந்திருக்கின்றன.

தமிழர்களின் தொல்சமய நெறிகளான சைவத்தையும், வைணவத்தையும் இணைப்பதோடு, சிறுதெய்வ, பெருந்தெய்வ வழிபாடுகளின் இணைப்பதாகவும் ஐயனார் வழிபாடு அமைந்திருக்கின்றது. இதுமேலும் ஆய்வுக்குரியது. அத்தோடு சமணம், பௌத்தம் சார்ந்த நிலைகளிலும் ஒப்பிட்டுக் காணக்கூடிய பொதுமை ஐயனார் வழிபாட்டிற்குரியதாக அமைவதும் இங்குக் கருதத் தக்கது. கேரளத்தின் தெய்வமான ஐயப்பனோடு ஒப்பிட்டுக் காணவும் வாய்ப்பளிக்கும் ஐயனார் வழிபாட்டில், இசுலாமிய மரபிற்கும் இணைப்புண்டு. ஆக, எந்த ஒரு சமயத்தின் வழிபாட்டு மரபையும் மறுதலிக்காது ஏற்றுப்போற்றும் சமயஒருமைப்பாட்டு நெறி, இந்திய மரபான செக்யூலரிசம் தமிழர்கட்கு உண்டு என்பதை உணர்த்தும் வழிபாடு ஐயனார் வழிபாடு எனக் கொள்ளல் முற்றிலும் பொருந்தும் எனலாம்.

ஊரும் பேரும்

முன்னாள் இராமநாதபுர மாவட்டத்திலும் இந்நாள் சிவகங்கை மாவட்டத்திலும், திருப்புத்தூரை வட்டமாகக் கொண்டு, காரைக்குடி – திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிங்கம்புணரியை அடுத்து உள்ளது, காளாப்பூர்.

சிவகங்கை சமஸ்தானத்தைச் சார்ந்த இவ்வூர் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் வரிவசூலிப்பிற்காக, தேவஸ்தானக் காளாப்பூர் என்றும் அயன் காளாப்பூர் என்றும் கொள்ளப்பெற்றது. அதன் காரணமாக, **'அயன் காளாப்பூர்'** என்ற பெயரை உணர்த்தும் வண்ணம், அயன் என்ற சொல்லின் முதல் எழுத்தைப் பெற்று, **அ.காளாப்பூர்** என்று இவ்வூர் பெயர் பெறுகின்றது.

இவ்வூருக்கான பெயர்க்காரணங்கள் பலவாறாக அறியக் கிடைக்கின்றன. அருகில் உள்ள சதுர்வேதிமங்கலத்தைச் சார்ந்த காளப்பன் ஆசாரி என்பவருக்கான நிலங்கள் அதிகம் இருந்த பகுதியாக இது அமைந்ததால் 'காளப்பன் ஊர்' என்று வழங்கிக் 'காளாப்பூர்' என்று பெயர் பெற்றதாகச் செவிவழிச் செய்தி உணர்த்துகின்றது.

பாண்டிய, சோழநாடுகளின் எல்லைப் பகுதியை ஒட்டி இவ்வூர் அமைவதால் பல போர்களைச் சந்தித்ததன் காரணமாக, 'களப்போர்' என்ற பெயர் பெற்றுக் காளாப்பூர் என்று மருவியிருக்கவும் கூடும் என்கிறார்கள். அக்காலத்தில் மட்டுமன்றி, ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் வெள்ளையரை எதிர்த்து மருதுபாண்டியர்கள் நடத்திய பிரான்மலை, திருப்புத்தூர்ப் போர்களின் தாக்கங்கள் இவ்வூரைச் சார்ந்தும் இருந்திருக்கலாம். இதற்கான சான்றுகள் தேடற்குரியன. எனினும் ஒரு குறிப்பு. வளரி வீசுவதில் வல்லவரான சின்னமருதுவிற்கு வளரி என்னும் போர்க்கருவியை வடித்தளித்த ஆசாரி வாழ்ந்த ஊர் என்று கர்னல்வேல்ஷ் என்பார் எழுதிய என் படைநினைவுகள் என்னும் ஆங்கில நூலில் செய்தி உள்ளதாகச் சொல்லப்பெறுகின்றது. (தகவல்– முனைவர் இரா.சேது) இவ்வூரில் வாழ்ந்த மருதுநாயுடு என்பாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பெற்ற மருதுநாயுடுகாதல் நூலில் இடம்பெறும் பாடல்களில் இவ்வூர் காளை நகர் என்றே அழைக்கப்பெறுகின்றது. **'சீராருங் காளை நகர்'**, என்று பண்டிதமணியாராலும், **'உலகில் அதிகவளம் நிலவும் காளைநகர்'** என்று சிங்கம் புணரித்தலைமை ஆசிரியர் வெள்ளைச்சாமிவேளார் என்பவராலும்,**'ஞானமிகு தாரென்று நண்ணும் உயர் காளை மாநகரம்'** என்று சேவுகப்பெருமாள் என்பவராலும் இவ்வூர் சுட்டப்பெறுகின்றது. இதனைக் கொண்டு இவ்வூரின் வளத்தை அறிய இயலும். பெரிதும் காடுகள், வயல்கள் சூழ்ந்த இப்பகுதியை வளமுள்ளதாக்குவது பாலாறாகும்.



வழிபாடு சிறக்கும் வளநகர்– காளாப்பூர்

வள்ளல் பாரியாண்ட பறம்புமலைக்குத் தெற்கிலும், மாநகர் மதுரைக்கு வடக்கிலும் அமைந் துள்ள இவ்வூரைச் சுற்றிலும் பெருமைக்குரிய சிவத்தலங்கள் பலவுண்டு. வடக்கே திருக்கொடுங் குன்றம் என்னும் பிரான்மலை (பறம்புமலை)யில் திருக்கொடுங்குன்றநாதர் மற்றும் மங்கைபாகர், சற்று மேற்கே, சிவபுரிப்பட்டியில் தான்தோன்றீசுவரர், கிழக்கே சதுர்வேதி மங்கலத்தில் உருத்திரகோடீசுவர் மற்றும் திருப்புத்தூரில் திருத்தளிநாதர் எனும் திருப்பெயர்களுடன் சிவபெருமான் அம்பிகையுடன் எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார். மேலும் அழிந்துபோன அருவியூர் என்னும் பெரு நகரம் இப்பகுதியில் இருந்தமையால் பெரிய சிவாலயங்களும், திருமால் ஆலயங்களும் இருந்து அழிந்தமைக்கான சான்றுகள் இங்குக் காணப்பெறுகின்றன. மேலும், இவ்வூரைச்சுற்றிலும் அமைந்துள்ள ஊர்களிலும் ஐயனார் வழிபாடு சிறப்புற நிகழ்ந்துவருகின்றது.

சான்றாக, சிங்கம்புணரியில் பெருந்தெய்வ வழிபாட்டுக்குரிய நிலையில் அருள்மிகு சேவகப்பெருமாள் ஐயனார் வழிபாடு சிறப்பாக நடந்துவருவதைக் காணலாம்.

இரண்டு ஐயனார் கோவில்கள்

பொதுவாக ஊருக்கு ஒரு ஐயனார் கோவில் இருப்பதுண்டு. பல ஊர்கள் கூடிப் பொதுவாக, ஓர் ஐயனார் கோவிலில் வழிபாடு செய்வதும் உண்டு. காளாப்பூரிலோ இரு ஐயனார் கோவில்கள் இருப்பது சிறப்புக்குரியது .ஊருக்குத் தெற்கே அமைந்து தற்போது திருக்குட நன்னீராட்டுப் பெற்றுள்ள அருள் மிகு இலங்கமுடைய ஐயனார் கோவில் ஒன்று. மற்றொன்று, ஊருக்கு மேற்கே அமைந்துள்ளது. பாலாற்றின் வடகரையில் அவ் ஆறு சற்றே சுழித்து, வணங்கிச் செல்லும் இயற்கைச் சூழலில் வானமே கூரையாகக் கொண்டு பூரணை, புட்கலை உடனுறைய எழுந்தருளியிருக்கும் ஐயனாருக்கு, **'ஆதிசேடஐயனார்'** என்ற திருப்பெயர். ஐயனாரின் திருவுருவிற்குப் பின்புறமாக ஐந்துதலைகளுடன் சிவலிங்கத்தை உள்ளடக்கியவாறு நாகர் சிலை உள்ளது. ஆதிசேடன்




என்பது திருமால் பாற்கடலில் பள்ளிகொள்ளப் பாயான ஆயிரம் தலைகளை உடைய நாகத்தின் பெயர். அதுகருதி இந்நாகத்தை முன்னிறுத்தி இங்கு எழுந்தருளியுள்ள ஐயனாருக்கு, இப்பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும். வைகாசிமாதத்தில் இவ் ஐயனாருக்குப் புரவி எடுப்புவிழா இனிது நடைபெறுகின்றது. (காண்க. படம்)



ஊரின் மத்தியில் செல்வவிநாயகர் கோவில், கட்டப்புளிக்கருப்பர், வடக்குவாசல்செல்வி அம்மன் கோவில்கள் அமைந்திருக்கின்றன. இவையாவும் சிவகங்கை சமஸ்தானத்தைச் சார்ந்தவை ஆகும்.

தலமும் இருப்பிடமும்

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், சிங்கம்புணரியை அடுத்துள்ள காளாப்பூர் என்கிற கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் ஐயனார் அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் எனப்பெயர் பெறுகின்றார். இவருக்கு **அருவி சாத்த ஐயனார்** என்று இன்னொரு திருப்பெயரும் உண்டு. இவ் ஐயனாருக்கு உபயமாக அளிக்கப்பெற்ற பூசைப்பாத்திரத்தில் இப்பெயர் பொறிக்கப் பெற்றுள்ளது, இதற்குச் சான்றாகும். (காண்க. படம்) இவ்வூரின் தெற்குப்புறத்தில் கோவில் கொண்டருளியதால் இவர் **தெற்கு ஐயனார்** என்றும் அழைக்கப்பெறுகிறார். இக்கோவிலானது, சிங்கம்புணரி திருப்புத்தூர்ச் சாலையில் சுமார் 1.5 கி.மீ. தொலைவில் புதுப்பட்டி, எஸ்.கோவில்பட்டிச் சாலையில் அமைந்துள்ளது.



திருக்கோவில் அமைப்பும் சிறப்பும்

நீண்ட அருவிக்கண்மாயினை ஒட்டி, அருவிச் சுனையின் மேற்கே அழகுறத் திகழ்கின்றது, திருக்கோவில். தார்ச்சாலையில் கோவிலின் முகப்பில் அழகிய தோரணவாயில் எடுப்பாய்த் திகழ்கின்றது. கண்மாய்க்குக் குறுக்கே நீள விரியும் சிமெண்ட் சாலையின் இருபுறமும் உள்ளூர்ப் பெண்களின் கைவண்ணத்தில் உருவான கோலங்கள். அவற்றைத் தாண்டி முன்னேகும்போது இரு பிரம்மாண்டமான புரவிகள் தமது முன்னங்கால்களை முன்னிற்கும் பூத கணங்களின் தோள்களில் ஊன்றியபடி கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.



சுற்றிலும் உயர்ந்த திருமதில் சுவர்கள் சூழ, தலவிருட்சங்களாக, வில்வமரமும், பாக்குருந்தை மரமும், பன்னீர்மரமும் திருக்கோயில் உட்புறத்தில் இனிது வளர்ந்திருக்கின்றன. இராஜகோபுரம் மூன்றடுக்குகளோடு காட்சிதருகின்றது. அதனை அடுத்து மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என அமைகின்றது ஐயனார் ஆலயம். கருவறையில் பூரணை, புட்கலை இருபுறத்தும் வீற்றிருக்க நடுநாயகமாக இலங்கமுடையஐயனார் வீற்றிருக்கின்றார். அர்த்தமண்டபத்தின் வலது ஓரத்தில் விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றார். மகாமண்டபத்திலிருந்து அர்த்தமண்டபத்திற்கு நுழையும் வாசலின் இருபுறமும் துவாரபாலகர்கள் சிலைகள் அமைக்கப்பெற்றன. கருவறையின் மேல் தனிவிமானம் அமைந்துள்ளது. மகாமண்டபத்தில் யானை வாகனம், பலிபீடம் ஆகியன அமைந்துள்ளன. இருபுறமும் நின்று வழிபட வசதியாகவும், விசாலமாகவும் தடுப்பின்றி மகாமண்டபம் அமைக்கப்பெற்றுள்ளது. பரிவாரதெய்வங்கள் கோவிலின் உட்பிரகாரங்களில் தனித்தனிப் பகுதிகளில் அமைந்துள்ளன. மகாமண்டபத்தை அடுத்துக் கிழக்குமுகமாக திறந்த வெளியில் சோனையன் நின்றகோலத்தில் அருள்பாலிக்கிறார். மாடவடிவில் அமைக்கப்பெற்ற அவர்தம் உறைவிடம் வானையே கூரையாகக்கொண்டமைகின்றது. விநாயகர் கன்னிமூலையில் தனிக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். பொதுவாக, வள்ளிதெய்வயானை உடனுறைபவராக எழுந் தருளியிருக்கும் முருகப்பெருமான் இங்கே ஏகாந்தமூர்த்தியாக, மயில்வாகனத்தோடு நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றார். இந்தத் திருக்கோவிலுக்கே உரிய முப்புளிக்கருப்பர் தனி விமானம் கொண்டு கோவிலின் பிரகாரத்தில் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். மூன்று புளிய மரங்கள் நிழல்பரப்பிய இடத்தில் எழுந் தருளியிருப்பதால் இவருக்கு இப்பெயர் வழங்கி யிருக்கக்கூடும். பேச்சுவழக்கில் இவரது திருப்பெயர் முப்பிலி, மற்றும் முப்புலிக் கருப்பர் என்பதாக வழங்கப்பெறுகின்றது. அதனை அடுத்த நிலையில் பேச்சியம்மனும், சப்தகன்னியரும் தனிக்கோவிலில்

எழுந்தருளியுள்ளனர். சப்தகன்னியர் ஒரே கல்லில் வடிக்கப்பெற்றுள்ளனர். விநாயகர் கோவிலை அடுத்து நாகர் சிலை தனிப்பீடத்தில் மிகப்பெரிய நிலையில் அமைக்கப்பெற்றுள்ளது. ஐந்து தலைகளுடன் லிங்க உருவம் தாங்கி நாகலிங்கமாக அமைந்திருக்கின்றது. கோவிலின் மேற்குப்பிரகாரத்தில் அமைந்திருப்பது ஆண்டித்தெய்வங்களின் சிலாஉருவங்கள். அபயக் கரம் காட்டியபடி மூன்று சித்தர்கள் தாடியுடன் மென்முறுவல்பூத்த முகங்களுடன் அருள்பாலிக் கின்றனர். பொதுவாய் இத்தகு பரிவாரதெய்வங்கள் ஐயனார் கோவிலில் இருப்பது வழக்கம். எனினும், இந்த ஐயனார் கோவிலின் தீர்த்தமாக சுனையின் பாறையில் இல்லறஞானியர் அக்காலத்தில் வசித்து வந்திருக்கின்றனர். குளிப்பதற்கான ஒரு சுனைப்பகுதியையும், குடிநீருக்காக ஒரு சுனைப்பகுதியையும் பயன்படுத்திவந்த அவர்கள் அப்பாறையின்மீதே தங்களது இருப்பிடத்தை வடிவமைத்துத் தவம் புரிந்திருக்கின்றனர். அந்த இருப்பிடத்திற்கான அடையாளங்கள் இன்றும் அப்பாறையில் காணப்பெறுகின்றன. அவர்கள் அங்கே இருந்த காலத்தில் பெரியவர்கள் பார்த்ததாகக் கூறியதை உள்ளூர்மக்கள் நினைவு கூர்கின்றனர். இங்குள்ள சுனைநீரே உள்ளூர் மக்களின் குடிநீராகவும், ஐயனாருக்கு அபிடேக நீராகவும் பயன்படுத்தப்பெறுகின்றது. இத்திருக்கோயிலின் தல தீர்த்தமும் இதுவே.

திருக்கோவிலின் வடக்குப்பிரகாரத்தில் முருகன் கோவிலையடுத்து பன்னீர் மரம் உள்ளது. அதனை யடுத்து, தெற்குப் பார்த்த வண்ணம் கையில் அரிவாளொடு நின்ற கோலத்தில் பட்டதெய்வமும், அமர்ந்த கோலத்தில் பேச்சியம்மன், பாப்பாத்தி அம்மன், ராக்காயி அம்மன் ஆகியோரும் அருள் பாலிக்கின்றனர். அதனை அடுத்துக் குருந்தை மரம் உள்ளது. அதன் அருகில், ஐயனார் கோயிலுக்கே உரிய பரிவார தெய்வங்களான பெரியகருப்பர், சின்னக்கருப்பர் ஆகிய தெய்வங்கள் தெற்குமுகமாக எழுந்தருளியிருக்கின்றன. கோவிலின் கிழக்குப் பகுதி உட்பிரகாரத்தில் வடக்கே பெரிய மணியும், தெற்குத் திருமதில் சுவரில் இத்திருக்கோவில் திருப்பணிக்காக உபயமளித்த அன்பர்களின் பெயர்ப்பட்டியல் அடங்கிய கல்வெட்டுக்களும் இடம் பெற்றுள்ளன.

ஒரு காலத்தில் அடர்சோலையாக இருந்த பகுதி இது. இனிவருங்காலத்தில் பெரிய நந்தவனம் அமையவுள்ளது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

திருப்பணியும், திருக்குடநன்னீராட்டும்


தொன்மைவாய்ந்த இக்கோவில் கட்டப்பெற்ற காலம் திருப்பணிகள் நடைபெற்ற காலம் ஏதும் அறியமுடியவில்லை. எனினும் இதனைப் புதுப்பித்து விரிவான திருப்பணிகளை மேற்கொண்டு திருக்குட நன்னீராட்டு விழா செய்யப்பெற்ற வரலாறு இம்மலருள் தனிக்கட்டுரையாக நிருபர் திரு. வே.அழகப்பன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.


வழிபாட்டுநாட்கள்

ஆண்டுதோறும் சிவன்ராத்திரியில் சிறப்பு வழிபாடும், வாரநாட்களில் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளிலும், அமாவசை நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. புரட்டாசி மாதம் கடைசிச் சனிக்கிழமை அன்று சிறப்பான நிலையில் அன்னதானம் நடைபெறுகின்றது. வேளாளர்கள் பூசை செய்துவருகின்றனர். புரவிஎடுப்பு விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றது. வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அருளும் ஐயனார் காவல் தெய்வமாக விளங்குவதோடு அன்பர்கள் வாழ்வில் பல அற்புதங்கள் புரிந்து வருவதை மெய்சிலிர்க்க விரித்துக் கதைகளாய்ச் சொல்கிறார்கள். அவற்றுள் ஒன்று, இங்கு அறுவடைக்காலங்களில் நெல், கடலை ஆகியவற்றைத்தூய்மைப்படுத்தவும், காயவைக்கவும் இங்குள்ள பாறையைப் பயன்படுத்துகின்ற மக்கள் இரவுப் பொழுதில் ஐயனார் காவலுக்கு விட்டுவிட்டு வீடு திரும்பிவிடுகிறார்கள். யாரும் ஐயனார் சந்நிதியின் முன்பு உள்ள அப்பொருள்களைத் திருட முன்வருவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பன்னெடுங்காலமாய் இங்கு வீற்றிருந்து அருள் பாலித்துவரும் ஐயனார்க்கு இந்தத் தலைமுறை எடுத்துக்கட்டிய கோவிலில் தொடர்ந்து வழிபாடு செய்யவும், வளங்குன்றாது பராமரித்துத் திருப்பணிகள் செய்யவும், என்றென்றும் மானுடகுலம் இனிது தழைக்கவும் காலமும் கருணைத்தெய்வமாகிய ஐயனாரும் அருள் பாலிக்கட்டும்.







1.தோரணவாயில்
2,3 புரவிகள்
4.இராஜகோபுரம்
5.இலங்கமுடைய ஐயனார்
6. பூரணாதேவி
7.புஷ்கலா தேவி
8. விநாயகர்
9,10. துவாரபாலகர்கள்
11. யானை வாகனம்
12. பலிபீடம்
13. சோனைக்கருப்பர்
14.முப்புலிக்கருப்பர்
15.வில்வமரம்
16.சப்தகன்னியர்
17.விநாயகர்
18. நாகர்
19.சந்நியாசியர்
20. முருகர்
21. பன்னீர் மரம்
22. பட்டதெய்வம், பேச்சியம்மன், பாப்பாத்தி அம்மன்.
23. குருந்தை மரம்
24. பெரிய கருப்பர் சின்னக்கருப்பர்.
25. மணிக்கூண்டு
26. அருவிக்கண்மாய்
27. சுனைநீர் (தலதீர்த்தம்)

திருக்கோவில் திருப்பணிகள்

திரு. வே.அழகப்பன்
நிருபர், சிங்கம்புணரி

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் வட்டம், சிங்கம்புணரிக்கு அருகே பாலாற்றங் கரையில் அமைந்துள்ள அ.காளாப்பூர் கிராமம் இயற்கைவளமும் ஐயாயிரம் ஆண்டுக்காலத் தொன்மைச் சிறப்பும் உடையது. இக்கிராம தெய்வங்களான அருள்மிகு வடக்குவாசல் செல்வி அம்மன், கட்டப்புளிக் கருப்பர், ஆதிசேட ஐயனார், மற்றும் பரிவார தெய்வங்களை மக்கள் வழிபட்டு வாழ்வில் வளம் பெறுகின்றனர். அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோயில் பன்னெடுங் காலத்திற்கு முன் சுனைக்கண்மாய் உள்வாயில் இயற்கைஎழில்மிக்கபகுதியில்அ.காளாப்பூரிலிருந்து புதுப்பட்டி செல்லும் சாலையில் சுமார் 1.5 கி.மீ தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இதற்குமுன் எந்தக் காலத்தில் நடந்தது என்பதைச் செவிவழிச் செய்தியாகக் கூட நாம் அறிய முடியவில்லை. இங்கு இலங்கமுடைய ஐயனாரைக் குலதெய்வமாகக் கொண்ட எனினும் குடும்பங்கள் பல உள்ளன. தமிழகத்தில் பழைய, புதிய கோவில்களுக்கு நாள் தோறும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்கள் நடைபெற்றுவரும் சூழலில் அ.காளாப்பூர் கிராமப் பெரியவர்கள் மத்தியில் சிதிலமடைந்த நிலையில் இருந்த இக்கோவிலைப் புதுப்பித்துத் திருப்பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற சிந்தனை எழுந்தது.

அதனை ஒட்டி 2002ஆம் ஆண்டு அ.காளாப்பூர் தொழிலதிபர் திரு.சொ.சி.இராமன் அவர்கள் தலைமையில் திருப்பணிக் குழு அமைக்கப்பெற்றது. ரூ.30லட்சம் மதிப்பீட்டில் பூமி பூசையுடன் திருப்பணி தொடங்கியது. நிதிநெருக்கடி காரணமாக இடையில் சிறிது காலம் திருப்பணியில் தொய்வு ஏற்பட்டது. அப்போது மன்னர் காலத்தை நினைவூட்டும் வகையில் அ.காளாப்பூரைச் சார்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கோவில் திருப்பணிக்குத் தங்கள் உழைப்பை நல்கினர். (காண்க. தினமலர் செய்தி 12.09.2005)

திருக்கோவிலுக்குச் செல்லும் நுழைவிடத்தில் அழகிய தோரணவாயில், சுனைக்கண்மாய் நீரைக் கடப்பதற்கு இணைப்புப் பாலம், கோவில் முன் இருபுறமும் பூதகணங்களுடன்- பிரம்மாண்டமான சேமக்குதிரைகள், மூன்று நிலைகளைக்கொண்ட ராஜகோபுரம், 120 அடி நீளம் மற்றும் 80 அடி அகலம் கொண்ட நாற்புறமும் அழகிய திருமதில் சுவர் கொண்ட கோவில் வளாகத்தில் அருள்மிகு மூலவர் இலங்கமுடைய ஐயனார், பரிவார தெய்வங்களுக்கும் தனித்தனிக்கோவில்கள் அமையப் பெற்றுள்ளன. பல்வேறு காரணங்களால் இடையிடையே தடைகள் ஏற்பட்டு திருப்பணி நிறைவுபெற 5 ஆண்டு காலம் கடந்ததால் திருப்பணி மதிப்பீட்டுத் தொகை இருமடங்காக உயர்ந்தது.

இச்சூழலில், தமிழக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர். பெரிய கருப்பன் அவர்களின் முயற்சியால் அறநிலையத் துறைநிதி ரூ. 7.40 இலட்சமும், அ.காளாப்பூர் மக்கள், வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இறையன்பர்கள் அள்ளித்தந்த நிதியுதவியுடன் ரூ.75 இலட்ச அளவில் திருப்பணிகள் மிகச்சிறப்பாக நிறைவு பெற்றன.

அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் திருக்கோவில் திருப்பணிகள் நிறைவுற்றுத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா தொடங்கியது. சர்வதாரி ஆண்டு சித்திரை மாதம் எட்டாம் நாள் 20. 04. 2008 ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி அளவில் கோவில் முன் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த பெரிய பந்தலில் நவ யாகக்குண்டங்கள் அமைத்து, யாகசாலைப் பூஜைகள் தொடங்கின.

முதல்நாள், அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை, நவக்ரக பூஜை, புண்யாகவாசனம், கிராம சாந்தி, கோபூஜைகளும் இரண்டாம் நாள், வாஸ்து சாந்தி, பிரவேசபலி, திக்பந்தனம், மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தம், கலாஹர்சனம், கடஸ்தாபனம், யாகசாலைப்பிரவேசம், முதற்கால யாகபூஜை, பூர்ணஆகுதி, தீபஆராதனை, சதுர்வேத யாகம், திருமறை ஆசீர்வாதமும், மூன்றாம் நாள் இரண்டாம் கால யாகபூஜை, யந்திர ஸ்தாபனம், பூர்ண ஆகுதி, தீப ஆராதனை, சதுர்வேதி திருமறை ஆசீர்வாதம், மூன்றாம் கால யாகபூஜை பூர்ண ஆகுதி, தீப ஆராதனை, ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம், திருமுறை, சிவாகமேஸ்தோத்திரமும்,

ஆசீர்வாதமும், நான்காம் நாள் 23.04.2008 புதன் கிழமை அன்று காலை திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடந்தது.



சிங்கம்புணரி அருகே காளாப்பூர் தெற்கு ஐயனார் கோயில் திருப்பணியில் அப்பகுதியினர் ஆர்வமுடன் பணியாற்றி வருகின்றனர்.

பழமையான கோயிலை புனரமைக்க களம் இறங்கிய கிராமமக்கள்

சிங்கம்புணரி, செப். 12-

சிங்கம்புணரி அருகேயுள்ள காளாப்பூர் கிராமத்தில் கோயில் கட்டும் பணியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஈடுபட்டனர்.

காளாப்பூர் தெற்கு ஐயனார் கோயில் 500 ஆண்டுகள் பழமையானது. இக்கோயிலை முற்றிலும் புதுப்பிக்க ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கடந்த ஆண்டு பாலாலயம் செய்யப்பட்டது. உபயதாரர்கள் சார்பில் ராஜகோபுரம், கோயில் முன் ஆண் மனை புரவிகள். முகவர் ஐயனார், விநாயகர், முருகன் தனி சன்னதிகள் உட்பட 9 கோபுரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுள்ளன. இன்னும் பல்வேறு பணிகள் நடைபெற வேண்டியுள்ளது.

நிதி பற்றாக்குறையால் பணியில் தொய்வு ஏற்பட்டது. இதை சரிசெய்ய வீட்டுக்கொருவர் வீதம் கோயில் கட்டும் பணியில் நேரடியாக ஆண்களும், பெண்களும் தினமும் 200 பேர் நேரடியாக களத்தில் இறங்கி வேலை செய்தனர்.

எல்லா இடங்களிலும் பொது மக்களிடம் நன்கொடைகள் பெற்று கூலி ஆட்களை வைத்து திருப்பணிகள் நடக்கும். இங்கு வித்தியாசமான முறையில் மக்கள் தங்கள் உடல் உழைப்பை இறைப்பணிக்கு நல்கினர்.

மன்னர் ஆட்சி காலத்தில் மக்களே குடிமராமத்து செய்ததை நினைவுபடுத்துவதாக இது இருந்தது.


திருப்பணிக்குழு தலைவர் ராமன் யாதவ் தலைமையில் பொதுமக்கள் பணியில் ஈடுபட்டனர்.

அன்று காலை 7.00 மணி அளவில் மண்டப சாந்தி பிம்ப சுத்தி, லட்சுமி பூஜை, சுவாசினி பூஜை, கோபூஜை, யாகசாலை பூஜை, நயனோதாரணம், திரவியஆகுதி, நாடிசந்தானம், சபர்சாஆகுதி, காலை 9.00 மணி அளவில் பூர்ணஆகுதி, தீபஆராதனை, சதுர்வேதம், சிவகாம ஸ்தோத்திரம், திருமுறை ஆசிர்வாதம், யாத்ரா தானமும், காலை 9.30 மணிக்கு யாகசாலையிலிருந்து கடம் புறப்பட்டுக் கோவிலை வலம் வந்து கோபுரங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

காலை 10.15 மணிக்கு அருள்மிகு பூரணை புட்கலா சமேத இலங்கமுடைய ஐயனார் கோவில் விநாயகர், முருகர், முப்புளிக்கருப்பர், பெரிய கருப்பர், பேச்சியம்மன், சப்தகன்னியர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களின் விமானங்களுக்கும் திருக்குட நன்னீராட்டுச் சீரும் சிறப்புமாக நடத்தப்பெற்றது.

சிங்கம்புணரி அருள்மிகு சேவுகப்பெருமாள் கோவில் சிவாச்சாரியார் சர்வசாதகம் பெரி.சேசின்னையா அவர்கள் தலைமையில் 20க்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் யாகசாலை பூஜை ஆராதனைகளில்

4 தினங்களும் ஈடுபட்டு இருந்தனர். உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளில் வசிக்கும் பெருமக்கள் வெள்ளமெனத் திரண்டு ஐயனின் திருக்குட நன்னீராட்டு விழாக் காட்சிகளைக் கண்டு பரவசமடைந்தனர்.



இந்து அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர். பெரியகருப்பன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானம், பரம்பரை அறங்காவலர் மேதகு இராணி டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. இராம அருணகிரி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு.கே.கே. உமாதேவன், அருள்திரு கோவிந்தானந்தா சுவாமிகள், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு. பி.ஆர். பெருமாள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

அருகில் உள்ள கிராமங்களுக்கு மரபுப்படி அ.காளாப்பூர் கிராமத்தின் சார்பில் நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்கள் அனுப்பப் பெற்றிருந்தன. சிங்கம்புணரி, எஸ்.வி.மங்கலம், எஸ்.கோவில்பட்டி, எஸ்.எஸ்.கோட்டை, முறையூர், மு.சூரக்குடி, கண்ணமங்கலப்பட்டி, கிருங்காக்கோட்டை உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து கிராமப் பெரியவர்கள் வருகைபுரிந்து இலங்கமுடைய ஐயனாருக்குப் பட்டுச் சார்த்தி மலர் மாலைகள் சூட்டி, தேங்காய் பழங்கள் அர்ச்சனை செய்து வழிபட்டனர். அவர்களுக்குக் கோவில் மரியாதை பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது.

திருக்குட நன்னீராட்டு விழாவை முன்னிட்டு திருமதி இளம்பிறை மணிமாறன் அவர்களின் ஆன்மிகச் சொற்பொழிவு, ஸ்ரீவள்ளி திருமண நாடகம், டிலைட் ஆர்க்கெஸ்ட்ரா ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், கரகாட்டம், திரைப்படக் காட்சி எனப் பல்வேறு கலை, இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்விழாக் குறித்த செய்திகள், விளம்பரங்கள் நாளேடுகளில் விரிவாக இடம்பெற்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் பதிவு செய்து ஒளிபரப்பின.



நன்னீராட்டு நாளிலிருந்து தொடர்ந்து 48 நாட்கள் இலங்கமுடைய ஐயனாருக்கும் பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிசேக ஆராதனைகள் நடத்தப்பெற்று, சர்வதாரி ஆண்டு வைகாசி மாதம் 28ஆம் நாள் 10.06.2008 செவ்வாய்க்கிழமை காலை மண்டல பூஜை மிகச்சிறப்பாக நடந்தேறியது. பக்தர்களுக்கு ஐந்து வகை அன்னதானங்கள் வழக்கப்பட்டன. அன்று இரவு ஐயனார் கோவில் முன் கலை அரங்கில் கலை இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இறைவனுக்குத் திருப்பணியும் திருக்குட நன்னீராட்டும் மண்டலாபிசேகமும், சிறப்பு நடத்தி மகிழ்ந்திருக்கும் யாதவா தெரு கோப்பணதெருவைச் சார்ந்த மக்கள், அ.காளாப்பூர் மக்கள் திருப்பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த அனைத்து அன்பர்கள் ஆகிய அனைவருக்கும் நல்லருள் பாலித்து எல்லா நலமும் வளமும் பெற்று வளரவும் வாழவும் அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் நல்லருள் புரிவாராக!



ஐயனார் வழிபாடு

கவிஞர் **மரு. பரமகுரு**
குன்றக்குடி

ஐயனார் வழிபாடு, காலப்பழமையுடையது. சிலப்பதிகாரத்தில், 'புறம்பணையான்' என்றும், 'பாசாண்ட சாத்தன்' என்றும் ஐயனார் குறிக்கப்படுகிறார். 'புறம்பணையான்' என்பதற்கு 'மாசாத்தன்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறுவார். மேலும் அவர், புறம்பு அணைந்தவிடம் புறம்பணையாயிற்று என விரித்துரைப்பார். அடுத்துப் 'பாசாண்ட சாத்தற்கு' என்னும் தொடருக்கு 'சாத்தன் என்ற ஐயன் கோயிலிலே' என்று பொருள் கூறுவார். சாத்தன் மாசாத்தன் என்பன ஐயனாரின் திருநாமங்களாகும்.

புத்தர் பல சாத்திரங்களைக் கற்று வல்லவர் என்ற காரணத்தால் அவருக்குச் சாஸ்தா அல்லது மகாசாஸ்தா எனப் பெயர்களுண்டு என்பது அறிஞர் கருத்து. ஒன்பதாம் நூற்றாண்டு இலக்கியமாகக் கருதப்படும் வளையாபதிக் காப்பியம்,

"பண்ணார் திறத்தில் பழுதின்றி மேம்பட்ட
தொண்ணூற் றாறுவகைக் கோவையும் வல்லவன்
விண்ணாறு இயங்கும் விறலவ ராயினும்
கண்ணாறி நோக்கிக் கடுநகை செய்வான்"

என்று ஐயனார் பற்றிப் பேசுகிறது.

"பாசாண்டத் துறையும் இவற்றுட் பலவாம்
பேசில் தொண்ணூற்று அறுவகைப் படுமே"

என்று திவாகரநிகண்டு – 12 பாசாண்டம் பற்றி விளக்குகிறது. இவற்றால் பாசாண்டம் எனப்படும் தொண்ணூற்றாறு வகைத் தத்துவ நூல்களையும் கற்று வல்லவர் எனப்படும் ஐயனார், பல சாத்திரங்களையும் கற்றுவல்ல புத்தர்தான் சாஸ்தாதான் எனக் கருதுவதில் தவறில்லை. தமிழகத்தில் புத்தருக்கெனத் தோன்றிய சாத்தன் கோயில்கள் ஐயனார் கோயில்களாக மாற்றப்பட்டன. "சாஸ்தா அல்லது சாத்தன்" என்னும் வடசொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல் ஐயனார் என்பது. 'ஐயன்' என்பதற்கு, உயர்ந்தோன், குரு, ஆசான் என்பன பொருள். பௌத்தமதம் அழிந்தபின்னர் அம்மதக் கொள்கைகளையும் தெய்வங்களையும் இந்துமதம் ஏற்றுக் கொண்டபோது வெவ்வேறு கதைகள் ...பிக்கப்பட்டன (பௌத்தமும் தமிழும் பக். 147) என்பது எண்ணத்தக்கது. இவ்வாறு உருவான வரலாறு சிலப்பதிகாரக் காலத்திலேயே நிலைகொண்டு விட்டதை, 'பாசாண்ட சாத்தன்' என்ற சொல் உறுதி செய்கின்றது. புறம்பணையான் என்பதற்கு 'புறம்பு அணைந்தவிடம் புறம்பணையாயிற்று' என்பார் அடியார்க்கு நல்லார். இதன்மூலம் ஐயனார் கோயில் ஊருக்குப் புறம்பில் அமைந்திருப்பதை எங்கும் காணலாம்.

இனி, ஐயனார் பற்றிய புராணச் செய்தியைப் பார்க்கலாம்.

முன்னொரு காலத்தில் அமுதம் வேண்டித் தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்தனர். அமுதம் எழுந்தது. அந்த அமுதத்தை அசுரர்கள் உண்டுவிடாமலிருக்கக் கருதிய திருமால் மோகினி வடிவம் கொண்டு அங்கு சென்று நின்றார். இதனைக் கந்தபுராணம்,

"ஞாலம் பிறந்தோர் சுரர்தானவர் நச்ச ஆங்கோர்
ஆலம் பிறந்த தெனமோகினி யாகிநின்றான்"
(கந்த. மகா. சாத்தப்படலம்–8)

என்று பேசும்.

இவ்வாறு நின்ற மோகினியின்பால் மோகம் கொண்டு அசுரர்கள் அமுதம் உண்பதை விட்டு அவளைச் சூழ்ந்தனர். அசுரர்கள் இவ்வாறு இடப்பெயர்ச்சியானதும் தேவர்கள் அந்த அமுதத்தை உண்டனர். அதுபோது அந்த மோகினியின்மீது விருப்பம் கொண்ட சிவபெருமான் மோகினியோடு கூடி முயங்கினான். அப்போது ஐயனார் தோன்றினார்.

"................................ முராரியும்
அந்தி வண்ணத்து அமலனும் ஆகியே
முந்து கூடி முயங்கிய எல்லையில்
வந்த னன்எமை வாழ்விக்கும் ஐயனே"
(கந்தபுராணம் மகாசாத்தப்படலம்)

என்பது கந்தபுராணம். இவ்வாறு அவதரித்த மைந்தருக்கு சிவபெருமான் 'அரிகரபுத்திரன்' எனும் நாமம் சூட்டினார். உருத்திரர்களோடு அமரச் செய்தனர். வரம்பல வழங்கினர். புவனங்களை வழங்கி, அப்புவனங்களுக்குத் தலைவனாக்கினார். தேவர்களும் முனிவர்களும் ஏனையோரும் வணங்கும் ஏற்றம் நல்கினார். பின் அந்த அரிகரபுத்திரன், தம் துணைவர்களோடு எல்லாவுலகையும் இரவுபகலாகக் காத்து

வருகின்றான். இவ்வையன், பூரணை, புட்கலை உடனாக இருப்பவன். யானை வாகனம் உடையவன் என்றெல்லாம் கந்தபுராணம் எடுத்தோதுகிறது. ஆதலால் ஐயனார் காத்தல் தெய்வம் என்று அறிகின்றோம். அவ்வாறே மக்கள் அவரைக் கருதி வழிபாடும் செய்து வருகின்றனர்.

"விண் வழியில் செல்கின்ற விறலுடையவராயினும் அவர்களைக் கண்வழி நோக்கிக் கடுநகை செய்வான்" என்று பேசும் வளையாபதியின் வாக்கு ஐயனார் காவல் தெய்வமாக விளங்குவதைத் தெளிவுபடுத்தும்.

"மூவுலகத்தையும் கருணையோடு காப்பவன் என்றும், கரியநிற மேனிக் கடவுள் என்றும், வெள்ளை யானையை வாகனமாகக் கொண்டவன்" என்றும் கந்தபுராணம் கூறும்.

"தாரணி முதல மூன்றும் தலையளி புரிந்து காப்பான்
காரணி செறிந்துற் றன்ன கரியவன் கடவுள் வெள்ளை
வாரணம் உடைய ஐயன்"
(கந்தபுராணம், மகாகாளர் விருபடலம்– 12)

என்பது கந்தபுராணம். பூம்புகாரில் இருந்த பல கோட்டங்களில் பாசாண்ட சாத்தன் கோயிலும் இருந்தது என்பதை முன்னர் அறிந்தோம். காவல் தெய்வமான இந்தப் பாசாண்ட சாத்தன் எளியார்க்கிரங்கும் கருணைத் தெய்வமாகவும் விளங்கிய செய்தியைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கலாம்.

பூம்புகாரில் மாலதி என்பவள் வாழ்ந்தாள். அவள்தன் மாற்றாளின் (சக்களத்தியின்) ஆண்குழந்தைக்கு மாற்றாள் இல்லாதபோது பாலூட்டினாள். அப்போது பால் விக்கி, அக்குழந்தை இறந்துவிட்டது. மாலதி திடுக்கிட்டாள். தன்மீது, தன் கணவனும் மாற்றாளும் அடாதபழி சுமத்துவரே என்று ஏங்கினாள். அதனால் அந்த மகவைக் கையிலேந்திக் கொண்டு அமரர் தருக்கோட்டம், வெள்ளானைக் கோட்டம், பலதேவர் கோட்டம், சூரியதேவன் கோட்டம், ஊர்க்காவல் தெய்வக் கோட்டம், வேல்கோட்டம், வச்சிரப்படைக் கோட்டம், புறம்பணையான் (மாசாத்தன் கோட்டம்), அருகன் கோட்டம், சந்திரன் கோட்டம் முதலிய கோட்டங்களுக்கு எல்லாம் சென்று "தெய்வங்களே, எனக்கு வந்த துயரைத் தீருங்கள்..." எனத் தொழுது வேண்டினாள். பயன் ஏதுமில்லை.

அதன்பின் பாசாண்ட சாத்தனை வழிபட்டுப் பாடு கிடந்தாள். ஓர் இடாகினிப் பேய் அழகிய வடிவில் அப்போது தோன்றியது. "குற்றமற்றவளே, செய்தவம் இல்லாதவருக்கு எந்தத் தேவரும் வரம் கொடுக்க மாட்டார்கள். இது பொய்யுரையன்று. மெய்யுரை. இறந்த குழந்தையை என் கையில் தா" என்று சொல்லிப் பறித்துக் கொண்டது. அப்போது காரிருள் பொழுது. சுடுகாட்டுக்குச் சென்றது. அங்கு புதைக்கும் பிணங்களைத் தின்னும் அந்த இடாகினிப் பேய் இறந்த அக்குழந்தையைத் தன் வாயில் போட்டு விழுங்கியது. அக்கொடிய காட்சியினைக் கண்ட மாலதி இடியுண்ட மயிலைப் போல் துடித்தாள். ஏங்கி அழுது கதறினாள்.

அவள்நிலைகண்ட பாசாண்ட சாத்தன்– (ஐயனார்) பெரிதும் இரங்கி "தாயே, நீ ஏங்கி அழாதே. நீ செல்லும் வழியில் உன் கண் எதிரிலேயே உன் குழந்தையைக் காண்பாய்" என்றான். அந்தக் குழந்தையாய் வடிவு கொண்டு ஒரு சோலையில் மரத்தடியில் கிடந்தான். அந்த மாயக்குழந்தையை மகிழ்ச்சியுடன் மார்பில் அணைத்துக் கொண்டு சென்று, பெற்ற தாயான மாற்றாளிடம் தந்து மகிழ்ந்தாள் மாலதி.

குழந்தையாகத் தோன்றி மாலதியின் துயர் துடைத்த பாசாண்ட சாத்தன் வளர்ந்து இளைஞனான். மேலான பொருளுணர்ந்த நூல்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றான். தாய், தந்தை இறந்தபின் அவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தான்.

தேவந்தி என்னும் பெண்ணை மணந்து இல்லறத்தில் இனிது வாழ்ந்தான். இந்த நிலையில் உண்மையைச் சொல்லித் தன் தெய்வத் தன்மையை மீண்டும் அடையக் கருதிய அந்தப் பாசாண்ட சாத்தன், தன் மனைவியாகிய தேவந்தியை அழைத்து, "என் பிரிவைப் பொறுத்துக்கொள்" என்றுகூறி, மூப்பற்ற இளமை நலத்தை அவளுக்குக் காட்டி, "இனி நீ நம் கோயிலுக்கு வந்து நம்மைக் காண்பாயாக" என்று கூறி மறைந்தான். தேவந்தியும் அவ்வாறே, வழிபட்டு வரலானாள் என்பது அச்செய்தி.

காவல் தெய்வமான பாசாண்ட சாத்தன் துன்பமுற்றோர் துயர் துடைப்பதற்காகத் தானே குழந்தை வடிவாகி மனிதரோடு மனிதராக வாழ்ந்து ஆறுதலளித்த இச்செய்தி ஐயனாரின் வான்கருணையை எடுத்துக் காட்டுவதாகும்.

ஐயனார் பற்றிய செய்தி திருமுறைகளிலும் இடம் பெற்றுள்ளது. அப்பரடிகள், தேவாரத்தில் சாத்தனாரைச் சிவபெருமானின் மகனாகவே போற்றியுள்ளார்.

"பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை ஆட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கேளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
திருப்பயற் றூர னாரே"

என்பது அப்பரடிகள் தேவாரம். மேலும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிச்செய்த திருப்பண்ணியர் விருத்தம், இந்தச் சாத்தனைப் பற்றிப் பேசுகிறது.

"கூத்தன்என் றும்தில்லை வாணன்என்
றும்குழு மிட்டிமையோர்
ஏத்தன்என் றும்செவி மாட்டிசை
யாதே இடுதுணங்கை
மூத்தவன் பெண்டிர் குணலையிட்
டாலும் முகில் நிறைந்த
சாத்தன்என் றாலும் வருமோ
இவளுக்குத் தண்ணெனவே"

என்பது அத்திருப்பாடல். காதல் வயப்பட்ட குறிஞ்சி நிலத்துப் பெண்களை முருகன் பற்றுவதாக உரைப்பது மரபு. சிறுபான்மை சாத்தன் பற்றுவதாகக் கூறுதலும் உண்டு என்பது இதனால் அறிகின்றோம். "முகில் நிறைந்த சாத்தன் என்றாலும் வருமோ இவளுக்குத் தண்ணெனவே" என்ற தொடர் சிந்திக்கத்தக்கது.

"புறப்பொருள் வெண்பாமாலை" என்னும் இலக்கண நூலை யாத்த புலவர் ஐயனாரிதனார் என்பவர். இவர் ஒன்பதாம் நூற்றாண்டினர். அக் காலத்திலேயே ஐயனாரின் திருப் பெயர் கொண்டவராக இவர் விளங்கி யிருப்பது எண்ணத்தக்கது. புறப்பொருள் வெண்பாமாலையைப் பதிப்பித்த உவே. சா. அவர்கள், "ஐயனாரிதனார் என்பது திருவிடைக்கழியைச் சார்ந்த குராஞ் சேரியிலுள்ள சாஸ்தாவின் பெயர்" என்று குறிப்பிடுகிறார். எனவே, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐயனார் தமிழர்களின் சிறந்த வழிபடு தெய்வமாகி விட்டார் என்பதை அறியலாம்.

இத்தகைய ஐயனார் பயிர்த்தொழிலின் காவல் தெய்வமாகப் போற்றப்படுகிறார். இதனால் ஊருக்குப் புறத்தே விளைநிலங்களுக்கு நடுவில், அல்லது புறத்தில் ஐயனார் கோயில்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

உழவர் பெருமக்கள் இத்தெய்வத்திற்கு ஆண்டு தோறும் பயபக்தியோடு 'விதைப்புக் காணிக்கை' வழங்குவதும் பொங்கல் வைத்து வழிபடுவதும் மழைவேண்டி 'சிறப்பு'ச் செய்வதும் இன்றும் நிகழ்ந்து வரும் நிகழ்வுகளாகும். வீரத் தெய்வம், ஆதலால் 'புரவிஎடுப்பு' என்ற விழா இத்தெய்வத்திற்குச் சிறப்பாக நடைபெற்று வருவதையும் காணலாம். அது மட்டுமின்றி மெய்யன்பர்கள் ஐயனார் கோயிலில் தம் குழந்தைகளுக்கு முடியெடுத்தல், காதுகுத்துதல், கரும்புத்தொட்டி எடுத்தல் முதலிய நேர்த்திக்கடன்கள் செலுத்துவதையும் காணலாம். இவ்வாறு ஐயனார் வழிபாடு தமிழ்நாட்டு மக்களின் உணர்வோடு கலந்துவிட்டது.

ஐயனார் என்னும் அருமைத் தெய்வத்தை வழிபட்டு அச்சம் நீங்கி, ஆக்கமும் ஊக்கமும் பெற்று வளமோடும் நலமோடும் வாழ்வோமாக.



புறம்பணையான் கோட்டம்

தமிழாகரர் **தெ. முருகசாமி**
முன்னாள் முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி (புதுச்சேரி–9)

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் உணர்த்தப்பட்ட பல கோயில்களுள் 'புறம்பணையான் கோட்டம்' என்பதும் ஒன்று. இது ஊருக்குப் புறம்பே உள்ள இடத்தில் ஊர்க்காக்கும் தெய்வமாகக் கருதப்படும் ஐயனார் கோயிலைக் குறிப்பதாகும். இதனை, 'ஐயனார் காவு' என்றும் கூறுவதுண்டு. காவு என்பது காத்தலைக் குறிக்கும். ஊரையும் ஊர்சார்ந்த ஏரி, குளம், வயல் வரப்புகளையும் காக்கும் தெய்வமாக உள்ளதால் ஊர்ப்புற நீர்த்துறைக் கரையோரங்களில் இந்த ஐயனார் வழிபாடு நடப்பது வழக்கமாகும். தமிழ்நாட்டில் காணும் இவ்ஐயனார் காவு மலையாளம் பகுதியில் 'கோ சாஸ்தா காவு' என்ற கோயில்களாக் கிராமந்தோறும் காணப்படுகின்றன.

தமிழில் கூறப்படும் சாத்தனும் மலையாள சாஸ்தாவும் ஒன்றே. காத்தற்குரிய கடவுளரில் சாத்தனும் ஒருவன். இந்தச் சாத்தனே ஐயனார், ஊர்த்தேவதையாகக் கொண்டாடும் ஐயனார், இரவில் குதிரை ஏறி உலா வந்து காவல் செய்வதாக வழிவழியாக நம்பப்படுகிறது. அங்ஙனம் உலா வருங்கால் சில பரிவார தேவதைகளும் உடன் வருவதாகக் கூறுவதுண்டு.

ஐயனாராகிய இச்சாத்தனைச் சிறுதெய்வ பெருந்தெய்வக் கூட்டுறவால் உருவான தெய்வமாகக் கூறுவர். இதுபற்றி அப்பரடிகள்,

பார்த்தனுக்கு அருளும் வைத்தார்
　　பாம்பரை ஆட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
　　சாமுண்டி சாம வேதங்
கூத்தொடும் பாட வைத்தார்
　　கோளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
　　திருப்பயற் றூர னாரே!

எனப் பாடிய திருப்பயற்றூர்ப் பாடலில் சிவபெருமானின் மகனாகச் சாத்தன் இருந்த குறிப்பை உணர முடிகிறது.

மோகினி அவதாரம் எடுத்த திருமாலும் பிச்சாடனார் அவதாரம் எடுத்த சிவனும் சேர்ந்ததால் உருவான அரிஅரர் புத்திரர்தான் இந்தச் சாத்தன். இக்கூட்டுருவம் பற்றிய குறிப்பு புராணங்களிலோ, வடமொழி வேதங்களிலோ காணப்படவில்லை. இருப்பினும் ஏதோ ஒரு தேவை கருதி இக்கூட்டுத் தெய்வம் உருவானதாகத் தெரிகிறது.

இறை நம்பிக்கையில்லாத பௌத்த சமண சமயங்கள் தங்கள் கொள்கைகளைப் பரப்பிய காலத்தில் அவற்றைத் தடுப்பதற்காக வேண்டி, சைவ வைணவங்கள் ஒன்றுபட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் பெருந்தெய்வ வழிபாட்டில் ஏற்பட்ட நெகிழ்ச்சித்தன்மை கலப்புத் தெய்வ வழிபாட்டிற்கு வழிகோலியிருக்கலாம். எனவே புறச் சமயத் தாக்குதலால் பழங்குடி மக்களின் சமய உணர்வுகளை மீட்கக் கருதியே அரிகர புத்திரக் கலப்புத் தெய்வவழிபாடு, பக்தி இயக்கத்திற்குத் துணை செய்கிறது எனலாம்.

கிராம தேவதையான ஐயனார் கோயிலில் மண்ணாலான பெரியபெரிய குதிரை, யானை வடிவங்கள் காணப்படுகின்றன. ஐயனாரோடு குதிரைக்கும் யானைக்கும் ஏதோ ஒரு தொடர்பு உள்ளதோடு மண்ணால் இவைகள் செய்து வைப்பதற்கும் காரணங்கள் உள்ளன.

கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திவாகர நிகண்டில் ஐயனாரின் பெயர்களாகக் 'காரி, சாத்தன், சாதவாகனன்' எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன. திவாகர நிகண்டிற்குப் பின் தோன்றிய பிங்கலந்தை நிகண்டில் ஐயனாரை 'வெள்ளையானை வாகனன்', 'சாதவாகனன்', 'செண்டாயுதன்', 'அறங்காப்போன்' என்றெல்லாம் கூறப்பட்டுள்ளன. இவற்றால் குதிரையும் யானையும் ஐயனாருக்கு வாகனங்களாகக் கருதப்பட்டன எனத் தெரிகிறது.

கடவுள் நம்பிக்கையற்ற ஆனால் சமயச் சடங்கில் நம்பிக்கையுள்ள சமண, பௌத்த சமயங்களில் குதிரை வாகன தேவதையும் யானைவாகன தேவதையும் காணப்படுவது வியப்பாக உள்ளது. காணப்படும் அவைகள் மண்ணால் செய்யப்பட்டுள்ளன என்பதும் சிந்தனைக்குரியதாகும்.

உஜ்ஜைனியை ஆண்ட விக்கிரமாதித்தனது தலைநகரான பிரதிஷ்டானபுரத்தில் ஒரு குயவன் வீட்டில் வாகனன் என்ற குழந்தை

விக்ரமாதித்தனுக்கு எதிரியாக வளர்ந்து வந்தது. இக்குழந்தையின் தெய்வீகத்தை அறிந்த வேதாளம் விக்கிரமாதித்தனிடம் சென்று எதிரியை முளையிலேயே கிள்ளி எறிய யோசனை ஒன்றைச் சொல்லி அக்குழந்தையைக் கொல்லத் திட்டமிடப்பட்டது. ஆனால், அக்குழந்தையோ தாம் வைத்து விளையாடிய மண்ணாலான குதிரை, யானை, பொம்மைகளுக்குத் தன் மந்திர சக்தியை ஏவி, அதன்மூலம் விக்கிரமாதித்தனின் படை ஆற்றலைக் குறைக்கச் செய்தது. இங்ஙனம் குழந்தையாயிருந்து வெற்றியடைந்த சாதவாகனனே பௌத்த தேவதையாகக் கருதப்பட்டான்.


இப்பௌத்த சாதவாகனனைப் போலவே சமண நூலாகிய பெருங்கதையில் சாதகன் என்ற தேவதை குறிக்கப்படுகிறது. இத்தேவதை குயவர்குல மரபைச் சேர்ந்ததாகப் பேசப்பட்டுள்ளது. வடமொழியில் உள்ள குலால சாத்திரத்தில் சாத்தனுக்கும் குயவர்களுக்கும் உள்ள தொடர்பு பலவாறாகக் காணப்படுகிறது. இதனால் பெருங்கதைச் சாத்தனும் குலாலசாத்திரச் சாத்தனும் ஒருவரே என உணரலாம்.

சங்க இலக்கியத்தில் சாத்தன் என்ற பெயரில் பல புலவர்கள் காணப்படுகின்றனர். பிற்கால இலக்கண உரையாசிரியர்கள் சாத்தன், சாத்தி என்ற பெயர்களை எடுத்துக்காட்டுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். சாத்தனை, 'அறங்காப்போன்' என நிகண்டுகள் கூறுதற்கேற்பப் புறநானூற்றில், 'பிடவூர் அறப்பெயர்ச் சாத்தன்' (395) என அறத் தொடர்புடைய கடவுளாகச் சாத்தன் பேசப்பட்டுள்ளான்.

'நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர் அறப்பெயர்ச் சாத்தன்' என்ற புறநாஹூற்றுத் தொடர் சாத்தனை வேண்மான் என்றும், பிடவூரைக் காக்கும் காவல் தெய்வம் என்றும் கூறுவது ஆய்வுக்குரிய செய்திகளாகும். வேண்மான் என்பது வேட்கோவைக் குறிக்கும். மட்கலம் வனையும் குயவரை, 'வேட்கோ' என்பது மரபு. மண்ணாளும் வேந்தரை 'வேள்' என்பர். மண்சார்ந்த வாழ்வுடையோர் 'வேளாளர்' எனப்படுவர். 'வேள்+ஆர்= வேளார்'. இவர்கள் ஐயனாற் கோயில் பூசாரிகளாக இன்றும் உள்ளனர். உழவர்களும் மண்ணால் வாழ்பவர்கள் என்பதால் வேளாளர் (வேள்+ஆள்+அர்) எனப்பட்டனர். எனவே 395ஆம் புறநானூற்றுத் தொடரின் குறிப்பு சாத்தனை மண் தொடர்பான தெய்வமாகக் கருதச் செய்கிறதெனத் தெளிவாகிறது.

'சாறு எனநுவலும் முதுவாய்க் குயவ' எனக்கூடலூர்ப் பல்கண்ணனாரும், 'முதுகுயவன் இடுபலி நுவலும் அகன் தலை மன்றத்து விழவு' எனக் கயமனாரும் நற்றிணையில் முறையே 200, 293 ஆகிய இருபாடல்களில் உணர்த்தும் குயவர்கள் கடவுள் தொடர்பினராகச் சுட்டப்படுகின்றனர். செட்டிநாட்டுப் பகுதியில் இன்றும் ஐயனார் கோயிலின் பராமரிப்பு வேளாளர் தொடர்பில் உள்ளதால் சங்ககாலந்தொட்டு ஐயனார் வழிபாடு இருந்த ஓர் உண்மை புலனாகிறது.

மேற்படியான செய்திகளிலிருந்து அறிவது யாதெனில், சமூகப் பாதுகாப்பின் பொருட்டு உருவான தெய்வம் ஐயனார் என்பதும் அதை மண்சார்ந்தோரால் போற்றி ஒழுகிய நிலையில் வீரம்மிக்க ஊர்க்காவல் தெய்வமாய் ஊர்ப்புறம்பே வைத்து மக்கள் வழிபட்டனர் என்பதும் தன்னை வழிபடுவாரை விட்டுப் புறம் போகாமல் அணைத்துக் காப்பவன் என்ற பொருளில் புறம்பணையான் (புறம்பு + அணையான்) என்ற பெயரை உடையவன் என்பதும் தெரிவதால் அத்தெய்வத்தை வழிபட்டு உய்வோமாக.



ஐயனாரின் காவலும் கருணையும்

முனைவர் **அ. அறிவுநம்பி**
தமிழியற்புல முதன்மையர்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

மனிதனுடைய நல்வாழ்க்கைக்குக் காரணமாயிருப்பவை அவனுடைய நம்பிக்கைக்குரிய தெய்வங்கள்தாம். மனிதவாழ்வில் நிகழும் நல்லனவற்றிற்கு ஆண்டவனின் திருவருள் தேவை என்பது பொதுவான கருத்து. தான் தோன்றிய குலம், வாழும் பகுதி, சார்ந்துள்ள சமயம் என்பன போன்ற பல காரணங்களால் மனிதனுக்குத் தெய்வங்கள் பலவற்றின் உதவி தேவையாகின்றது. மனிதர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வங்களிடம் முறையிடுவது, நேர்த்திக்கடன் செய்வது, திருவிழாக்களை நடத்துவது போன்ற செயல்களில் இறங்குவது நடப்பியல். தமிழர்களின் வழிபடு தெய்வங்கள் பலவாக இருக்கக்கூடும். அவ்வாறான தெய்வங்களுக்குள்ளே ஐயனார் தனித்த இடம் கொண்டவர். பற்பல சிற்றுறார்களில் காவல் தெய்வமாகக் காட்சிதரும் ஐயனார் இறையன்பர்களின் வேண்டுகோளுக்குச் செவிதந்து அவர்களின் நல்வாழ்வுக்கு உதவுபவர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஐயனார் வழிபாடு பல வேறுபாடுகளுடன் நிகழ்ந்து வருகின்றது. ஐயனார் பற்றிய செய்திகளை இக்கட்டுரை முன்வைக்கிறது அவ்வளவே.

ஊர் மக்களும் ஐயனாரும்

சிற்றுறார்ப் புறங்களில் பொதுவாக ஊர் எல்லையில் ஐயனாருக்குக் கோயிலெழுப்பி வழிபடுவர். சில ஊர்களில் ஊரின் நடுப்பகுதியில் ஐயனார் எழுந்தருளுவதும் உண்டு. சான்றாக, விருதுநகர் மாவட்டத்தில் புதுப்பட்டி என்ற ஊரில் தெற்கு எல்லையில் குதிரைமேல் வீற்றிருக்கும் ஐயனார் சிலை தென்படுகிறது. "ஒருகாலத்தில் காவல் தெய்வமாக அய்யனார் விளங்கியதன் எச்சமாக (Reminiscence) இச்சிலை அமைந்துள்ளது"1 என்பர். ஊராருக்குக் காவல்புரிவது இந்த ஐயனாரின் பணி. தமிழகத்தில் காவல் தெய்வங்கள் இவ்வாறு ஊரெல்லையில் அமைவது பொதுமரபு. சங்கிலிக்கருப்பு, பைரவர், கறுப்பணசாமி போன்ற ஆண்தெய்வங்களும், மாரியம்மன், வடக்குவா(யில்)செல்வி போன்ற பெண்தெய்வங்களும் இவ்வாறு காவல் தெய்வங்களாவர். கிராம தெய்வங்களில் முதன்மையாகக் கருதப்பெறும் ஆண்தெய்வம் அய்யனார். அய்யனார் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வழிபடப்படும் ஓர் ஒப்பற்ற கிராம தெய்வம். அவ்வூரின் காவல்காரனாக – காவல்தெய்வமாகக் கருதப்படுபவர் அய்யனார். இரவில் தன் பரிவாரங்களுடன் கோயிலைவிட்டுக் கிளம்பி ஆவிகளிடமிருந்து ஊர்மக்களைக் காப்பது இவர் செயலாகும்"2 என்ற குறிப்பு உணரத்தக்கது.

தங்களின் மூதாதையர்களை வணங்குவது சில குலங்களில் காணப்பெறுகின்றது. அவ்வாறான வழிபாடு காலப்போக்கில் சுற்றுப்புரத்தாராலும் மேற்கொள்ளப் பெற்று சிறுதெய்வ வழிபாடாகவும் மாறிவிடும். நிலக்கோட்டை வட்டம் பள்ளபட்டிக்கு அருகில் உள்ள மாவூத்து ஆற்றங்கரையில் உள்ள அய்யனார் வழிபாடு அப்பகுதி மக்களின் முன்னோர் வழிபாடாகத் தொடங்கியது. இன்று அத்தெய்வம் பலவகைச் சாதியாருக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறது. இது தலைமைத் தெய்வமாக இருக்கப் பரிவார தெய்வங்களாகப் பல தெய்வங்கள் இடம்பெறுகின்றன.

சிலவூர்களில் மரத்தடி ஒன்றில் சிலை வடிவமாக ஐயனார் இருப்பார். சில பகுதிகளில் மண்சிலை இருக்கும். குதிரை, நாய் வீரர்கள் உடனிருக்கவும் காணலாம். ஏழுகன்னிமார் உடன் இருப்பதையும் சில கிராமங்களில் காணலாம். காவல் தெய்வம் என்பதால் வேட்டைப் பணிக்கேற்ப ஏனையவை காணப்படும். "அய்யனார் ஊரின் முன்னோடித் தெய்வம். ஊரின் காவல் தெய்வம். அத்தெய்வத்திற்குத்தான் முதற்பூசை நடக்கும். ஆனால் தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடத்தில் திருச்சி மாவட்டத்தில் அய்யனார் துணைத் தெய்வமாகக் காட்சியளிக்கிறார்"3 என நாட்டுப்புறத் தெய்வங்கள் என்ற நூல் செய்தி தரும். அடியவர்களுக்கு அருள்தரும் ஐயனாரைத் துடிப்பான கடவுள் (துடியான சாமி) என்கின்றனர் வழிபடுவோர். கொடுக்கல் வாங்கல் சிக்கல், திருட்டுக் குற்றம் போன்றவற்றை ஐயனார் தீர்ப்பதாக நம்புகின்றனர்.

காலப்போக்கில் ஐயனாரை மேல்நிலைக் கடவுளாக்கி வழிபடுகின்றனர். ஆடம்பரமான கோவில், சிவன், பெருமாள் கோவில்களைப் போல வடிவ மாற்றம், திருவிழாக்களில் புதிய செயல்பாடுகள் ஆகியன நிகழ்கின்றன. மேல்சாதியினருக்கும் ஐயனார் வழிபடு

தெய்வங்களாகக் காட்சிதரக் காணலாம். இவை யாவும் ஐயனார் வழிபாட்டின் வளர்ச்சி எனலாம்.

ஐயனார் பற்றிய பிற செய்திகள்

அய்யன் என்பது மூத்தோன் என்ற விளக்கம் பெறும். "ஐயர் யாத்தனர் கரணம்" என்ற தொல்காப்பிய வரிக்கு மூத்தோர் என்றே பொருள் காணுவர். அச்சம் காரணமாகவும், தங்களைக் காக்கும் வல்லமை கொண்ட தெய்வம் என்பதற்காகவும், மக்கள் பெண்தெய்வங்களில் மாரியம்மா என்ற பெயரையும் ஆண் தெய்வங்களில் ஐயனார் என்ற பெயரையும் பரவலாகத் தங்கள் தெய்வங்களுக்குச் சூட்டினர்.

ஐயனாருக்குரிய பெயர்கள் நல்ல தமிழில் வடிவமைக்கப் பெற்றுள்ளதை "நாட்டார் வாழ்வியலும் பண்பாடும்" என்ற நூல் கூறும். 1. செங்கோலுடைய ஐயனார், 2.. மங்கோவிலுடைய ஐயனார் 3. கரிமுகமுடைய ஐயனார் போன்றவை குறிப்பிடத் தக்கவை. 4. கூடமுடைய ஐயனார், மாவூத்து ஐயனார், ஐயனாரப்பன், இலங்கமுடைய ஐயனார் போன்ற பெயர்களையும் காணமுடிகிறது. சிவகங்கை மாவட்டம் கல்லலுக்கருகில் உள்ள கீழ்க்கோட்டையில் கோயில்கொண்ட ஐயனார் ஆதினமிளகி ஐயனார் என்றே அழைக்கப் பெறுகிறார். இக்கோயிலை வழிபட்ட நகரத்தார் இனத்தாரில் நைனப்பையா குறிப்பிடத்தக்கவர். அவருக்குத் தனிச் சன்னிதி இக்கோயிலில் இருப்பதும் தேவகோட்டையில் படைப்பு வீடு தனியே இருப்பதும் குறிக்கத் தக்க செய்திகள்.

காரைக்குடிக்கருகில் உள்ள ஓர ஊர் இலங்குடி. இவ்வூரின் காவல்தெய்வம் ஐயனார். பெயர் பகத்சாலமூர்த்தி ஐயனார். பரிவாரத் தெய்வங்கள் பைரவர், முனீசுவரர், நொண்டிக் கருப்பர், பேச்சியம்மன் உட்படப் பல தெய்வங்கள். இத்தெய்வம் பனைமரத்தடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக ஒரு கதை கூறப்படுகிறது. இந்த ஐயனாரை நகரத்தார்கள் தங்களின் குலதெய்வமாகக் கொண்டாடுவது குறிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைக்குப் பலியிட்டு வணங்குவது குறைந்து போய்விட்டது. எனினும், பொங்கலிடுவது, மாவிளக்கேற்றுவது, காணிக்கை செலுத்துவது, மொட்டையடித்துக் கொள்வது எனப் பலவகையான நேர்த்திக்கடன்கள் தென்படுகின்றன.

காக்கும் கடவுள்

ஊர்காக்கும் ஐயனாரின் இறையன்பர்கள் முன்மொழியும் வேண்டுதல்கள் பல. திருமணம் கைகூடுவது, பிள்ளைப்பேறு, நோய்நீக்கம் போன்றவை முதன்மை பெறுபவை. ஐயனார் வழிபாட்டால் குடும்பத்தில் செல்வம் பெருகும். நல்ல நிகழ்வுகள் அமையும். தடங்கல்கள் நீங்கும் என்பவை நம்பிக்கைகள். ஐயனாரை மறந்தவர்கள் வீடுகளில் சண்டை சச்சரவுகள் இருக்கும். குழப்பம் குவியும், தடைகள் ஏற்படும் எனவும் மக்கள் நம்புகின்றனர். அதற்காகவே, நாள், வார, திங்கள் வழிபாடுகளை ஏற்பாடு செய்கின்றனர். திருவிழாக்களில் மக்கள் ஒன்றுகூடி விதவிதமாக வழிபாட்டைக் கவனிக்கின்றனர். பள்ளயம் இடுவது, அன்னதானம், குடமுழுக்கு, குருபூசை என்றவாறு பற்பல நிகழ்வுகளை ஐயனார் திருக்கோயில்களில் காணலாம். வறட்சியைத் தடுக்கும் ஆற்றல் ஐயனாருக்குண்டு என்பது அன்பர்களின் ஆழமான நம்பிக்கை. பிரிவினைகளை நீக்குவதில் ஐயனார் உதவுவதாகச் சிற்றூர் மக்கள் கருதுவதால் ஐயனாரின் முன்னிலையில் அமைதி (சமாதானம்) செய்து கொள்வது நடக்கிறது. ஐயனார்முன் சத்தியம் செய்து விட்டுப் பிறகு மாறினால், அவர் தண்டிப்பார் என்பது அழுத்தமான நம்பிக்கை.


காவலும் கருணையும்

பற்பல பெயர்களில் ஐயனார் கொலு வீற்றிருக்கிறார். அவருடைய திருவுருவங்களும் ஊருக்கு ஊர் வெவ்வேறாகக் காணப் பெறுகின்றன. ஐயனார் கோவில் உருவானமைக்குக் கதைகள் பலவும் கூறப்படுவதுண்டு. குலதெய்வம், ஊர்த்தெய்வம், காவல்தெய்வம், முன்னோரின் நினைவால் உருவான தெய்வம் எனப்பல அடைமொழிகளை ஐயனார் கொண்டிருக்கிறார்.

நல்லனவற்றை அவரே வழங்குகிறார் என்பதும் தொல்லைகளை அவரே நீக்குகிறார் என்பதும் ஐயனார் வழிபாட்டில் முதன்மையானவை. பரிவாரத் தெய்வங்களின் துணையுடன் ஐயனார் ஊரையும், மக்களையும் காக்கின்றார். அவருக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதில் மக்கள் ஆர்வங்காட்டுகின்றனர். ஐயனாரின் உதவியால் தீமைகள் நீக்கப்படுகின்றன என்பதால் ஆண்டுதோறும் விழாக்கள் எடுக்கப்பெறுகின்றன. இப்படிக் காவல் தெய்வமாகவும் காட்சிதரும் காளாப்பூர் ஐயனார் கோவிலின் குடமுழுக்கு மக்கள் அனைவருக்கும் பயனையும் பொலிவையும் உண்டாக்கும். இலங்கமுடைய ஐயனாரின் புகழை ஓதி அவர் அருள்பெற்றுக் கவலைகளை நீக்கி மகிழ்வைப் பெறுவோமாக.

குறிப்புகள்

1. 'தன்னானே'யின் நாட்டுப்புறத் தெய்வங்கள் ப. 71
2. துளசி இராமசாமி, நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. 23
3. மேலது, பக். 31- 32.
4. உ. கஸ்தூரிகாந்தி, நாட்டார் வாழ்வியலும் பண்பாடும், ப. 25.



இருந்த மகாவிஷ்ணு)க்கும் பிறந்தவர்கள் என்ற அடிப்படையில் ஐயனாரும் ஐயப்பனும் ஒருவரே என்று சிலர் கூறுகின்றனர். இக்கருத்தானது, தனித்து இருக்கும் பாலசாஸ்தா என்ற ஐயனாருக்கும் ஐயப்பனுக்குமே பொருந்தும். ஆனால் தம்பதி சமேதராகத் தேவியருடன் வீற்றிருந்து அருளும் ஐயனாரும் ஐயப்பனும் வேறுவேறானவர்கள் என்பதைக் கீழ்க்கண்ட செய்திகளால் நன்கு அறியலாம்.

ஐயனார் என்பவர் தெய்வம், மனித அவதாரம் எடுக்காதவர். ஆனால், ஐயப்பன் மனிதனாகப் பிறந்தவர்.

ஐயனார் கண்மாய்க்கரையில் தெய்வமாகப் பரமேசுவரன், மோகினியால் தோற்றுவிக்கப் பெற்றவர். ஆனால், ஐயப்பன் காட்டில் குழந்தையாகக் கண்டெடுக்கப்பெற்று அரசனால் வளர்க்கப் பெற்றவர்.

ஐயனார் ஒரு குடும்பஸ்தர். இரண்டு தேவியருடனும் பரிவார தெய்வங்களுடனும் ஆட்சி செய்பவர். ஆனால் ஐயப்பன் ஒரு யோகி. சீவசமாதியில் நித்தியயோகியாய் இன்றும் இருப்பவர்.

ஐயனார் இடதுகாலை மடித்து வலதுகாலைத் தொங்கவிட்டு அமர்ந்திருப்பார். ஆனால், ஐயப்பன் இரண்டு கால்களையும் மடித்து முழங்கால்கள் மேலே தூக்கியவாறு இருக்கும்படி அமர்ந்திருப்பார்.

இதனால் ஐயனாரும் ஐயப்பனும் வேறுவேறானவர்கள் என்பது விளங்கும்.

மனிதன் மனிதனாக வாழ்கின்றானா? என்று கண்டறிய வேண்டுமானால், ஒருவனிடம் சென்று, பிறருக்குத் துன்பம் கொடுக்காமல் நீ மகிழ்ச்சியாகவும் உள்ளதா? என்று கேட்கவேண்டும். இக்கேள்விகளுக்கு, ஆம் என்று யார் கூறுகிறார்களோ அவர்களே அப்பூமியில் மனிதர்களாக வாழ்பவர்களாவர். அவ்வகையில், ஐயனாரை வணங்கி வழிபட்டு வாழ்பவர்களின் வாழ்க்கையானது பிறருக்குத் துன்பம் கொடுக்காமல் நமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும், அனைத்து நலன்களையும் நல்குவதாகவும் அமைந்திருக்கும் என்பது உறுதி.

ஐயனாரை வணங்குவோம்
அனைத்து நலன்களையும் பெறுவோம்

ஐயனாரின் பேரும் புகழும்

முனைவர் இரா. பொன்னுத்தாய்
தமிழ்ப்பேராசிரியை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

வழிபாடு என்பது மனிதன் அச்சம் கொள்கின்ற காலத்தில் தோன்றியது. இடியுடன் கூடிய மழை, சுட்டெரிக்கும் சூரியன், படமெடுத்தாடும் பாம்பு, கரைபுரண்டோடும் ஆறு போன்றவற்றைக் கண்ட மனிதன் அவற்றின் செயல்பாடுகளைப் பார்த்துத் தனக்குத் தீமை வரக்கூடாது என்பதற்காக வணங்கினான். இந்த வழிபாட்டின் வளர்ச்சிதான் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வவழிபாடு எனப் பல்கிப் பெருகின. திருமால், சிவன், சக்தி, பிரம்மன் ஆகியோர் பெருந்தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். காளியம்மன், பகவதியம்மன், பேச்சியம்மன், இயக்கியம்மன், கருப்பணன், ஐயனார் ஆகியோர் சிறுதெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். இக்கட்டுரை காவல் தெய்வமான ஐயனாரின் சிறப்பினை ஆராய முற்படுகின்றது. ஐயனார் என்ற பெயர்ச்சொல் எவ்வாறு தோன்றியிருக்கலாம் என்று ஆராய்ந்து பார்த்தோமானால் ஐ என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்திருக்க வேண்டும் என உணரலாம். இச்சொல் தலைவன், கணவன், அரசன், மூத்தோன், ஆசான், தந்தை, கடவுள் போன்ற பல பொருள்களைத் தந்து நிற்கிறது. மக்கள் தங்களது மூத்தோர்களை ஐயா, ஐயன் என்று அழைக்கின்றனர். காவல் தெய்வமான ஐயனார் என்பதும் ஐ என்ற வேர்ச்சொல்லின் வளர்ச்சியாகக் கருதலாம். ஐ+அன்= ஐயன் என்றும், மரியாதை கொடுப்பதற்காக ஆர் என்ற பன்மை விகுதியைச் சேர்த்து ஐயனார் என்பதாயிற்று எனக்கருத இடமிருக்கிறது.




ஐயனாரைப் பற்றிப் புராணச் செய்திகளாகக் கிராமத்து மக்களிடையே பலவிதமாகப் பேசப்படுகின்றன. ஐயனார் இரவு நேரங்களில் தன் பரிவாரங்களுடன் கோவிலை விட்டுக் கிளம்பி ஊரைச் சுற்றிவந்து தீய ஆவிகளிடமிருந்து மக்களைக் காக்கிறார் என்றும், சிற்றூர்களில் நிலவளம், நீர்நிலை, கால்நடை, மக்கள்நலம் ஆகியவற்றைக் காப்பதையும் தமது கடமையாகக் கொண்டிருக்கிறார் என்றும் கிராமத்து மக்கள் நம்புகின்றனர்.

பெரும்பாலும் ஐயனார் கோவில் கிராமத்தின் புறப்பகுதியில்தான் அமைந்திருக்கும். ஆனால், இன்று பல ஐயனார் கோவில்கள் ஊருக்குள்ளேயே காணப்படுகின்றன. இதற்கு மக்கள் தொகைப்பெருக்கமே காரணம் ஆகும். புதுவை இலாசுப்பேட்டையில் ஐயனார் கோவில் மக்கள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஐயனாரின் மற்றொரு பெயர் அரிகரபுத்திரன் என்பதாகும்.

அரிக்கும் அரனுக்கும் பிறந்ததனால் இப்பெயர் தோன்றிற்று என்பர். தேவரும் அசுரரும் அமுதம் பெறுவதற்காக திருப்பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து அமுதம் தோன்றிற்று. அந்த அமுதத்தைத் தேவர்களும் அசுரர்களும் அடைவதற்குப் போட்டியிட்டனர். அவ்வேளை, திருமால் மோகினி வடிவம் கொண்டு, சிவனிடம் சென்று அமுதத்தைப் பெற்றுத் தேவர்களுக்கு வழங்கினார். மோகினியைக் கண்ட சிவன் மோகம் கொண்டதனால் பிறந்தவர்தான் ஐயனார். எனவே, அவரது பெயர் அரிகர புத்திரன் ஆயிற்று.

அரிகர புத்திரன் என்பதற்கு மற்றுமொரு கதை வழக்கத்தில் உள்ளது. ஐயனார் வரலாற்றைக் கூத்தாக நடத்துபவர்கள் இடையே இக்கதை வழங்கி வருகிறது. பத்மாசுரன் என்ற அரக்கன் நெடுங்காலம் சிவனை நோக்கித் தவம் செய்தான். அதனைக் கண்டு மகிழ்ந்த சிவன், அவனுக்கு

வேண்டிய வரம் யாது என்று கேட்க, அவன் தான் யார் தலையில் கைவைத்தாலும் அவர் இறந்துவிட வேண்டும், என்று வேண்டினான். சிவனும் அவ்வாறே வரமளித்தார். வரத்தை உண்மையை அறிய வேண்டும் என்பதற்காக, சிவனின் தலையிலேயே கைவைக்க பத்மாசுரன் துணிந்தான். சிவனோ, பயந்து ஓட அவரைக் காப்பாற்ற மோகினி வடிவம் கொண்டு திருமால் அசுரனின் முன் ஆடினார். மோகினியைக் கண்ட அசுரன் மோகித்தான். மோகினி அவனை நீராடிவிட்டு வரச்சொன்னாள். அவன் நீராடும்போது, அவனது கை அவன் தலையில் பட்டதனால் இறந்து விடுகிறான். பின்னர், இந்த மோகினியைக் கண்டு சிவன் மோகிக்க சிவனின்



உயிரணு வெளிப்பட்டு விடுகிறது. அதை மோகினி தன் கையில் தாங்கினாள். அது குழந்தையாயிற்று. கையில் தாங்கியதால் அக்குழந்தை கையனார் ஆனது. அதுவே. பின்னர் ஐயனாராயிற்று என்பர்.

ஐயனார் திருமணம் ஆனவர். அவருடைய மனைவிமார்கள் பொற்கலை, பூரணி ஆவர். ஐயனாரின் இடப்பக்கத்தில் முதல்மனைவி பொற்கலையும் வலப்பக்கத்தில் இரண்டாம் மனைவி பூரணியும் உள்ளனர். புதுவைப் பகுதியில் உள்ள ஐயனார் கோவிலில் பொற்கலை, பூரணி சிலைகள் உள்ளன. இராமேசுவரத்தில் உள்ள ஐயனார் கோவிலிலும் அவ்வாறே உள்ளது. தஞ்சை மாவடத்தில் பொற்கலையை, புஷ்கலா என்றும், பூரணியைப் பூரணா என்றும் அழைக்கின்றனர். கந்தபுராணம் பொற்கலையைப் புட்கலை என்றும், பூரணியைப் பூரணா என்றும் குறிப்பிடுகிறது.

ஐயனாரின் தோற்ற வரலாற்றைக் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் மகாசாத்தப் படலத்தில் விரிவாகக் கூறியிருக்கிறார். இந்திராணியை அசுரர்களிடமிருந்து காப்பாற்றக் காவல் தெய்வமாகவே ஐயனார் படைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஐயனார் கோவில்களில் பரிவார தேவதைகள் காணப்படுகின்றனர். மலையாளத்தான், மதுரைவீரன், காத்தவராயன், கன்னிமார்கள் குறிப்பிடத்தக்க பரிவார தேவதைகள் ஆவர். ஐயனார் சைவக் கடவுள். அவருக்கு உயிர்ப்பலி கொடுப்பதில்லை. பரிவார தேவதைகளுக்கு உயிர்ப்பலி உண்டு. அப்போது ஐயனார் முகத்தைத் துணியால் கட்டி மறைத்து விடுவர். பொதுவாக ஐயனார் கோவில்களில் பூசாரிகள் பிராமணரல்லாதவர்களே இருக்கிறார்கள்.

ஐயனாரின் வாகனம் குதிரை, யானை ஆகியன. நள்ளிரவில் ஐயனார் தன் பரிவாரங்களுடன் செல்லும்போது ஆணோ, பெண்ணோ எதிர்ப்பட்டால் தீங்கு உண்டாகும் என்று கிராமத்து மக்கள் நம்புகின்றனர். ஐயனாரின் சிலை பெரும்பாலும் மண்ணால் வடிக்கப்பட்டுள்ளது. ஐயனாரை வழிபடுதற்குரிய நாளாகத் திங்கள்கிழமை கருதப்படுகிறது. வருடத்திற்கு ஒருமுறை ஊர்மக்கள் ஒன்றுகூடிப் பொங்கலிடுகின்றனர். சாதிவேறுபாடுகள், ஊர்த்தகராறுகள் நீங்கி, ஒற்றுமை உண்டாக இப்பொங்கலிடுதல் உதவுகிறது. பொதுவாக, ஆடிக் கார்த்திகைக்கு முதல்நாள் இவ்விழா கொண்டாடப்படுகிறது. விழாக்காலங்களில் கூத்துகள் ஆடப்படுகின்றன. தென்மாவட்டங்களில் ஐயனார் குதிரைகளில் அமர்ந்து ஊரைச் சுற்றிவந்து காவல் செய்வதாக நம்புகின்றனர். பல இடங்களில் ஐயனார் ஊர்க்காவலன் என்ற பெயரோடு அழைக்கப்பெறுகிறார். ஐயனாரின் புகழ் தென்பகுதியில் மட்டும் அல்லாமல், பல இடங்களிலும் பரவியிருப்பதைக் காணமுடிகிறது.

புவிகாக்கும் புத்துப்பட்டு ஐயனார்


திரு. சொ. அருணன்
தமிழ்த்துறை, நவயுகம் மேநிலைப்பள்ளி, ஆரோவில், தமிழ்நாடு

குறிலென்றும், நெடிலென்றும் பிரியும் எழுத்திலக்கணத்தில், ஐ என்பது அ+இ என்றே ஆகிறது. ஐ சொல்லாகிறபோது, தலைவன் என்று பொருள் கொள்கிறது. "சாஸ்தா அல்லது சாத்தன்" என்னும் வடசொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல் ஐயனார் என்பதாகும். 'ஐயன்' என்பதற்கு, உயர்ந்தோன், குரு, ஆசான் எனப் பலபொருள்கள் உண்டு. ஆதலால் தலைமைப் பண்புடைய தெய்வம் ஐயனார் எனலாம். எனவே, அய்யனார் என்பது பொருத்தமன்று. ஐயனார்தான் என்பதுதான் சரியான சொல்லாகும்.

இதுதவிரவும் அய் எனும் சொல் தமிழில் கையாளப்பெறுதல் வழக்கில்லை என்பதும் உறுதி.

தமிழரின் தொன்மையான காப்பியமாகிய சிலப்பதிகாரம் சாத்தவழிபாடு குறித்துப் பேசுகிறது. சைவமும், வைணவமும், சாக்தமும், காணாபத்யமும், கௌமாரமும் அல்லாத இந்த சாத்தவழிபாடு எந்த நூற்றாண்டில் துவங்கியிருக்கலாம், தோற்றுவித்தவர் யார் எனும் கேள்விகளைத் தொடர்ந்து புத்த மதத்தின் சாரங்கள் இதில் தொனிப்பதாலும், சமணர்களின் முழைகளே ஐயனார்கோயில்கள் என்றும் பலவாறு செய்திகள் விளங்குகின்றன. "தமிழகத்தில் புத்தருக்கெனத் தோன்றிய சாத்தன் கோயில்கள் ஐயனார் கோயில்களாக மாற்றப்பட்டன. பௌத்தமதம் அழிந்தபின்னர் அம்மதக் கொள்கைகளையும் தெய்வங்களையும் இந்துமதம் ஏற்றுக் கொண்டபோது வெவ்வேறு கதைகள் கற்பிக்கப்பட்டன

ஒரு சுவையான புராண வரலாறும் சொல்லப்படுகிறது. உலகத்தின் நன்மை வேண்டி அசுரர்களும், தேவர்களும் பாற்கடல் கடைய வேண்டி திருமால் உத்தரவிட்டார். அதன்பேரில் அவர்கள் வாசுகி என்ற பெரிய பாம்பாகவும், மந்தார



மலையை மத்தாகவும் கொண்டு பாற்கடலைக் கடையத் துவங்கினார்கள். அப்போதில் வாசுகிப் பாம்பு தன்நிலை மறந்து தன் விஷத்தைக் கக்கியது. அதனால் அசுரர்கள் பலர் அழிந்தனர். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட சிவபெருமான் விரைந்து வந்து அந்த ஆலகால விஷத்தைத் தானே உண்டார். அப்போது உமாதேவி அவர்தம் குரல்வளையைத் தாண்டி அந்த விஷம் செல்லாமல் காத்துக் கொண்டாள். அதிலிருந்து சிவனுக்கு நீலகண்டம் என்ற பெயரும் வழங்கலாயிற்று. விஷ பயம் தொலைந்ததால் மீண்டும் பாற்கடல் கடையப்பட்டது. பாற்கடலிலிருந்து அமுதம் முதலான பல பொருட்கள் கிடைத்தன. அசுரர்கள் அமுத கலயத்தைக் கவர்ந்து பிடுங்கிக் கொண்டனர். அமுதத்தை அவர்கள் உண்டு விட்டால் சாவாநிலையை அடைந்து விடுவர். அதனால் உலகில் அழிக்க முடியாத தீயசக்திகள் நிலைபெற்று விடும் என்று தேவாதிதேவர்களும் முனிவர்களும் அச்சம் கொண்டனர். அந்தத் துயரைத் தீர்க்க திருமால் முன்வந்தார். அழகிய மோகினி உருவம் கொண்டு காண்போரை மயக்கும் தன்மையுடன் அசுரர்களிடம் சென்று அமுத கலயத்தைக் கவர்ந்து கொண்டாள். பின்பு அதைத் தேவர்களிடமே தந்து விட்டாள். அசுரர்கள் ஏமாந்து போயினர். இந்த விஷயத்தைக் கேட்ட சிவபெருமான் திருமாலின் அழகிய மோகினி வடிவைக் காண விழைந்தார். உடனே திருமாலும் சிவனுக்காக அம்மோகினி உருவில் தோன்றினார். அவ்வுருக் கண்ட சிவனுக்கு மோகம் மேலிட உயிரணு வெளிப்பட்டது. அதைத் தம் கையால் தாங்கினார். அது ஒரு தெய்வக் குழந்தையாயிற்று. "கையனார்" எனப் பெயரிட்டு அக்குழந்தையைத் தேவர்கள் தொழுதனர்.

இத்தெய்வமே பிற்காலத்தில் தமிழகத்தில் பெயர் மருவி ஐயனார் என்று வழங்கப்படலாயிற்று. இயற்கை சார்ந்த வனப்பகுதிகளிலும், நீர்நிலைப்பகுதிகளிலும் கோவில் கொண்டருளும் ஐயனார், இயற்கையின் காவல்தெய்வம். பொதுவாக, ஐயனாருக்குக் வாகனமாக குதிரைகளே இருக்கும். ஆனால் சில ஆலயங்களில் யானை இருக்கும். அவ்ஆலயங்கள் காலத்தால் மிகப்பழமையானவை என்று வரலாற்று ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர். அந்த வகையில் யானை வாகனம் உடைய கீழ்ப்புத்துப்பட்டு மஞ் சனீசுவரர் ஆலயமும் பழமைச் சிறப்பு வாய்ந்த ஐயனார் கோவில் ஆகும். வழக்கமாக சோலை, நீர்நிலை சார்ந்த நிலைகளையும் தாண்டி, புற்றிடத்தைப் புகலிடமாகக் கொண்ட ஐயனராக இவர் விளங்குகின்றார், புற்றிலிருந்து தவம் செய்கின்ற ஐயனார் இவர் என்பதால், புத்துப்பட்டு ஐயனார் என்று வழங்கப்படுகிறார்.



அமைவிடம்

புதுச்சேரியிலிருந்து சென்னை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதுவைப் பல்கலைக் கழகத்திலிருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள அழகிய கிராமம் கீழ்ப்புத்துப்பட்டு ஆகும்.

மகாபலிபுரம் 81 கி.மீ என வரவேற்கும் மிக உயர்ந்த பெயர்ப்பலகையோடு ஒரு சுங்கச்சாவடி அமைந்துள்ளது. அதன் இடதுபுறம் மேற்கு நோக்கிச் செல்லும் ஒரு சிறுசாலையில் திரும்பி யாரிடம் கேட்டாலும் ஐயனார் கோயிலுக்கு வழி சொல்லி விடுவார்கள்.

சற்றே பயணம் செய்தால், சுமார் 40 ச.கி.மீ பரப்பளவில் தரைக்காடுகளால் சூழப்பட்டதாக இந்த ஐயனார் ஆலயம் அமைந்திருக்கின்றது. ஆலய வளாகத்திற்குள் நுழைந்தவுடனேயே நம்மை பசுமை தன் குளுமை காட்டி வரவேற்கிறது. அடர்ந்த மரக்கூட்டங்களுக்கிடையில் தாவிச் செல்லும் குரங்குகள் குறிவைத்த பார்வையில் நமது பைகள். எச்சரிக்கையோடு நடக்கும் நமக்கு இருபுறத்தும் மரங்கள் அணிவகுப்பு, நடுவில் நீளும் தார்ச்சாலை நம்மை நேராய்க் கோயிலுக்கே அழைத்துச் செல்கிறது.

ஆலய அமைப்பு

தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறைக்குட்பட்ட இந்த ஆலயம் வடக்கிலிருந்து தெற்குமுகம் நோக்கி அமைந்துள்ளது. முன்புறம் உயர்ந்த இராசகோபுரம் அமைந்துள்ளது. அதனை அடுத்து நெடிய முன்மண்டபமும் அம்மண்டபத் தூண்களில்

முன்னர்ச் சுட்டிய புராணக் கதைகளைச் சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்களும் வடிக்கப்பட்டுள்ளன. கடந்து உள்நடந்தால், ஐயனார் சந்நிதியின் வலது புறத்தில் சிவன் சந்நிதியும் அதற்கு அருகில் விநாயகர் சந்நிதியும் அமைந்துள்ளன. வலது பக்கமான கிழக்குத் திசையில் சுப்பிரமணியர் சந்திதி அமைந்துள்ளது. இச்சந்நிதிக்கு அருகாமையிலேயே இவ்ஆலயத்தின் தல விருட்சமான வில்வமரம் உள்ளது. அதனை அடுத்து, சந்நிதிக்கு நேர் இடதுபுறத்தில் கால பைரவர் சந்நிதி கொண்டுள்ளார். ஆலய வளாகத்தை விட்டு வெளியே வந்தால் பக்தர்கள் மழைக் காலங்களில் தங்கி ஓய்வெடுத்து உணவுண்ணும் அளவில் பெரிய வளாகம் ஒன்று இருக்கிறது.

ஆலயத்தின் பின்புறமாக உள்ள ஒற்றையடிப் பாதையில் சென்றால் 5மீ தொலைவில் ஐயனாருக்கே உரிய கம்பீரத்துடன் நான்கு குதிரைகளும் அதனருகில் பல்வேறு விதமான சிலைகளும் அமைந்துள்ளன. நல்ல கலையம்சத்துடன் அமைந்துள்ள இந்தக் குதிரைகளை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும். வலதுபுறம் இருக்கும் குதிரையின் பக்கவாட்டில் ஆங்கிலேயச்சிப்பாய் சிலை ஒன்றும் அமைந்துள்ளது. இக்குதிரைகளின் அடுத்துள்ளது ஒரு புற்று ஆகும். இப்புற்றில் தவம் செய்த ஐயனாரே கீழ்ப்புத்துப்பட்டு ஐயனார் என்று அழைக்கப்பெறுகிறார் என்று சொல்லப்படுகிறது. இவர் மஞ்சனீஸ்வர ஐயனார் என்று அழைக்கப்படுகிறார். இந்த ஐயனாரின் சந்நிதியே வழிபாட்டிற்குத் தகுந்தபடி தனிக் கோயிலாக அமைந்துள்ளது.

இதையடுத்து அமைந்துள்ளது நாகவள்ளி அம்மையார் சந்நிதியாகும். இங்கும் ஒரு புற்று உள்ளது. இப்புற்றைச் சுற்றிலும் சுவாமி படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. அதனை அடுத்து உள்ளது ஒரு விநாயகர் ஆலயம் ஆகும்.

ஆலயத் திறப்பு

காலை 7.00 துவங்கி மாலை 6.00 வரையிலும் இவ்ஆலயத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு ஒருகால பூஜை மட்டுமே செய்யப்படுகிறது. திங்கட்கிழமைகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து தரிசனம் செய்கின்றனர். சுற்றிலும் உள்ள பலகிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மஞ் சனீஸ்வரர் குலதெய்வமாகத் திகழ்கிறார். தமிழ்நாட்டு பக்தர்கள் மட்டுமின்றி பல்வேறு மாநில மக்களும் வந்து வழிபாடு செய்கின்றனர். இங்கு முடிகாணிக்கை, நேர்த்திக்கடன் செலுத்துவதற்கும் அனுமதி உண்டு. முன்பு அரசின் உத்தரவால் உயிர்ப்பலி தடைசெய்யப்பட்டிருந்தது. இப்போது அதுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விழாக்கள்

ஆண்டுதோறும் புதுச்சேரிக் கடற்கரையில் நடக்கும் மாசிமகத்திருவிழாவில் இந்த ஐயனாரும் வருகை தந்து அருள்பாலிக்கின்றார். புதுச்சேரியின் காலாப்பட்டு அருகிலுள்ள கடற்கரையில் இளைப்பாறிக் கடலாடித் திரும்புவதை ஆண்டுதோறும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இது மட்டுமல்லாது ஆடி மாதம் முழுவதும் இந்த ஐயனாருக்கு விசேஷ காலங்களாகும். அந்த மாதம் முழுவதும் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் ஆலயத்தை முற்றுகையிடுகின்றது. அதுசமயம், ஒவ்வொரு நாளும் இந்த ஆலயத்தின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றும் விதமாக திருவிழாக் காணும் திருநாளாக அமைகின்றது.

மண்நலம் பேணுதற்கு மரங்களும் வனங்களும் பேணப்பட வேண்டும் என்பதை வழிபாட்டு மரபில் மக்களுக்கு உணர்த்தும் ஆலயம் கீழ்ப்புத்துப்பட்டு ஐயனார் எனும் மஞ்சனீஸ்வரர் ஆலயம் ஆகும். புவிகாக்கும் இந்த ஐயனாரை வழிபடுபவர்கள் இம்மை வாழ்விற்குக் குளிர்ந்த காற்றையும் இனிய நிழலையும் பெறுவதோடு மறுமை வாழ்விற்கு ஐயன் அருள்துணையையும் பெற்று உய்வார்கள் என்பது திண்ணம்.



அயல்நாடுகளில் ஐயனார் வழிபாடு

பேராசிரியர் **இரா.குறிஞ்சிவேந்தன்**
தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி

தமிழ்மரபின் நீண்ட வரலாற்றுச் சுவடுகளில் படிந்து கிடக்கும் நம்பிக்கையே வழிபாடு. இயற்கையைப் போற்றி வணங்கிய தமிழர், சமுதாயத்திற்காகவும், மக்களுக்காகவும் உயிர்நீத்த வீரர்களின் நினைவையும் சேர்த்துப்போற்றினர். வயல்வெளிகளிலும், நீர்நிலைகளின் ஓரங்களிலும் கம்பீரமாக அமர்ந்திருக்கும் கிராமதேவதைகளின் பின்னணியில் உருக்கமும், சுவையும் நிறைந்த நிகழ்வுகள் பலவற்றை இன்றும் கேட்கலாம். அவற்றுள் தலைமைத் தன்மையுடன் விளங்கும் தெய்வமே ஐயனார். ஐயனார், சாத்தன் என்று கொண்டாடப்படும் தெய்வவழிபாடு திராவிட இனத்தின் தனித்தன்மையுடன் விளங்குவதாகும். காவல் தெய்வமாகவும், பல்வேறு சாதியினரின் குலதெய்வமாகவும் ஐயனார் வணங்கப்படுகிறார். கிராமதேவதைகளாகக் கூறப்படும் 21 சிறுதெய்வங்களின் மைய இழையாகத் தனித்துவத்துடன் மிளிர்வது ஐயனார் வழிபாடு. குதிரையுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஐயனார் வழிபாடு பன்னூறு ஆண்டுகளாகத் தமிழ்மண்ணில் பின்பற்றப்படுவது ஒருபுறமெனின், ஐயனார் கடல்கடந்து சென்ற வரலாறு மற்றொரு அத்தியாயமாகும்.



கி.பி. 17ஆம் நூற்றாண்டு தொடங்கி, 20ஆம் நூற்றாண்டின் முதல் காற்பகுதி வரை கடலுக்கப்பால் இருந்த பல்வேறு காலனிநாடுகள் மற்றும் தீவுகளுக்குத் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர். தொடக்கத்தில், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் போன்றவர்களாலும், பின்னர் பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷாரால் கூலித் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை பல இலட்சமாகும். ஜாவா, சுமத்திரா தீவுகள் முதல் இலங்கை, மலேயா, பிஜி, தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ், ரியூனியன், சுரினாம், மார்டினிக், குவாடலூப் மற்றும் கரிபீயன் தீவுகள் என எண்ணற்ற நாடுகளில் அமைந்திருந்த காபி, தேயிலை, மிளகு, கரும்பு, இரப்பர்த் தோட்டங்களில் இத்தமிழர்கள் தம் உழைப்பினை ஈந்தனர். ஆயிரக்கணக்கில் புலம்பெயர்ந்த இத்தமிழர்களில் பெரும்பாலோனோர் கிராமப்புறங்களைச் சார்ந்தவர்கள். காலங்காலமாகத் தாம் வாழ்ந்த சமூகப் பழக்கவழக்கம் மற்றும் பண்பாடுகளில் ஒன்றாகக் கலந்தவர்கள்.

அக்காலத்தில் புலம் பெயர்ந்த தமிழர்கள் சென்றடைந்தது, நாகரிகமிக்க நகரத்தையோ, குடியிருப்புகளையோ அன்று; கொடுங்குளிர் உறைந்த மலைப்பிரதேசங்கள், பள்ளத்தாக்குகள், அடர்த்தியான காடுகள் போன்றவையே. மலேரியாவை உண்டாக்கும் கொசுக்களும், அட்டைகளும் நிறைந்த பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் பின்பற்றிய வழிபாட்டுமுறை மெய்சிலிர்க்க வைக்கக்கூடியது. காடுகள் நிறைந்த தேயிலை மற்றும் இரப்பர்த் தோட்டங்களில் மாரியம்மன், ஐயனார் மற்றும் பிற சிறு தெய்வங்களுக்குக் கோயில் எழுப்பினர். தாயகத்தில் பாடிப் பழகிய நாட்டுப்புறப் பாடல்களால் அங்கும் அத்தெய்வங்களுக்கு பூசைகள் நல்கினர். கடும் உழைப்பினைத் தந்து பாடுபடும் தங்களை நோய்– நொடிகள் அண்டாமல் காப்பதற்காக மாரியம்மனை வழிபட்டனர். நள்ளிரவிலும் தோட்டங்களில் பால்மரம் சீவுவதற்குச் செல்லும் தங்களைக் காக்கும் குலதெய்வமாக ஐயனாரை அம்மக்கள் வழிபட்டனர். சொந்தங்களையும், சுற்றங்களை இழந்து கண்காணாத நாடுகளில் தனிமையில் வாடிய தமிழர்களுக்கு, மருந்தாக விளங்கிய இடமாக

இக்கோவில்கள் விளங்கின. தங்களுக்குக் கிடைத்த சொற்பக்கூலியில் இத்தெய்வங்களுக்குத் திருவிழா எடுப்பதில் மிகுந்த உவகையையும் பெற்றனர். தோட்டப்புறங்களில் சிறுகோவில்கள் அமைத்துக்கொள்ள அனுமதித்ததோடு, அக்கோவில் திருவிழா, தீமிதித்தல் போன்றவற்றுக்குப் பணவுதவி யினையும் வெள்ளையர்கள் செய்து வந்தனர். இவ்வாறாக, தமிழ்நாட்டில் மட்டுமன்றி, தமிழர்கள் தொலைதூர நாடுகளில் காலப்போக்கில் ஐயனார் வழிபாடு குன்றத் தொடங்கின. ஆனால், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இன்றும் ஐயனார் வழிபாட்டை முனைப்புடன் செய்யும் முறைமையைக் காணலாம்.

இலங்கையில் மலையகத்தில் வாழும் இந்தியத் தமிழர்களின் குடியிருப்புப் பகுதிகளில் ஐயனார், குதிரையுடன் காவல் தெய்வமாக நிமிர்ந்து நிற்பதை



செல்லுமிடமெல்லாம் துணையாகத் தொடரும் காவல் தெய்வமாக ஐயனார் பரிணமித்தார்.

மேற்கிந்திய தீவுகளிலும், பிற தொலை தூர நாடுகளிலும் காலப்போக்கில் இவ்வழிபாட்டில் மாறுதல்கள் ஏற்பட்டன. ஏனெனில், தென்னாப்பிரிக்கா, மொரிசியஸ் உள்ளிட்ட நாடுகளில் தமிழர்களின் வாழ்க்கை மாறத் தொடங்கியது. தங்களின் பிள்ளைகளுக்குத் தரமான கல்வியை அளித்து உயர்பதவிகளிலும், பிற தொழில்களிலும் தமிழர்களின் நாட்டம் சென்றன. த்தனால் தோட்டங்களில் இருந்து வெளியேறிய தமிழர்கள் அந்தந்த நாடுகளின் நகர்ப்புறங்களில் குடியமர்ந்தனர். இதனால் தோட்டங்களில் ஐயனார் வழிபாட்டில் தொய்வு நிலை ஏற்பட்டது. தமிழர்களின் சமய மாற்றம், பிற இனத்தவர்களைத் திருமணம் செய்துகொள்ளுதல் போன்றவற்றால்

இன்றும் காணலாம். தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் இந்தியத் தமிழர்கள் ஐயனார் வணக்கத்தினை மலைக்கிராமங்கள்தோறும் செய்து வருகின்றனர். பங்குனி மாதத்தில் ஐயனாருக்கு நடைபெறும் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அவ்விழாக்களில் ஐயனார் தொடர்பான நாட்டுப்புறக்கதைப்பாடல்கள், இன்னிசைக்கருவிகளுடன் இசைத்துப்பாடப்பெறும்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஈழத்தமிழர்கள் வாழ்வியல் வழிபாடுகளில் ஐயனாருக்குத் தனியிடம் உண்டு. யாழ்ப்பாணத்தினைத் தமிழ்மன்னர்கள் ஆண்ட காலத்தில் தொடங்கிய இவ்வழிபாட்டுமுறை இன்றும் தொடர்கிறது. போர்மேகங்கள் சூழ்ந்த வடக்கு இலங்கையில், பெரும்பாலான கிராமங்களில் பனைமரங்களின் சலசலப்புக்கிடையில் குதிரைகள்

வரிசையாக நிற்க, அமைதி தவழும் ஐயனார் கோவில்களைக் காணமுடியும். ஐயனாரின் கதைகளைக் கூறும், 'வியவில் ஐயனார்', 'காரைநகர் மற்றும் குதிரைமலை ஐயனார் வில்லுப் பாட்டு' போன்றவை இலங்கை ஐயனார் குறித்த செய்திகளைத் தருகின்றன. முழவு உள்ளிட்ட தோற்கருவிகளைக் கொண்டு இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் மட்டுமன்றி, புத்தரை வழிபடும் சிங்கள இனத்தவர்களிடையும் ஐயனார் வழிபாடு இருப்பது வியப்பூட்டும் செய்தியாகும். 'ஐயநாயக' (Ayyanayake) என்ற பெயரில் ஐயனார் வழிபாட்டினைச் சிங்களவர்கள் செய்துவருகின்றனர். அங்கு பலவிடங்களில் ஐயனாரை, புத்தருடன் இணைத்து வழிபடும் காட்சிகளை இன்றும் காண இயலும். பாலாவிக் குளம், பூநகரி, குருந்துமலை போன்றவிடங்களில் ஐயனார்கோயிலில், சிங்களர்களின் புத்தவழிபாடு இணைந்து 'ஐயநாயக' வழிபாடகத் தோற்றமளிப்பதைக் காணலாம். வன்னிப்பகுதியின் கதைப்பாடல்களும் இது குறித்த செய்திகளைத் தருகின்றன. கிராமக்காவல் தெய்வமாக சிங்களர்களால் வழிபடப்படும் 'ஐயநாயக', நம் தமிழ்ச் சமூகத்தின் ஐயனாரே.

மலேசியாவின் இரப்பர்த் தோட்டங்களில் ஐயனார் வழிபாடு முகிழ்த்த வரலாறும் குறிப்பிடத் தக்கது. சிறுதெய்வவழிபாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் மலேசியத் தமிழர்கள், ஐயனார் வழிபாட்டினையும் சிறப்பாகப் பின்பற்றி வருகின்றனர். தோட்டப்புறங்களில் மட்டுமன்றி, குடியமர்ந்த இடங்களில் எல்லாம், ஐயனார் வழிபாட்டுக்குத் தனிச்சிறப்பினை அளித்தவர்கள் மலேசியத் தமிழர்கள். கோலாலம்பூரில் இன்று முக்கிய நகரப் பகுதியாகத் திகழும் பிரிக்ஃபீல்ட்ஸ் (Brickfields) போன்ற செங்கல்சூளைப் பகுதிகளில் ஐயனார் வழிபாட்டு முறையை 150 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய தமிழர்கள், இன்றுவரைத் தொடர்வதைக் காணமுடிகிறது, ஐயனாருக்கு உகந்த பங்குனி மாதத் திருவிழாவினைக் கூத்து



உள்ளிட்ட இன்னிசைக் கருவிகளுடன் கொண்டாடி மகிழும் தோட்டப்புற வாழ் தமிழர்களின் பண்பாட்டினைக் காணும்போது வியப்பு மேலிடும். சிங்கப்பூர் கோயில்களில் ஐயனாருக்கு என்று தனியாகச் சன்னிதிகள் உள்ளன.

காலஓட்டத்தில், பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும், அந்தந்த நாடுகளின் தோட்டப்புறங்களில் ஐயனார் வணக்கம் இன்றும் தொடர்கின்றன. தோட்டங்களுக்குச் சென்ற தலைமுறையினரின் அடையாளங்கள் மறைந்து, நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. தொலைதூர நாடுகளில் இன்று இவ்வழிபாட்டு முறையில் பின்னடைவு தோன்றியுள்ளன. தாயகத்துடன் தொடர்பின்மை, பிற சமயத்தவராக மாற்றம் செய்யப்படுதல் போன்ற நிகழ்ச்சிகள் தோட்டப்புறத் தமிழர்கள் வாழ்வில் ஏற்பட்டதால் உருவான விளைவுகள் இவையாகும். ரியூனியன் போன்ற தீவுகளில் பிற சமயத்தவராக மாறிய தமிழர்களின் வீடுகளில் தற்போதும் வீட்டுக் கொல்லைப்புறத்தில் ஐயனார் மற்றும் முனீசுவரர் சிலைகள் இருப்பதைக் காணமுடியும்.

காவல்தெய்வமாகப் போற்றப்படம் ஐயனார், தீமைகளை வீழ்த்தி சமூகத்திற்கு நன்மை பயக்கும் நல்ல தெய்வமாக வணங்கப்படுவது இவ்வழிபாட்டின் அடிப்படைச் சிறப்பு. கால, தேச, வர்த்தமானங்களைத் தாண்டி மாறாத் தன்மையுடன் மண்ணின் மணம்வீசும் ஐயனார் வழிபாடு தொடர்வது, தமிழ் உணர்வின் அடையாளமாகும். மதுரையாக இருந்தாலும், மலேசியாவின் இரப்பர் தோட்டமாக இருந்தாலும் காக்கும் தெய்வமாக ஐயனாரைத் தொழும் தமிழர்களின் பண்பாட்டுச் சங்கிலி கண்ணுக்குப் புலனாகாத நீட்சியையுடையது, அச்சங்கிலியைத் தமிழகத்தின் குக்கிராமங்களில் இரவில் உறுமும் கூத்துக்கலைஞனின் பாட்டிலும் காணமுடியும்.

வாராரு..... வாராரு.....
ஐயனாரு வெள்ளைக் குதிரை ஏறி வாராரு.... வாராரு.....

என இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலிருந்து காற்றில் மிதந்து வரும் தமிழனின் குரலிலும் தரிசிக்க இயலும்.

தெய்வங்களும் மரபுகளும்

திரு. **சோ. முருகேசன்**
தமிழாசிரியர், சிங்கம்புணரி

தோற்றுவாய்

பண்டைக்காலத்தில் இயற்கையானது மனிதனுக்கு ஒரு புதிராகத் தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதர்களுக்குப் புதிராகவும் இருந்தன. அச்சத்தையும் ஏற்படுத்தியது. இருபுறமும் இயற்கையானது எல்லாக் காலங்களிலும் உணவைக் கொடுக்கின்றது என்று அறிந்து கொண்டான். அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் மாபெரும் சக்தியினை வணங்கத் தொடங்கினான். மனிதர்களின் கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்டபோது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்க வைக்கும் முயற்சியில் தோன்றிய செயல்பாடுகள், சமூகவியளாலரின் கருத்துகள், தெய்வம் பற்றிய வரலாறு, மானிட மரபு போன்றவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பண்டைய மக்களின் பாட்டும் ஆட்டமும் அவர்களின் உணவுத் தேவைகளுடன் தொடர்புடைய தாக இருந்துள்ளது. வேட்டையாடுவதற்கு வேட்டை மிருகங்கள் கிடைப்பதற்காகவும், உணவுப் பயிர்கள் அதிகமாக விளைவதற்காகவும் அதற்கான மழை பெறுவதற்காகவும் இயற்கையை வேண்டினர். அதற்காக பழங்குடியின மக்கள் 'போலச் செய்து' காட்டுவதன்மூலம் இயற்கையை இணங்க வைக்க முடியும் என்று நம்பினர். இவ்வகையான நம்பிக்கைகளால் ஆட்டமும் பாட்டமும் பின்பற்றப் பட்டன. இவைகள் நாளடைவில் மந்திரச் சடங்கு களோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது. இத்தகைய மந்திரங்கள் உலக நாகரிகத்தில் தொடக்க காலத்தில் கலைகளுக்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் மூலமாக இருந்தது என்பதைச் சமூகவியல் அறிஞர்கள் ஜார்ஜ், தாம்சன், பிரேசர் போன்றோர் விரிவாக விளக்கிக் காட்டியுள்ளனர்.

மேலும் சமூக ஆராய்ச்சியாளர்கள் 'மனிதன் ஒரு சமய விலங்கு' எனக் கூறுவர். காரணம் கூடி வாழ்கின்ற விலங்கினத்தைச் சார்ந்தவன் விலங்கு நிலையில் இருந்தபோது யானை, மான், எறும்பு போன்ற பிராணிகள்போல் கூட்டம், கூட்டமாக வாழ்ந்துள்ளான்.

மனிதனுக்கு விலங்குகளுக்கு இருக்கின்ற மந்தை எண்ணங்கள் உள்ளது என்பதை கற்கால நாகரீக வாழ்வில் காணமுடிகின்றது. 'இன்றளவும் கூட மனிதன் மந்தை உணர்ச்சி உடையவன் என்பதால்தான் இன்றும் தன்மை மனிதகுக்கு அச்சத்தையும் வக்கிர உணர்வையும் ஊட்டுகிறது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

மனிதன் கண்ட தெய்வநிலை

மனித சமூகத்தின் வளர்ச்சி அவனுடைய கூட்டுச் சிந்தனையின் விளைவு ஆகும். நாளடைவில் நாகரீக வளர்ச்சியால் இரும்பையும் செம்பையும் கண்டு பிடித்தான். பின்பு சக்கரம், உழுகலப்பை போன்ற அரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பைக் கண்டான். இக்கருவிகளின் துணைகொண்டு கூடிக்கூடித் தொழில் செய்தான். இத்தொழில்களில் பெற்ற அனுபவத்தினால்தான் தெய்வங்களும் அதனைச் சார்ந்த மரபுகளும் தோன்றியுள்ளன.

ஆதிமனிதர்கள் தெய்வங்களைச் சிந்தனை அளவில் ஒரு ஆற்றலாகத்தான் கருதி, வழிபடத் துவங்கியுள்ளனர். இந்நிலையினைக் காணுகின்றபொழுது கைகால்களுடன் கூடிய ஒரு உருவமாகவோ அல்லது மனிதனைப் போன்ற உருவமாகவோ கருதவில்லை என்பதனை அறிய முடிகின்றது.

தமிழகத்தில் கூட முருகு எனப்பட்ட ஒரு ஆற்றலைத்தான் முதலில் வணங்கினர். பின்பு தனிமனித அறிவு சார்ந்த ஆற்றலின் விளைவாக முருகு, முருகன் ஆக்கப்பட்டான். இவ்வகையான குறிகளும் குணங்களும் குலங்களும் கொண்ட கடவுள்களும் அந்தந்தச் சமூகத்தின் தேவைகளுக்கேற்ப அமைந்தவையே.

மேற்கண்ட கருத்திற்கேற்ப, இத்தகைய குணங்களும், வடிவங்களும் அவை சார்ந்த சமூகத்தின் அடிப்படையில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சான்றாக கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள் கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன்தான் இருக்கமுடியும் என்றும் உழவர்கள் தெய்வம் மழைதருகின்ற இந்திரனாகவோ, அல்லது கையிலே கலப்பை ஏந்திய பலராமனாகவோதான் இருக்க முடியும் என்பதை இன்றளவும் காண முடிகின்றது.

மானிடக் கூட்டம் எந்த வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்து இருக்கிறதோ, அதைப் பொறுத்து அத்தெய்வங்களின் வடிவங்களும்

குணங்களும் அத்தெய்வத்தைப் பற்றிய கதைகளும் அமைந்திருக்கின்றது.

இன்றளவும்கூட நம்முடைய பட்டிதொட்டிகளிலே (கிராமங்களில்) தேவதைகள் எல்லாம் கையிலே காவலுக்குரிய ஆயுதங்களையே வைத்திருக்கின்றனவே. காரணம் என்ன?

நவதானிய பயிரைக் காத்தல், கண்மாயிலிருந்து மாய்கின்ற நீரைக் காத்தல், விளைந்த பயிரை, பகைவர்களிடமிருந்து காத்தல், அறுவடை செய்த நவதானியங்களைக் காத்தல், உழவுக்கு வேண்டிய கால்நடைகளைப் பகைவரிடமிருந்து காத்தல், ஊர் எல்லையில் நின்று எதிரிகளிடமிருந்து ஊரைக்காத்தல், இத்தகைய காப்பு நடவடிக்கைகள் தாம் நேற்றுவரை கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படையாகும். எனவே, மக்களின் தெய்வங்கள் எல்லாம் இந்த மக்களைப் போலவே, ஏதேனும் ஓர் ஆயுதம் ஏந்தி காவலுக்குரிய வயல்களில், ஓரத்திலும், கண்மாய்களிலும், ஊர்மந்தையிலும் வட தென்புறங்களிலும் ஊர் எல்லைகளிலும் அயராது கண்விழித்து நிற்கின்றன. சான்றாக,

1. காளாப்பூர் இலங்கமுடைய அய்யனார் கோயில்



2. சூரக்குடி செவுட்டையனார் கோயில்

3. சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் அய்யனார் கோயில்

இம்மூன்று திருக்கோயில்களாகவும் கூறலாம்.

இத்தகைய தெய்வங்கள் எல்லாம் கண் மூடுவது கிடையாது. மக்களைப் போன்று இத் தெய்வங்களுக்கு முறுக்கிய மீசையும் வரிந்து கட்டிய வேஷ்டியுமாகச் சட்டையில்லாமலும், சிலநேரங்களில் தலைப்பாகையுடனும் கள்ளும், கறியும் நைவேத்தியமாக ஏற்றுக் கொள்பவையாக விளங்குகின்றன.

பெண்தெய்வ நிலைப்பாடும் மரபும்

பண்டைய காலத்தில் மக்களின் பெருக்கமும், உணவு உற்பத்திப் பெருக்கமும், கால்நடைப் பெருக்கமும், மழையினைச் சார்ந்தோ இருந்திருக்கின்றன. இவகைளே மனிதகுல வரலாற்றில் லட்சியமாகவும் தேவையுமாகவும் இருந்திருக்கின்றன. எனவேதான் இன்றும் எல்லா மதத்தினரும் மகப்பேறு என்பது இறைவனால் அருளப்பட்டது என்றும் அதைத் தடுத்து நிறுத்துவது பாவம் என்றும் அடிமனத்தில் எண்ணுகின்றனர். உயிர்களைப் பெருக்கும் ஆற்றல் பெண்களுக்குரிய பண்பாகும். எனவே, பெண் தெய்வங்கள் எல்லாம் சமூகத்தில் இத்தகைய தேவைகளை நிறைவு செய்யப் பிறந்தவையே எனக் கருதினர்.

குழந்தைகளுக்கும் விலங்குகளுக்கம் அம்மை, கோமாரி ரோன்ற நோய்வருங்காலத்தில் அன்னை அருகிலிருந்து அன்புடன் அரவணைப்போடு காக்கிறாள் என்ற நிலையினை இன்றளவும் நாம் காணமுடிகின்றது.

பெண்தெய்வங்கள் நோய்களிலிருந்து மக்களையும் கால்நடைகளையும் பேணிக்காக்கின் றன என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்திருக்கின் றது என்பது குறிப்பிடத்தக்கது.

பெருந்தெய்வ நிலைப்பாடு

வழிபாட்டு நிலைகளை இருவகையாகப் பிரிப்பர். ஒன்றாவ தாக, சிவன், மீனாட்சி, விஷ்ணு முதலிய பெருந்தெய்வங்கள் எல்லாம் பெருந்தெய்வ வழிபாட்டில் அடங்கும். இரண்டாவதாக காளி யம்மன், மாரியம்மன், பத்திரகாளி, அய்யனார் போன்ற சிறுதெய்வங்களை வழிபடுவது சிறுதெய்வ வழிபாடு என்பர்.

ஆரம்பகாலத்தில் இனக்குழு மக்களிடையேதான் இத்தெய்வங்கள் பிறந்தன. நாளடைவில் தனிச் சொத்துரிமை, வளர வளர உடலால் உழைப்

பவர்கள், உடையோர்கள் என்ற பிரிவு சமூகத்தில் தோன்றியது. இத்தெய்வங்கள் உடைமையாளர்களின் தெய்வங்களாகி விட்டன. அவர்களுடைய பண்பாடுகள் எல்லாம் இத்தெய்வங்களின் பண்புகளாக மாறிவிட்டன. இத்தகைய வழிபாடு களின் வளர்ச்சி மிகுந்த பகுதிகளில் பெரிய பெரிய திருக்கோயில்கள் தோன்றுவதற்கு வழிவகை செய்தது. இத்திருக்கோயில்களே சமுதாயத்தின் மையங்களாகத் தோன்றி உள்ளன எனக் கூறுகின்றார் தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.



காலமாற்றம்

காடுகளில் கூட்டமாக வாழ்ந்த மனிதன் தரையில் கிடப்பதைப் பொறுக்கியும், தரையைத் தோண்டியும் உணவைச் சேகரித்தான். பின்னர் வேட்டையாடினான். மீன்பிடித்தான். கால்நடைகளைப் பழக்கினான். மேய்ச்சல் நிலம்தேடி இடம் பெயர்ந்தான். கால்நடைகளின் துணைகொண்டு விவசாயத்தை வளர்த்தான். பின்பகைவரிடம் போரிட்டு, பயிர் நிலங்களின் அளவைப் பெருக்கினான். இயற்கையானது பல நேரங்களில் துணை செய்தது. சில நேரங்களில் பழிவாங்கியது. மானுடக் கூட்டங்கள் இடையறாது போராடியது. இதன் விளைவால் வளர்ச்சி பெற்றது வாழ்நிலை. நம்பிக்கை இன்னும் பல காரணங்களால் அவை இனக்குழுக்களாக மாற்றம் அடைந்தன.

இவ்வளர்ச்சிக்குப் பின்பு ஒவ்வொரு கூட்டத்திலும் சமூகத் தேவைகள் மாறுபட்டன.

அதற்குத் தகுந்தாற்போல் தெய்வங்களும், தெய்வ நம்பிக்கைகளும் வேறுபட்டன. வளர்ந்தன.

வேட்டையாடுதலும் பங்கீடு செய்தலும்

காலங்களின் மாறுதலுக்கு ஏற்பச் சமூகத் தேவைகள் மாற்றம் அடைந்தன. இதற்கு ஏற்பத் தெய்வங்களும், பண்புகளும் மாறின. சான்றாக, வேட்டைச் சமூகத்தில் வேட்டையாடப்பட்ட விலங்குகள் ஊர்ப் பொதுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அந்த இனக்குழு மக்களால் தமக்குள் அல்லது வேலைக்குத் தகுந்த அளவில் பங்கீடு செய்யப்பட்டன. இப்பங்கீடு தெய்வத்தின் பெயரால் செய்யப்பட்டது. பங்கீடு சரியாக இல்லாவிட்டால் தெய்வம் தண்டிக்கும் என்பது இனக்குழு மக்களின் ஆணித்தரமான நம்பிக்கை ஆகும். இன்றளவும் மகாசிவராத்திரி நாளன்று வேடர்கள் முயல், கீரி, நரி, போன்ற உயிர் இனங்களை வேட்டையாடி இறைவனுக்குப் படைத்து, அதைப் பங்கீடு செய்கின்ற முறையினையும் செயல்பாட்டினையும் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் காணமுடிகின்றது.

இப்பங்கீடு தெய்வத்தைப் பற்றிய தொல்லெச்சம் போன்ற செய்திகள் பழைய இலக்கியங்களிலும் புராணங்களிலும் காணப்படுகின்றன. தமிழிலக்கியத்தில் இத்தெய்வம் பால்வரை தெய்வம் என்று கூறப்படுகிறது.

ஆரியரின் ரிக்வேதத்தில் ரித என்னும் பங்கீட்டுத் தெய்வம் மறைந்தது பற்றிய புலம்பல்கள் இடம் பெறுகின்றன. கிரேக்கர் இப்பங்கீட்டுத் தெய்வத்தை மிர என்று அழைத்ததாகக் கிரேக்கத்தின் பாடிய புராணங்கள் பேசுகின்றன.

இக்காலகட்டத்திற்கு பின்பு பங்கீட்டு முறைபாடானது மறைந்தது. பங்கீட்டுத் தெய்வமும் மறைந்தது. இருப்பினும் விவசாயம் வளர்ந்தபோது கால்நடை வளர்ப்பு அழிந்து போகவில்லை. இத்தொழில் துணைத்தொழிலாக மாறியுள்ளது.

சான்றாக, கிருஷ்ணன், பலராமன் என்ற இருதெய்வங்களை எடுத்துக் கொள்வோம். கிருஷ்ணன், விருஷ்ணி யாதவர் எனப்பட்ட கால்நடைத் தலைவன் ஆவான். பலராமன் சாந்துவர் எனப்பட்ட உழவர்களின் குழுத்தலைவன் ஆவான்.



காட்டில் மாடு மேய்ப்பவர்களின் இசைக்கருவியானபுல்லாங்குழலைக் கிருஷ்ணன் கையில் காண்கிறோம். உழவர்களின் குழுத்தலைவனான பலராமனோ கையில் கலப்பை ஏந்தியுள்ளான்.

தெய்வங்கள் பற்றி கதைகள்

தெய்வங்கள் பற்றிய கதைகளைப் புராணங்கள் நன்றாக எடுத்து இயம்புகின்றன. பலராமன் நிறைய

மது குடிப்பவன். ஒருமுறை மதுவெறியால் ஒரு மரத்தடியில் சாய்ந்து கொண்டு நீராடுவதற்காகத் தன்னிடம் வருமாறு யமுனை நதியை அழைக்கிறான். அவள் வர மறுக்கிறான். உடனே தன் ஆயுதமான கலப்பையை வீசி எறிந்து அவளைத் தன்னிடத்திலே வரவழைத்து விடுகிறாள். இக்கதையின் பொருள் என்ன?

பலராமன் வாழ்ந்த காலத்தில் அவன் தலைமை ஏற்ற சாத்துவதன் யமுனைக் கரையில் பல புரிய நீர்வழிகளைக் கண்டு விவசாயப் பயிர் நிலங்களைப் பெருக்கினார் என்பதுதான்.

சனகன் காட்டு வாழ்க்கையில் நிலத்தைக் கலப்பை கொண்டு உழும்போது, நிலத்துக்குள் இருந்து வந்தவள் சீதை என்பது சீதையின் பிறப்பைப் பற்றிய கதை ஆகும்.

இதன் பொருள், சீதை உழும் தொழிலையுடைய ஒரு குழுவிலிருந்து பிறந்த தெய்வம் என்பதுதான்.

மேற்கண்ட கதைகளை உற்றுநோக்கும்பொழுது கிருஷ்ணை– பலராமன் கூட்டு அக்காலத்தில் யமுனை நதிக்கரையில் தங்கள் எதிரிகளுடன் போராடுவதற்காக கால்நடை வளர்ப்போரும், விவசாயம் செய்வோரும் ஆகிய இரண்டு பிரிவு மக்கள் தம்முள் அமைத்துக்கொண்ட கூட்டையே காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் கதைகள் நிறையப் பெருகி விடுகின்றன. கிட்டத்தட்ட ஒற்றுமையுடைய தெய்வக்கதைகள் ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன. இரண்டு மூன்று தெய்வவழிபாடுகள் ஒன்றாகக் கலந்து ஒரே தெய்வவழிபாடாகப் பரிணமித்தவைதான்.

வழிபாட்டுக் கலவைகள்

அரப்பா நாகரீகத்தின் பசுவதி வழிபாடு வேதத்திலுள்ள ருத்ரவழிபாடு, தமிழ்நாட்டில் நிலவிய தறிவழிபாடு இந்த மூன்றும் கலந்தே சிவவழிபாட்டின் அடிப்படையாகும்.

வடஇந்தியாவில் பிறந்த கந்தவழிபாடு, தமிழ்நாட்டில் உள்ள முருக வழிபாடு, கிழக்கிந்தியப்பகுதிகளில் பிறந்த கார்த்திகேய வழிபாடு – இவை அனைத்தும் சேர்ந்த கலவைதான் இன்றுள்ள 'முருக வழிபாடு' ஆகும்.

இதைப் போன்று வாசுதேவ கிருஷ்ண வழிபாடு, பலராம வழிபாடு, வேதத்தின் நாராயண வழிபாடு இவை அனைத்துமே கலந்து விஷ்ணு வழிபாடு உருவாயிற்று.

இறுவாய்

மேற்கண்ட செய்திகளும் கதைகளும், வழிபாட்டு கலவையும் மரபையும் காணும்போது மனிதக்கூட்டம் உணவிற்காக அச்சத்துடனும், ஆச்சரிய உணர்வோடும் இயற்கையை தெய்வமாகக் கருதி வணங்கினான் என்பதை அறிய முடிகின்றது.


மேலும் சமூகத்தின் ஒவ்வொரு வளர்ச்சிக் கூட்டத்திலும் சமூகத் தேவைகள் மாறி வளர்ந்து பெருகும்போது கதைகளும் புராணங்களும் அதற்குத்தக வளர்ந்தன.

அரசுகள் அவ்வப்போது தோன்றுகின்ற பொழுதும் வளர்கின்ற பொழுதும் ஆளுங்காலம், ஆளப்படுவோர் என்ற நிலையில் தெய்வங்களும் பெருந்தெய்வங்கள் சிறுதெய்வங்கள் என்ற முறைகளோடு அமைந்தன. பெருந்தெய்வக் கதைகள் எழுதப்பட்டன. இவைகள் புராணங்களாக உருவாயின.

சிறுதெய்வங்கள் கதைகள் உழைக்கும் மக்களின் நாவிலேயே பாட்டாக மலர்ந்தன. அவர்களின் நினைவிலேயே அக்கதைகள் தொடர்ந்து வந்தன. காலப்போக்கில் சில மறைந்தன. வேறுசில வழிபாட்டு நெறிக்குள் கலந்து தன் வயமாக்கப்பட்டு மறைந்தன.

துணைநூற்கள்

1. புறநானூறு
2. ஆலயங்கள் சமுதாய மையங்கள் – தவத்திரு குன்றக்குடி அடிகளார்
3. தெய்வங்களும் சமூக மரபுகளும் – முனைவர் தொ. பரமசிவன்
4. சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் அய்யனார் கோவில் ஓர் ஆய்வு (எம்ஃபில் ஆய்வேடு) ஆய்வாளர் சோ. முருகேசன்.



மருத நிலமாந்தரின் தெய்வம்

கவிஞர்கோ **சிற்பிபாலசுப்பிரமணியம்**

தமிழ்மூதாதையான தொல்காப்பியன் நானிலம் வகுத்து, அந்நிலங்கள் சிலவற்றின் திரிபால் பாலை என்னும் ஐந்தாம் நிலம் உருவாவதையும் எடுத்து மொழிந்தான். நிலம் ஒவ்வொன்றிற்கும் உரிய கருப்பொருள்களையும் உரிப்பொருளையும் விதந்துரைத்தான். நிலவியலின் அடித்தளத்தில் உருவாகும் வாழ்வியலை இத்தகு கூர்மையோடு உரைத்தவர் அந்நாளில் எவரும் இலர்.

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்துக்கும், செழிப்புக்கும், வளர்ச்சிக்கும், பண்பாட்டுப்பின்புலத்துக்கும் முன்னோடியாக அமைந்த நிலம் மருதம். வயலும் வயல்சார்ந்த இடமுமான மருதநிலம் மண்ணைப் பண்படுத்தி, நீரைப் பயன்படுத்தி வேளாண்மைப் பண்பாட்டை உருவாக்கி முதன்முதலாக ஊரையும், அரசையும் அமைத்துக் கொடுத்த பெருமைக்குரியது. 'தீம்புனல்' உலகம் எனத் தொல்காப்பியரால் தேர்ந்துரைக்கப் பட்ட பெருமைமிக்கது. ஆறுகள் செழித்த இந்த நிலத்தின் தெய்வமாகத் திகழும் இந்திரனோடு சேர்த்து,



'வேந்தன் மேயத் தீம்புனல் உலகம்'

என்று இவ்வேளாண் பெருநிலம் சிறப்பிக்கப் படுகின்றது.

இந்நிலத்தைச் செந்நிலமாக்கிய பெருமக்கள் உழவர் பெருமக்கள்.

'கனமர் தொழுவர் மள்ளர் கம்பளர்
வினைஞர் உழவர் கடைஞர் இளைஞர் என்று
அனையவர் கழனிக்கு அடைத்தவர் பெயரே'
'உழத்தியர் கடைசியர் ஆற்றுக் காலாட்டியர்
அடுத்த கழனிக்கு அடைத்த மகளிர்'

என இம்மக்களின் பெயர்களை எடுத்துக் காட்டும் திவாகர நிகண்டு.

உழவர் பண்பாட்டில் அமைந்த தெய்வமாக இந்திரன் திகழ்கின்றான். இடிக்கும் மின்னலுக்கும் மழைக்கும் உரிய தேவனாக, வேதம் இத் தெய்வத்தை வியந்து பேசும். யார் அந்த இந்திரன்?

"அவன் வஜ்ரி. மின்னல் அவனுக்குப் படை.. அவன் பாம்பைக் கொன்றான். ஆறுக –ளைப் பெருகச் செய்தான். மலைகளின் சார்புகளை உடைத்தான். மலையின்மேலே கிடந்த விருத்திரப் பாம்பை அழித்துவிட்டான். அறிவினாலே செய்த –வானத்தாலாகிய வயிரப்படை இவனுக்குத்துவட்டா என்ற தேவன் செய்து கொடுத்தான்.

நதிகள் வானக்கடலை நோக்கிப் பாடிக் கொண்டு விரைந்து சென்றன. இரைந்துகொண்டு செல்லும் ஆவினம் போல..." (வேதரிஷிகளின் கவிதை– பாரதியார்)

இப்படிப் பேசுகிறது ரிக்வேதம். மனித மொழிகளில் முதல் முதலாக இந்திரனைப் பற்றிப் பேசும் இடம் இது.

வேதங்களையும் இதிகாசங்களையும் புராணங்களையும் நம்முடைய முன்னோர்களின் உருவகக் கற்பனைகளாகவும் கற்பனை பூசிய

உண்மைகளாகவும்தான் பார்க்க வேண்டும். அப்படிப்பார்க்கமறுதலிப்போமாயின், 'தேவேந்தி–ரன்' பற்றி ஏதுமறியாமற் போவோம்.

வேதரிஷிகளின் கவிதையை வியத்தகு தமிழில் தந்த மகாகவி பாரதியார் இந்திரனைப் பற்றிச் சொல்லும் விளக்கம் நமக்குத் தெளிவை நல்க வல்லது.

"இந்திரன் என்பது விஞ்ஞான சக்தி. இவனுக்குப் பகை அஞ்ஞானம். இந்த அஞ் ஞானத்துக்கு விருத்திரன் என்று பெயர். (விருத்திரன்– மூடுவோன்– மறைப்போன்)... நமது அறிவிலே ஞான ஒளியின் கிரணங்களும், தேவ இன்பங்களாகிய நதிகளும் எப்போதும் பாயும்படி செய்ய வேண்டும்... இவன் (விருத்திரன்) மேற்கூறப்பட்ட தேவநதிகளை மண்மலையின்கீழே உள்ள ஓர் இருட்குகையில் அடக்கி வைத்து, அவை நமதறிவில் பாயாதபடி மேலே நின்று தடுக்கிறான்."

அவனை இந்திரன் கொல்கிறான். அதன் விளைவாக, என்ன நேர்ந்தது என ரிக்வேதம் சொல்கிறது.

"நீர்த்திரள் வெளிப்படும் வாயில் அடை பட்டிருந்தது. விருத்திரனைக் கொன்று இந்திரன் அதைத் திறந்தான்.



இங்கே புதிய இந்திரன் புலனாகின்றான். வேளாண்மக்களுக்குத் தடையாக நின்ற அசுர சக்திகளை அழித்து, நீர்நிலைகளை விடுவித்து, மலைகளை உடைத்து, ஆறுபெருகிவரத் துணை புரிகிற ஆற்றலே இந்திரன் என்பது தெளிவாகின்–றது. உழவருக்கு உரிய தண்ணீரைத் தடுக்கிற சக்திகளை உடைக்கிற தெய்வமாக வேதம் பேசுகிற உருவகம் வியப்புத் தருகிறது.

இதிகாச புராணங்களில் மூழ்க மூழ்கப் புதிய இந்திரன் நமக்குப் புலனாகின்றான்.

இந்திரனுக்குத் தந்தை காசிபன். தாய் அதிதி என்று புராணங்கள் பேசும். காசிபன் பூமியையே தனக்கு உரியதாக வைத்திருந்தான் என்பதால் நிலவுலகுக்கே காசினி என்ற பெயர் வந்தது என்பர். எனவே, காசிபன் என்றால் 'நிலம்' என்பதன் உருவகம். அதிதி என்ற சொல்லுக்கு, எல்லையற்றது என்பது பொருள். (திதி– கட்டுப்பாடு, அதிதி– கட்டுப்பாடற்றது.) அதாவது, எல்லையில்லாத வளமே அதிதி எனப்பட்டது. வேளாண்நிலமும் அதன் வற்றாத வளமே நீர் வள்த்தின் நாயகனான இந்திரனுக்குத் தந்தையும் தாயும் என்பதுதான் உருவகமாகப் பேசப்பட்டிருக்கின்றது.

அதிதியின் மக்கள் ஆதித்யர். இது தேவர்–களுக்கெல்லாம் பொதுப்பெயர் என்றாலும், சூரியனுக்குச் சிறப்புப் பெயர். பயிர்களின் பசுமைக்கு மெருகூட்டுபவன் அதிதியின் மைந்தன் ஆதித்யன்– அதாவது, சூரியன். அதனால்தான் நாட்டுப்புற வேளாண் பாடல்களில்கூட,

"சந்திரரே சூரியரே
சாமி பகவனே
இந்திரரே வாசுதேவா
இப்ப மழை பெய்ய வேணும்
மந்தையிலே மாரியாயி
மலைமேல்
இந்திரரே சூரியரே
இப்ப மழை பெய்ய வேணும்"

என்று சூரிய வணக்கம் சுடர்விடுகின்றது.

இந்திரனுக்கு உணவு பாற்கடலிலே பிறந்த அமுதம். அவன் பட்டத்து யானை ஐராவதம் என்ற வெள்ளை யானை. இது

பாற்கடலில் பிறந்தது. அவன் பட்டத்துக்குக் குதிரை பாற்கடல் தந்த உச்சசிரவஸ் என்ற வெள்ளைக் குதிரை. இவற்றின் பொருள்கூட வேளாண்மைத் தொடர்புடைய மாடுகளின் 'வாங்கக் குடம் நிறைக்கும்' பால் வளத்தையே நினைப்பூட்டுகின்றன. மனித உழைப்பே செல்வங்களையும், அமுதத்தையும் பெற்றுத் தருகிறது.

இந்திரனைப் பற்றிய குறிப்புகளில் பாம்புகளை இவன் காத்தான் என்பது ஒரு குறிப்பு. ஜனமே ஜயன் சர்ப்ப யாகம் செய்வித்தபோது அனைத்துப் பாம்புகளையும் அது ஈர்க்கிறது. அதன் கொடு நெருப்பில் மாயாது தட்கன் என்ற பாம்பை இந்திரன் காப்பாற்றுகின்றான். அவ்வாறே அர்ச்சுனன் காண்டவ வன தகனம் செய்தபோது, அசுவநேசன் என்ற பாம்பு தீயில் இறவாமல் வரம் அளிக்கின்றான். (மகாபாரதம்)

இக்குறிப்பு நமக்குக் காட்டுவது என்ன? பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழியாயினும் வேளாண் மக்களுக்குக் குறிப்பாக, நன்செய்ப் பயிராளருக்குப் பாம்புகள் துணைவர்களாக விளங்குவது கண்கூடு. பயிர்களை நாசம் செய்யும் எலிபோன்ற பிராணிகளை அழித்தொழிக்கப் பாம்புகள் துணைபுரிகின்றன. இந்திரன் பாம்புகளின் காவனாக இருந்தான் என்பது உருவகக் குறிப்பாக அமைகின்றது எனலாம்.

பல புராணக் கதைகளில் இந்திரன் கண்ணனோடு சண்டையிட்ட கதைகள் இடம்பெற்றுள்ளன. கோவர்த்தன மலைச் ச்ரலில் இடையர்கள் பூசைகள் நிகழ்த்தக் குழுமியபோது, இந்திரன் சினமுற்றான். அதனால், ஆயர்களின் வழிபாட்டைத் தடுத்து நிறுத்தப் பெருமழை பொழியும்படி செய்தான். இடையர்கள் கண்ணனிடம் முறையிட அவன் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்து, இந்திரன் பொழிவித்த மழையினின்றும் காத்தான் என்பது பாரத, பாகவதக் கதை.

அவ்வாறே மலைகள் ஒரு காலத்தில் சிறகுகள் பெற்றிருந்ததாகவும், அதனால் மக்களுக்குப் பெருந்துன்பம் விளைந்ததாகவும், புராணம் பேசுகின்றது. இந்தத் துயர் களையத் தன் வச்சிராயுதத்தால் இந்திரன் சிறகுகளை அறுத்தெறிந்தான் என்பது இன்னொரு கதை.

மகாபாரதத்தில் காணப்படும் மற்றொரு கதை, அர்ச்சுனனைக் குறித்தெழுந்தது. அக்கினியின் பசிதீர்க்கக் காண்டவனத்தை எரித்துண்ண அர்ச்சுனன் துணைபுரிந்தான் என்பது கதை. இச்சம்பவம் நிகழ்ந்தபோது, அதற்கு எதிராக இந்திரன் சோனாமாரியாகப் பொழிந்து நெருப்பை அழிக்க முயல்கிறான். அர்ச்சுனன் சரக்கூடம் கட்டி மழைவிழாமல் தடுத்து, நெருப்பு காண்டவவனத்தை அழிக்க உதவுகின்றான்.

இக்கதைகளை ஆழ்ந்து சிந்தித்தால், மழை வளத்துக்குக் காரணமான மலைகள், காடுகள் ஆகியவற்றின் அழிவை இந்திரன் தடுக்க முயன்ற செய்திகளே இவை என்பதைக் கண்டுகொள்ளமுடியும். அதனால்தான், மலைகள் இடம்பெயராமல் சிறகரிந்தான் என்றனர். கோவர்த்தன மலைமீது குடியேற்றம் பெருமளவு நிகழ்வதைத் தடுக்க முயன்றான் இந்திரன் என்று கதையைப் பொருள்படுத்தமுடியும். காண்டவ வன தகனத்தை எதிர்த்தான் இந்திரன் என்ற கதை, வனங்களின் அழிவுக்கு எதிராக நின்ற இயற்கையின் காவலன் இவன் என்பதையும் புலப்படுத்துகின்றது. மருத நிலம் பாழடையாமல் காக்கும் முயற்சியின் கூறுகளாகவே இவற்றைக் காணமுடியும்.

பாகவதத்தில் காணப்படும் இன்னொரு கதையில், இந்திரன் சிவபூசை செய்து கயிலை சென்று அங்கிருந்து பாரிசாத மரம் கொண்டு வந்ததைக் கூறுகின்றது. அம்மரத்தை இந்திரலோகத்தில் கொண்டு வைத்து நட்டிருக்கும்போது கண்ணன் இதைக் கவர்கின்றான். இதனால், ஏற்பட்ட பூசல் பெரிதாகவே, காசிபர் சமாதானம் செய்விக்கின்றார். பயிர் வகைகளைப் புதிதாக உற்பத்தி செய்வதும், அதற்காகக் காவல் இருப்பதும், எதிர்ப்பு வந்தால் போரிடுவதும் இந்திரனை மேலும் ஆழமாக வேளாண்குல தெய்வமாக்கி நிறுத்துகின்றன.

இன்னொரு கதையிலும், இந்திரனின் பயிரினக் காவல் வேட்கை புலப்படுத்தப்

படுகிறது. பிராமண உருக்கொண்டு காசி தேசத்து வேடனால் எய்யப்பட்ட ஒரு மரம் காய்ந்து உலர்ந்து போய்விடுகிறது. அந்தக் காய்ந்த மரத்திலிருந்து வெளியேற விரும்பாமல் ஒரு கிளி அங்கேயே பொந்தில் வசிக்கிறது. வளமாக இருந்த காலத்தில் வாழ்வு பெற்ற கிளி, மரத்தின் அழிவுக்காலத்திலும் பிரியாமல் தங்கி இருக்கும் நன்றி மறவாத் தன்மையின்பொருட்டு இந்திரன் பட்ட மரம் தளிர்க்க வரம் அளிக்கின்றான். (அபிதான சிந்தாமணி – 157)

மற்றவர்களால் நாசம் செய்யப்பட்ட காட்டுக்கு அடையாளமாகிறது வேடனால் பட்ட மரம். அம்மரத்தில் இருக்கும் கிளி இன்னமும் தழைக்க வாய்ப்புள்ள பசுமைக்குக் குறியீடாகிறது. மரம், செடி, கொடிகளையும் பறவைகளையும் நேசிக்கிற இந்திரன் அந்தக் காட்டை மீண்டும் உயிர்ப்பித்தான் என்பதுதான் கதையின் சாரமாக நமக்குக் கிடைக்கும் செய்தி.

தன் குல குருவான பிருகஸ்பதி ஒரு சமயம் காணாமற்போனதால் துவட்டாவின் புதல்வன் விச்சுவ உருவனை முன்வைத்து இந்திரன் யாகம் செய்ததாகத்திருவிளையாடல் புராணம் கூறும். அப்போது விச்சுவ உருவன் தன்னின நலம் விடுத்து, அவன் இனநலம் நாடும் மந்திரங்கள் சொல்வதை அறிந்த இந்திரன் தன் ஆயுதத்தால் அவனைக் கொல்கிறான். விச்சுவ உருவனின் மூன்று சிரங்கள் பறவைகளாய்ப் பறந்தோடுகின்றன. இதனால் இந்திரனுக்குப் பிரம்மகத்தி தோஷம் ஏற்படுகின்றது. அதனை மரம், மண், நீர், பெண் ஆகியவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பாவம் நீங்கினான் என்பது கதை. இங்கும் தன் இன மக்களின் காவலான இந்திரன் எச்சரிக்கையோடு திகழ்வதையும், அவனுக்கு நேர்ந்த சோகத்தைப் பகிர்ந்து கொண்டவை வேளாண் சமுதாயச் சின்னங்களான மண், நீர், மரம், பெண் என்பதையும் காணும்போது, இந்திரனுக்கும் உழவர்பெருங்குடிக்கும் உள்ள நெருக்கம் அழுத்தமாகப் பதிவு செய்யப் படுகின்றது.

இந்திரன், முகுந்தை, தேவசன்மன் தேவி உரிசை, அகலிகை மற்றும் பல பெண்களை மோகித்தான் என்று கூறும் ஏராளமான கதைகள் புராணங்களில் உள்ளன. தன் தேவலோகத்திலும் என்றும் இளைய அரம்பையர்களை வைத்திருந்தான் என்று கூறப்படுகின்றது. அகலிகையை நச்சிச் சென்றதனால் தன் உடலில் ஆயிரம் பெண்குறி பெற்று, பின் கண்களாக மாறின என்றும் கதைகள் பேசுகின்றன. கொச்சையாகச் சொல்லப் பட்டவை எல்லாம் மருத நிலத்தெய்வத்தைப் பழிக்கும் நோக்குடன் கூறப்பட்டனவாகவே கொள்ளத்தக்கன. ஆயினும் பெண் நேசம் என்பதற்கு ஒரு மாற்றுப்பொருள் கூற இடம் உண்டு.

கன்னிப் பெண் வளமையின் சின்னமாகப் போற்றப்படுபவள் என்பதை, 'Fertility Symbol' என்று அறிஞர் குறிப்பர். பெண் தாய்மையின் இருப்பிடமாகவும், நிலவளத்தின் சின்னமாகவும் திகழ்பவள். எனவே இந்திரனின் பெண்நேசம், உழவர்தெய்வம் வளமையை நேசித்ததன் உருவகம் என்று கூறமுடியும். அகலிகை சாபத்தால் பாறையானாள் என்பதுகூட, மழையை (இந்திரன்) இழந்த பூமி பாறையாகும் என்பதன் மறுபதிப்பு என்று கருதமுடியும்.

அகத்தியரைக் குறித்தும் இந்திரனைக் குறித்தும் இணைத்துப் பேசும் கதைகள் பல உண்டு. இந்திரன் பகைவனான விருத்திரா –சுரன் ஒளிந்திருக்கும் இடத்தைக் காட்ட அகத்தியர் கடலைக் குடித்தார் என்பது ஒரு கதை (திருவிளையாடல் புராணம்) விந்திய மலையின் கர்வத்தை அடக்க அகத்தியரை வேண்டினான் இந்திரன் என்பது இன்னொரு கதை. (கந்தபுராணம்) சீர்காழியில் உள்ள நந்தவனம் நீரின்றிச் சீரழிய, (குடகு)மலையில் தவம் புரிந்து கொண்டிருந்த அகத்தியரின் கலசத்தைக் கவிழ்த்தால் காவிரி பிறக்கும் என உணர்ந்து விநாயகரை இந்திரன் வேண்டினான் என்றும், அவரும் காகமாய் வடிவெடுத்துக் கலசத்தைக் கவிழ்க்கக் காவிரி பிறந்ததாகவும் மற்றொரு கதை. இவற்றின் சாராம்சத்தைக் கருதினால் மழையின்றி வாடிய மருதநிலச் சமுதாயத்துக்கு – நீர்வளம் தர வந்த நாயகனாக இந்திரன் இருந்தான் என்பதையே இக்கதைகள் உணர்த்துவதைப் புரிந்துகொள்ள முடியும்.

கடலைக்குடித்த அகத்தியரை மேகமாகவும், மலையை அடக்கிய அவர் செயலை மேகங்கள் மலையைச் சூழ்ந்த சம்பவமாகவும், கலசத்தில் வைத்த நீர் பயன்படாமல் இருந்ததை மழைபொழியாதிருந்த நிலையாகவும், அந்தக் கலசம் கவிழ்ந்து காவிரி பெருகியதை மழை பொழிந்து ஆற்றுவளம் பெருகியதாகவும் இணைத்து உருவகப்படுத்திப் பார்க்கவும் வாய்ப்புண்டு. மழைக்கடவுளான இந்த உழவர் தலைவன் இந்திரன் காவிரி பெருகவும் காரணமான ஒரு நெடுந்தொலைக்காட்சி நம்முன் விரிவதைப் பார்க்கமுடியும்.

இதன் காரணமாகவே, மருதநில மாந்தருள் தலையாயவர்களாய சோழநாட்டுப் பெருமக்களான உழவர்கள் இந்திர விழா எடுத்து– மழை தரும் வள்ளலை, காவிரி தந்த செம்மலைப் போற்றினார்கள் என்பது தெளிவாகின்றது. தூங்கெயில் எறிந்த தொடித் தோட்செம்பியன் என்னும் சோழ மன்னன் வேண்டுகோளால் இந்திரவிழா சிறப்புற நடைபெற்றது என்பர். பூம்புகார் நகரில் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு வந்த தீங்கை நீக்க வந்த நாளங்காடியில் ஒரு காவல் பூதத்தை நிறுவினான் இந்திரன் என்று சிலப்பதிகாரம் கூறும். இதுமட்டுமன்றிப் பூம்புகார் நகரில் இந்திரவிகாரம் என்று ஏழு கோயில்கள் இருந்தன என்பர். (காடுகாண்காதை). இந்திரவிழா சித்திரை மாதம் கொண்டாடுங்கால் முதலில் யானையின்மீது முரசை ஏற்றிவந்து விழாவை அறிவிப்பார்கள். இந்திரனது ஆயுதமாகிய வச்சிராயுதத்துக்கென்றே அமைக்கப்பட்ட வச்சிரக்கோட்டத்திலிருந்து முரசினை எடுத்து வருவார்கள். அதனை யானைமீதேற்றி இந்திரன் வாகனமாகிய ஐராவதத்துக்குக் கட்டப்பட்ட கோயிலுக்குக் கொண்டுவந்து இந்திரவிழா நிகழ்வுகளை அறிவிப்பார்கள். இந்திரனுடைய வச்சிராயுதத்துக்கும், வெள்ளை யானைக்கும் கூட வேளாண்மக்களின் வீறுகொள் தலை நகரமாகிய புகார் நகரில் கோயில் இருந்ததைச் சிலம்பு (இந்திரவிழவூர் எடுத்த காதை) தெளிவு படுத்தும்.



“வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றி....”

என்பது சிலப்பதிகாரம்.

அடடா, இந்த விழாவில் ஆயிரத்தெட்டு அரசர்கள் காவிரிப் புனிதநீரெடுத்து,

“மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழு நீராட்டி”,

சிறப்பிப்பார்களாம். பேரின்பப் பெருவிழா வாக இந்திரவிழா சீரும் சிறப்புமாக 28 நாட்கள் நடைபெற்றதைச் சிலம்பும், மணிமேகலையும் தித்திக்கத் தித்திக்கப் பேசும்.

மருதநில மக்களின் தலைவனாகவும், தெய்வ –மாகவும் திகழும் இந்திரன் மழைவளத் துக்கு, நிலவளத்துக்கு, நீர் வளத்துக்கு அடையாளமாக விளங்கும் வேளாண்மைத் தெய்வம்.

இந்திர விழாவை மீண்டும் புதுக்குவது வள வாழ்வுக்கு மறுபடியும் ஒரு வரவேற்பு விழாவாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

முருகன் எம் அரசன்

புலவர் சு.சாவித்திரி, புதுச்சேரி

தமிழகம் மெய்யுணர்வையும், இறை வழிபாட்டையும் வளர்க்கும் தாயகம் எனலாம். முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்கள் முதன் முதல் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்றும், அதிலும் குறிஞ்சித் திணைப்பகுதியேயாகும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மிகமுற்பட்ட நூலாகிய தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம், 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்று குறிப்பிடுகின்றது. இதனால் முருகன் வழிபாடு மிகத்தொன்னெடுங்காலம் முதலே மேற்கொள்ளப் படுகின்றது என்பதைத் தெளியலாம். முருகன் தமிழ்க்கடவுள். முருகனே தமிழ் மொழியை அகத்தியருக்கு அறிவுறுத்தினான் என்பது வரலாறு. சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான்.



"கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழால் பகர்வோனே"

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ்.

"பொன்னங்க கடுக்கைப் புரிசடையோன் முன்னம் பிரமம் மொழிந்தோனே" எனக் குமரகுருபரர் கூறியுள்ளார். முருகன் அழகன், பேராற்றலும் பெருஞ்சீற்றமும் உடையவன். 'முருகு' என்ற சொல்லுக்கு அழகு, இளமை, மணம், கடவுள்தன்மை என்ற நான்கு பொருள் உண்டு எனத் திரு.வி.க.அவர்கள் தான் எழுதிய, முருகன் அல்லது அழகு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பெம்மான் முருகனின் பேரழகில் மயங்கிக் கவிகள் வர்ணிக்கிறார்கள். குமரகுருபர சுவாமிகள் அத்தகைய வடிவழகில் சொக்கி அவன் திருமுடி முதல் திருவடி வரை ஒரு சொல்லோவியமாக்கி நமக்குத் தருகின்றார்.

பைம்பொன்னால் செய்து ரத்தினங்கள் பதித்து ஒளிவீசும் மணிமுடி. ஆறு இளம் பிறைகளை வரிசையாய் வைத்ததுபோன்ற நெற்றிப்பொட்டழகு; விரிந்த தாமரை மலர்கள் பன்னிரண்டு பூத்தது போன்ற அருள்பொழியும் கணமலர்கள் ஈராறு; பரிதி(சூரியன்) பலவும் உதித்துச் சுடர் விட்டாற்போன்று குலவு மகரக் குழைகள்; புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய்; பிறவிப்பிணி தீர்க்கும் திருமொழி;

ஆமாம், முருகனது திருமொழி வணங்கினாரை வாழவைக்கும் – குமரகுருபரர் முருகன் தன் கொஞ்சுதமிழ்ச் சொல்லைக் காதால் கேட்டிருக்கிறார். முருகனுக்கு உகப்பான பேச்சு எது என்று அருணகிரிநாதரும் கூறியிருக்கின்றார்: – "உல்லாச நிராகுல யோக விதச் சல்லாப விநோதன்"என்பது கந்தரனுபூதி அல்லவா?

குமரகுருபரர் உள்ளம் பெருமானின் திருமுகங்களைக் கண்டு மகிழ்ந்தது. அம்முகங்களின் செயல்கள் பற்றிக் கூறுகின்றார். சூரனைக் கடிந்த முகம் ஒன்று; எவ்வுயிர்க்கும் ஊழ்வினையை மாற்றி அழியாத பேரின்ப வாழ்வுதரும் சிவந்த மலர்முகம் ஒன்று; பழமறைகள் ஆகமங்கள் யாவும் ஐயமின்றி முற்றுப் பெறச் செய்யும் கமலமுகம் ஒன்று; பாசவினை நீக்கிப் பசுஞ் சுடர் பரப்பும் வாசமலர் வதனம் நான்காவது; நேசமுடன் போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடி(தெய்வயானை)க்கும் மோகமளிக்கும்

முகம் ஐந்தாவது; ஆதரவுதேடி அடியிற் சேர்ந்தோர் மகிழ வரம் பலவும் தந்தருளும் தெய்வ முகம் ஆறாவது.

இங்குக் கூறப்பட்ட திருமுகங்களின் செயல்கள், "மாயிரு ஞால மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்றொரு முகம், ஒருமுகம் ஆர்வலரேத்த அமர்ந்தினிதொழுகிக் காதலினுவந்து வரங்கொடுத்தன்றேயொரு முகம், மந்திரவிதியின் மரபுளி வழாஅ, அந்தணர் வேள்வியோர்க்கும் மேயொருமுகம், எஞ்சிய பொருள்களையேமுற நாடித் திங்கள்போலத் திசை விளக்கும்மே யொருமுகம், செறுநர்த் தேய்த்துச் செல்சம முறுக்கிக் கறுவுகொள் நெஞ் சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம், குறவர் மடமகள் கொடிபோனுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" என்னும் நக்கீரர் கூறிய திருமுருகாற்றுப்படையினைத் தழுவிக் கூறப்பட்டன.



" ஏ று ம யி லே ல றி விளையாடுமுகமொன்றே;
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே;
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே;
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே;
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே;
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே"

என்று ஆறுமுகமான பொருளை அருணகிரியார் பாடுகின்றார்.

முருகனது முகத்தழகைக் கண்டு மனதைப் பறி கொடுத்த குமரகுருபரரின் உள்ளம் அடுத்தாற்போல் அவனது தோளழகில் மொய்க்கின்றது. தேன்நிறைந்த கடம்பமலர் மாலையும், மணம்வீசும் குராமலர் மாலையும் அணிந்த பன்னிரு தோள்கள், ஒவ்வொரு கரமாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொன்றும் தனி அழகுடன் பொலிகின்றது.

1. தேவர்கட்கு அமுதம் தரும் ஆசைக்கரம்.
2. தேவமகளிர் அணைந்த அழகுக்கரம்.
3. மழை அருளும் கரம்.
4. பூவணிந்த புனித கரம்.
5. மார்பிலே வைத்த அபய கரம்.
6. இடுப்பின் இது பக்கத்திலே அமர்த்திய ஒயில் கரம்
7. தொடையில் வைத்த தூயகரம்.
8. வீரவளை யணிந்த வெற்றிக் கரம்
9. மணி சேர்ந்த மணிக்கரம்.
10. அங்குசம் தாங்கிய ஆணைக்கரம்
11. கேடயம் சுழற்றும் போர்க்கரம்.
12. வாளேந்திய வலிமைக்கரம்.

இங்கே குமரகுருபரர் கூறியுள்ள திருக்கரங்களின் செயல்கள்: "விண்செலன் மரபினையர்க் கேந்தியதொரு கை... வானர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கப் பன்னிரு கையும் பாற்பட வியற்றி" (திருமுருகாற்றுப்படை –107–108) என்பதைத் தழுவிக் கூறப்பட்டன.

இன்னும் குமரகுருபரர் கூறுகின்றார் – பன்னிரு கரங்களுக்கிடையே பொன்மணி பூண்ட அகன்ற மார்பும், பசும்பொன் புரி நூலும் (பூணூல்) கண்டிகையும் (உருத்திராக்கமாலை) பூம்பட்டாடையும், தங்க அரைஞாணும், அரைக்கச்சையும், திருவரையும், நாதக் கழலும், பொற்கிண்கிணியும், சிலம்பும் சோதி இளம் பருதி (உதயசூரியன்) நூறாயிரங்கோடி உதித்து வந்ததுபோல, வளந்தரு தெய்வீக வடிவமுடைய முருகப்பெருமான் அன்பருடைய உள்ளத் தாமரையின் மீதிருக்கும் அருளொளியாவான்.

முருகனது உருவ அழகினை ஓர் ஓவியமாகக் கண்முன் கொணர்ந்து நிறுத்தி விட்டார் குமரகுருபரர். சடாரென்று அவர்முன் காட்சி மாறுகின்றது. மனித உருவிலே இருப்பதுபோல் குமரனைச் சொல்லிவந்தவர், இப்பொழுது பார்வையையும் நடையையும் மாற்றிவிடுகிறார். அவன் ஒரு மாபெரும் தத்துவமாகிவிடுகின்றான்.

முருகன் ஓங்காரத்து உள்ளொளிக்கும், உள்ளொளியாய் ஐந்தொழிற்கும் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) நீங்காத பேருருவாய் நிற்பவன். "ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே வான்பதமே மாமுடியா, வன்னமே தோலாக, புவனத்துருவே உரோமமா, தத்துவங்களே எழுவகைத் தாதுக்களாய், கலையே உறுப்புக்களாகக் காட்டும் ஆன்மாக்களைப் பரகதியடைவிக்கை காரணமாகிய நிலையே வடிவமாய் நின்றான் என்று அப்பனைத் தத்துவமாகக் காண்கின்றார் குமரகுருபரர்.

இன்னும் அகிலாண்ட கோடியெல்லாம் அவன் உருவமாம் – சராசரங்களையெல்லாம் அவன் உடற்பகுதிகளாம் – இச்சை, ஞானம், கிரியை இம்மூன்றும் கருவிகளாம் இவற்றைக் கொண்டு நல்ல உயிர்களுக்கு அறிவு அளிப்ப ஐந்தொழிலும் ஏவி தனி நடத்தும் எம்கோவே என்று சிவபெருமானாகவே முருகனைப் பார்க்கின்றார் குமரகுருபரர்.

"அலகிலா உயிர்ப்புலன்கட்கு அறிவினையாக்கி ஐந்து

நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன் (சிவ. சித்தி. சூ.6:7)

மேலும், மண்ணும், நீரும், தீயும், காற்றும், வெளியும், சூரியனும், சந்திரனும், உயிரும் ஆகிய எட்டுவடிவமாம். எட்டியும், எட்டாதிருக்கும் இந்த எட்டுக் குடியனுக்கு, இவ்வளவு கூறிய பின்னும் குமரகுருபரர்க்குத் திருப்தி உண்டாகவில்லை. இன்னும் சொல்லுகிறார். 'நான்', 'எனது' என்பது அற்ற இடமே அவன் திருவடி; அறிவே உருவம்; இச்சா, ஞான, கிரியா சக்திகள் மூன்றும் முக்கண்கள்; அருளே திருக்கரம்; அண்ட சராசரங்களெல்லாம் அவன் திருக்கோயிற் சந்நிதி; அச்சந்நிதியில் எல்லோரும் சமம்; எவ்வுயிர்க்கும் பின்னமற நிற்கும் பெருமான் முருகன்.

அவனே பிரமன்; அவனே விஷ்ணு; ருத்ரன்; மகேசன்; சதாசிவன். ஐந்தொழிலும் அவன் செய்கை– லயமும், போகமும், அதிகாரமும் அவனே. இதில் பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேசன் என்னும் நான்கு உருவத்திருமேனிகள்



முருகனுக்கு. சிவன், சக்தி, நாதம், விந்து என்ற அருவத்திருமேனிகள் நான்கு; சதாசிவம் என்ற அருவுருவத் திருமேனி ஒன்று என்று இவ்வாறாக மொத்தம் ஒன்பது திருமேனிகள்– இவற்றுள் ஏதேனும் ஒன்றை உயிர்களின் பக்குவத்திற்கேற்ப, எடுத்து அருள்புரிவான் – சிவனே முருகன் என்று காண்கின்றார், குமரகுருபரர்.

'இயலும், நடையும், வடிவுமழகும் எழுதரியன்' (கந்தர்கலி–366) என்று இவர் போற்றுகின்றார். மேலும், நான் எனது அற்ற இடமே அவன் திருவடி அருளே திருக்கரம் என்றுரைக்கின்றார்.

ஒழுக்கமுடன் இப்பிறவியில் அகப்பற்று, புறப்பற்று என்பவற்றை அகற்றி, ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நீக்கி, தம்மை விடுத்து (பசு,பாசம் நீக்கி) பழைய அடியாருடன் கூட்டிப் பேரின்பம் துய்ப்பித்து எங்கும் மணம் பரப்பும் பூங்கமலப் பொற்பாதம் காட்டி அடியேனை முன்னின்று ஆட்கொண்டருள் என்கின்றார். முருகப் பெருமானிடம் நின் பூங்கமலப் பொற்பாதம் காட்டி அடியேங்களை ஆட்கொண்டருள வேண்டும் ஐயனே என்று வேண்டிக்கொள்வோம்.

மணிவாசகப்பெருமானும், 'அடியேன் உன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்' (திருவாசகம்) என்று கூறியுள்ளார்.

ஒழியாத புவனத்துயிர்க்கு உயிரதாய் நிற்ப
தொரு தெய்வமுண்டென எடுத்
துரையாலுணர்த்துவதை யொழிய எவரெவர் கட்கும்
ஊன்கண் உளக் கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல்லாற் புவியில்
வேறில்லை (கந்தர்கலி)

என்று கூறியுள்ளதால், நாமும் பெருமானை அவ்வாறு கூறி வணங்குவோம்; அவனருள் பெறுவோம். எது எப்படியிருந்தாலும் உன்னை நாங்கள் என்ன சொல்லி அழைத்தாலும், பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப்பெருமானே, முத் தமிழால் உன்னை வைதாரையும் வாழ வைக்கும் அருள் தெய்வமே, எமக்குத் தாயாகவும், தந்தையாகவும், அரசனாகவும், ஆசானாகவும் இருந்து எம்பிழை பொறுத்துக் காப்பது உன் கடன்.

அப்பர் தேவாரத்தில் பிச்சைத்தேவர்

தமிழாகரர் முனைவர் **பா.சுந்தர்**
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை, உருமுதனலட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

பிச்சைத்தேவர், பிச்சாண்டவர், பிச்சாண்டி, பிச்சாடனார் முதலான திருப்பெயர்களால் வழங்கப்பெறும் ஒரு சிவமூர்த்தமே நாவுக்கரசரால் அகமரபைப் பாடத் தேர்வு செய்யப்பட்டது. இது இறைவன் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்குவதற்குத் தாங்கிய திருக்கோலமாகும். முனிவர்கள் நாற்பத்-தெட்டாயிரம் பேரும் வேள்வியும் வேதமும் முதன்மையாகக் கொண்டனர். இறைவன் ஒருவன் தேவையில்லை என்னும் கொள்கையினர். இவர்களைத் திருத்தி இறையுண்மையை நிலைநாட்ட சிவபெருமான் எடுத்த வடிவமாகும்.


திருநாவுக்கரசர் இம்மூர்த்தத்தை மிக விரிவாகப் பாடியுள்ளார். கச்சியப்பரின் கந்தபுராணம், தட்ச காண்டம், ததீசி யுத்தரப் படலம் விரிவாக இறைவன் இவ்வடிவம் தாங்கியதை விளக்குகின்றது. காஞ்சிப் புராணத்திலும் இத்திருக்கோலம் இடம் பெற்றுள்ளது.

அடியில் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடியில் சிறப்ப நடந்தருளி
மூழைஏந்தி மருங்கு அணைந்த
தொடியில் பொலிதேள் முனிமகளிர்
சுரமங்கையரை மயல்பாட்டில்
படியிட் டெழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன்
திருவுருவம்'

பிச்சைத் தேவர் திருவுருவ விளக்கம்

தா·ருகாவனத்து முனிவர்களின் மனைவியர்களும் இத்திருக்கோலம் தாங்கிய இறைவனின் வடிவழகில் மயங்கினர்.

இத்திருக் கோலம் நின்ற நிலையில் கையில் பிச்சைப் பாத்திரம் ஏற்றிருக்கும். நான்முகனது தலைகள் ஐந்தில் கிள்ளப்பட்ட ஒரு தலையை (பிரம்மகபாலம்) ஓடாக ஏந்தியிருக்கும். ஒரு காதில் சங்கக் குழையும், மற்றொரு காதில் குண்டலமும் அணிந்திருக்கும். மார்பில் முப்புரிநூல் காணப்படும். நான்கு கரங்களுடன் இத் திருவுரு காட்சியளிக்கும். சூலமும் மயிற்பீலியும் ஏந்தியிருக்கும். வரதகரமாக ஒரு கரம் இருக்கும். இதனருகில் வலது புறம் ஒரு மான் நிற்கும். வலது திருக்கையின் நுனியை மானின் வாய் தொட்டுக் கொண்டிருக்கும். அரையில் பாம்பு அரைஞாண் கயிறாகக் காட்சியளிக்கும். விரிந்த சடையுடன் வேதகானம் பாடியவாறு அடியில் பாதுகை தரித்த நிலையில் காணப்படும். இவரது இடதுபாகத்தில் தலையில் பிச்சைப் பாத்திரம் தாங்கிய நிலையில் தடித்த பூதம் காணப்படும். திசைகளையே ஆடையாகக் கொண்டு திகம்பர நிலையில் இத்திருக்கோல இறைவர் காணப்படுவர்.



ஆண்டியும் அகமரபும்

நாவரசர் அகப்பொருண்மையில் இறைவனைப் பாடி இருப்பினும் அவரால் தேர்வு செய்யப்பட்டு அகமரபை விளக்கும் சிவமூர்த்தம் பிச்சைத் தேவரே ஆகும். இத்திருக்கோலம் தாங்கிய இறைவனை நாவரசர் தலைவி, செவிலி கூற்றுகளாக விளக்கியுள்ளார்.

அப்பரடிகள் திருவெண்ணெய் நல்லூர் இறைவனைப் பணிந்தார். பின்னர் திருவாமாத்தூர் திருத்தலம் வந்தார். ஆமாத்தூர் அமர்ந்த இறைவன் அவருக்கு அழகனாகத் தோன்றினார். அவ்வடிவழகில் மனம் பறிகொடுத்த அப்பரடிகள் அகப் பொருண்மையில் ஒரு பதிகம் பாடினார். ஆமாத்தூர் ஐயன் பிச்சைத் தேவராக மாறினார். அவர் இசையோடு பாடிப் பிச்சையேற்பார் போலத் திருவீதி எழுந்தருளினார். இளமங்கை நல்லாள் ஒருத்தி பிச்சையிடச் சென்றாள். அவள் பிச்சைத் தேவரின் பேரழகில் மையலுற்றாள். அப்பெருமான் நோக்கைப் புரிந்து அவரும் உடன்பட்டாள். நாட்கள் பல நகர்ந்தன. இக்காதல் வளர்ந்தது. அவள் பிச்சாண்டிமேல் பித்தேறினாள். அவருக்கே உரிமை பூண்டாள். ஆனால் அவர் தன்னை மணந்து கொள்ளாமல்

காலம் நீட்டித்தல் கண்டு வேதனை உற்றாள். அவரோடு தன்னை இணைத்து வைக்குமாறு பலரோடும் முறையிட்டாள். இவ்வாறு அப்பரடிகள் ஆமாத்தூர் அழகனை அடைய முயலும் தலைவியின் நிலையில் தன்னை இருத்திப் பாடினார். இப்பதிகத்தின் (இரண்டாம் பாடல் நீங்கலாக) ஒவ்வொரு பாடலின் இறுதியில், அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே எனப் பாடினார். இது ஆறாம் திருமுறையின் ஒன்பதாம் பதிகமாகும்.

இவ்வாறே திருப்பந்தணை நல்லூர், திருவெண்காடு, திருவொற்றியூர் தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை பிச்சைத் தேவராகக் கருதி அகமரபில் அப்பரடிகள் பாடியுள்ளார். இவையனைத்தும் ஆறாம் திருமுறைப் பதிகங்களாகும். பிச்சைத் தேவர் பிச்சை ஏற்கத் தாங்கிய கோலத்தை நாவரசர் பாடல்கள் வழி வ.சு. செங்கல்வராயர் தொகுத்துள்ளார். "தோள்மேல் ஐந்தலைய நாகம், கையில் ஆடரவு, ஓடு, தலைமாலை, புத்தகம், மான், மழு, வீணை, ஆமை பூண்டு இசைபாடிக் கொண்டு வருவார். மனத்திலே கள்ளம், தலையிலே முளைத் திங்கள், கங்கை, கொன்றை, மார்பிலே முன்னூல், அரையிலே கோவணம், பட்டுடை, புலித்தோல் உடை, மேலெலாம் திருநீறு, ஏரேறி வருவார், பூதம் சூழ வருவார், முனி கணங்களுடன் வருவார்."

இவ்வாறு பிச்சை ஏற்கும் திருமேனியைக் கண்டு காதல் கொண்ட தலைவி தன்நிலையைக் கூறுவதாகத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் விரவிக் கிடக்கும் கருத்துகளை வ.சு.செங்கல்வராயர் தொகுத்துள்ளார். "அடிகள் (இறைவன்) பலி என வந்தார், பலியும் கொள்வதில்லை, போவதும் இல்லை. அவர் நோக்கின நோக்கு என் கண்களில் அப்படியே நிற்கின்றது. பிச்சையிடு என்றார். வந்து பார்த்தால் காணோம். கள்ளவிழி விழிப்பார். தமது இருப்பிடம் ஒரிடமாகச் செல்கின்றாள் இல்லை. கனவில் அவரைப் பார்த்தேன். பார்த்தது முதல் அவர் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. நீர் கள்ளரோ புகுந்தீர் என்றேன். அதற்கு அவர் சிரித்து, இல்லை நாம் வெள்ளர்தாம் என்றார். என் கைவளையை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தார். இனி ஒருநாள் அவரைப் பார்த்தால் அவரை என் மார்பகத்தே அணைத்து அவரைப் போக ஒட்டேன். அவர் தவிர வேறு துணை இல்லை எனக்கு. அவர்மீதே எனக்கு மயக்கம்."

அப்பரடிகள் 81 ஆண்டுகள் வாழ்ந்தவர். அகவையாலும் அனுபவத்தாலும் மூத்தவர். அவர் அகமரபை நயத்தக்க நாகரிகத்துடன் பாடியவர். இதற்கு **முன்னம் அவன் நாமம் கேட்டாள்** எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பாடலே சான்றாகும். இங்ஙனம் பாடிய நாவரசர், பிச்சைத் தேவர் வடிவழகில் மயங்கிய தலைமகள் ஒருத்தி தன் தோழியிடம் கூறுவதாக,

> சலப்பாடே இனியொருநாள் காண்பே னாகில்
> தன்னாகத்து என்னாகம் ஒடுங்கும் வண்ணம்
> முலைப்பாடே படத்தழுவிப் போகல் ஒட்டேன்

என்று பாடியுள்ளார். இவ்வாறு பிச்சை தேவர் வடிவழகில் அப்பரடிகளும் மயங்கினார்.

நான்காம் திருமுறைவழி பிச்சைத் தேவர்

திருநாவரையர் பிச்சைத்தேவர் மூர்த்தத்தைத் தம் பதிகங்களில் விரிவாகப் பாடியுள்ளார். அவர், பிச்சை, பலி, ஐயம் என மூன்று சொற்களால் இத்திருக்கோலம் தாங்கிய இறைவரின் செயலைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் பிச்சையான், இரவன், துற்றவர் எனவும் இத்திருமேனியைக் குறித்துள்ளார். நான்காம் திருமுறை 113 பதிகங்களில் இம்மூர்த்திக்கு மட்டும் 57 குறிப்புகள் காணப்படுகின்றன. இக்குறிப்புகள்வழி பிச்சையானின் திருவுருவப் புனைவு இங்கு சுட்டப் படுகின்றது.

பிச்சைத்தேவர் திருமேனி பொன்நிறத்தது. இம்மேனியின்மேல் திருவெண்ணீறு அணிந்துள்ளார் இறைவன். இவரது திருச்சடை மின்னற்போறு பொலிந்தது. இவற்றுடன் இறைவன் பலி ஏற்று உழன்றார்.

> பொன்னொத்த மேனிமேல் வெண்ணிறு
> அணிந்து புரிசடைக்கண்
> மின்னொத்து இயங்கப் பலிதேர்ந்து உழலும் விடங்கர்[6]

இவரது திருக்கரங்களில் மானும், மழுவும், விளங்குகின்றன. வலது கரத்தில் தலைபோன்று காணப்படும் பிரமனின் கபாலம் காணப்படுகின்றது.

மாலை மயக்கிய மூர்த்தம்

> கைத்தலை மான்மறி ஏந்திய கையன் கனல்மழுவன்
> பொய்த்தலை ஏந்தி நற்பூதி அணிந்து பலிதிரிவான்[7]

பிச்சைத் தேவரின் திருச்சடைத் திருமேனி, மேனியின்கண் பூசப்பட்ட திருநீறு, ஏந்திய கபாலம் குறித்து நாவரசர் காட்டும் காட்சியாகும். இத்திருக்காட்சியைக் கண்டு திருமாலே மயங்கினார் என்பதையும் நாவரசர், **மாலினை மால்உற நின்றான்** என்று பாடியுள்ளார். மேலும் தாருகாவனத்து ரிஷிபத்தினிகளால் கவரப்பட்ட வடிவம் என்பதை, **மாதரை மையல் செய்யும் நாகவீச் சரவனாரே நக்கரை உருவர்போலும்** திருநாகேச்சரம் திருத்தல தேவார அடியால் அறியலாம். மேலும் ரிஷிமாதரை மையல் செய்த உருவம் நக்கரை உருவம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. கச்சியப்பர் தாருகாவனத்து முனிபத்தினியர் பிச்சைத்தேவர் வடிவழகில்

கொண்ட மயக்கத்தை,

ஐயர் செய்கை அறிந்தனம் இவ்விடை
பைய வந்து பலிதனை கேட்பது
மெய்யது அன்றுஇது மெல்லியலார் தமை
மையல் செய்திட வந்தென்பார் சிலர்

என்று பாடியுள்ளார். இவ்வாறு அவர்களது மயக்கம் 31 பாடல்களால் கந்தபுராணத்தில் விளக்கப் படுகின்றது. நாவரசர் மேற்சுட்டியவாறு ஒரே அடியில் அப்பாடல்களின் கருத்தைத் தொகுத்துள் ளார். கச்சியப்பரே, நாவரசர் கையாண்ட சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் கவனத்திற்குரியது. பிச்சைத்தேவர் பூதகணங்கள் தம்மைச் சூழுமாறு பிச்சையேற்கச் சென்றார். வேதகானம் பாடியவாறு சென்றார்.

பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சை யேற்றுண்டு
மறையது பாடிப் பிச்சைக்கு என்று அகம் திரிந்து வாழ்வார்

இத்திருக்கோல இறைவன் ஏற்பது வாயால் உண்ணும் பிச்சை அன்று. உணர்வினால் உண்ணப் படும் பிச்சையே ஆகும் என்பது, உணர்வினால் ஐயம் உண்ணி என்ற தொடரால் குறிக்கப்பட்டுள்ளது. இவர், ஈவோர் (பிச்சையிடுபவர்) பாவம் கெடுதற்பொருட்டுப் பலி ஏற்பதை,

வானகம் விளங்க மல்கும் வளங்கெழு
தானகம் அழியவந்து தாம்பலி தேர்வர்

எனத் தேவாரம் குறித்துள்ளது.

இவ்வாறு ஏற்கப்படும், பலியை இறைவன் உண்ணவில்லை. மாறாக, நஞ்சு அவரால் உண்ணப்பட்டது என்பதையும் தேவாரம் குறித்துள்ளது.

வெண்டலை கையிலேந்தி மிகவும் ஊர்பலி
கொண்டு என்றும்
உண்டதும் இல்லை சொல்லில் உண்டது நஞ்சு தன்னை

இங்ஙனம் வீடுதோறும் சென்று பிச்சையேற்பது இந்நிகழ்ச்சி ஆகும். வானவர் எதிரில் பலிக்காகப் பிறர்வீட்டு வாயிலில் நிற்றல் ஆண்மை ஆகாது. இது ஆண்மைக்கு மாறானதாகும் என்றும் அப்பரடிகள் பாடியுள்ளார்.

....................................விண்ணோர்கள் கண்முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப் பண்ணாளும் பலர் இகழ
அலியா நிற்கும் ஐயன் ஐயாறன் அடித்தலமே

இறைவன் பிச்சைக்குப் புறப்பட்டான். நங்கையர் அவருக்குப் பிச்சையிட உண்பது பெருமையோ? என்பது நாவரசர் எழுப்பும் வினாவாகும்.

வார்மலி மென்முலையார் பலிவந்து இடச் சென்று இரந்து
ஊர்மலி பிச்சைகொடு உண்பது மாதிமையோ உரையே

பெண்ணிட்டம் பண்டையது அன்று

பிச்சைத்தேவர் திருக்கோலத்தில் இறைவன் புறப்பட்டான். இவனைக் கண்ட திருநல்லூர் இளம்பெண் ஒருத்தி பிச்சையிடச் சென்றாள். அவள் பிச்சாண்டியின் பேரழகில் மயங்கித் தன் கைவளையல்கள் கழன்று விழுமாறு மெலிந்தாள். நினைவிலும் அவரையே போற்றினாள். கனவையும் இழந்தாள். அவளது நிலையில் அப்பரடிகள் பாடியது.

பெண்ணிட்டம்பண்டையதன்றிவைமெய்பலிக்கென்றுழல்வர்
நண்ணிட்டு வந்து மனைபுகுந் தாருநல் லூரகத்தே
பண்ணிட்ட பாடல ராடல ராய்ப்பற்றி நோக்கிநின்று
கண்ணிட்டுப் போயிற்றுக் காரண முண்டு கறைக்கண்டரே

இறைவன் பிச்சாண்டி வேடம் ஏற்றது, பிச்சை பெறுதற்கன்று. முனிவர்களது செருக்கையடக்கி அவர்களுக்கு இறையுண்மையை நிலைநாட்டு வதற்கே ஆகும் என்பதை நாவரசர் இப்பாடலில் தெளிவுறுத்தி உள்ளார். இரப்பவர்க்குப் பெண் ஆசை கூடாது என்பது உலகோர் வழக்கம். ஆனால் பெண்கள் விரும்புமாறு கோலம்தாங்கி சிவ பெருமான் பிச்சையேற்றார். இக்கோலம் வாயிலாகப் பெண்ணாசை பண்டையது அன்று. இவை பெய்யும் பலிக்காக இன்று புதிதாகக் கொண்டதே ஆகும் என்று சொல்லிக் கொண்டு பலிக்குத் திருநல்லூர் இறைவன் உழன்றார் என நாவரசர் இம்மூர்த்தியின் உண்மை நோக்கத்தை இப்பாடல்கள்வழி தெளிவு படுத்தியுள்ளார்.

விலையில் கபாலம்

பிச்சைத் தேவர் கையிலேந்திய கபாலத்தின் (பிச்சைப்பாத்திரம்) நிறத்தையும் நாவரசர் பாடியுள்ளார். வெண்சங்கைத் துண்டித்து செய்யப் பட்டது போன்று வெண்நிறமுடையது.

வெள்ளிக் குழைத்துணி போலும் கபாலத்தன் என நாவரசர் சுட்டியுள்ளார். இத்திருக்கோல இறைவனை, கண்டர் (வீரர்) என நாவரசர் போற்றியுள்ளார். பிச்சைத் தேவர் காதின்கண் அணிந்துள்ள சங்கினால் ஆன குழை, மதிப்பு வாய்ந்தது. ஆனால் இவரால் ஏந்தப்பட்டுள்ள பிரம்ம கபாலமாகிய பிச்சைப் பாத்திரம் விலை மதிப்பற்றது என்பது நாவரசரின் மதிப்பீடாகும். வீராதி வீரனான இறைவனது வீரத்தின் வெளிப்பாடே கையில் ஏந்தியுள்ள பிரம்ம கபாலமாகும். வீரம் விலை மதிப்பு அற்றது. அவ்வாறே இடுவோரால் நிரப்பப்படும் பிச்சைப் பாத்திரமாயினும் அது வீரத்தின் அடையாளம். ஆதலால் நாவரசர், **விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்** என மதிப்பிட்டுள்ளார்.

தலையே நீ வணங்குவாயாக

திருநாவுக்கரசர் அகப்பொருள் மரபைப் பாட பிச்சைத் தேவரைத் தேர்ந்தது போன்றே நம் தலைக் கனத்தைப் (ஆணவத்தை) போக்குவதற்கு இம்மூர்த்தியை பயன்படுத்தி யுள்ளார். அப்பர் பாடிய திருவங்கமாலையில் முதற்பாடலே

தலையே நீ வணங்காய் – தலை
மாலைத் தலைக்கு அணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்[22]

என்று தொடங்குகின்றது. இறைவன் பிச்சை ஏற்பான். எனினும் அவன் தலைவனே. வறியோர் ஏற்கும் பிச்சை அவர்தவம் வறுமையைச் சார்ந்ததாகும். அவர்கள் தாம் உயிர்வாழும் பொருட்டுப் பிச்சையேற்பர். இறைவன் இத்திருக்கோலத்தில் பிச்சையேற்பது உயிர்களின் நன்மை பொருட்டே ஆகும். வறியோர் ஏந்தும் பிச்சைப் பாத்திரம் அவர்களது வறுமையை வெளிப்படுத்தும். ஆனால் சிவபெருமான் ஏந்திய பிச்சைப் பாத்திரம் பிரம்ம கபாலமாகும். அது அவரது தலைமைப் பண்பின் வெளிப்பாடாகும். அவர் திருமுடியின்கண் அணிந்திருப்பது தலைகளால் கோக்கப்பட்ட மாலையாகும். .பிரம்மர்களும், நாராயணர்களும், இந்திரர்களும் ஆகியோர்களது தலைகளால் ஆன மாலையே பிறர் கண்களில் எளிதில் புலனாகும் வண்ணம் தலைக்கு அணிந்துள்ளார்.

ஆதலால் இத்தகைய தலைவனை வணங்காமல் செருக்குடன் தலைநிமிர்ந்து திரியாமல் தலையாலே வணங்கி மகிழ்வாயாக என்பது அப்பரடிகள் உலகிற்கு உணர்த்தும் கருத்தாகும். அவர் இக்கருத்தைப் புலப்படுத்தப் பயன்படுத்திக் கொண்ட மூர்த்தம் பிச்சைத் தேவரே ஆவார்.

ஐந்தாம் திருமுறையில் பிச்சைத்தேவர்

ஐந்தாம் திருமுறைப் பாடல்களில் அப்பரடிகள் பிச்சைத் திருக்கோலத்தைச் சுட்டி யுள்ளார். இத்திருமுறை 100 பதிகங்களால் ஆனது. இதன்கண் விரவிக் கிடக்கும் குறிப்புகள் திரட்டப்பட்டு அவற்றின்வழி இத்திருவுருவம் புனையப்பட்டுள்ளமையை அடுத்துக் காணலாம்.

சிவபரம்பொருள் தமது சடையில் கொக்கின் இறகையும், கொன்றை மாலையையும், பிரம்ம விஷ்ணுக்களின் தலைகளால் கோத்த மாலையும் சூடியுள்ளார். மார்பில் உருத்திராக்க மாலையும், ஆமை ஓட்டையும் அணிந்துள்ளார். கையில் அனலையும் ஏந்தியுள்ளார்.

கொக்கின் தூவலும் கூவிளம் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்கன்
அக்கும் ஆமையும் பூண்டு அனலேந்தி இல்
புக்குப் பல்பலிதேரும் புராணன்

இவர் பூதகணங்கள் சூழ ஆடியவாறு பலி கொண்டார் என்பது பின்வரும் அடிவழி அறியப்படுகின்றது.

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான், இவர் கயிலையை ஆளும் கபாலி என்றும் சுட்டப்பட்டுள் ளார். இவர் காலையும் நண்பகலிலும் பிச்சை ஏற்றார், இவரது வாழ்க்கை துன்பமானது என நாவரசர் குறித்துள்ளார். மேலும் இரந்துண்ணும் இவரை இரவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவர் தன்மேனியின்கண் பாம்பைக் கட்டி யுள்ளார். இவருக்குப் பிச்சையிட வரும் பாவையர் இவர் அணிந்துள்ள ஐந்தலை நாகத்தைக் கண்டு அஞ்சுவதாகவும் திருமுறை சுட்டுகின்றது.

இவர் வீதிக்குப் பிச்சை ஏற்றல் வேண்டிச் சென்றார். தையல் நல்லாள் ஒருத்தி இவருக்கு ஆட் பட்டாள். இவர் அவளது வளையலைக் கொண்டார். இதனால் அப்பெண்ணின் செவிலித் தாய் வருந்திப் பாடினாள். அவள் கூறுவதாக திருத்தோணிபுரத்து இறைவனை நாவரசர் பிச்சைத் தேவராகக் கருதிப் பாடினார். இவ்வாறு செய்வது தோணிபுர இறைவனின் பெருமைக்கு தக்கது அன்று.

நக்கம் வந்து பலிஇடு என்றாக்கு இட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணிபுரலவர்க்குத்
தக்கது அன்று தமது பெருமைக்கே

இங்ஙனம் 5-ஆம் திருமுறைக்கண் 55 குறிப்புக்கள் காணப் படுகின்றன.

ஆறாம் திருமுறையில் பிச்சைத்தேவர் திருவுருவம்

நாவரசர் ஆறாம் திருமுறையில் இம்மூர்த்தம் குறித்துப் பாடியுள்ளார். இம்மூர்த்தியின் திருவுருவம், பிச்சை வாழ்க்கை முதலியவற்றை நாவரசர் அழகுற விளக்கியுள்ளார். இது குறித்த விளக்கம் தொடர்ந்து விளக்கப்படுகின்றது.

இம்மூர்த்தி கூர்மையான சூலமும், கபாலமும் தமது திருக்கரங்களில் தாங்கியுள்ளார். இவர் காலில் வீரக்கழல் அணிந்துள்ளார். கையில் கங்கணம் கட்டியுள்ளார். இவை யிரண்டும் ஒலியெழுமாறு வீடுதோறும் பிச்சை ஏற்றார். இவர் கரங்களில் பாம்பும் கட்டப்பட்டிருந்தது. இவர் முக்கண்ண ராவார். இவர் புலித்தோலை மேலாடையாக அணிந்தவர், தம் மேனியில் அணிந்துள்ள பாம்பு அணிகலன் தாழுமாறும், சடைக் கண் அணிந்துள்ள மாலைகள் தாழுமாறும் ஐயம் ஏற்றார். இவரது

அரையில் பாம்பு கட்டப்பட்டிருந்தது. இவர் முடை நாற்றமுடைய பிரம்ம கபாலத்தில் பிச்சை ஏற்றவர். இவர் மேற்கொண்ட வாழ்க்கை ஒருவராலும் விரும்பப்படாத வாழ்க்கையாகும். மேலும் உலகோர் இகழுமாறு பச்சையேற்றார். நாணமில்லாமல் பிச்சையை நயந்தவர். இவர் ஒவ்வாத செயல்கள் செய்த முனிவர்களின் மயக்கம் தீர்ந்தவர். அவர்களுக்கு அருளும் செய்தவர். முனிவரது மனைவியர் இகழுமாறு பலிக்குத் திரிந்தவர். இவர் பூவுலகிற்கு மேலுள்ள புவலோகம் திரிந்து பிச்சையேற்றார். மேலும், எருது ஏறி அண்டத்திற்கு அப்பாலும் பலிக்குத் திரிந்த அழகர், இவர் பிச்சையிட வந்த இளம் பெண்களிட்ட பிச்சையோடு அவர்கள் அணிந்திருந்த வளையல்களையும் கொண்டார். இவர் இல்லங்கள்தோறும் சென்று சமைத்தலையும், சமைத்தற்குரியனவற்றையும் பிச்சையாக ஏற்றார்.

நாவரசர் இத்திருக்கோலத்தைப் பன்முக நோக்கில் பாடியுள்ளார். பிச்சைத்தேவர், வறியராய்ப் பிச்சை வாழ்க்கை மேற் கொண்டார். விற்று வயிறு நிரப்புதற்கு ஒரு பொருளும் இல்லாத வராய் நல்கூர்ந்தான் எனச் சுட்டப்படுகின்றார். ஏற்கும் பிச்சை தவிர வேறுவகையில் உணவு கிடைக்காத இவ்வாழ்க்கையை மேற்கொண்ட இறைவனை, மாசதுரன் (பெரும் திறமை யுடையவன்) என நாவரசர் எள்ளி நகைப்பது போன்று புகழ்கின்றார்.

விற்றுஊண் ஒன்று இல்லாத நல்கூர்ந்தான்காண்
வியன் கச்சிக்கம்பன்காண் பிச்சை அல்லால்
மற்றுஊண் ஒன்றில்லாத மாசதுரன் காண்

உலகியலார் பார்வையில் இகழ்ச்சிக்குரியதாகக் கருதப்படும் இம்மூர்த்தத்தை நாவரசர் தம் சிந்தனையால் உயர்த்தி உள்ளார். தமிழ் அவரது முயற்சிக்குத் துணை செய்தது. இதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.

இறைவன் தேர், குதிரை, யானை முதலியன வற்றை உடையவர். அவரது ஊர்தி எருது ஆகும். இவ்வாறு செல்வந்தராக இருந்தும் அவர் பிச்சைக் கோலம் பூண்டுள்ளார். ஆதலால் அவர் பொருள் உடையவர் அல்லர் என்பது நாவுக்கரசர் கருத்தாகும். ஒருவன் செல்வந்தனாக் இருப்பானா யின் அவன் பிச்சையேற்கும் நிலை ஏற்படாது. ஆனால் இறைவன் பெரும் செல்வந்தனாக இருந்தும் இத்திருக்கோலம் தாங்கியதால் வளம் இருந்தும் வறியவராகவே காணப்படுகின்றார். இவ்விறைவனைத் தேவர்கள் தொழுது நிற்கின்றனர். தேவர்களால் தொழப்படுவது பெரும் சிறப்பு ஆகும். இப்பெருமையுடைய இறைவன் இரக்கின்றார். எனவே பொருள் இல்லாதவர் வரிசையில் இடம் பெறுதற்கு வழியுமில்லை. ஆனால் இவர், இத்திருக்கோலம் தாங்கியுள்ளார். இறைவன் பொருள் வளத்தால் செல்வந்தராகவும், அதேநேரத்தில் பலியேற் பவராகவும் திகழ்கின்ற இருவேறு நிலைகளை நாவரசர் நயம்பட ஒப்பிட்டுள்ளார்.

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளேறு
இருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்கள் தொழுதேத்தும் இறைவனார்தம்
பொருளுடைய ரல்லர் இலருமல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ்சூழ
அருளுடைய அங்கோதை மாலைமார்பர்
அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே

காபாலவேடம்

இத்திருக்கோலம் தரித்தநிலையில் சிவன் திருக்கையில் காபாலம் ஏந்தியிருப்பதால் காபாலி என்று நாவரசரால் சுட்டப்பட்டார். இவ்வேடம் காபாலவேடம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. திருக்கழிப்பாலை அமர்ந்த இறைவனை காபாலம் ஏந்திய காபாலியாக நாவரசர் கழிப்பாலை மேய காபாலப்பனார் என்றே பாடியுள்ளார். திருமயிலை யில் எழுந்தருளியுள்ள இறைவன் கபாலி எனவும் சுட்டப்படுவது இங்கு நினைவிற்குரியது. இவ்விறை வன் குடி கொண்ட காரணத்தால் திருமயிலைத் திருக்கோயில் காபாலீச்சுரம் என்று திருஞான சம்பந்தரால் குறிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் வீதியில் பொலிந்த எண்மரை நாவரசர் நாலாந் திருமுறையில் பாடியுள்ளார். அவர்களுள் காபாலிகள் எனப்படுவோரும் ஒருவராவார். இவர்கள் பச்சைக்கொடி ஒன்று கைக் கொண்டு நாள்தோறும் மனிதத்தலை ஓட்டில் பிச்சையேற்று உண்பவர். முத்தராய்ச் சிவன் ஆவேசித்ததால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமம் ஆவர் என்னும் கொள்கையர். இவர் அகப்புறச் சமயத்தவர் என முத்து.சு.மாணிக்கவாசகரால் விளக்கப் பட்டுள்ளார்.

இறைவன் தரித்த இத்திருக்கோலத்தின் பெயரால் காபாலிகள் என ஒரு திருக்கூட்டத்தார் அப்பரடிகள் காலத்தில் வாழ்ந்தமையை அறிய முடிகின்றது.

ஆறாம் திருமுறையில் பிச்சைத்தேவர் பற்றி 83 குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. நாவுக்கரசர் தேவாரத்தில் 195 இடங்களில் பிச்சைத்தேவர் பாடப்பட்டுள்ளார்.

வெந்து அறும் வினையும் நோயும்

பேராசிரியர் முனைவர் **சிவ. மாதவன்**

தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி

இந்தியச் சிந்தனை மரபில் வினைக்கொள்கை தனியிடம் பெற்றுள்ளது. பெரும்பாலான தத்துவங்கள் வினை உண்டு; அது உயிரைத் தாக்கும். உயிருக்குப் பிறவிச் சுழற்சியை அளிக்கும் என்பதில் ஒன்றுபடுகின்றன. கடவுளை மறுத்துரைக்கும் தத்துவங்களும் வினைக்கொள்கையை ஏற்கின்றன என்பது வியப்பாக இருக்கலாம். ஆனால் அது உண்மையே. தமிழ்ச் சமுதாயத்தில் வினை அல்லது விதி அல்லது ஊழ் என்பது நெடுங்காலந்தொட்டு வலியுறுத்தப்பட்டு வந்த ஒரு கொள்கையாகும். தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் காலப்பழமை வாய்ந்தவை எனக் கருதப்பெறும் சங்க இலக்கியத்துள் தமிழர்கள் வினை, மறுபிறப்பு போன்றவற்றை நம்பினர் என்பதற்கான சான்றுகள் நிரம்ப உள்ளன.

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை....
இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்....
நீர்வழிப் படூஉம் புணைபோல ஆருயிர்
முறைவழிப்படூஉம்....

என வருபவை நம் முன்னோர் கொண்டிருந்த நம்பிக்கைகள் ஆகும். எல்லாவற்றிற்கும் வினையே காரணம் என்று வினைமீது பழியைப் போட்டுவிட்டு முயலாமல் காலத்தை வீணே கழித்தனர் என்று இப்பாடலடிகளைக் கொண்டு முடிவு கட்டிவிடக் கூடாது. முயற்சியையும் கடும் உழைப்பையும் வலியுறுத்திய சமுதாயமாகவே சங்ககாலச் சமுதாயம் விளங்கியது. எனினும் வாழ்வின் போக்கைக் கூர்ந்து நோக்கியவர்கள் தம் அனுபவ வழியும் பிறரது அனுபவத்தை அறிந்து கொண்ட வழியும் வாழ்க்கையில் வினை அல்லது விதியின் பங்கு உள்ளது என்பதை உணர்ந்து தெளிந்தனர். வினையுண்டு. அதற்கான முயற்சியைக் கைவிடக்கூடாது என்பதில் அக்காலச் சமுதாயம் உறுதி கொண்டிருந்தது.



சமணமும் வினையும்

வைதிக நெறிக்கு மறுதலையாக– மாற்றாக மிக உயரிய அறமாக அறநெறியைப் போதித்த சமயம் சமணமாகும். அகிம்சை என்னும் கொள்கையை உலகிற்கு வழங்கியது சமணமே என்னும் சிறப்பு இன்றளவும் வரலாற்றில் நிலைபெற்றிருக்கிறது. ஆனால் கடவுள் மறுப்புக் கொள்கையை நிலைநிறுத்த வேண்டி, உயிர்களைப் பிணைக்கும் வினைக்கொள்கையை மிக ஆழமாக வலியுறுத்துவதன்மூலம் மக்களிடமிருந்து விலகி நிற்கும் சமயமாகச் சமணம் கருதப்பட்டது. வினையால் பிணிக்கப்பட்ட உயிர் முத்தி அடைதல் மிக அரிது. பல பிறவிகள் எடுத்து என்றோ ஒருநாள் முக்தி அடையும் வாய்ப்பு உயிருக்கு உண்டு என வினையின் வலிமையை மொழிந்ததால் சமணம் மக்களின் அச்சத்தை மிகுவிப்பதாயிற்று. எப்பொழுதும் தளைப்பட்டு அல்லலுறும் நிலைதான் உயிர்களின் நிரந்தர இயல்பாகிவிடுமோ என்னும் ஐயமும் அச்சமும் சமுதாயத்தில் தலையெடுத்தன.

வைதிக சமய மறுமலர்ச்சி

இத்தகைய சூழலில் வைதிக சமயங்களாகிய சைவம், வைணவம் இரண்டும் மறுமலர்ச்சி பெற்றன. வினையால் நலிவுற்று நடுங்கத் தேவையில்லை. வினையை மாற்ற முடியாவிடினும் அதன் வேகத்தை, ஆற்றலைக் குறைக்கலாம். வினைவயப்பட்ட உயிர்கள் அதிலிருந்து மெல்ல மெல்ல விடுபடலாம். அது எடுத்துள்ள இப்பிறவியிலே சாத்தியமாகக் கூடியது என்றிவ்வாறு நம்பிக்கையூட்ட வல்ல நன்மொழிகளை வைதிக மறுமலர்ச்சி இயக்கம் முன்வைத்தது. இக்கருத்திற்கு மக்களின் ஆதரவு பெருகிற்று. மக்கள் இகருத்தை ஆதரித்து இயக்கம் கண்டனர். அவ்வியக்கமே பக்தி இயக்கம். அது தமிழ்நாட்டில் கால்கொண்டு, பாரதநாடு முழுவதும் பரவிற்று.


தமிழ்நாட்டின் தூயபக்தி இயக்க முன்னோடிகளில் ஒருவர் திருநாவுக்கரசர். தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியர்.


தாழ்வடத்தைத் தரித்தவர். நாயகன் சேவடியை நினைந்து நைந்து உருகும் சிந்தையர். அன்புநீர் பொழியும் கண்களை உடையவர். பதிகச் செஞ் சொல் பொருந்திய வாயினை உடையவர் என்று நாவுக்கரசரைச் சேக்கிழார் சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்படிப்பட்ட இயல்பினராகிய நாவுக்கரசர் வினையின் கொடுமையை அறிந்தவர். உணர்ந்தவர். வினைத்தொல்லைக்கு உள்ளானவர். பின்னர் வினைக்கட்டை அறுத்தெறிந்தவர். இவற்றிற்கெல்லாம் அவருடைய பாடல்களில் சான்றுகள் காட்ட முடியும்.

தொண்டனேன் பிறந்து வாளா
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நாளும்
பெரியதோர் அவாவிற் பட்டேன்
அண்டனே அமரர் கோவே
அறிவனே அஞ்ச லென்னாய்
தெண்டிரைக் கங்கை சூடும்
திகழ்தரு சடையி னானே.

– 4ஆம் திருமுறை – 751

என இறைவனிடம் முறையிடுகின்றபோது தாம் வினைக்குழியில் ஆழ்ந்து போயிருப்பதாகக் கூறியுள்ளார். வினையால் பிறவி வருகின்றது. பிறவி எடுத்துச் செய்யும் செயல்களால் வினை வருகின்றது. இவ்வாறு பிறவியும் வினையும் மாறிமாறி வருகின்ற நிலையிலிருந்து உயிர்களைக் காப்பாற்றிட இறைவனால் மட்டுமே முடியும். அவ்விறைவனிடம் உண்மையான பக்தியும் சக உயிர்களிடத்தில் அன்பும் செலுத்தி வாழ்ந்தால் வினையின் வேகம் குறையும். வினையால் வரும் துன்பம் உடல் ஊழாய்க் கழிந்து ஒழியும். அதாவது,





வினைத்துன்பம் உயிரைத் தாக்காது. உடம்பினை வருத்திவிட்டு மறையும் என்னும் சாத்திரக்கருத்தை உணர்ந்து பாடியுள்ள சமயக் குரவர்களில் நாவுக்கரசர் குறிப்பிடத்தக்க அருளாளர் ஆவார்.

உலகினர்க்காக உரைத்தல்


அப்பர் போன்ற அருளாளர்கள் உலக மக்களிடையே காணப்படுகின்ற சிறுமைகளைத் தம்மிடத்துள்ளனவாகக் கருதியும், அச்சிறுமைகளுடன் தான் வாழ்ந்து வருவதாகக் கூறியும், அவற்றிலிருந்து விடுபட முடியாமல் தாம் தவித்து வருவதாகச் சொல்லியும் தம்மைத் தாழ்த்திக் கொள்வர். பக்தி இலக்கியத்துள் பரவலாகக் காணப்படும் பொதுப்பண்பாக இதனைக் கருதலாம். உலகிடை வாழும் உயிர்களின் குரலாக – அவ்வுயிர்களுக்குக் கருணையை வேண்டி முறையிடும் குரலாக அது ஒலிக்கின்றது என்பது உண்மை. அருளாளர்களின் இயல்பு இதில் புலப்படுவதாகக் கூறுவது உண்மையன்று. ஏனெனில், அவர்கள் வினையை உணர்ந்தவர்கள். வினைக்கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள். இறைவனின் அருளை நிறையப் பெற்றவர்கள். இறைவன் அருளால் வினையை வென்றவர்கள். உலக நன்மையைக்கருதி அவர்கள் ஒலிக்கும் குரலை ஓர்ந்து உணர்தல் நமது கடமையாகும்.

இதற்கு இன்னுமோர் சான்றினைக் கூற முடியும். நாவுக்கரசர் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர். திருவதிகை வீரட்டானத்து இறைவர் சூலை நோய் கொடுத்து நாவுக்கரசரை சைவத்தின்பால்,

மீண்டும் புகச் செய்தார். கடவுளை ஏற்க மறுக்கும் சமணத்தையும், அன்பால் அனைத்து உயிர்களையும் ஈடேற்றம் செய்யும் கருணை படைத்த முழுமுதற் பரம்பொருளாம் சிவத்தை வணங்கும் சைவத்தையும் அப்பர் ஒப்பிட்டுப் பார்த்தார். சைவநெறியின் சிறப்பும் சிவபெருமானின் வான்கருணையும் அவரை நெகிழ வைத்தன. அவரது உடலும் உள்ளமும் சிந்தையும் மொழியும் எல்லாம் சிவத்தை நோக்கின. அவ்வொன்றுதலில் இறைவனின் ஆற்றலை அவர் உணர்ந்தார். திருமாலும், நான்முகனும் தேடிக் காணமுடியாத அவ்விறைவனின் உருவச் சிறப்பை, உயர் பேராற்றலைத் தம் உள்ளத்தால் உணர்ந்தார்– அதைவிட இன்னும் ஒருபடி மேலே சென்று தம் உள்ளத்தின்கண் உணர்ந்தார்.

தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத்
தேவனை – என்னுளே
தேடிக் கண்டு
கொண்டேன்–
4–9ஆம் பதிகம்

என அப்பர் பெருமானின் அனுபவம் வெளிப்படுகின்றது.



இறைவனை உள்ளத்துள்ளே கண்டு தெளிந்தவர்க்கு வினைத் துன்பம் இருக்குமா? அஃது அவரைத் தாக்கித் துன்புறுத்துமா? என்பது பலரும் எழுப்பும் ஐயம். அப்பர் பாடியிருப்பதைப் பார்த்தால் வினைத் துன்பத்திற்கு அவர் ஆளாகியுள்ளார் எனக் கருதத் தோன்றும். முன் செய்த வினையின் பலனும், இப்பொழுது செய்கின்ற செயலால் வருகின்ற வினையும் போக்கிக் கொள்ள முடியாமல் அடர்ந்துள்ளன. அவற்றைப் போக்கிக் கொள்ளும் முயற்சியையும் நான் மேற்கொள்ளவில்லை. வயது தான் ஏறிக்கொண்டு போகிறது. வினைநீக்க முயற்சி குறைவுபடுகிறது. மூப்படைதலை உடல் காட்டி விடுகிறது. முடிவெளுத்தல், உடல் இளைத்தல், பேச முடியாதபடி இருமல் நோய் பிடித்துக் கொள்ளுதல், இப்படி வயதான நிலையிலும் உனது திருவடியைப் பரவி வணங்காது இருக்கின்றேன். எதற்காகத்தான் இப்பிறவி எனக்கு வாய்த்தது? நான் ஏன் பிறந்தேன்? என வினவுவதாக அப்பரின் பாடல் ஒன்று உள்ளது.

விளைக்கின்ற வினையை நோக்கி
வெண்மயிர் விரவி மேலும்
முளைக்கின்ற வினையைப் போக
முயல்கிலேன் இயல வெள்ளம்
திளைக்கின்ற முடியி னான்தன்
திருவடி பரவ மாட்டாது
இளைக்கின்றேன் இருமி யூன்றி
என்செய்வான் தோன்றி னேனே.(4– 761)

தேடித் தேடொணாத் தேவனை, உள்ளத்தே கண்டு கொண்ட அப்பர் பெருமான் ஏன் பிறந்தேன்? எனக் கழிவிரக்கத்தோடும் வினவுகிறார்.

இங்கே விளைகின்ற வினை, (முன்வினை, சஞ்சிதம்) அதன் காரணமாக அமைந்த இப்பிறவி, (நுகர்வினை, பிராப்தம்) இப்பிறவியில் செய்கின்ற செயலால் முளைக்கின்ற வினை(வருவினை–ஆகாமியம்) என்னும் மூவகை வினையின் பலனைப் போக்கிக்கொள்ள முடியவில்லை என்று அப்பர் குறிப்பிடுவது, தன்னைப் பற்றியன்று. தான் சார்ந்திருக்கும் இவ்வுலக உயிர்களின் நிலைபற்றியே இவ்வாறு குறிப்பிடுகின்றார். மனிதர்கள் வினைநீக்கம் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளாமல் இருக்கின்றார்களே என்னும் இரக்கவுணர்வு இப் பாடலில் பொதிந்துள்ளது. இறைவனின் திருவடிகளை மனம், மொழி, மெய்களால் வணங்குதலே வினை நீங்கிட வழிவகுக்கும் என்பது அப்பர் பெருமானின் அருளுரை.

இறைவழிபாடு- வினையைப் போக்கும்

இவ்விடத்தில்தான் சமணமும் வைணவமும்

வேறுபடுகின்றன. சமணம் வினையின் வேகத்தை மட்டுப்படுத்த முடியாது. அதனை அனுபவித்துத் தீர ஒருபிறவி போதாது என்று கூறுகிறது. சைவமோ, வினையின் ஆற்றலைக் குறைக்க முடியும். ஒரு பிறவியிலேயே வினை கழிந்து போகும் வாய்ப்பு உள்ளது என்று உரைக்கிறது. உலகவாழ்வை ஒதுக்கினால் வினையிலிருந்து விடுதலை பெறலாம் என்பது சமணத்தின் கருத்து. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்பது சைவத்தின் கருத்து. வாழ்வை அச்சமூட்டி அதனை வெறுக்கத் தூண்டியது சமணம். 'வாய்த்தது நம்தமக்கு ஈதோர் பிறவி, மதித்திடுமின்' என்று வாழ்வைப் போற்றியது சைவம். வினைத்துன்பத்தைக் கண்டு அஞ்சாமல், துவளாமல் வாழ்வை எதிர்கொள்வதே சிறந்தது. அதுவே உயர்ந்த வாழ்வு. வினையைப் போக்கிக் கொள்ளும் வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் சிறந்தது இறைவழிபாடு என்பதைச் சைவம் தெளிவுறுத்தியது. இதனை வழிமொழிவதாக அப்பர் பெருமான்,

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூண்டோனுக்கே
(5-4)

என்று பாடியுள்ளார். மேலும்,

அல்லல் இல்லை அருவினைதான் இல்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வனார் திருவேட்களம் கைதொழ
வல்லர்ஆகில் வழியது காண்மினே
(5-4ஆம் பதிகம்)

என்று தில்லைப்பதியை அடுத்துள்ள வேட்களத் திலும் இதே கருத்தை வலியுறுத்திப் பாடியுள்ளார்.

இப்பாடல்களைப் படித்தால் தில்லையும், திரு வேட்களமும் வினையைப் போக்கும் திருத்தலங்கள் என்னும் உணர்வு பிறக்கும். அவ்வெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள, முயலுவோர் சிலர். ஆனால் பலருக்கு அத்தலங்களுக்குச் செல்லும் சூழல் வாய்ப்பதில்லை. அப்படியே வாய்த்தாலும் வழிபாடு நிகழ முடியாமல் போகிறது. அவர்கள் எவ்வாறு வினையைப் போக்கிக் கொள்வது? என ஐயமும் தடுமாற்றமும் அடையலாம். அவர்களுக் கும் அப்பர்பெருமான் வழிகாட்டுகிறார். ஈசன் எங்கும் நிறைந்துள்ளான். அதனை அறியாமல் கங்கை நீரில் மூழ்கி வந்தாலும், காவிரி ஆற்றில் நீராடி வந்தாலும் அவனை அறிந்ததாகவே உணர்ந்ததாகவோ ஆகிவிடாது என்று சடங்கான வழிபாட்டைச் சாடிய அப்பர், இருந்த இடத்திலேயே வழிபாடு செய்யலாம். அவ்வழிபாட்டின் மூலம் வினையும் நிகழக் காரணமான பிறவியும் நீங்கும் என உறுதிபட உரைக்கின்றார்.

நம் உள்ளத்து எழுகின்ற பக்திக்கனலை மேலும் மேலும் ஊதிப் பெருந்தீயாக உருமாற்றம் செய்வதால் – பக்தீ எனச் செய்தால் அத்தீயின்முன் நாம் செய்த வினையும், பிறவி நோயும் நைந்து சாம்பாராகும். ஓங்கி எரிகின்ற தீயில் காய்ந்த விறகாயினும், ஈரவிறகாயினும் எதுவாயினும் சரி, தீப்பிடித்து எரிந்து அழிதல் போலவே, பக்தி என்னும் தழலில் விளையும் பிறவியுமாகிய விறகுகள் அழிந்து போகும் என்கிறார் அப்பர். அந்தப் பக்தி கனலை நம் உள்ளத்தில் எழுப்புவதற்கு இரண்டு சாதனங்கள் வேண்டும். ஒன்று இறைவனின் திருவைந்தெழுத்து மந்திரம். மற்றொன்று திருநீறு. ஐந்தெழுத்தை நெஞ்சமுத்திக் கூறியும், நெற்றியிலும் உடம்பிலும் திருநீற்றை நிறையப் பூசியும் வந்தால் வினையின் பிறவியும் நம்மை விட்டு விலகும்.

சந்திரன் சடையில் வைத்த
சங்கரன் சாம வேதி
அந்தரத்து அமரர் பெம்மான்
ஆள்நல் வெள்ளூர் தியான்தன்
மந்திரம் நமச்சி வாய
ஆகநீறு அணியப் பெற்றால்
வெந்துஅறும் வினையும் நோயும்
வெவ்வழல் விறகு இட்டன்றே
(4-749)

சிவபெருமான் சந்திரனைச் சடையில் தரித்தவர். சாமவேதத்தை விரும்புபவர். தேவர்களின் தலைவர். வெள்ளை எருதை வாகனமாகக் கொண்டவர். அவரது அருள்பெற உதவும் மந்திரம் நமச்சிவாய. அவரது அருள்பெற உதவும் சின்னம் திருநீறு. இவ்விரண்டையும் பக்தி உணர்வோடு ஓதியும் தரித்தும் வந்தால் தீயிடை அழிகின்ற விறகுபோல, நம்மைப் பிடித்துள்ள வினையும், பிறவிநோயும் அழிந்து போகும் என்பது இப்பாடலின் கருத்து. இருந்த இடத்திலிருந்து கொண்டே இறைவனைப் பக்திப்பெருக்கோடு நினைப்பதுவும், திருநீறு அணிவதுவுமே நாம் செய்ய வேண்டியவை. அப்படிச் செய்து வந்தால் வெந்து அறும் வினையும் நோயும்' அப்பரின் அருளுரையைத் தப்பாமே போற்றுவோம்.

திருநாவுக்கரசர் பார்வையில் நாயன்மார்கள்

திரு. பொ. கருப்புசாமி
தமிழ்விரிரையாளர், ஈரோடு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு

சிவடினயார்களாகிய நாயன்மார்கள் இன்றைக்குச் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்தோன்றி கி.பி. எட்டாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து தோன்றி முக்தியடைந்துள்ளனர். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய சுந்தரர் நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புகளை தாம் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையில் ஒருங்கே இணைத்துப் பாடியுள்ளார். இவருக்குப் பின் 10 அல்லது 11 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந் தாதியைச் சுந்தரரை அடியொற்றி ஒவ்வொரு நாயன்மார்களின் வரலாற்றையும் பாடியுள்ளார். இவ்விருவரது நுநூல்களையும் அடிப்படையாகக் கொண்டு 12–ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் அவற்றை விரிவாக்கிப் புராணம் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் இவ்விருவருக்கும் காலத்தால் முற்பட்டவர். இவரது பதிகங்கள் பன்னிரு திருமுறையில் 4.5,6– ஆம் திருமுறைகளாக இடம்பெற்றுள்ளன. இப்பதிகங்களுள் 9நாயன்மார் களின் வரலாற்றுக் குறிப்புகள் பாடப்பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் காலத்திற்கு முன்பு வாழ்ந்த நாயன்மார்கள் பதினேழு பேர்களுள் ஏழு பேரையும், தம்காலத்தில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் அப்பூதி அடிகள் ஆகியோரையும் சேர்த்து ஆக 9 நாயன்மார்களைப் பற்றிய குறிப்புகள் திருநாவுக்கரசரின் திருமுறை களில் இடம் பெறக் காணலாம்.

சொல் உறுதிக்கு அப்பர், எனும் வாக்கியத்திற்கு ஏற்ப, நாயன்மார்களின் வரலாற்றைக் குறைவான பாடல்களில் மிகத் தெளிவாகச் செய்திகள் விடுபடாமல் பாடியுள்ளார்.



திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்ற நாயன்மார்கள்

திருஞானசம்பந்தர், அப்பூதி அடிகள், அமர்நீதி நாயனார், சாக்கிய நாயனார், கனம்புல்லர், கண்ணப்பர், நமிநந்தி அடிகள், கோச்செங்கனார், சண்டேசுவரர் ஆகியோர் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்ற நாயன்மார்கள் ஆவர்.

நாவுக்கரசர்காலத்திற்கு முன்பு 17 நாயன்மார்கள் வாழ்ந்திருந்தபோதிலும் அவர் தம்முடைய தேவாரத்தில் 7 பேரைப்பற்றி மட்டுமே குறிப்பிட்டுள் ளார்.

திருஞான சம்பந்தர்

திருஞானசம்பந்தர் வரலாறு மிகவும் பெரிய தாகும். பிள்ளை பாதி புராணம் பாதி என்பதற்கேற்ப, சேக்கிழார் 1285 பாடல்களில் இவர்தம் வரலாற்றைப் பாடுகிறார். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் வரலாற்றில் நிகழ்ந்த அற்புதங்களான ஆயிரம் பொன் பெற்றதும், கதவடைக்கப் பாடியதுமாகிய இருநிகழ்வுகளை மட்டும் தம்முடைய தேவாரத்தில் இருபாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் பொன்பெறுதல்

திருஞானசம்பந்தர் சீகாழிப்பதியில் பிறந்தவர். அவர் தம்முடைய ஐந்தாவது யாத்திரையில் திருவாவடுதுறையில் எழுந் தருளிய சிவனைப் பாடி 1000 பொன் பெறுகிறார். இதனைச் சேக்கிழார் 13 பாடல்களில் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் 4–ஆம் திருமுறையில்,

“மாயிரு ஞால மெல்லா
மலரடி வணங்கும் போலும்
பாயிரும் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமலர் ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்ப போலும்
ஆவடு துறைய னாரே”
(4–56–1)

என்று ஆயிரம் பொன்பெற்ற செய்தியினைக் குறிப்பிட்டுள்ளார்.

கதவடைக்கப்பாடுதல்

திருவாவடுதுறையில் இருந்து கிளம்பிய திருஞானசம்பந்தர் திருத்தருமபுரம், திருநள்ளாறு, திருச்சாத்த மங்கை, திருச் செங்காட்டன்குடி, திருமருகல், திருப்புகலூர் போன்ற தலங்களை வணங்கிவிட்டுத் திருமறைக்காடு வருகிறார்.

காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவப்பதிகளுள் ஒன்றான திருமறைக்காடு 7 விடங்கத் தலங்களுள் ஒன்றாகும். இவ்வூரில் உள்ள திருவிளக்கு அணி மிகச்சிறப்புடைய.

திருமறைக்காடு விளக்கழகு என்பது பழமொழி. இங்குள்ள திருவிளக்கினை அறியாது தூண்டிய எலி சிவபுண்ணியத்தால் மறுபிறப்பில் மாவலி வேந்தனாய் பிறந்து இவ்வுலகை ஆண்டது.

வேதங்கள் வழிபட்டுத் திருக்காப்பிட்டிருந்த இக்கோயில் கதவை, திருநாவுக்கரசர் பதிகம் பாடித் திறப்பித்தார். பிறகு திருஞானசம்பந்தர் பதிகம் பாடி அடைப்பித்தார். இச்செய்தியை நமக்குத் திருநாவுக்கரசர்,

"திறக்கப் பாடிய என்னிலும் செந்தமிழ்
உரைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய் மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடையார் இவர் பித்தரே"
(5-50-8)

என்று 5-ஆம் திருமுறையில் 50-ஆவது பதிகத்தில் குறிப்பிடுள்ளார். திருநாவுக்கரசர் பத்துப் பாடல் பாடிக் கதவு திறந்தது. திருஞானசம்பந்தர் ஒரு பாடல் பாடக் கதவு அடைத்தது. இச்செய்தியைத் திருநாவுக்கரசர், 'என்னைவிடச் செந்தமிழ் உறைப்புப் பாடிக் கதவை அடைக்கச் செய்தார்' என்று இரண்டாம் அடியில் காண்பித்துள்ளார்.

திருவாவடுதுறையில் தை மாதம் ரதசப்தமிப் பெருவிழாவில், ஒருநாள் காலையில் சம்பந்தருக்கு ஆவடுதுறைப் பெருமான் அம்பொன் ஆயிரம் கொடுத்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

திருமறைக்காட்டில் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் வேதங்களால் பூட்டப்பட்ட கதவைத் திறந்ததும், அடைத்ததும் நினைவுபடுத்தும் வகையில் மாசிமகப்பெருவிழா ஒருநாள் நடைபெறும்.

அப்பூதியடிகள்

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் சமகாலத்தில் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த பதி சோழநாட்டில் உள்ள திங்களூர்என்னும் பதியாகும். இவருடைய சிவத்தொண்டைப் போற்றி இவரைச் சிறப்பிக்கும் வகையில் நான்காம் திருமுறையில் பன்னிரண்டாவது பதிகத்தில்,

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே
யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே
(4-12-10)

என்று போற்றியுள்ளார். இப்பதிகம் திங்களூரை வழிபட்டபின் திருப்பழனத்தை அடைந்து அங்கு பாடியதாகும்.

சுருங்கச்சொல்லி · விளங்கவைப்பதில் வல்லவரான திருநாவுக்கரசர் மேற்கண்ட ஒரு பாடலில் நாயகன் நாயகி பாவனை, திருப்பழனத்தின் வளம், சிவாக்கினிகாரியம்,அப்பூதியடிகளின் சிறப்பு போன்ற பல செய்திகளைப் பதிவுசெய்துள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய, 'திருத்தொண்டத்தொகை'யில், "ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்" என்று ஓர் அடியில் அப்பூதியடிகளைப் பற்றி அடையாளப்படுத்துகிறார். தனி அடியார்களில் அடியார்க்கும் அடியேன் என்று சுந்தரரால் சிறப்பிக்கப்படுபவர்களுள் பதினாறு பேர் தான். இவர்களுள் அப்பூதியடிகளும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார்பெருமான் அப்பூதியடிகள் வரலாற்றை 44 பாடல்களில் விரிவாகப்பேசுகிறார்.

அமர்நீதி நாயனார்

அமர்நீதி நாயனார் 'பழையாறை' என்னும் ஊரில் வாழ்ந்தவர். இது ஒரு பெருநகரமாக இடைக்காலத்தில் சோழர்களுக்கு உறைவிடமாக இருந்துள்ளது. திருநல்லூரின் இறைவன் கொடுத்த கோவணத்திற்குச் சம எடையாகத் தன் செல்வத்தையும், தன்னையும் தன் மனைவியையும் தந்தவர் அமர்நீதி நாயனார். சுந்தரர் அமர்நீதி நாயனாரை,"அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்" என்று திருத்தொண்டத்தொகையில் ஓர் அடியில் அறிமுகம் செய்கிறார். சேக்கிழார் அமர் நீதி நாயனாரின் வரலாற்றை, 48 பாடல்களில் விரிவாகப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர், 4ஆம் திருமுறையில், 97ஆவது பதிகத்தில்,

நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ் சூழ்ந்த
நல்லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக்
கிறிபடைத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கொர்
வாணிகனை (4-97-7)

என்று பாடியுள்ளார்.

இதில் முதல் அடியில் திருநல்லூரின் வளத்தைக்

கூறுகிறார். சேக்கிழார் பழையாறையின் வளத்தைக் கூறுகிறார். இவர், தாமரைப் பூக்கள் நிறைந்த குளத்தால் சூழப்பட்டுள்ளது என்று திருநல்லூரின் வளத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். திருநாவுக்கரசர் அமர்நீதியாரின் பெயரைக்கூறாமல், அவருடைய குலம் வணிகர்குலம் என்று அறிமுகப்படுத்தியுள்ளார்.

சாக்கியநாயனார்

இறைவன்மீது அன்பு இருந்தால்போதும் என்று தன்னுடைய பௌத்தமத வேடத்தை மாற்றிக் கொள்ளாமல், சிவபிரானை வணங்கி நற்கதி பெற்றவர் சாக்கிய நாயனார். திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறையில், 49ஆவது பதிகத்தில் சாக்கிய நாயனாரைப் பற்றி ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சாக்கியநாயனார் இறைவன்மீது கல்லை எறிந்து வழிபட்டதை,

கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறுணாமே நீள்விசும் பாளவைத்தார்
(4-49-9)

என்று பாடியுள்ளார்.

மேற்கண்ட இரண்டடியுள் சாக்கியநாயனார் செயலும், அதில் அவர்பெற்ற பேறும் கூறப் பட்டுள்ளது. பிறவி ஒழிந்தது என்பதை, 'நெல்லினால் சோறுணாமே' என்று கூறுகிறார். சேக்கிழார், 17 பாடல்களில் பாடிய சாக்கியநாயனார் வரலாற்றை, திருநாவுக்கரசர் ஒரு பாடலில் தெளிவாக விளக்கி யுள்ளார்.

கணம்புல்லர்

கணம்புல்ல நாயனாரைப்பற்றி, திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறையில், 49ஆவது பதிகத்திலும், 6ஆம் திருமுறை 12ஆவது பதிகத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

கணம்புல்ல நாயனார் திருக்கோயில் விளக்கு எரித்தல் தொண்டைச்செய்தவர். திருக்கோவில்களில் விளக்கிடுதல், மலர்பறித்துக்கொடுத்தல், தூபம்புகைத்தல் போன்றவை மிகச் சிறந்த தொண்டுகளாகும். இவற்றில் விளக்கிடுதல் சிவ புண்ணியங்களில் எல்லாம் சிறந்ததாகும்.

கணம்புல்லர் பற்றித் திருநாவுக்கரசர் திருக்குறுக் கை வீரட்டம் பதிகத்தில்,

"கணம்புல்லர்க் கருள்கள் செய்து காதலா
,
மடியார்க் கென்றும்
குணங்களைக் கொடுப்பர் போலுங் குறுக்கை
வீரட்டனாரே" (6-12-9)

என்று பாடுகிறார். சிவபெருமானுக்கு அடிமை யாவதற்கு முற்பிறப்புகளில் பெரும் தவம் செய்திருக்க வேண்டும். நல்அருந்தவம் செய்தவர் கணம்புல்ல நாயனார். ஆகவே, இவருக்கு அருள் செய்தார். மேலும் திருநாவுக்கரசர் திருக்கழிப் பாலைப் பதிகத்தில், கணம்புல்லரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சியுள்ளார்
கழிப்பாலை மேய கபாலப்பனார்" (6-12-7)

என்றும் போற்றியுள்ளார்.

கண்ணப்ப நாயனார்

கண்ணப்ப நாயனாரைப் பற்றித் திருநாவுக்கரசர் 3 பாடல்கள் பாடியுள்ளார். 4ஆம் திருமுறையில் 9ஆவது பதிகத்திலும், 6ஆம் திருமுறை 12ஆவது பதிகத்திலும், 39ஆவது பதிகத்திலும் குறிப்பிட் டுள்ளார்.

கண்ணப்ப நாயனார் வேட்டைக்குப் புறப்படும் போது எந்தத் தோற்றத்தில் இருந்தாரோ அதே தோற்றத்தோடு இறைவழிபாடு செய்துள்ளார். காவல் செய்தற்குரிய கருவியான வில்லும், அம்பும் எடுத்துக்கொண்டு, கையில் இறைச்சியும் கொண்டு, பெரிய செருப்பும் தொட்டுக்கொண்டு செல்கிறார். வாயாகிய கலசத்திலிருந்து அபிடேகம் புரிகிறார் என்பதைத் திருக்குறுக்கை வீரட்டம் பதிகத்தில்,

"காப்பதோர் வில்லு மம்புங்
கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலச மாட்டித்" (4-49-7)

என்று பாடியுள்ளார். மேலும் திருக்கழிப்பாலைப் பதிகத்தில்,

"கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்"
(6-12-6)

என்றும், திருமழபாடிப் பதிகத்தில்,

"காலால் காலனையும் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்"
(6-39-9)

என்றும் போற்றியுள்ளார்.

நமிநந்தியடிகள்

திருநாவுக்கரசர் நமிநந்தியடிகளைப் பற்றிய செய்தியில் 4ஆம் திருமுறை 102 ஆவது பதிகமான திருவாரூர்ப்பதிகத்தில் 3 பாடல்களில் பாடியுள்ளார். பதிகத்தின் 2ஆவது பாடலில்,

"நாரூர் நறுமலர் நாதன்அடித்

தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக்(கு) இட்டமை
நீள்நா(டு) அறியும் அன்றே" (4-102-2)

என்று பாடியுள்ளார். நமிநந்தியடிகளின் சிறப்பு, பங்குனி உத்திரத்திருவிழா, நீரால் திருவிளக்கு இட்டது போன்ற அனைத்துச் செய்திகளையும் கூறி யுள்ளார். மேலும், 4ஆம் பாடலில்,

"அடித்தொண்டன் நந்திஎன்பான் ஆரூரமுதினுக்கே"
(4-102-4)

என்று கூறுகிறார். திருவாரூரில் முனிவர்கள் பலரும் சிவபெருமானை வணங்குகிறார்கள். இவர்களைத் திருநாவுக்கரசர் முடித்தொண்டர் என்கிறார். ஆரூர் இறைவனுக்கு முடித்தொண்டர்கள் பணிசெய்வதோடு அல்லாமல், 'அடித்தொண்டரும்' பணிசெய்கிறார்கள். திருநீற்றைப் பூசிக்கொண்டு செல்லும் சிவனடியார் திருப்பாதங்களை முடிமேல் சூட்டி அடித்தொண்டனாகிப் பணிசெய்யும் நமிநந்தி யடிகளும் உள்ளார் என்று சிறப்பித்துள்ளார்.

கோச்செங்கட்சோழநாயனார்

திருநாவுக்கரசர் தம்முடைய தேவாரத்தில், கோச்செங்கட்சோழ நாயனாரைப் பற்றி 5 பாடல்கள் பாடியுள்ளார். மிக்க பழங்காலத்தே தெய்வத் திருவுருவங்களை மரத்தடியில் வைத்து வழிபட்டனர். பிறகு படிப்படியாகச் சிறியது முதல் பெரிய கற்கோவில்கள் அமைக்கப்பெற்றன. சோழ நாட்டில் வாழ்ந்த சோழ மன்னன்தான் கோச்செங்கட் சோழ நாயனார். இவர் முற்பிறவியில் செய்த சிவபுண்ணியத்தால் சோழமன்னனாகப் பிறந்து 70மாடக்கோவில்களைக் கட்டினார். திருநாவுக்கரசர், திருக்குறுக்கை வீரட்டம் பதிகத்தில்,

"..........................கோச்செங் கணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலத்தினிற் பிறந்திட்டார்..............................."
(4-49-4)

என்று அறிமுகம் செய்கிறார். கோச்செங்கச் சோழ நாயனார் முற்பிறப்பில் சிலந்தியாக இருந்தவர். இறைவனுக்குச் செய்த தொண்டால் அந்தச் சிலந்தி சிறப்புநிலையை அடைந்தது. சிலந்திக்கு அருள்செய்ததைத் திருநாவுக்கரசர் திருநள்ளாற்றுப் பதிகத்தில்,

"சிலந்திதனக்கு அருள் செய்த தேவதேவை"
(6-20-5)

என்று பாடியுள்ளார்.

சண்டேசுவர நாயனார்

சண்டேசுவர நாயனாரைப் பற்றித் திருநாவுக்கரசர் தம்முடைய தேவாரத்தில் 6 பாடல்கள் பாடியுள்ளார். சண்டேசுவரப் பெருமானது திருவுருவம் எல்லாச் சிவாலயங்களிலும் மூல இலிங்கத்தின் அபிடேகநீர் விழும் கோமுகியின் அருகில் இருக்கும். சிவதரிசனம், சிவபூசனைப் பயனை அடியவர்களுக்குக் கொடுப்பவர் சண்டேசுவரர். சிவாலய ஐம்பெரும் கடவுளரில் ஒருவராய்ப் பெருமான் அருகில் அமர்ந்துள்ளார்.

திருஆப்பாடி சண்டேசுவரர் தலமாக விளங்குகின் றது. திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை, 48ஆவது பதிகத்தில், சண்டேசுவர நாயனாரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"சண்டியார்க்கு அருள்கள் செய்த
தலைவர்ஆய் பாடி யாரே" (4-48-4)

என்று கூறுகிறார். மேலும் 49-ஆவது பதிகத்தில் சண்டேசுவர நாயனாரின் வரலாற்றினை ஒரே பாடலில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய தந்தையை மழுவால் எறிந்ததை,

"பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கை வீரட்ட னாரே" (4-73-5)

என்றும் சிறப்பித்துள்ளார்.

திருநாவுக்கரசர், தாம் பாடிய 9 நாயன்மார்களில் திருஞானசம்பந்தரின் வரலாறு மிகப்பெரியதாகும். அவர் செந்தமிழ்ப்பாக்களைப் பாடி நிகழ்த்திய அற்புதங்களான இரண்டு நிகழ்வுகளை மட்டும் அவர் பாடியுள்ளார்.

மீதம் உள்ள 8 நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகளைச் சுருக்கமாகத் தம் தேவாரத்தில் பாடியுள்ளார். பின்பு தோன்றிய திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர்த் திருவந்தாதி, திருத்தொண் டர்ப்புராணம் போன்றவற்றில் உள்ள மேற்கண்ட 9 நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகளுக்குத் திருநாவுக்கரசர் தேவாரம் மூலமாக அமைந்துள்ளது என்பது நன்கு புலனாகும்.

அன்பிலக்கியத்தின் ஓர் அத்தியாயம்

செந்தமிழ்வாரிதி, சிவஞானக்கலாநிதி பேராசிரியர் முனைவர் **இரா. செல்வக்கணபதி**

கருவூரில் ஒரு விடியல் வேளை. சிவாலயத்தை நோக்கி, அந்த முதிய அந்தணர், பூக்குடலையைத் தோளில் தாங்கிய அலக்கின் நுனியில் தொங்கவிட்டவாறு, தளர்நடையிட்டுச் செல்கிறார். அவர் பெயர் சிவகாமியாண்டார்.

கருவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவர் புகழ்ச்சோழர், சிறந்த பண்பாளர். சிவபக்தர். அவரது பட்டத்து யானை, கருவூரில், பாயும் அமராவதி ஆற்றில் நீராடிவிட்டு, பாகர்கள்குழ அரண்மனை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

எதிரில், யானை வருவதைக் கண்டு சிவகாமியாண்டார் சாலை ஓரம் ஒதுங்குகிறார். ஐந்தறிவு கொண்ட யானை, அவர் தோளில் தொங்கும் பூக்கூடையைப் பற்றி விண்ணில் வீசி, மலரைச் சிதறிவிட்டுச் சாலைவழியே விரைகிறது. உஷக்காலப் பூசைக்குப் பல்லாண்டுகளாகத் தடையின்றி வழங்கிவரும் மலர்க் கைங்கர்யம் தடைப்பட்டுவிட்ட துயரத்தில், தரையில் புரண்டு சிவநாமம் கூறி அவர் அரற்றி அழுதார்.

கருவூரில் வாழ்ந்து வரும் ஓர் இளைஞர். வாட்டசாட்டமான உடல்வாகு கொண்டவர். சிவனை விட மேலாகச் சிவன் அடியார்களிடத்தில் அன்பு பூண்டவர். முரட்டுச் சுபாவம் உடையவர். ஊரில் சிவனடியாருக்கு ஒரு தீங்கு என்றால் ஓடோடிச் சென்று, அதனை நீக்கிக் காப்பதையே வாழ்வாகக் கொண்டவர். பெயர் எறிபத்தர்.

எறிபத்தரிடம் பட்டத்துயானை, சிவகாமியாண் டாரின் பூக்குடலையைப் பற்றிச் சிதைத்ததையும் அவர் தெருவில் அலறி அரற்றுவதையும் யாரோ சிலர் சென்று சொல்லி விட்டனர்.

காலகாலமாகவே சிவன் தொண்டு செய்வாருக்கு யானை பகை என்றும், திருவானைக்காவில் யானை–சிலந்தி இடையே நிகழ்ந்த போராட்டத்தையும், சிவனார் உரித்து அதன் தோலைப் போர்த்ததையும் அவர் அறிந்தவர்.

விரைந்து சென்று, சிவகாமியாண்டாரை எடுத்து ஆறுதல் கூறி, அவரிடம் விபரம் அறிந்து, யானையைச் சினத்துடன் துரத்திச் சென்று அதன் மத்தகத்தின் மீது பாய்ந்து, தன் தோளில் பற்றி வைத்திருந்த மழு என்று கூறப்படும் கோடரியால் யானையை வெட்டி வீழ்த்துகிறார்.

யானைப்பாகர் இருவர் எதிர்க்க அவர்களையும் மழுவால் சாய்க்கிறார். பக்கத்தில் வந்த காவலர் மூவரும் எறிபத்தரோடு போராடி மடிகின்றனர்.

அங்கேயே, மழு ஏந்தி நிற்கிறார். வேறுயாரும் வந்து, 'ஏன் யானையை வெட்டினீர்?' என்று கேட்டால், அவரையும் வெட்டும் சினத்தின் உச்சியில் எறிபத்தர் இருப்பது நமக்குப் புரிகிறது.

இச்செய்தி புகழச்சோழருக்குக் கிடைக்கிறது. யாரோ பகைவர் செயல் என்று சினந்து உத்தரவிட, நாற்பெரும் படையும் எழுகிறது. அரசர் பட்டத்துப் புரவிமீது, தலைமை ஏற்று முன் செல்கிறார். யானை இறந்து கிடக்கும் இடத்தில் பகைவரைக் காணோம். சிவனடியார் நிற்கிறார். அவர்தான் யானையை வெட்டியவர் என்று அறியாத சோழ மன்னர் அமைச்சரை நோக்க, நடந்தன யாவும் அவர் எடுத்துரைக்கிறார்.

என்ன நடந்திருந்தாலும், எம்மிடம் தெரிவித்தே தீர்வு கண்டிருக்க வேண்டும். தாமே தண்டிக்க இச்சிவனடியாருக்கு உரிமை தந்தவர் யார்? என்று அரசர் வெகுண்டிருக்கலாம். இல்லை. மன்னரும் சிவனடியார்பால் பழுத்த அன்பு பூண்டவர். பண்பாளர்.

நிகழ்வுகள், ஓர் அரிய பண்பாட்டுத் தடத்தின் மேலே நம்மை அழைத்துச் செல்கின்றன.

ஒரு சிவனடியார் இச்செயலைச் செய்திருப் பாரானால், அதில் ஏதோ ஒரு நியாயம் இருந்திருக்க வேண்டும் என்று அரசர் உணர்கிறார்.

ஆன்மிகவாதிகள்மீது, ஆட்சியாளர்கள் கொண்டிருந்த மரியாதை நம்மை மலைக்க வைக்கிறது.

அரசரின் உள்ளத்தில் ஒரு நிம்மதி பிறக்கிறது.

நல்லவேளை, சிவனடியாருக்கும், பட்டத்து யானைக்கும் இடையே நடந்த போராட்டத்தில் யானை மடிந்தது. யானையால் சிவனடியாருக்கு ஊறு நேராதிருந்ததே இது நான் செய்த தவம் என நினைக்கிறார்.

நம் மதிப்பில் புகழ்ச்சோழர் மேல் எழுகிறார்.

ஆத்திரம் அகன்று அன்பு வயப்பட்ட சோழர், சினத்தின் உச்சியில் நிற்கும் எறிபத்தரை நோக்கி, உடைவாள் ஒன்று மட்டும் தாங்கியவராகத் தனித்து நடக்கிறார்.

அன்பும் ஆத்திரமும் சந்திக்கின்றன.

நடந்தன வினவுகிறார் மன்னர், எறிபத்தர் விவரிக்கிறார்.

புகழ்ச்சோழர் கைகூப்பி வணங்கி, எறிபத்தரை நோக்கி, "ஐயன்மீர். பூக்குடலையைச் சிந்திய குற்றத்திற்காக யானையைக் கொன்றீர். வழிநடத்தத் தவறிய குற்றத்திற்காகப் பாகரைக் கொன்றீர். பரிகரிக்கத் தவறிய குற்றத்திற்காக மூன்று பரிக் கோலர்களைக் கொன்றீர். இந்த யானைக்கு உரிமை யுடையவன் யான். அதனால் என்னையும் தாங்கள் கொல்ல வேண்டும்" என்று கூறிப் பணிகிறார்.



எறிபத்தரின் சினம் அன்பில் கட்டுவிடுகிறது. மன்னர் உடைவாளை எடுத்து எறிபத்தர்பால் தருகிறார். நீங்கள் கையில் வைத்திருக்கும் மழு எம்பெருமானின் மங்கல ஆயுதம். அதனால் இந்தப் பாவியைக் கொல்ல வேண்டா. இதோ, கொலைவாள். பெற்றுக் கொள்ளுங்கள்.

கொலைவெறியில் நின்ற எறிபத்தரை, மன்னனின் பண்பு, அவரை விரைந்து காக்க வேண்டுமென்ற கட்டாயத்துக்கு ஆளாக்குகிறது.

இவ்வாளை வாங்கவில்லை என்றால், எங்கே மன்னன் தம் கை வாளால் தம்மையே அழித்துக் கொள்வாரோ என்ற அச்சம் எறிபத்தரை விரைந்து வாளை வணங்கச் செய்கிறது.

ஒரு சிவனடியார் கைவாளால் மடியப்போகும் புண்ணியப்பேற்றுக்கு மகிழ்ந்து, சோழர் மண்டியிடுகிறார்.

எறிபத்தர் நெகிழ்ந்து போகிறார்.

கொல்லப்பட வேண்டியவர் மன்னர் அல்லர். அவசரப்பட்டு அதீத எண்ணத்தில் செயல்பட்ட தாமே தவறு செய்து விட்டதாக நாயனார் கரைகிறார்.

மன்னர் தந்த உடைவாளைத் தம் கழுத்தில் பூட்டித் தம்மைத் தாமே செகுத்துக் கொள்ள எறிபத்தர் முயல, புகழ்ச்சோழர் கண்டு, பதறி, அவர் கைகளை இறுகப் பற்றிக் காக்கிறார்.

இறைவன்–சிவன்– அசரீரியாக, "அன்பரீர். உங்கள் அன்பினை உலகவர்க்கு உணர்த்த நாமே இந்த நாடகத்தை நிகழ்த்தினோம்" என்று அருளிச் செய்கிறார்.

யானையும், பாகரும், பரிக்கோல் காரர்களும் உயிர் பெறுகிறார்கள்.

இவ்வரலாறு தெய்வச் சேக்கிழாரின்– 'திருத்தொண்டர் புராணம்' எனப்படும், பெரிய புராணத்துள் இடம் பெற்றிருக்கிறது.

ஆத்திரத்தை – ஆத்திரத்தால் அழிக்க இயலாது.

தீயைத் தீயால் அழித்தல் ஆகுமா? நீர் வேண்டும். அன்பு நீர் ஒன்றே ஆத்திரத்தை – சினத்தை அழிக்கும் உயரிய கருவி என்று சுட்டும் பெரியபுராணத்தை, நாம் ஓர் அன்பிலக்கியம் என்று கூறலாம் அல்லவா?

அறத்திற்கே அன்புசார்பு என்பார் அறியார்

மறத்திற்கும் அன்பே துணை

என்ற புரியாத குறள்கூட இவ்வரலாற்றால் புரிய வருவது சமயம் அறத்துக்குத் தந்த கொடை.

குற்றாலக் குறவஞ்சியும் திருமுறைப் பெயரும்

பேராசிரியர் முனைவர் **மு. பழனியப்பன்**

மா.மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

குற்றாலக் குறவஞ்சி படிப்பவரைக் கவரும் சிற்றிலக்கியம் ஆகும். இச்சிற்றிலக்கியம் குற்றாலநாதரைச் சிறப்பிக்கும் வகையில் வசந்தவல்லி, குறவன், குறத்தி ஆகிய பாத்திரங்களைக் கொண்டு படைக்கப்பெற்றுள்ளது. இப்படைப்பினுள் சைவ சமயத்தின் நிலைப்பாட்டினை உயர்த்திக்காட்ட, நிலை நிறுத்திக் காட்ட பல முயற்சிகளை இதனைப் படைத்த திரிகூடராசப்பக் கவிராயர் மேற்கொண்டுள்ளார்.

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் அழியா, அழிக்க முடியாச் சொத்துகள். அவற்றை வரைந்த தமிழ்த்தொண்டர்தம் தொண்டுகள் என்றும் நினைக்கத்தக்கன. இவர்களைக் காலம் காலமாக மக்கள் நினைத்துப் போற்றி வந்துள்ளனர். மேலும் அவர்கள் பாடிய இறையனுபவங்களையும், மக்கள் காலம் காலமாகப் பாடி வந்துள்ளனர். அவ்வழியில் இக்காலச் சைவ உலகமும் சென்று கொண்டிருப்பது இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு இறைத் தொண்டர்கள் பற்றிய செய்திகள், அவர்கள் பாடிய இறைப்பனுவல்கள் நடைமுறையில் இருக்கும் என்பதான நம்பிக்கையை வலுவூட்டுவதாக உள்ளது.

குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூட ராசப்பக்கவிராயர் பல இடங்களில் திருமுறை பாடிய இறைத்தொண்டர்களின் பெருமையைப் போற்றியுள்ளார். இவரது இப்போற்றுதல்கள் பன்னிரு திருமுறை சிற்றிலக்கிய காலத்தில் ஏற்றம் பெற்றிருந்தது என்பதைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. மேலும் சிற்றிலக்கிய காலத்திலும் திருமுறைகள் ஓதப்பட்டு வந்தன என்பதனைக் காட்டுவதாகவும் உள்ளது. அவ்வகையில் இக்கட்டுரை குற்றாலக் குறவஞ்சியில் காணப்படும் திருமுறை வாணர்கள் பற்றியும் திருமுறைச் செய்திகள் பற்றியும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

குற்றாலக் குறவஞ்சியில் பல இடங்களில் சைவச் செய்திகளும், பன்னிரு திருமுறைகளும் எடுத்தாளப் பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தில் திரிகூடராசப்பக் கவிராயர் தேவார மூவர் முதலிகளுக்கும், மாணிக்க வாசகருக்கும் தனித்தனியே வணக்கம் பாடியுள்ளார். இவர் காலத்தில் நால்வர் என்ற அழைப்புமுறை இல்லை போலும். ஏனெனில் இவர் இரண்டு பாடல்களில் தனித்தனியாக மூவர் முதலிகளையும், மாணிக்கவாசகரையும் குறிப்பிட்டுள்ளார்.

தலையிலே ஆறிருக்க மாமிக் காகத்
தாங்குகடல் ஏழழைத்த திருக்குற்றாலநாதர்
சிலையிலே தடித்ததடம் புயத்தை வாழ்த்திச்
செழித்த குறவஞ்சி நாடகத்தைப் பாட
அலையிலே மலை மிதக்க ஏறினானும்
அத்தியிலே பூவை அந்நாள் அழைப்பித்தானும்
கலையிலே கிடந்த பொருள் ஆற்றிற் போட்டு
கன குளத்தில் எடுத்தானும் காப்பதாமே (1.5)

என்ற இப்பாடலில் இறைவன் ஏழுகடல் அழைத்தத் திருவிளையாடலும், அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் தம் வாழ்க்கைக் குறிப்பாலும் இடம் பெறச் செய்யப் பெற்றுள்ளன.

அப்பர் அலைகடலில் தூக்கி வீசப்பெற்றபோது, அவர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய செய்தி, எலும்பு மட்டுமே இருந்த பூம்பாவையின் மிச்சத்தைக் கொண்டு அப்பெண்ணை உருவாக்கிய ஞானசம்பந்தரின் புதுவை, மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் பெற்ற சுந்தரரின் தோழமை முதலியன இப்பாடலில் காட்டப் பெற்றுள்ளன. மூவர் முதலிகளின் சிறப்பான செய்திகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.

இதற்கடுத்த பாடலில் அகத்தியரையும், மாணிக்கவாசகரையும் பணிந்து போற்றுகின்றார் திரிகூடராசப்பக் கவிராயர்.

............தமிழுரைத்த முனியைப் பாடி
இத்தரையில் ஆத்துமம் விட்டிறங்கும் நாள்
சிலேட்டுமம் வந்து ஏறாவண்ணம்
பித்தனடித் துணைசேர்த்த வாதவூ
ரணடிகள் பேணுவோமே (2.6)

என்று இப்பாடலில் வாதவூரான் என்று மாணிக்கவாசகர் அவரின் பிறந்த ஊர் சார்பாகக் குறிக்கப் பெற்றுள்ளார். இப்பாடலில் வாதம் என்பதனை நோயாகவும் கொண்டு பொருள் பெற இயலும். அதாவது இறுதிநாளில் வாதம், பித்தம், சிலேட்டுமம் வந்துப் பற்றிக் கொள்ளும். அவை ஏறாவண்ணம் பித்தனை நாடியவர் வாதவூர் சார்ந்த மாணிக்கவாசகர் என்று இப்படைப்பாளரால் குறிக்கப்படுகிறார். மேலும் இதனுள் அகத்திய முனிவரும் வணங்கப் பெற்றுள்ளார்.

நால்வர் பற்றிய செய்திகள் இப்பனுவலில் கடவுள் வாழ்த்துகளாக இடம் பெறச் செய்யப் பெற்றுள்ள –மை கொண்டு அத்தொண்டர்கள்மீது திரிகூடராசப்பக் கவிராயர் கொண்டிருந்த மதிப்புத் தெரியவருகிறது. கடவுள்களுக்கு வணக்கம் என்ற நடைமுறை இயல்பானது. ஆனால் தொண்டர்களையும் கடவுள் –களுக்கு ஈடாக வணங்கும் இவரின் நடைமுறை இவருக்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. மேலும் தொண்டர்களையும் பெருமைப்படுத்துவதாக உள்ளது.

மற்றொரு இடத்தில் வசந்தவல்லி தூது விடுகிறாள். அத்தூதினைத் தக்கசமயம் பார்த்துச் சொல்லப் பாங்கியை அவள் வேண்டுகிறாள். அப்போது தக்க சமயம் எது என அவள் மொழிகிறாள். அப்போது குற்றாலநாதருக்கு நடைபெறும் நாள் வழிபாடுகளும், சிறப்பு வழிபாடுகளும் வசந்த வல்லியால் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளன. எல்லா வழிபாடுகளின்போதும் மூவர் தேவாரம் ஓதப் பெற்றுள்ளது.

நாலுமறைப் பழம்பாட்டும் மூவர் சொன்ன
திருப்பாட்டும்
நாலுகவிப்புலவர் புதுப்பாட்டும் சகியே
நீலகண்டர் குற்றாலர் கொண்டருளும்
நிறைகொலுவில்
நீக்கமிலை எல்லார்க்கும் பொதுக்காண் சகியே
(3.30)

என்று குற்றாலநாதர் முன்னிலையில் வேதங் களும், திருமுறைகளும் பேதமில்லாமல் ஒன்றாய் நின்ற செய்தி காட்டப் பெறுகின்றது.

மேலும் இதே பாடலில் தொடர்ந்து முப் பொழுதும் திருமேனி தீண்டுவார் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. 'முப்பொழுதும் திரு மேனி தீண்டுவார் வந்து நின்று முயற்சி செய்யும் திருவனந்தல் கூடிச் சகியே' என்பதே அக்குறிப்பு ஆகும். இக்குறிப்பு ஏழாம் திருமுறை அல்லது பதினொன்றாம் திருமுறை, அல்லது பன்னிரண்டாம் திருமுறை தந்தக் குறிப்பாகக் கூட இருக்க முடியும். ஏனெனில் சுந்தரர் இதனைத் தன் பாடலிலும், நம்பியாண்டார் நம்பி தன் பாடலிலும், சேக்கிழார் தன் பாடலிலும் கையாண்டுள்ளனர் என்பதை எண்ணும்போது கவிராயருக்கு இருந்த திருமுறை மதிப்பு மேம்பட்டுத் தோன்றுகிறது.

இறைவன் உலா வரும்போது திருமுறைகள் பாடப்படுவதனைக் கற்பனை கலந்துக் கவிராயர் பாடியுள்ளார். முரசுகள், உடுக்கைகள் போன்ற இசைக்கருவிகள் முழங்கும் ஓசையால் எட்டுத்திசை யானைகள் தன் காதுகளைப் பொத்திக் கொண்டன. பொத்திய அக்காதுகளைத் தொண்டர்கள் பாடிய தேவார இசை திறக்கச் செய்தது என்று கற்பனை கலந்துப் பாடலைப் படைத்துள்ளார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

இடியின் முழக்கொடு படரும் முகிலென
யானை மேற்கன பேரி முழக்கம்
துடியின் முழக்கமும் பரந்து திசைக்கரி
துதிக்கை யாற்செவி புதைக்கவே
அடியர் முழக்கிய திருப்பல்லாண்டிசை
அடைந்த செவிகளும் துறக்க மூவர்கள்
வடிசெய் தமிழ்த்திருமுறைகள் ஒருபுறம்
மறைகள் ஒருபுறம் வழங்கவே

என்ற இப்பாடலில் சேந்தனார் பாடிய திருப் பல்லாண்டும் காட்டப் பெற்றுள்ளது. தமிழ்த் திருமுறைகள் என்று திருமுறைகளும் சுட்டப் பெற்றுள்ளன. மேலும் மறைகளுக்குச் சமமாகத் திருமுறைகளும் அக்காலத்தில் மதிக்கப் பெற்றமையும் காட்டப் பெற்றுள்ளது.

குறவன் பாத்திரமும் திருமுறை அறிந்த பாத்திரமாக வடிக்கப் பெற்றுள்ளது. அவன் பறவைகள் பிடிக்க வலை கட்டுகிறான். அவன் விரித்த வலையில் பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து வீழ்கின்றன. இதற்குத் திருமுறை உவமை ஒன்றை எடுத்துக் காட்டியுள்ளார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

கூடலை உள்ளாக்கிச் சைவம் புறம்பாக்கிக்
கூடும் சமணரை நீடும் கழுவேற்ற
ஏடேதிர் ஏற்றிய சம்பந்த மூர்த்திக்கன்று
இட்ட திருமுத்தின் பந்தல் வந்தால் போல
வெள்ளைப் புறாவும் சகோரமும் ஆந்தையும்
மீன்கொத்திப் புள்ளும் மரங்கொத்திப்
பட்சியும் (5.9)

என்று சம்பந்தப் பெருமானுக்கு முத்துப் பந்தர் வந்ததுபோல பறவைகள் வந்தன என்று உவமை காட்டுகிறார் திரிகூடராசப்பக் கவிராயர். வானத்தில் இருந்து முத்துப்பந்தர் வந்த அதிசயம் இங்கு உவமையாக்கப் பெற்றுள்ளது.

இவற்றின்மூலம் திருமுறைகள் பெற்றிருந்த ஏற்றம் தெரியவருகிறது. மரமெலாம் சிவவடிவம், கிளையெலாம் சிவவடிவம், சுனையெல்லாம் சிவவடிவம், வித்தெல்லாம் சிவவடிவம் எனப் பாடிய திரிகூடராசப்பர் சைவத்தின் பெருமை நிற்க நல்லதொரு இலக்கியமாகக் குற்றாலக் குறவஞ் சியைத் தந்துள்ளார். அதனுள் புதைந்திருக்கும் சிவ உண்மை தேடுவார்க்கு மிக்க பயன்தரும். எண்ணிய எண்ணியாங்கு அவர்கட்கு நடக்கும்.

ஏக்காலம்?

பேராசிரியர் முனைவர் **இரா.சேது**

மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், விவேகானந்தா கல்லூரி சென்னை,

தலைநகர்த் தமிழ்ச்சங்கத் தலைவர், சென்னை


இறைவழிபாடு தமிழகத்தில் மிகத்தொன்மையானது. ஒல்காப்பெரும்புகழ் தொல்–காப்பியம் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை எனத் திணைகளை வகுத்து அவற்றிற்குரிய தெய்வங்களாக முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை என்போரைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு நிலப்பிரிவுக்கு உரியதாய் அமைந்துள்ளன. இதனை ஆராயும்போது, தமிழகத்தில் நெடுங்காலத்திற்கு முன்னரே தெய்வக்கொள்கை நிலைபெற்றுள்ளதென்பது தெளிவாகும். 3500 ஆண்டு களுக்கு முன்னரே இந்நாட்டில் சிவலிங்க வழிபாடு பரவி இருந்ததென்பதனை மொகஞ்சதாரோ ஆரப்பா முதலிய இடங்களில் தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்திய அகழாய்வில் கிடைத்த சிவ லிங்கம் மெய்ப்பிக்கின்றது. திருவள்ளுவர் காலத்தில் நாள் தோறும் பூசனைகளும், விழாக்களும் நடைபெற்றன என்பதனைச் 'சிறப்பொடு பூசனை செல்லாது' (குறள்–18) என்பது தெளிவுறுத்தும்.

பல்வேறு காலங்களில் சமயப் பெரியோர்கள் தோன்றி இறைவழிபாட்டை மக்களிடையே பரப்பினர். இறைவழிபாடு ஒரு பக்திஇயக்கமாகவே பெருகித் தழைத்தது. இத்துறையில் சித்தர்களின் பங்கும் அளவிட்டுக்கூறமுடியாததாகும். சித்தர்கள் சமயத்துறையில் பெரிய புரட்சியை விளைவித்தனர். சாதிகுலம் பிறப்பெனும் சுழிப்பட்டுத்தடுமாறிய மக்களுக்கு ஒன்றே குலம் என்ற பொதுநெறியை ஊட்டினர். கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக வழிகாட்டும் சமுதாயச் சிந்தனையாளர்களாக விளங்கினர். இறைவனின் பெயரால் மக்களைச் சுரண்டும் இழிசெயல்களைப் பழித்துரைத்தனர். உள்ளத்தில் இறைவன் உறைகின்றபோது புறத்தில் காணலாமென வீணே அலைகின்ற செயலைச் சிவவாக்கியர் சாடியுள்ளார்.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொண என்றுசொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள்இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?
(சிவவாக்கியர், பாடல்– 489)

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' எனப் பாடித் தெய்வம் ஒன்று என்னும் கொள்கைக்கு உரம் சேர்த்தனர்.

பத்திரகிரியார் தமிழகச் சித்தர்களுள் ஒருவர். உஜ்ஜயினியின் மன்னராகத் திகழ்ந்தவர். பட்டினத்–தடிகள் உஜ்ஜயினியிலுள்ள மாகாளர் என்னும் இறைவனை வழிபடச் சென்றார். அவ்வூரிலுள்ள ஒரு பிள்ளையார் கோயிலில் அமர்ந்து சிவ நினைவில் மூழ்கியிருந்தார். அவ்வூர் மன்னனது அரண்மனையில் கள்வர்கள் கொள்ளையிட்டனர். கொள்ளைக்குச் செல்லும்போது தங்களது விருப்பம் நிறைவேறினால் அப்பிள்ளையாருக்கு விலை மதிப்பில்லாத பொருளை அளிப்பதாகக் கூறிச் சென்றனர். தங்கள் விருப்பம்போலவே நிறைவேறியதால் மகிழ்ந்த கள்வர் விலைமதிக்க முடியாத ஒரு மணிமாலையைப் பிள்ளையார் மீது வீசி எறிந்துவிட்டுச் சென்றனர். அம்மணிமாலை சிவநினைவில் தன்னை மறந்திருந்த பட்டினத்தடிகள் கழுத்தில் விழுந்தது. அவர் அதனை அறியவில்லை. கள்வரைத் துரத்திவந்த காவலர்கள் பட்டினத்தடிகள் கழுத்தில் மன்னரது முத்துமாலை இருக்கக் கண்டு அவரை அழைத்துச் சென்று சிறையில் அடைத்தனர். திருடனைப் பிடித்துள்ள செய்தியைக் காவலர்கள் மன்னனுக்குத் தெரிவித்தனர். திருடர்களுக்கு அந்நாட்டில் வழங்கும் தண்டனைப்படி மன்னன் ஆராயாமல் கழுவிலேற்றும்படி ஆணையிட்டான்.




பட்டினத்தடிகளும் கழுமரத்தில் அருகில் சென்று,

முன்செய்த தீவினையோ விங்ங
னேவந்து மூண்டதுவே'

எனப்பாடி இறைவனிடம் முறையிட்டார். உடனே அக்கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இதனைக் கேள்வியுற்ற மன்னன் அவ்விடத்திற்கு விரைந்து வந்து அறியாமல் செய்த பிழைக்கு மன்னிக்குமாறு பட்டினத்து அடிகளிடம் வேண்டினான். அவ்வமையமே மன்னர் மணிமுடி துறந்து பட்டினத்தடிகளின் சீடரானார். பத்திரகிரியார் எனப் பெயர் பூண்டார்.

திருவிடைமருதூர் கீழ்க்கோபுரத்தின்கீழ் பட்டினத்தடிகளும், மேல்கோபுரத்தின்கீழ் பத்திர கிரியாரும் இறைவன்பால் அன்புகொண்டு வாழ்ந்தனர். பத்திரகிரியார் பாடிய பாடல்கள், மெய்ஞ்ஞானப்புலம்பல் என்ற பெயரால் வழங்கப் பட்டுவருகின்றன. இப்பாடல்கள் 234 கண்ணிகளைக் கொண்டு பிளங்குகின்றது. பிறவாயாக்கைப் பெரியோனை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு, அவரது பாடல்கள் 'எக்காலம்?' என்ற வினாவோடு அமைந்துள்ளன. உடலோடு ஒன்றி யுள்ள இந்த உயிர் இறைவனது திருவருளைப் பெற்று அவனோடு ஒன்றியிருப்பது எக்காலமோ? என ஏங்கிப் புலம்புகிறார். அப்புலம்பலை வெளிப்படுத்தும் கண்ணிகள், 'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்பதனை நினைவூட்டுகின்றன.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் தமிழ்ப்பாட்டி ஔவையார். பெறற்கரிய பிறவியைப் பெற்றவர்கள் நான் என்ற ஆணவமும் எனது என்னும் தன்முனைப்பும் கொண்டு அலைகின்றனர். ஐம்பொறிகளின் வாயிலாகக் கிடைக்கும் இன்பத்தையே பெரிதென மதித்து இறைவனைப் புறக்கணித்து வருகின்றனர். ஐம்புல இன்பங்கள் மனிதனின் மாண்புகளை அழிக்கும் ஆற்றல் செறிந்தவை. இதனைத் திருக்குறளுக்கு உரைகண்ட பரிதியார், 'கண்டு கேட்டு.... (குறள்- 1101) எனும் குறள் உரையில், 'விளக்குக் கண்டு அழிந்த விட்டிலும், யாழ்கேட்டு அழிந்த அசுணமும், இரைகண்டு அழிந்த மீனும், செண்பக மணம் உண்டு அழிந்த வண்டும், மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும் ஒவ்வொரு புலனால் அழிந்தன' எனக் குறிப்பிட்டுள்ளார்.



இத்தகைய பெருந்தீங்கு விளைவிக்கும் ஐம்புல இன்பங்களைக் கட்டுப்படுத்தி நிலையான இன்பத்தை நல்கும் இறையருளைப் பெறவேண்டுமென ஏங்கிப் புலம்புகின்றார்.

'ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்?'

ஐம்புலன்களைத் தீயநெறியில் செலுத்தாமல் தூங்காமல் தூங்கும் யோகநெறியைக் கடைப் பிடித்து இன்பம் காண்பது எக்காலமோ? என வருந்துகிறார். மெய்வாய்கண்மூக்கு செவி என்பன ஐம்பொறிகளாகும். உடம்பால் தொட்டு உணர்ந்து, வாயால் சுவைத்து, கண்ணால் கண்டு, மூக்கால் நுகர்ந்து, செவியால் கேட்டு, அறிகின்ற அறிவே ஐம்புலநுகர்வாகும். ஐம்பொறிகளுக்கும் ஐம்புலன்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஐம்பொறியே ஐம்புலன்களுக்கு வாயிலாக இருப்பது. ஐம்பொறியின் தொடர்பில்லாமல் ஐம்புலன்கள் செயல்படுவதில்லை. ஐம்பொறி என்பது பருமையுடையது; ஐம்புலன் நுண்மையானது. நுண்மை தனக்குரிய பருமையின் துணையின்றிச் செயல்படமுடியாது. புலனற்ற நெறி உயிரில்லாத உடம்புபோன்றது. ஐம்புலன்கள் தவறான நெறியில் செல்லுகின்றபோது குறை கூறுவது, ஐம்புல இன்பங்களைப் புறக்கணிப்பதாக ஆகாது. இயற்கைப் படைப்பில் அமைந்துள்ள ஐம்புலன்களின் தன்மையை வெறுப்பது அறிவுடைமையாகக் கொள்ளமுடியாது; இயற்கைக்கு முரண்பட்ட செயலுமாகும். சித்தருள் சிறந்த சித்தரான திருவள்ளுவர்,

கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடிக் கண்ணே உள' (குறள்–1101)

எனக்கூறியுள்ளது, சிந்தனைக்குரியதாகும். புலனை நன்னெறியில் செலுத்துவதைச் சான்றோர் போற்றினர். புலனடக்கம் என்பது ஐம்பொறிகளை நெறியல்லா நெறியில் செல்லவிடாது தடுப்பதாகும். ஐம்பொறிகள் தவறான வழியில் செல்வதையே அறவோர் கண்டித்தனர். இதனையே பத்திரகிரியார்,

'ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து' எனப் பாடியுள்ளார். விழிப்பு நிலை, கனவுநிலை, தூக்க நிலை என மூன்று நிலைகள் உண்டு. கனவுநிலை– உறங்கும்போது காணும் நிலை. பருஉடல் இயங்காமல் அசைவற்றுக் கிடக்க மனமும் அறிவுமாகிய நுண்ணுணர்வு

மட்டும் இயங்குவது; கனவு கண்விழித்தவுடன் கண்ட கனவை நினைத்துப்பார்க்கமுடியும். தூக்கநிலை உடம்பையும் மனத்தையும் மறந்தநிலை. நாம் விழித்தவுடன் உடல் மனத்தையும் அறிவையும் தூண்டி ஆட்டிவைக்கிறது. விழிப்புநிலை– உடம்பும் மனமும் இயங்கிக்கொண்டிருக்கும்நிலை. விழிப்பு நிலையிலேயே நம்உயிர் பருஉடலையும் நுண் ணுடலையும் விட்டுவிலகி நிற்கும். உயிரில் உயிராய் இருக்கின்ற இறைவனை உணர்ந்து அன்பு செலுத்தினால் உயிர்உடலை விட்டுவிலகி நிற்கும். அப்படிநிற்கும் நிலையே அறிதுயில் என அழைக் கப்படும். அந்த அறிதுயில் நிலையில் தோன்றுவதே அழியாத பேரின்பமாகும். இதுவே தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுகின்ற நிலையாகும். அந்த நிலையைப் பெறுவது எந்தக் காலம் எனவினாத் தொடுத்துப் புலம்புகிறார் பத்திரகிரியார். ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ என்ற பாரதியார் வரிகளுக்குத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம் என்ற வரிகள் இலக்கியமாக அமைந்துள்ளன.

இறைவனை அடையவேண்டுமென்பதே மானிடப் பிறவியின் குறிக்கோள். அதற்கு மனம் துணைசெய்ய வேண்டும். மனம் இல்லையானால் ஐம்பொறிகளும் செயல்படமுடியாது. மனத்தின் கட்டளைக்கேற்ப ஐம்பொறிகளும் இயங்குகின்றன. ஐம்பொறிகளால் ஆகியதே இவ்வுடல். இந்த உடலை இறைவன்பால் அன்பு கொள்ளச் செய்வதே மனமாகும். இறைவனை அடைய மனதை வில்லாக்கி ஐம்பொறிகளை நாணாக்கி அறிவை அம்பாக்கி எய்து இலக்கை அடையப் பெறுவது எக்காலம் எனப் புலம்புகிறார்.

மனதை


ஒருவில்லாக்கி வான்பொறியை நாணாக்கி

எனதறிவை அம்பாக்கி எய்வ(து) இனி எக்காலம்?

மனம் ஒரு குரங்கு. மனம் அடங்கினால் எல்லா இன்பங்களும் தானாகவே எளிதில் கிடைக்கும். இதைத்தான், மனமென்னும் மாடுஅடங்கினால் தாண்டவக்கோனே

மாடெல்லாம் தானடங்கும் தாண்டவக்கோனே'


என இடைக்காட்டுச் சித்தர் பாடியுள்ளார். 'மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கவேண்டா'மென்றார் பிறிதொரு சித்தர். மனதைக் கட்டுப்படுத்தி இறைவன்பால் செலுத்தும் யோகநிலையே தூங்காமல் தூங்கிச் சுகம் பெறச் செய்வதாகும். அது எக்காலம்? நான் எம் முனைப்பும் எனது எனும் பற்றும் அற்ற நிலையில் மண்,பெண், பொன் ஆகிய மூவாசைகளை ஒழித்து, ஐம்பொறிகளையும் அடக்கி நம் உள்ளம் அறியாதவாறு ஒளிந்திருக்கும் அந்த இறைவனைக் கள்ளமற்றுத் தெளிந்து உணரவேண்டும். அவ்வாறு காணுகின்ற எந்நாள் வருமோ? என்று பத்திரகிரியார் புலம்புகின்றார். இறைவனைக் கள்ளமற்றுத் தெளிந்து அறியும் அக்காலமே பிறவிப் பிணிக்கு மருந்தாகும் நற்காலமாகும். அக்காலம் எக்காலமோ?



ஸ்ரீவராகி சித்தர் வாத்தியார் ஐயா

தேசிய விருது நல்லாசிரியர் புலவர் **அ.பாண்டியன்**
சிங்கம்புணரி

ஸ்ரீவராகி ஸ்ரீராஜராஜேஸ்வரியினுடைய பெரும்படையின் மூத்த தலைவி வராக முகத்தைக் கொண்டிருப்பதால், வராகி என்று அழைக்கப்படுகிறாள். இவள் மகிஷ வாகனத்தில் வரும் கோலத்தில், மகிஷாரூடவராகி என்றும், சிங்கத்தின்மீது வரும் கோலத்தில், சிம்ஹாரூட வராகி என்றும், புலியின்மீது வரும் கோலத்தில் வியாக்கிராரூட வராகி என்றும் போற்றப்படுகின்றாள். கிரகங்களாலும், பகைவர்களாலும் வரும் துன்பங்களை ஒருசேர தீர்த்து வைத்து, எல்லா நலன்களையும் வாரி வழங்கி, வளமுடன் வாழவைப்பவள். பூர்வ புண்ணியம் உள்ளவர்களுக்காகத்தான் ஸ்ரீவராகி வழிபாடே அமையும்.



ஸ்ரீவராகி என்ற பெயரில் மூன்று தெய்வங்கள் இருக்கின்றன. முதலாவது தெய்வம், வேதகாலத்தில் வழிபடப்பட்டது. அதர்வண வேதம், இந்த வராகிக்குப் புகழாரம் சூட்டுகிறது. மாந்த்ரீக சாஸ்திரமே ஸ்ரீவராகி உபாசனையை மையப் பொருளாகக் கொண்டுதான் திகழ்கின்றது. ஸ்ரீவராகி பூசை, உடனே பலன் அளிக்கக்கூடியது. இரண்டாவது ஸ்ரீவராகி என்பவள், பாடல்பெற்ற சிவன் கோயில்களின் பிரகாரங்களில் உள்ள பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டீஸ்வரி ஆகிய சப்தமாதர்கள் எனப்படும் 7 கன்னியர்களில் ஒருத்தி, வராக அவதாரம் கொண்டு மோனல் முகம் கொண்டவள். கலப்பை, முசகலகம், வாதம், அபயம் ஆகியவற்றைத் திருக்கரங்களிலே ஏந்தியுள்ளவள். கருநிறமுடையவளள். இவளது அரவணைப்பில் உள்ளவர்கள, எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருப்பார்கள். முறையான பயிற்சியுடனும், தீவிர வைராக்கியத்துடனும் வழிபட்டால் பக்தர்கள் வேண்டியதை விரைவாகக் கொடுப்பாள். ஆனால் முறைதவறி வழிபட்டால், மிகவும் கடுமையான தண்டனையும் கொடுப்பாள்.

இவள் தாருகாசுரன் சண்டையில் காளிக்கும், சம்பாகரன் சண்டையில் சண்டிகாதேவிக்கும், பண்டாகரன் சண்டையில் வனிதாதேவிக்கும் உதவியாக இருந்திருக்கிறாள். ஸ்ரீவராகி பற்றி வராகிமாலை என்னும் நூல் மேலும் சிறப்பித்துச் சொல்லுகிறது. ஸ்ரீவராகிமாலை நூலின் ஆசிரியர், சோழ மன்னர்களின் படைத்தளபதியும் மதுரைக்கு அருகில் உள்ள வீரசோழன் கிராமத்தில் ஜீவசமாதி கொண்டவருமான, சுந்தரேச சர்மா என்பவராவார். இந்தியாவில் ஸ்ரீவராகிக்கு என ஒரே இடத்தில்தான் பழமையானகோயில் இருக்கின்றது. அதாவது தஞ்சை பெரியகோவிலில்தான் ஸ்ரீவராகிக்கென தனிக்கோயில் இருக்கின்றது. கி.பி.1010– ஆண்டுகளுக்கு முன்பாக, தஞ்சை பெரியகோயில் கட்டப்படும் முன்பே அங்கு ஸ்ரீவராகிக்குக் கோவில் இருந்ததாகக் கர்ணபரம்பரைச் செய்திகூறுகின்றது. மூன்றாவது ஸ்ரீவராகி, வராக அவதாரம் எடுத்த திருமாலான ஸ்ரீவராக மூர்த்திக்கத் துணையாக, சங்கு சக்கரத்துடன் இருப்பாள். இப்படி எல்லாம்வல்ல ஸ்ரீவராகியின் அருளினை, பூரணமாகக் கைவரப்பெற்றவர் சிங்கம்புணரி சித்தர் முத்துவடுகு சுவாமிகள்.

இவர், இராமநாதபுரம் சேதுபதி மகாராஜாவின் மகள்வழிப் பேரன். செம்பிநாட்டு மன்னன் பூவலத் தேவனுக்கும், பட்டத்தரசி குமராயி அம்மையாருக்கும் பிறந்த ஒரே மகன். பங்காளிகளின் சூழ்ச்சியால் பாலமேட்டில் வளர்ந்தவர். ஆநிரை மேய்த்தவர். உழவுத் தொழிலில் விழுந்து சண்டித்தனம் செய்த எருமைகளைச் சுண்டி எழச்செய்து, அந்தக் கலப்பையின் மேழியை யாரும் பிடிக்காமலேயே, தானேஉழுதுவரச்செய்தவர். கருநாகப்பாம்பின்மேல்

தலைவைத்துக் கைவைத்துக் கள்ளி அடியில் பள்ளி கொண்டவர். ஆசிரியர் பாடத்தையும் முன்கூட்டியே மொழிந்தவர். ஜெகநாதப்பிள்ளையின் முதுகில் புறப்பட்டிருந்த ராஜபிளவையினை, கடைக்கண்ணின் பார்வையாலேயே கணப்பொழுதில் துடைத்தவர். மக்களைப் பலிகொண்ட பேதிநோயை, ஒரே நாளில் ஒழித்தவர். ஆட்டுக்கிடைகளுக்கு நரிகளையும், ஓநாய்களையும் காவல்காக்கச் செய்தவர். பீதாம்பரக் கொள்ளையர்களைத் திரும்பிப் பார்க்காமல் ஓடச் செய்து, ஊரைக் காப்பாற்றியவர். பூமிக்குள் புதைக்கப்பட்டிருந்தும், வானில் மிதந்து வந்தவர். செம்பிய நாட்டில் அன்று அரசாட்சி செய்யப் பிறந்திருந்தும், சிங்கம்புணரியில் இன்று அருளாட்சி செய்து கொண்டிருப்பவர். மக்கள் இவரை ஐயா என்று அன்புடன் அழைப்பர். சித்தர் ஐயா என்று சிந்தை மகிழ வணங்குவர். வாத்தியார் ஐயா என்று வாய்மணக்கப் போற்றப் பெற்றவர்.



சித்தர் முத்துவடுகேசர் தம்மனையுள், பூஜை அறை ஒன்றை அமைத்தார். அதில் தன்னுடைய விருப்ப தெய்வமான அன்னை வராகியை எழுந்தருளச் செய்து, ஆழ்ந்து வழிபட்டார். ஸ்ரீவராகியுடன் விநாயகர், முருகன், திருமால், வீரபத்திரர், பைரவர், மாகாளபைரவர் ஆகிய தெய்வங்களையும் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்து வந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அங்கு தனிமையில் இருந்து சிறப்புப் பூஜைகள் செய்வார். அப்போது மண்டை ஓட்டில் ரத்தத்தையும் மதுவையும் ஊற்றிப் பிசைந்த சோற்று உருண்டை மூன்றுடன், பச்சை ஈரலையும் வராகிமுன் படையல் செய்வார். தம் உடலில் ஆடையேதுமின்றி அமர்ந்து கொண்டு முறையான பயிற்சியுடனும், தீவிர வைராக்கியத்துடனும் தன்னிலை மறந்து அன்னை வராகியை நினைத்து தியானம் செய்வார். அப்போது வராகி அன்னை இவரை முழுமையாக ஆட்கொண்டு அவள்முன்வைத்த அந்தப் படையல்கள் அனைத்தையும் சித்தர் மூலமாக அள்ளி எடுத்து, உண்டு மகிழ்வாள். இது வராகியும் சித்தரும் ஒன்றாகிவிட்ட உயர்ந்த நிலை அது.

சித்தர் பெருமான் முத்துவடுகேசர் ஒருநாள், சிங்கம்புணரியை விட்டு, தன் மாமன் ஊராகிய நெட்டூரைச் சேர்ந்த குறிஞ்சிக்குச் சென்றுவந்தார். திரும்பி வரும்போது சிவகெங்கை வழியாக வந்தார். அச்சமயம் அந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த குழந்தாபுரி வேந்தன், மெய்ஞான சாதனம் மிக்கவன், கௌரி வல்லப ராஜேந்திரன், அன்னை பரா சக்தியின்மீது அளவற்ற அன்பு கொண்டவன். அவன் தன் அருமை மைந்தனுடன் குதிரைகள் பூட்டிய சாரட்டில் வந்து கொண்டிருந்தான். சித்தர் வந்தசாலையிலேயே அந்த சாரட்டு மிகவேகமாக வந்து கொண்டிருந்தது. நாடாளும் மன்னன் வந்தால், மக்கள் வழிவிட்டு வணக்கம் செய்வது மரபு. ஆனால் சித்தர் வழிவிட்டு ஒதுங்காமலும், வணக்கம் செய்யாமலும், வந்து கொண்டிருந்ததைக் கண்ட மன்னன், சினத்துடன் சாரட்டைச் சித்தர்மீது ஏற்றுவதற்காகக் குதிரையைத் தட்டி ஏவினான். விரைவாகப் பாய்ந்த அந்தக் குதிரைகள், சித்தர் பெருமானை நெருங்கியவுடன் திகைத்து நின்றன. திசைமாறி மருண்டு ஓடின. சாரட்டு வண்டி சாலை ஓரத்தில் இருந்த பெரிய பள்ளத்தில் உருண்டு வீழ்ந்து நொறுங்கியது.

மன்னனுக்கு பலத்த காயங்கள். ஆனால் மன்னனின் மகன் கழுத்தில், சாரட்டின் சக்கரம் ஏறி நசுங்கி, தலை பின்புறமாகத் திரும்பிக் கொண்டது. முயன்று எழுந்த மன்னன், தனது அருமை மகனின் அவல நிலையைக் கண்டு கலங்கித் துடித்தான். அரண்மனையில் வைத்து ராஜவைத்தியர்கள் அனைவரும் வெகு விரைவாகச் சிகிச்சை அளித்தனர். எவ்வளவோ முயற்சி செய்தும் மைந்தனின் திருகிய தலையைச் சரிசெய்ய முடியவில்லை. மன்னன் புலம்பி கதறியபோது, சித்தர் பெருமான்

அரசர் முன்வந்தார். சித்தரைக்கண்ட மன்னன், சுவாமி பாவியேனின் பிழையைப் பொறுத்தருள வேண்டும். தாங்கள்தான் என் குலக்கொழுந்தைக் காப்பாற்றித் தரவேண்டும்" என வேண்டி, சித்தரின் திருவடிகளில் விழுந்தான்.

அப்போது சித்தர் மன்னனிடம், "நான் செய்யும் வைத்திய முறைக்கு நீ சம்மதித்தால் உன் மகன் கழுத்தை நேராக்கிக் காப்பாற்றுகிறேன்" என்றார். மன்னனும், "தாங்கள் என்ன செய்தாலும், எனக்குச் சம்மதமே" என்று வணங்கினான். அப்போது சித்தர் ஆகாயத்தைப் பார்த்தார். அன்னை வராகியை ஆவேசமாக அழைத்தார். உடனே வாரகி, சித்தருக்குள் நிறைந்தாள். சித்தர் மன்னன் மகனை நிலத்தின்மேல் கிடத்தினார். குழந்தையின் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரைக்கும் செருப்பு அணிந்த காலால் ஏறி, இறங்கி நடந்தார். மைந்தனின் கழுத்தின் மேலே நின்று கொண்டு, சூலாயுதம் ஏந்திய தேவியென சுழன்று, சுழன்று ஆடினார். பின் இறங்கி, திருநீற்றை அள்ளி, அம்மைந்தன் கழுத்தின்மீது தூவினார். மெல்லத் தடவினார். என்னே அதிசயம். பார்த்துக் கொண்டிருந்தபொழுதே, திருகி இருந்த கழுத்துத் திரும்பி மெல்ல நேராகி சரியானது. தூங்கி விழித்தவன் போல மைந்தன், மகிழ்ச்சியோடு எழுந்து மன்னனின் மடியிலே பாய்ந்து அமர்ந்து கொண்டான்.

சிவகங்கை அரசசபை தர்பார் மண்டபத்திலே நடந்த இவ்வற்புதத்தை, கண்முன்னே நேரில் கண்ட மன்னன் ராஜேந்திர பூபதி, சித்தர் வடுகேசரை சிரந்தாழ்த்தி வணங்கிப் போற்றினான். தன் மகனுக்கு உயிர் கொடுத்த அருள் வள்ளலுக்கு ராஜேந்திர பூபதி அரியாசனம் கொடுத்துத் தக்க சிறப்புகள் செய்தான். சித்தரின் பெருமையை மேலும் காண விரும்பினான். சித்தரை நோக்கி, "இவ்வரண்மனையின் மேல்தளத்தில், கொடிய கருநாகம் ஒன்று இருக்கிறது. அதனால் அனைவரும் அச்சப்படுகின்றனர்" என்று மன்னன் கூறத்தொடங்கினான். மன்னன் தனது பேச்சை முடிப்பதற்குள் அந்த மாபெரும் சபையின் நடுவே, மேல்தளத்தில் இருந்த கருநாகம், பொத்தென்று கீழே விழுந்து பல துண்டங்களாகச் சிதறியது. இதனைக் கண்ட மன்னன் அச்சமுற்றுத் திகைத்தான். "சித்தரின் ஆற்றலைச் சோதித்து அறிய நினைத்தது என் அறியாமையே" என்று தன் மனத்துள் நினைத்துக் கொண்டே, 'சுவாமி, இந்தத் துண்டுகளை என்ன செய்ய வேண்டும்?' என்று பணிந்து கேட்டான். அதற்கு சுவாமிகள் அத்துண்டங்களையெல்லாம் சமைத்துவரச் சொல்லி அனைத்தையும் சாப்பிட்டும் தீர்த்தார். அனைவரது அச்சத்தையும் அடியோடு போக்கினார். மன்னனின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

உடனே, சிவகெங்கை நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூணச்செய்தான். முரசுகள் முழங்க, வெண்சங்குகள் ஒலிக்க, மக்களின் வாழ்த்துகள் விண்ணைப் பிளக்க, நம் சித்தர் பெருமானைத் தம் பட்டத்து யானைமீது ஏற்றி உடனிருந்து கவரிவீசிப் பவனிவரச் செய்தான். இவ்வாறு நகர் உலாவந்த நம் சித்தரை, அரண்மனைக்குள் வரவேற்று, பொன்னாசனத்தில் அமர்த்தி, ராஜமரியாதை செய்தான். பின்னர் சித்தரிடம், இன்றுமுதல் தாங்களே எங்கள் குலதெய்வம். என் நாடு, நகரம், செல்வங்களையெல்லாம் தங்கள் திருவடிகளிலேயே ஒப்படைக்கிறேன். என்று மன்னன் கேட்டுக் கொண்டான். அதற்கு நம் சித்தர், நிலையில்லாத இந்தச் செல்வங்களை நீ தருவதற்கும், அதனை நான் பெறுவதற்கும் ஒன்றுமில்லை. நான் விரும்புகிறவற்றையெல்லாம் எப்போதும் தருவதற்கு சிங்கை வளநாடு எனக்குள்ளது. நான் சென்று வருகின்றேன். எனக்கு விடைகொடு என்று பொன்னாசனத்திலிருந்து எழுந்தார். அவருக்கு மறுமொழி கூற இயலாத மன்னன், சித்தரிடம் கொண்ட பக்தியை மட்டும் பரிசாகக் கொடுத்து விழிநீர் பெருக விடைகொடுத்து, கைகூப்பி நின்றான்.

வாசம் உள்ள ஒரு மலரை, மலர்வேறு வாசனை வேறு என்று எப்படிப் பிரிக்க முடியாதோ, எரியும் நெருப்பினை, நெருப்புவேறு, ஒளிவேறு என்று எப்படிப் பிரிக்க முடியாதோ அப்படியே வராகி வேறு,



சித்தர் வேறு என்று பிரிக்க முடியாத பெருநிலை பிரகாசித்தது. தன் அறை பூஜையின்போது படைக்கப்பட்ட படையல்களையெல்லாம் வாரி வாரி உண்ணும்போதும், மன்னன் மகனது கழுத்தின்மேல் நின்று சூலாயுதம் ஏந்திச் சுழன்று சுழன்று ஆடியபோதும், சித்தருக்குள்ளே வராகி மறைந்து நின்றாள். சித்தரே வராகியானார். வாழ்வாங்கு வாழ்ந்த நம் வராகி சித்தரின் அருள்புகழ் இன்று வையகமெங்கும் மணக்கின்றது. இன்றும் சிங்கம்புணரி சித்தர் முத்துவடுகநாதராகிய ஸ்ரீவராகி சித்தர் வாத்தியார் ஐயாவின் ஜீவாலயத்தின்,

ஏவல், பில்லி, சூனியங்களால் இற்றுப் போனவர்கள்–

மந்திர தந்திரங்களால் மயங்கிக் கிடப்பவர்கள்–

மனநிலை சரியில்லாதவர்கள்–

பேய் பிசாசு அரட்டிக் கோளாறுகளால் அல்லற்படுபவர்கள்–

வீண்வம்புகள் விரையச் செலவுகளால் வேதனைப்படுபவர்கள்–

தொழில் மந்தம் உடையவர்கள்–

துவங்கிய வேலை தடைப்பட்டு நிற்பவர்கள்–

திருமணம் தள்ளிக்கொண்டே போகிறவர்கள்–

குழந்தைப் பாக்கியம் இல்லாமல் கண்ணீர் விட்டுக் கொண்டு இருப்பவர்கள்–

கல்விக்காகவும் உத்யோகத்திற்காகவும் காத்துக் கொண்டு இருப்பவர்கள்–

நீக்க முடியாத நோய்களால் நிம்மதி இழந்தவர்கள்–

நீதிமன்றம் ஏறி நைந்து போனவர்கள்–

குடும்பத்தில் அமைதி இல்லாமல் குமுறிக் கொண்டிருப்பவர்கள்–

நாகதோஷம் செவ்வாய் தோஷம் மற்றும் பல கிரக தோஷங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நலிந்து கொண்டிருப்பவர்கள்–

பிரிந்து வாழும் கணவன், மனைவி இன்னும் வெளியில் சொல்ல முடியாத பல வேதனைகளால் வெந்து கொண்டிருப்பவர்கள்–

ஐயாவிடம் வந்து அழுது முறையிட்டுக் கண்ணீரால் நனைக்கின்றவர்கள் அனைவருமே சிறிதுநாட்களில் சித்தர் ஐயாவின் கருணையினாலும் அற்புதப்பேராற்றலினாலும் தம் குறைகளையெல்லாம் கரைந்து போய், கும்பிட்ட கரத்தோடு ஆவேச மகிழ்ச்சி பொங்க, ஆலயம் நோக்கி, அலையலையாக வந்து ஐயாவின் பூஜையிலே ஆனந்தமாய் அமர்கின்றார்கள். நிம்மதி அடைந்தோர் கூட்டம் நிரம்பி வழிகின்றது.

அன்புடன் உருகி நினைந்திடுவோம்– நம்
ஐயாவின் அருள்மழையில் நனைந்திடுவோம்!

ஓம் சிங்கம்புணரி சித்தர் திருவடிகளே சரணம்! சரணம்!! சரணம்!!!



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளார்கள்

ஒளிநெறிப்பிழம்பு **தவத்திரு ஊரன் அடிகள்**
வடலூர்

குன்றக்குடி அடிகளார் என்றால் எல்லாருக்கும் தெரியும். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 45–ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்றால் எல்லாருக்கும் தெரியாது. சைவ நெறியாளர்கள் சிலருக்கே தெரியும். இருவரும் ஒருவர்தான். குன்றக்குடி அடிகளார் என்பது சுருக்கமான பெயர். நாடறிந்த பெயர். பின்னே சொன்னது ஆதீன சம்பிரதாயப் பெயர். சம்பிரதாயங்களையெல்லாம் கடந்து சமரச வாதியாய் சமுதாய முனிவராய்த் திகழ்ந்தவர் ஆதலின் குன்றக்குடி அடிகளார் என்று அன்பாக அழைக்கப் பெற்றார். குன்றக்குடி என்று ஊர்ப்பெயரைக் கூடக் குறிப்பிட வேண்டியதில்லை. 'அடிகளார்' என்று சொன்னாலே ஒரு காலத்தில் குன்றக்குடி அடிகளார்தான்.



இக்காலத்தில் எல்லோரும் அடிகளார் என்று பெயரிட்டுக் கொள்ளுகிறார்கள். முந்திய தலைமுறையில் ஞானியார் அடிகள் இன்றைய நமது தலைமுறையில் குன்றக்குடி அடிகளார் ஆகிய இருவரும் அடிகளார் என்ற பெயரால் சிறந்தவர்கள்.

ஞானியாரடிகள் என்றால் சென்ற தலைமுறையில் எல்லாருக்கும் தெரியும். திருக்கோவலூராதீனம் 5–ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசார்ய சுவாமிகள் என்றால் சைவர் சிலருக்கே தெரியும். இருவரும் ஒருவர்தான். அவ்வொருவரை ஞானியாரடிகள் என்ற பெயரில் நாடறிந்த நாவலராக அனைவரும் அறிவர். பின்னே சொன்ன நீண்ட பெயரால் அவரை ஆதீன மடாலயத் தொடர்புள்ள சிலரே அறிவர்.

இருவரும் புரட்சி மடாதிபதிகள், "மாடல் மடாதிபதிகள். அடிகளார் சைவ மடாதிபதி. ஞானியார் வீரசைவ மடாதிபதி. இருவருமே அவரவர் காலத்தில் மக்கள் மடாதிபதிகளாக விளங்கினர். இருவரும் நாடு முழுவதும் விரிவாகச் சொற்பொழிவுச் சுற்றுப்பயணம் செய்தவர்கள். ஞானியாரடிகளின் சுற்றுப்பயணம், பல்லக்கு யாத்திரை, குன்றக்குடி அடிகளாரின் சுற்றுப்பயணம், கார்ப்பயணம் இவ்விருவரைப் போன்று விரிவாகச் சுற்றுப்பயணம் செய்த மடாதிபதிகள் வேறு யாரும் இலர். தேவாரம் பாடிய மூவரும் ஊர் ஊராகச் சென்று பாடிப் பரவியது போன்று இவ்விரு மடாதிபதிகளும் ஊர்ஊராகச் சென்று சொற்பொழி வாற்றிச் சைவத்தைப் பரப்பினார்கள்.

சைவத்தைப் பரப்பியது மட்டுமின்றிச் சமரசத்தையும் பரப்பினார்கள். சைவஉலகுக்கு வெளியே பிற சமயத்தார்களிடத்திலும் இவ்விருவருக்கும் நன்மதிப்பு இருந்தது.

வீரசைவ மடாதிபதியாகிய ஞானியாரடிகள் ஒருசமயம் புதுச்சேரிக்குச் சென்றிருந்தபோது, புதுச்சேரிக் கிறிஸ்துவப் பிரமுகர் ஒருவர் ஞானியாரடிகளைத் தம் இல்லத்திற்கு அழைத்தார். ஞானியாரடிகளும் அக்கிறிஸ்தவ அன்பர் இல்லத்திற்குச் சென்றார்.

அவ்வன்பரின் விருப்பப்படி சீதா கல்யாணம் என்ற தலைப்பில் அங்கு வந்திருந்த அன்பர்களிடையே ஒரு சொற்பொழிவும் செய்தார். வீரசைவமடாதிபதி, கிறிஸ்தவர் வீட்டில் வைணவச் சார்பான சொற்பொழிவாற்றியது அதற்கு முன்னும் பின்னும் நடைபெறாத ஒரு நிகழ்ச்சி. ஞானியாரடிகளிடம் கிறிஸ்தவ கன்னியாஸ்திரீகள் சிலர் தமிழ்ப் பாடங்கேட்டதுண்டு.



கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காட்டில் நிகழ்ந்த பெரியதோர் மதக் கலவரத்தில் அமைதியான முறையில் சமாதானத்தை நிலைநாட்டிய அடிகளார் அதன்பின் அமைத்தது திருவருட்பேரவை என்ற ஒரு பொதுஅமைப்பு. இந்து, கிறிஸ்தவர், இஸ்லாம் என்ற மும்மதத்தார்க்கும் அடிகளார் அமைத்த திருவருட்பேரவையில் இடம் உண்டு.

அமுதன் அடிகள் என்ற கிறிஸ்தவப் பாதிரியார் அடிகளாரின் வரலாற்று நூல் ஒன்றையே எழுதியிருக்கிறார். இப்போது திருவருட்பேரவையின் செயலாளராக இருக்கிறார்.

பெரியார் ஈ.வே.ரா தாம் நடத்திய குடியரசுப் பத்திரிகையின் தொடக்கவிழாவை ஞானியாரடிகளைக் கொண்டே நடத்தினார். பெரியாரின் குடியரசு இதழ் ஞானியாரடிகளால் தொடங்கி வைக்கப்பெற்றது. பெரியாருக்கும் குன்றக்குடி அடிகளாருக்கும் இருந்த நட்பு நாடறிந்ததே.

தமிழ்த்தென்றல் திரு.வி.க மடங்களின் பக்கம் எட்டியே பார்க்காத சீர்திருத்தச் சைவர். ஞானியார் அடிகள் ஒருவரை மட்டுமே அவர் மதித்து வணங்கினார் என்றால் நிலந்தோய வீழ்ந்து வணங்குவது, இளமையில் அச்சுக்கோக்கும் தொழிலாளியாக இருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களுக்குத் தமிழுணர்வு ஏற்படக் காரணம் ஞானியாரடிகளின் சென்னைச் சொற்பொழிவுகளே. சிலம்புச் செல்வரே இதனை எழுதியிருக்கிறார்.

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் பழமையான சைவ மடங்களில் ஒன்று. மெய்கண்டார், அருள்நந்தி சிவனார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய சந்தானகுரவர் நால்வரில் இரண்டாமவராகிய அருள்நந்தி சிவாசாரியாரின் வழியில் வருவது. தெய்வசிகாமணி என்ற அருளாளரால் திருவண்ணாமலையில் ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன் நிறுவப் பெற்றது. பின்னர் திருவண்ணாமலையிலிருந்து பிரான்மலைக்குச் சென்று அதன்பின்னர் குன்றக்குடிக்கு வந்து குன்றக்குடியிலேயே நிலைத்து விட்டதால் ஆதீனத்தின் பெயர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் என்று வழங்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. நிறுவனரும், ஆதீன முதற்குரவருமாகிய தெய்வசிகாமணிக்குப் பின் 45 பட்டம் மடாதிபதிகள் வந்தனர். 45-ஆம் பட்டம் மடாதிபதிதான் குன்றக்குடி அடிகளார். 46ஆவது மடாதிபதி இன்று நம்மிடையே விளங்கும் பொன்னம்பல அடிகளார்.

குன்றக்குடி அடிகளார் நிறுவிய அமைப்புகளில் அருள்நெறித் திருக்கூட்டம், திருக்குறட்பேரவை, திருவருட்பேரவை ஆகிய மூன்றும் சமுதாயத்துக்குச் சிவபெருமானின் மூன்று கண்கள் போன்றவை. தமிழின் ஆயுத எழுத்துச் சுழிகள் போன்றவை.

அடிகளார் சட்ட மேலவை உறுப்பினராக இருந்தார். குன்றக்குடி ஊராட்சியின் தலைவராக இருந்தார். அடிகளார் உருவாக்கிய குன்றக்குடி அபிவிருத்தித் திட்டம் மாவட்ட அளவில் வளர்ந்தது. மத்திய அரசின் கவனத்தையும் ஈர்த்தது. குன்றக்குடி மாதிரி அபிவிருத்தி (குன்றக்குடி பேட்டர்ன்) என்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியாலும் பாராட்டப் பெற்றது.

ஆலயங்கள் சமுதாய மையங்கள், சைவசித்தாந்தமும் சமுதாய மேம்பாடும் என்பன போன்ற சிந்தனைத்திறம் வாய்ந்த சீரிய நூல்களை அடிகளார் எழுதினார். அடிகளாரின் அறிவுப் பணிகளையும் சமுதாயப் பணிகளையும் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.



அடிகளார் ஒரு சகாப்தம். விக்கிரமசகாப்தம், சாலிவாகன சகாப்தம் போலச் சைவ உலகில் குன்றக்குடி அடிகளார் சகாப்தமும் ஒரு



சகாப்தம்.

அந்தச் சகாப்தத்தில் இப்போது அடிகளார் பணியைத் தொடர்பவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார். ஆதீனத்தின் 46-ஆம் பட்டம்.

அடிகளார் எந்த வழியில் சென்றாரோ, அதே வழியில் இவரும் சென்று கொண்டிருக்கிறார். இவர் இரண்டாம் குன்றக்குடி அடிகளார். பெயரளவில் அவரினும் வேறுபடுத்திக்காட்ட வேண்டிக் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்று வழங்கப் பெறுகிறார்.

'குன்றக்குடி, அடிகளார்' என்ற இரண்டு சொற்களுக்கு இடையே பொன்னம்பலம் என்ற ஒரு பெயரும் சேர்ந்து மூன்று பதமாய், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்று வழங்கி வருகிறது. அண்மையில் புதுக்கோட்டைத் திருவள்ளுவர் பேரவையினர் குன்றக்குடி அடிகளார் என்றே அழைப்பிதழில் அச்சிட்டு விட்டனர். விழாவுக்குத் தலைமை வகித்த நாமும் அதை வழிமொழிந்து இனி அப்படியே வழங்கலாம் என்று வாழ்த்தினோம்.

பிரான்மனை, திருப்புத்தூர், திருக்கோளக்குடி, தேனாட்சியம்மன் கோயில், குன்றக்குடி என ஐந்து கோயில்கள் குன்றக்குடி ஆதீன நிர்வாகத்துக்கு உண்டு. ஐந்து கோயில்களின் நிர்வாகமும் நன்றாக நடக்கிறது. ஆதீனப் பணிகளும் குறைவின்றி நிறைவாய் நடைபெறுகின்றன. சமுதாயப் பணிகளும் வளர்ந்து வருகின்றன.

பொன்னம்பல அடிகளாருக்கு, இன்றைய குன்றக்குடி அடிகளாருக்கு முன்பே 'கலைமாமணி' பட்டம் வழங்கப் பெற்றாயிற்று. அண்மையில் மாநில அரசு திருவள்ளுவர் விருதை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்ப் பல்கலைக்கழகம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும் என்பது எம் விருப்பம்.

குன்றக்கு அடிகளார் வழியில் பொன்னம்பல அடிகளார். இவர் வழியில் நாடு நடப்பதாக, இன்றைய சைவ உலகுக்கு, தமிழ் உலகுக்கு வழிகாட்டி குன்றக்குடி அடிகளார்.


வாழ்க வளர்க!



தவத்திரு பேரூரடிகள் அருள்வரலாறு

கா. திருநாவுக்கரசு
முதுநிலை விரிவுரையாளர்,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலைஅறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர்

பேரூராதீனப் பெரியவர் அருள்திரு சாந்தலிங்க அடிகள் அவர்களின் பிறப்பு புண்ணியப்பிறப்பு எனப் போற்றத்தக்கதாகும். இவர் பிறந்த ஊர் அவிநாசி வட்டம், முதலிபாளையம் என்னும் ஊராகும். இவருடைய தந்தையார் தவத்திரு சிவராமசாமி அடிகள் என்னும் பெயரினர். இவர் சிரவணபுரம் கௌமார மடலாயத்தைத் தோற்றுவித்த தவத்திரு இராமானந்த அடிகளோடு தொடர்புடையவர். கீரணத்தம் தவத்திரு மருதாசல அடிகளைக் குருவாகக் கொண்டவர். இராமானந்த அடிகளையும் மருதாசல அடிகளையும் தமது தோட்டத்தில் தங்கியிருக்கச் செய்து பணிவிடை புரிந்து அவர்களாலேயே விநாயகப் பெருமான் திருக்கோயில் அமைத்துக் கொடுக்கப் பெற்று விநாயகர் வழிபாடும் வேற்பூசையும் செய்து வந்தவர்கள். தவத்திரு சிவராமசாமி அடிகள் ஆவார். இவருடைய அருட்துணையாக அமைந்தவர் கப்பிணி அம்மையார். கணவனாருடைய சமயநெறி வாழ்வுக்கு உறுதுணையாய் 'மனையறத்தின் வேராய்' அமைந்து விளங்கியவர்கள். இவர்களே சமயமும் தமிழும் தழைப்பதற்கென்று பேரூரடிகளை ஈன்றெடுத்த புண்ணியம் உடையவர்கள். இப்பெற்றோர்களின் பெருமையினையும் புண்ணியத்தினையும் விளக்கும்படியாக இவர்களுக்கு மூன்றாவது மகவாக, குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகம் நாளில் அவதரித்தார் நமது அடிகள். இவரது பிறப்பு 'தவஞ் செய்த நற்சார்பில் வந்துதித்த ஞானத்தை நண்ணுதல்' எனவரும் மெய்கண்டாரின் திருவாக்கிற்கும்,



"........................மேலாய பதங்கட்கு
ஈட்டிய புண்ணிய நாதராகி இன்பம்
இனிது நுகர்ந்து அரனருளால் இந்தப்பார்மேல்
நாட்டிய நற்குலத்தினில் வந்து அவதரித்துக் குருவால்
ஞானநிட்டை அடைந்து அடைவர் நாதன் தாளே"

எனவும் வரும் அருணந்தி சிவாச்சாரியாரின் அருள்வாக்கிற்கும் ஏற்பத் தோன்றிய அருட்பிறப்பாகும்.

அடிகள் அவர்கள் இளமையில் கிராமத்து வழக்கப்படியே தொடக்கக் கல்வி கற்றுத் தமது 15-ஆவது வயதில் 1941-ஆம் ஆண்டு சிரவணபுரம் கௌமார மடாலயத்திற்கு வந்து மடாலயத் திருப்பணிகள் செய்து வரலாயினர். நாளடைவில் தவத்திரு இராமந்த அடிகளின் திருவருளுக்குரியவராய் அவருக்கு அணுக்கத் தொண்டராய் இருக்கும் பேறு பெற்றனர். அங்கு தவத்திரு கந்தசாமி அடிகளிடம் சமய இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார். கவிபாடுவதிலும் வல்லவராயினார்.

கல்வி

அடிகள் 1947-ஆம் ஆண்டு தமிழ்க்கல்வி பயிலும் பொருட்டுத் தென்னாற்காடு மாவட்டத்தில் புகழ்பெற்ற முருகன் தலமாகிய மயிலத்தில்உள்ளதிருப்பெருந்திரு சிவஞானபாலய அடிகள் தமிழ்க்கல்லூரியில் பயின்றார். மயிலம் தமிழ்க்கல்லூரியைத் தோற்றுவித்தவரும் மயிலம் பொம்மபுர ஆதீனகர்த்தருமாகிய பதினெட்டாம் பட்டம் திருப்பெருந்திரு சிவஞானபாலய அடிகள் முன்னமே இராமானந்த அடிகளின் பெருமையை அறிந்தவராதலின் பேரூரடிகளிடம் மிகவும் அன்பும் மதிப்பும் உடையவராக இருந்தார். பேரூரடிகள் அவர்களும் ஆதீனகர்த்தரின் நம்பிக்கைக்குரியவராகவும் ஆசிரியர்களின் அன்புக்குரியவர்களாகவும் விளங்கி ஐந்தாண்டுகள் பயின்று 1952-இல் சென்னைப் பல்கலைக்கழகத்துப் புலவர்கள் பட்டத்தினைப் பெற்றார்கள்.

அருளாட்சி ஏற்பு

அடிகள் தமிழ்க்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த பொழுதேபேரூர்அருள்மிகுசாந்தலிங்கப்பெருமானின் திருமடத் தலைவராக விளங்கிய தவத்திரு ஆறுமுக

அடிகள் பேரூரடிகளைத் தம் திருமடத்தில் தமக்கு அடுத்த பட்டத்துக்குரியவராக ஆக்கித் தருமாறு தவத்திரு இராமானந்த அடிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். பேரூர் திருமடத்திற்குக் கௌமார மடத்தின் தொடர்புடையவரும் தவத்திரு இராமானந்த அடிகளின் திருவருளுக்கு உரியவருமே தலைவராக வருவது வழக்கமாக அமைந்திருந்தது. அவ்வழக்கப்படி தவத்திரு இராமனந்த அடிகளின் அருளாணையினால் பேரூரடிகள் சாந்தலிங்கர் திருமடத்தின் இளவரசு பட்டத்தினை 1905-ஆம் ஆண்டு (விரோதி – மாசி 20) ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பதினெட்டாம் பட்டம் திருப்பெருந்திரு சிவஞானபாலய அடிகளிடம் பேரூரடிகள் வீரசைவ நெறியில் அங்கலிங்கம் ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் 1967-ஆம் ஆண்டு தவத்திரு ஆறுமுக அடிகளிடமிருந்து முழுப்பொறுப்பினையும் பெற்றுக் கல்லாடை புனைந்த அருளாட்சி செலுத்தத் தொடங்கினார்கள். கொங்குநாட்டின் பேரூரில் அமைந்துள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் வீரசைவநெறி பேணும் திருமடமாகும்.

பேரூரடிகளின் கல்விப் பணிகள்

உயர்நிலைப் பள்ளி

பேரூரடிகளின் பணிகளில் குறிப்பிடத்தக்கது கல்விப் பணியாகும். கி.பி. 1951ஆம் ஆண்டு 6ஆம் வகுப்புவரை செயல்படும் உயர்தொடக்கப்பள்ளியை அரசு உதவியுடன் தொடங்கினார். அதில் 1952, 53ஆம் ஆண்டுகளில் 7,8ஆம் வகுப்புகள் இணைக்கப்பட்டன. 1955ஆம் ஆண்டு பள்ளிக்கெனவோர் கட்டிடம் எழுப்பினர். 1960-இல் 9ஆம் வகுப்புடன் கூடிய உயர்நிலைப்பள்ளி தனியாகத் தொடங்கப் பெற்றது. நடுநிலைப் பள்ளியாக இருந்ததை 1980ஆம் ஆண்டில் 9,10,11 வகுப்புகளைக் கொண்ட உயர்நிலைப் பள்ளியாக அரசு உதவியுடன் விரிவுபடுத்தினார்.

மேல்நிலைப்பள்ளி

மேல்நிலை வகுப்புகள் பல்வேறு பாடப்பிரிவுகளைக் கொண்டு 1990 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கின. இவற்றோடு 6 முதல் 10 வரையிலான ஆங்கில வழிக்கல்வி அளிக்கும் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன.

ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி

தவத்திரு சாந்தலிங்க அடிகளின் துணைவியாராக அமைந்தவர் ஞானாம்பிகை அம்மையார் ஆவார். அம்மையாரின் நினைவாக 1977ஆம் ஆண்டு ஞானாம்பிகைநுழைவுரிமைப்பள்ளியைப்பேரூரடிகள் தொடங்கினார். தற்போது ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பள்ளியில் பயிலுகின்றனர்.

தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ்ப்பள்ளி

தமிழ்மொழியை வளர்க்கும் பாங்கில் பேரூரடிகள் பல பணிகளைச்செய்து வருகின்றனர். அவற்றுள் ஒன்றாக அமைந்தது, அடிப்படைக் கல்வி முதல் அனைத்துப் பாடங்களுக்கும் தமிழ்மொழியிலேயே நடத்தப்படும் தாய்த்தமிழ்ப் பள்ளி ஆகும். தவத்திரு ஆறுமுக அடிகள் பெயரால் 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளி பேரூரடிகளாரின் தலைமையில் நடைபெற்று வருகிறது.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலையறிவியல் தமிழ்க்கல்லூரி

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலையறிவியல் தமிழ்க்கல்லூரி என்ற பெயரில் தற்போது இயங்கிவரும் கல்லூரி தொடக்கத்தில் தமிழ்க்கல்லூரியாக இருந்தது. இதுவே கொங்குநாட்டில் அமைந்த முதல் தமிழ்க்கல்லூரியாகும். கொங்கு நாட்டில் தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்கவேண்டும் என்னும் எண்ணம் கோவை நகரத்துப் பெருமக்களிடம் நெடுநாட்களாக இருந்தது. ஆகவே, ர.சு. சண்முகஞ் செட்டியார், சைவத்திரு கோ.ம. இராமச்சந்திரஞ் செட்டியார், வெ.சி. சுப்பையக் கவுண்டர் ஆகியோருடன் கலந்து எண்ணித் தமிழ்க்கல்லூரி தொடங்குவதற்குண்டான முயற்சிகளைப் பேரூரடிகள் மேற்கொண்டார். அதற்கான விண்ணப்பமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு ஆற்காடு இலக்குமண சுவாமி அவர்கள் திருமடத்தைப் பார்வையிட்டார். பிறகு தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரிக் கழகம் என்னும் பெயரால் 31.12.1952இல் கழகம் பதிவு செய்யப்பட்டது. பிறகு சென்னைப் பல்கலைக்கழகப் பார்வையாளராக டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் பேரூராதீனம் வந்து கல்லூரி தொடங்குவதற்கேற்ற அமைப்புகளைப் பார்வையிட்டுப் பல்கலைக்கழகத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். ஏ. 2076 நாள் 26.05.1953 என்ற அனுமதியோடு 24.06.1953ஆம் ஆண்டு பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலில் தமிழருச்சனையோடு தமிழ்க்கல்லூரியைப் பேரூரடிகள் தொடங்கினார். தமிழ்க் கல்லூரிக்குச் சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சராக திரு ர.க. சண்முகஞ் செட்டியார் தலைவராக இருந்தார். திரு. வே.சி. சுப்பையக்கவுண்டர் துணைத்தலைவராக இருந்தார். பேரூரடிகள் 1988ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். தற்போது கல்லூரியின் செயலராகவும், கழகத்தலைவராகவும் செயல்படுகின்றனர்.

தமிழ்க்கல்லூரியில் புலவர் பட்டப்படிப்பாக இருந்த தமிழ் மேற்படிப்பு பேரூரடிகளது முயற்சியினால் 1975-ஆம் ஆண்டு இளம் இலக்கியவியல் என்று ஏனைய இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கு இணையாக மாற்றப்பட்டது. 1983ஆம் ஆண்டு தமிழ் முதுகலையும் ஆய்வியல் நிறைஞர் ஆகிய பட்டமேற்படிப்புகள் தொடங்கப்பட்டன. தொடர்ந்து 1989ஆம் ஆண்டு தமிழ்க்கல்லூரி, கலைக்கல்லூரியாக விரிவுபடுத்தப்பட்டுத் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலையறிவியல் தமிழ்க் கல்லூரி என்ற பெயரையும் பெற்றது. 1993ஆம் ஆண்டு தற்செல்வப் பிரிவு தொடங்கப் பெற்றது. இதில் நிறுமச் செயலாண்மையில் கணிப்பொறி அறிவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டப்படிப்பு நடைபெற்று வருகிறது. வணிகவியல் பட்டப்படிப்பு தமிழ்வழியிலும் நடத்தப்படுகிறது.

பேரூரடிகளின் பல்கலைக்கழகப் பணிகள்

தமிழ்நாட்டில் உயர்கல்வியின் உறைவிடமாக அமைவது சென்னைப் பல்கலைக்கழகம். பேரூரடிகளார் இப்பல்கலைக் கழகத்தில் 1972-ஆம் ஆண்டு ஆட்சிக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அதற்கு முன் கல்விக்குழுவிலும் பேரவையிலும் இடம் பெற்றுள்ளார். தமிழ்க்கல்லூரிகளுக்கான பாடத்திட்டங்களை வகுக்கும் குழுவிலும் பேரூரடிகள் பணியாற்றியுள்ளார்.

கீழ்த்திசைக்கல்லூரிகளில் பேரூரடிகள்

தமிழை ஆழமாகவும், முறைப்படியும் சொல்லிக் கொடுப்பனவாகத் தமிழ்க்கல்லூரிகள் பல்கலைக்கழத்தில் இடம் பெற்றுள்ளன. இலக்கணத்தை நுட்பமாகச் சொலிலித் தருதல் இக்கல்லூரிகளின் இயல்பு. இத்தகைய கல்லூரிகளை அன்று கீழ்த்திசைக் கல்லூரிகள் என்றழைத்தனர். இக்கல்லூரிகளுக்கான பாடத்திட்டங்களையும், தேர்வுமுறைகளையும், மற்ற நடைமுறைகளையும் சீர்படுத்திக் கொடுத்தவர் பேரூரடிகள் ஆவார்.

இளம் இலக்கியவியல் படிப்பில் பேரூரடிகள் பணி

"தமிழ்க்கல்வியில் 1970ஆம் ஆண்டிற்குமுன் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 'வித்துவான் சான்றிதழ்' கொடுக்கப்பட்டது. அதனைப் புலவர் பட்டப்படிப்பு என்றும் புலவர் கல்லூரிகளை பி.லிட் பட்டப்படிப்புக் கல்லூரி என்றும் மாற்றியமை பேரூரடிகளாரின் பணிகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். பி.லிட். கல்லூரிகளின் செயல்பாடுகளை வரையறுக்கச் சென்னைப் பல்கலைக்கழகம், பேரூரடிகள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அதற்கு தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குழு என்று பெயரிட்டது. அக்குழுவில் பேரூரடிகள் ஆறு தீர்மானங்களை முன்வைத்தார்.

அவை,

1. பி.லிட் படிப்பிற்கு பி.ஏ. படிப்பிற்கு நிகராகக் கருதப்பட வேண்டும்.

2. பி.ஏ படிப்பிற்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் பி.லிட். படித்துத் தேறியவர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

3. பி.லிட். படிப்பை வழங்குகின்ற கல்லூரிகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் போதிய நிதியுதவி வழங்க வேண்டும்.

4. பி.லிட். கல்லூரிகள் பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம் வசூலிக்கும் உரிமையைப் பெற வேண்டும்.

5. மாலைநேர பி.லிட் வகுப்புகள் தொடங்குவதற்கு இசைவு அளிக்க வேண்டும். அந்தக் கல்லூரிகள் ஒருநாளைக்கு மூன்று மணிநேரம் பயிற்றும் நேரமாகக் கொண்டு 225 நாட்கள் வேலை செய்ய வேண்டும்.

6. கலை, அறிவியல் பாடங்கள் சொல்லித்தரும் கல்லூரிகளில் அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்குகிறார்களோ அதே அளவு ஊதியத்தை பி.லிட். கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

பேரூரடிகள் தலைமையில் முடிவான மேற்கண்ட தீர்மானங்கள் அனைத்தும் இவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகப் பணிகள்

தமிழ்நாட்டில் உயர் கல்வியின் உயர்விடமாய், உறைவிடமாய் விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆட்சிக்குழு உறுப்பினராக அமைத்து அருந்தொண்டாற்றி வந்துள்ளார். 1972ஆம் ஆண்டு முதல் 1978ஆம் ஆண்டு முடிய அடிகள் இந்த ஆட்சிக்குழுவில் உறுப்பினராய் இருந்து, நல்ல பல பணிகள் ஆற்றினார். அதற்கு முன்னால் கல்விக்குழுவிலும் பேரவையிலும் இடம் வகித்துக் கல்விப்பணி ஆற்றியுள்ளார். தமிழ் பயின்ற ஆசிரியர்களைக் கல்லூரி முதல்வராகவும் உயர்வு பெறப் பேரூரடிகள் வகை செய்தார். கலை, அறிவியல் பாடங்கள் சொல்லித்தரும் கல்லூரிகளில் அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு இணையாகத் தமிழ்ப் பயின்றவர்களையும் உயர்த்தினார். எந்தப்

பொருளைப் பற்றியும் தமக்கே உரிய முறையில் அமைதியாகச் சிந்தித்துத் தம்முடைய கருத்துகளை வழங்கி வருகின்றார். எதிலும் வேகமோ ஆரவாரமோ காட்டுவதில்லை. அவருக்குப் பல்கலைக்கழகத் தொடர்பு பல ஆண்டுகளாக இருந்து வருவதால் தமிழைப் பொறுத்தவரை அவருடைய கருத்துக்கு எப்பொழுதுமே பல்கலைக்கழகங்களில் தனிமதிப்பு உண்டு.சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பாட நூல் குழுவில் உறுப்பினராய் பல ஆண்டுகள் இருந்து புதிய பாடத்திட்டங்கள் வருவதற்கு அவர் காரணமாக இருந்தார். அப்பொழுது அமைக்கப்பட்டள்ள புதிய பாடத்திட்டக்குழுவின் தலைவராக இருந்து நல்ல பணிகளை ஆற்றியுள்ளார்.

தமிழ்த்தொடர்பு

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் இளமை முதலே தமிழில் பெரும் பற்றுக் கொண்டவர். மயிலம் மடத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தமிழ்க்கல்லூரியில் அக்கால வித்வான் பட்டத்தையும் பெற்றவர். நல்ல தமிழ்ப் புலமை வாய்ந்தவர். இலக்கண, இலக்கியத்தில் நல்ல புலமை வாய்ந்த அவர் தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக என்றே இப்போது மடத்தின் சார்பில் நடைபெற்று வரும் தமிழ்க்கல்லூரியின் தலைவராகவும் செயலராகவும் இருந்து வருகின்றார். பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டு தமிழைப் பரப்பி வருகின்றார். ஆண்டுதோறும் பல நல்ல மாணவர்களை உருவாக்கித் தமிழுலகிற்குத் தந்து வருகின்றார். தமிழறிஞர்கள் இடையில் தவத்திரு சாந்தலிங்க அடிகளாருக்குத் தனித்ததொரு இடமும் அன்பும் மதிப்பும் உண்டு. தமது கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்கள் ஏட்டுப் படிப்புடன் அமைந்து விடாமல் சமயப் பயிற்சி வழிபாட்டு நெறியில் ஆர்வம், உடலுழைப்பில் ஊக்கம் ஆகிய உடையவர்களாக வளர வேண்டும் என்பது கொள்கை.

சாந்தலிங்கப் பெருமான் திருக்கோயில்

சாந்தலிங்கப் பெருமான்திருக்கோயிலுக்கு1960ஆம் ஆண்டு விமானம் புதிதாக அமைக்கப் பட்டது. 1973-ஆம் ஆண்டு இராசகோபுரம் அமைக்கப்பெற்றது. சாந்தலிங்க சுவாமிகள் வைராக்கிய சதகத்தால் பாடித் துதித்த தில்லைப் பிரானைத் திருமட வளாகத்தில் எழுந்தருளுவிக்கும் நோக்குடன் நடராசப் பெருமான் திருக்கோயில் கட்டிட முகப்பும் மாற்றி அமைக்கப்பட்டது. 1986 திருக்கயிலாய நினைவு வளைவு அமைக்கப் பட்டுள்ளது.

அருண்மிகு சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் நாட்டு மக்களிடையே பரவவேண்டும் என்னும் நோக்கத்துடன் பதிப்புகள் வெளியிட்டுள்ளார்கள். அவிரோத உந்தியாருக்கு சைவத்திரு ந. முருகேச முதலியார் அவர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்வித்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயத்துறையில் தமிழ்நெறியே இடம்பெறுதல் வேண்டும் என்னும் நோக்கத்தினால் திருக்கோயில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழால் சைவத்திருமுறைகளைக் கொண்டே நடத்துதல் வேண்டும் என்று தொடக்ககாலம் முதல் அருட்பணிகள் ஆற்றி வருகின்றார்.

அருள்நெறித் திருக்கூட்டம்

திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தொடங்கிய அருள்நெறித் திருக்கூட்டம் என்னும் அமைப்பிலும் பின் இவர்கள் முயற்சியால் தமிழக அறநிலையத்துறை தொடங்கிய தெய்வீகப் பேரவை என்னும் அமைப்பிலும் பேரூரடிகள் தொடக்ககாலம் முதலே பங்கேற்று அவற்றின்வளர்ச்சிக்குஅரும்பணியாற்றிவருகிறார்கள். கோவை மாவட்டத்தின் பல ஊர்களிலும் உள்ள கோவில்களில் திருக்குட நன்னீராட்டு விழாவினைத் திருமுறைகளாகக் கொண்டு தமிழ் நெறிப்படியே நடத்தி வருகிறார்கள். இத்துறையில் இவருக்குப் பெருந்துணையாக விளங்கியவர் சிரவையாதீனம் சுந்தர அடிகள். இவர்கள் இருவரும் கொங்குநாட்டின் இருகண்கள் என்று சமயத்துறையினரால் பாராட்டப் பெறுவார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் திருக்குட நீராட்டுப் பெருவிழா

தமிழ்மக்கள் தன் தாய்மொழியோடு இணைந்து இறைவனைவழிபடவும்,அவன்உறைதிருக்கோயில்கள் பொலிவு பெறவும் அடிகள் அளித்த கொடை 'தெய் ஒண்தீந்தமிழ் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா', திருக்குட நீராட்டு, வாழ்வியல் சடங்குகளான புதுமனை புகுவிழா, திருமணம், மணிவிழா, நீத்தார்கடன் ஆகிய அனைத்திற்கும் எளிய தமிழில், இனிய தமிழில் சடங்குமுறைகளை ஆக்கிக் கொடுத்துள்ளார். திருநெறியத் தமிழ் முறைப்படி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு திருக்குட நீராட்டுப் பெருவிழாவைத் தலைமை தாங்கி நடத்தி வைத்துள்ளார்.

சமயப் பண்பாட்டுப் பயிற்சி

இளையோர்களும், மாணவர்களும் சமயநிலையில் ஒன்றிணைந்து செயல்பட 'சமயப் பண்பாட்டு பயிற்சியினை' ஏற்படுத்தியுள்ளார். மேலும் கிராமப் பூசாரிகள் பக்குவம் பெற்று வழிபாடாற்ற தமிழ் முறைப்படியான புத்தகம் ஒன்றினை அடிகளார் உருவாக்கியுள்ளார். இதனைச் செயல்படுத்த தமிழக அரசு ஆணையும் பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் எல்லா தெய்வங்களையும் போற்றி வழிபடுவதற்கேற்ற பேராயிரம் பரவுதல், நூறாயிரம் பரவுதல், நூறுநூறாயிரம் பரவுதல், நூற்றியெட்டு அருச்சனை போன்ற தெய்வத் திருப்பெயர் வரிசை முறைகள் திருமுறைகளிலிருந்தும், ஆழ்வார் திருப்பாடல்களிலிருந்தும் அடிகளால் தொகுக்கப்பெற்றுள்ளன. இவை தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித்துறை சார்பாக புத்தக வெளியீடாகவும் வந்துள்ளன.

அயல்நாடுகளில் அடிகளார்

உலக நாடுகளில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அங்கு சமயத் திருக்கோயில்களையும் அமைத்து வழிபாடாற்றுகின்றர். அங்குவாழும் அன்பர்கள் அடிகளை அழைத்து நமது சமய உண்மைகளையும், வழிபாட்டுச் செந்நெறிகளையும் உணர்ந்து கொள்கின்றனர். 1998ஆம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற உலக வைச மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தினார். இரண்டாவது உலக சைவ மாநாடும் அடிகள் தலைமையிலேயே நடைபெற்றது.

இந்து துறவியல் இயக்கத்திற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். கும்பமேளாவில் நடைபெற்ற உலக இந்துப் பேரவையின் மாநாட்டில் தமிழகத்தின் முதன்மைப் பங்கேற்பாளராகக் கலந்து கொண்டுள்ளார்.

இப்பணிகள் அனைத்திற்கும் ஆணிவேராய், அடிநாதமாய் விளங்கினாலும் இவை குறித்த புகழ்ச்சிகளையோ, விளம்பரங்களையோ விரும்பாது வெண்கொற்றக்குடையாய் விளங்காமல், வெயிலுக்கேற்ற குடையாய் விளங்கும் பேரூரடிகள் இந்நூற்றாண்டின் வரலாற்றுப்புகழ் பெறுகிறார்.

இவ்வாறு சமயநெறி, தமிழ்நெறி, தொண்டுநெறி இவற்றினை தம் அருட்கொள்கையாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டின் அப்பராக, தமிழைத் துறக்காத தனிப்பெருந் துறவியாக பேரூரடிகள் விளங்குகிறார்.

தெய்வ ஒண்தீந் தமிழில் வாழ்வியல் சடங்குப் பணி

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்ற தொல்காப்பியர் இலக்கணப்படி, எண்ணம், சொல், செயல்களால் நிறைமொழி மாந்தர்களாய் விளங்கியோர் தேவர் மூவரும் திருமுறை ஆசிரியர்களும் ஆவர். அவர்களின் அடியொற்றி நமது பேரூராதீனம் என்றுமுள இன்தமிழால் திருக்கோயில்கட்குத் திருக்குட நன்னீராட்டுகளை நடத்தி வருகின்றது. தமிழருச்சனை முறைமை 1953-ஆம் ஆண்டு பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலில் நமது பேரூரடிகள், தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியம் ஐயா ஆகியோர் முன்னிலையில் தொடங்கப் பெற்றது. பேரூரடிகளின் அருளார்ந்த தலைமையில் சுமார் 3000 திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடத்தப் பெற்றுள்ளன. நமது நாட்டில் மட்டும் அல்லாமல் அமெரிக்கா முதலான அயல்நாடுகளிலும் நமது பேரூரடிகள் ஓதுவாமூர்த்திகளையும் சிவாச்சாரியார்களையும் வைத்துத் திருக்குட நீராட்டகளைச் செம்மையுறச் செய்து வருகின்றனர். திருமணம், புதுமனைபுகுவிழா ஆகிய வாழ்வியல் சடங்குகள் நடத்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. பல நூறன்பர்கள் இச்சடங்குகளை நடத்தி வருகின்றனர்.

சமுதாயப்பணி

சிறை வாழ்மக்களுக்குத் தாமே சென்று அன்பும், பரிவும் காட்டி அவர்களுக்குச் சன்மார்க்க நெறியினைப் புகட்டுதல், தம்மைச் சார்ந்த அடியவர், புலவர், அன்பர்வழி இப்பணிகளைச் செய்தல், அரசு மருத்துவ மனைக்குச் சென்று நோய்வாய்ப்பட்டோருக்கு ஆறுதல் கூறித் திருநீறு அளித்து வருதல் போன்ற பணிகளில் ஈடுபாடு கொண்டவர்.

பெருங்கோயில், சிறுகோயில் என்ற கருத்து வேறுபாடு இல்லாது தாமே சென்று தமிழ்முறைப்படி திருப்பணிகளைச் செய்வார். ஏழை, எளியவர், பணக்காரர் என்ற வேறுபாடு கருதாது அவர்களது அன்பு வேண்டுகோளை ஏற்றுப் பேணுவார். சிறுகோயில்களில் பாமர மக்களின் அறியாமையால் நிகழும் பொருந்தா வழிபாடுகளை நீக்கியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்க பணி தெய்வங்களுக்குப் (ஆடு, கோழி) பலியிடுதலை நீக்கியதாகும்.

சமய, சமுதாய, பண்பாட்டுத் துறைகளில் சிக்கல்கள், சீர்கேடுகள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள் ஏற்படும்பொழுது பொதுமக்களுக்கு ஆலோசனை கூறி அவர்களை நன்னெறிப்படுத்துவர். நேரில் செல்ல இயலாதபொழுது எழுத்து வாயிலாக அறவுரைகள் வழங்குவார். தாய் சமயத்திற்குத் திரும்புபவர்களை ஏற்று, அவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குவதில் உறுதியாக நின்று உதவி செய்வார். மீனாட்சிபுரம் கலவரத்தில் குன்றக்குடி அடிகளாருடன் மேற்கொண்ட பணி என்றும் நினைவுகூரத்தக்கது.


பழுத்த மனத்து அடியார்

புலவர் **நா. குழந்தைவேலு எம்.ஏ.பி.எட்**
சதுர்வேதி மங்கலம்

சிவபெருமானை வழிபட்டுச் சிவத் தொண்டுகளைச் செய்து அவரின் திருவருளைப் பெற்ற சிவனடியார்கள் பலர் உண்டு. சேக்கிழார்பெருமான், சிவபெருமானின் திருவருளைப்பெற்ற சிவனடியார்களின் தொண்டின் திறத்தினையும், அத்தொண்டால் அவரிடம் பெற்ற அருள்தன்மை பற்றியும் கற்போர் மனம் சிவத்தொண்டில் ஈடுபாடு கொள்ளும்படி மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளார். பெரியபுராணத்தில் சிவனடியார்களாக, 63 நாயன்மார்கள், ஒன்பது அடியார்கள் போற்றப்பெற்றுள்ளனர்.

சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தைப் படித்த பக்தர்கள் அந்நூலில் குறித்த அடியார்களின் தொண்டின் தன்மையில் தங்கள் மனத்தைப் பறிகொடுத்தனர். அவர்களைப்போலவே, தாமும் சிவத்தொண்டினைச் செய்ய வேண்டும் என்று மன எழுச்சி கொண்டனர். சிவபக்தர்கள் பலர் சிவத்தொண்டுகளைச் செய்து சிவபெருமானின் திருவருளைப் பெற்றனர்.

மட்டியூர் என்ற சதுர்வேதமங்கலத்தில் வாழ்ந்த நாராயணன் என்பவர் சிவபெருமான்மீது நீங்காத பற்றுக் கொண்டு சிறந்த பக்தி செலுத்தினார். அவர்தம் பரந்த நெற்றியில் திருநீறு அணிந்தும், கழுத்துத்தொண்டைக் குழியில் உருத்திராக்கம் இருக்கும்படி கட்டியும், அந்த உருத்திராக்கத்தின் இருபுறத்திலும் தங்கத்தகடுகள் பொருத்தியும் அணிந்திருப்பார். அவர் எந்நேரமும் சிவசிவ என்று சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு ஆன்மநாயகி உடனாய அருள்தரு உருத்திரகோடீசுவரர் திருக்கோயிலில் வைராவி வேலை பார்த்துவந்தார்.



மேலும் பூசைக்காலங்களில் தவளைச்சங்கு ஊதும் பணியும் செய்துவந்தார். அவர் நாள்தோறும் வைகறை, மாலை நேரங்களில் இறைவனுக்குமுன்பாக இருந்து திருமுறை நூல்களின் பாடல்களை இசையோடு பாடி பக்தி உணர்ச்சி மேலிட தன்னையே மறந்திருப்பார். பலரும் இவரது பக்தியின் மேன்மையைப் பாராட்டுவார்கள். சிலர் இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று மனம் வருந்துவார்கள்.

சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத்தில் சிவனடியார்கள் ஆற்றிய தொண்டைப்போல, நாமும் தொண்டு செய்ய வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். சிவனடியார்கள் பலமுறைகளில் தொண்டு செய்திருந்தாலும், திருநாவுக்கரச நாயனார் செய்த தொண்டே சிறந்தது. அத்தொண்டே சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டாக அமைந்துள்ளது என்று அவர் கருதினார். திருநாவுக்கரசர் தம் தொண்டைச் செய்வதற்கு ஏற்ப உழவாரப் படைக்கருவியைப் பயன்படுத்தினார். நாராயணனும் அதுபோலத் தானும் உழவாரப் படைக்கருவியைத் தயார் செய்தார். இக்கருவியின்மூலம் பக்தர்கள் திருக்கோயிலில் பிரகாரத்தில் சுற்றி வருவதற்கு ஏற்ப முட்செடிகள், செடிகொடிகள், புதர்கள் ஆகியவற்றை நீக்கித் தூய்மைப்படுத்துவார். திருக்கோயிலைச் சுத்தமாக வைத்துக்கொள்வார்.

இதனால் நாராயண வைராவி சிவநெறியில் உறைந்த அன்பினர். சிறந்த சிவபக்தர், திருத்தொண்டர் என்று மக்களால் பெரிதும் பாராட்டப்பெற்றார். திருநாவுக்கரசர்மீது மிகுந்த அன்புகொண்டவர்.

இதனால் தன் பேரனுக்குத் திருநாவுக்கரசு என்று பெயர்சூட்டி மகிழ்ந்தார். இச்செயல் அப்பூதியடிகள் நாயனாரை நினைவூட்டுகிறது. திருக்கோயிலின் வழிபாட்டுவேளைகளில் தேவார, திருவாசக முதலான திருமுறைப்பாடல்களை இறைவன்முன்னிருந்து இசையோடு பாடுவார். பாடும்பொழுது பாடலின் கருத்தையும், சிவபெருமானின் அருளாற்றலையும் உள்ளத்தில் நினைத்துத் தன்னையே மறந்திருப்பார். அக்கருத்தில் மனதைப் பறிகொடுத்த அவர் உன்மத்தநிலையை அடைவார். அதுபோழ்து கண்ணீர் சிந்துவார். இறைவனின் திருவருளை வேண்டி அழுவார்.

அவர் திருக்கோயிலிலுள்ள திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் சிலைகளுக்கு மேல்விதானக் கொட்டகை அமைத்தார். அவர் நால்வர் பிறந்த நட்சத்திரம் வருகிறபொழுது சிறப்புப் பூசை செய்ய ஏற்பாடு செய்வார். ஒவ்வொரு பூசைக்கும் வீட்டிலிருந்த அரிசி, பருப்பு, காய்கறி ஆகியவற்றைக் கொண்டுவந்து கொடுத்துச் சமைக்கச் செய்வார். மதிய பூசை செய்கிறபோது நால்வருக்கும் சிறப்பான வகையில் அமுது படைத்து பூசை செய்யும்படி செய்வார். பூசை முடிந்தபிறகு திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் வருவோர்க்கு இலைபோட்டு விருந்து படைப்பார். கொடுமையான பஞ்சக்காலமாக இருந்தாலும், வீட்டில் உண்பதற்கு உணவு இல்லாவிட்டாலும் நால்வருக்குச் செய்யவேண்டிய பூசையை விடாது செய்துவந்தார். பலர் இப்படியும் ஒரு சிவபக்தர் உள்ளாரே என்று பேசிப் பாராட்டி மகிழ்வர்.

இவர் மார்கழிமாதம் திருக்கோயிலில் நடைபெறும் திருப்பள்ளி எழுச்சிவிழாவில் கலந்து கொண்டு சிவபெருமானை வழிபடப் பெரிதும் விரும்புவார்.

அக்காலங்களில் அதிகாலைப் பொழுதில் எழுந்து குறித்துவிட்டு உடம்பெல்லாம் திருநீற்றினை அணிந்துகொண்டு சிறுதாளக் கருவியை எடுத்துக்கொண்டு திருக்கோயில் நோக்கிச் செல்வார். அவர் செல்லுகின்ற பொழுது தேவார, திருவாசக, திருமுறைப்பாடல்களை இசையோடு பாடிக்கொண்டும், அதற்கு ஏற்பத் தாளத்தைத் தட்டிக்கொண்டும் செல்வார். திருக்கோயில் கதவு திறந்தவுடன் ஒலிபெருக்கியின்முன் நின்று தவளைச்சங்கினை ஊதுவார். அவ்வொலி ஊர்முழுவதும் கேட்கும். மக்கள் அனைவரும் சிவசிவ என எழுவார்கள். இவருடைய பாடல் ஒலி கேட்டபின்னே உறக்கத்திலிருந்து மகளிர் எழுவார்கள். வாசலில் சாணமிட்டு கூட்டிச் சுத்தப் படுத்துவார்கள். இதுபோல் மார்கழி மாதம் முதல் நாள் முதல் இறுதிநாள் வரை நாராயண வைராவி திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வார். அவருக்கு வயது எண்பதிற்கு மேல் ஆனாலும் அவர் அதிகாலையில் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டுத் திருக்கோயிலுக்கு வருவார். எந்த நோயையும் எதிர்க்கும் சக்தியைப் பெற்றிருந்தார்.

ஒருநாள் மாலைப்பொழுதில் திருநாவுக்கரசரின், கூற்றாயினவாறு என்ற பதிகப்பாடலை இசையோடு இறைவனுக்கு முன்பிருந்து பாடிக்கொண்டிருந்தார். பக்தி வெள்ளத்தில் தோய்ந்திருந்தார். இச்சமயத்தில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகளாகிய, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அங்கு வந்தார். அடிகளாரோடு வந்தவர்கள் தவத்திரு அடிகளாரின் வழிபாட்டிற்கு இடையூறாக இருக்கும் நாராயண வைராவியைத் தட்டி எழுப்பச் சென்றனர். அப்பொழுது அவரை ஏதும் செய்யாதீர்கள் என்ற கருத்தில் அடிகளார் சைகையின்மூலம் உத்தரவிட்டார்.

பக்தி உணர்வுப்பெருக்கில் இருந்த நாராயண வயிராவி பாடிமுடித்தவுடன் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு திரும்பினார். அப்போது தவத்திரு அடிகளார் அவர்கள் நிற்பதைப் பார்த்தார். பதைபதைத்துத் துணுக்குற்று எழுந்தார். நான் இறைவனிடம் வேண்டிய காட்சி கிடைத்துவிட்டது. இறைவன் எனக்கு நேராகக் காட்சி கொடுத்துவிட்டார் என்று மகிழ்ச்சிக்கடலில் தத்தளித்த அவர் தவத்திரு அடிகளாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

தவத்திரு அடிகளார் அவர்கள் மிகச் சிறந்த உண்மையான, மாசுமறுவற்ற பக்தர் ஒருவர் இருக்கிறார் என்று பெருமகிழ்வுற்றார். அதுமுதல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தாம் உருவாக்கிய அருள்நெறித்திருக்கூட்ட விழாவிற்கு அவரையும் அழைத்துச் செல்வார். அடிகளார், முற்காலத்தில் வாழ்ந்த சிவனடியார்கள் போன்ற சிவனடியாரைத் தற்காலத்திலும் இவர்மூலம் காண்கிறேன் என்று கூட்டங்களில் பேசியும் பாராட்டியும் புகழ்வார். நாராயண வயிராவியினிடத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் குறையாத அன்புசெலுத்தினார்கள். மிகச்சிறந்த சிவநேசச் செல்வராகக் கருதினார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பிறந்தநாள்விழா (நாள்மங்கலம்) ஆண்டுதோறும் குன்றக்குடித் திருமடத்தில் நடத்துவது வழக்கம். அதற்காகத்

தமது நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அழைப்பு அனுப்புவது வழக்கம். அந்த விழாவுக்கு நாராயண வயிராவி அவர்களை தவளைச் சங்கு ஊதவரும்படி ஆணையிட்டிருந்தார்கள். அவரும் தவளைச் சங்குடன் குன்றக்குடி சென்றார். விழாவும் தொடங்கியது. திருமடத்தில் இறைவனுக்கு அலங்காரம் செய்யப்பட்டது. தவத்திரு அடிகளார் தீபாராதனை செய்தார்கள். அச்சமயத்தில் மிகப்பெரிய வித்துவான்கள் மேளம் வாசித்தனர். தீபாராதனைக்கு ஏற்ப நாகசுரம் வாசித்தனர். அச்சமயத்தில் நாராயண வயிராவி தவளைச் சங்கு ஊதத்தொடங்கினார். நாகசுர வாசிப்பிற்கு ஏற்ப, முழக்கினார். அவர் முழக்கிய தவளைச் சங்கொலியில் நாகசுரம், தவில் ஒலிகள் அடங்கின. அங்கிருந்த அனைவரும் தவளைச் சங்கொலியில் கவனம் செலுத்தினர். தவளைச் சங்கிலும் பல்வேறு இசைகளையும் ஊதமுடியுமோ? என்று வியப்பில் ஆழ்ந்தனர். நாகசுரம், தவில் வாசிப்பவர்களும், இப்பொழுதுதான் தவளைச் சங்கின் சிறந்த தாளகதிக்கு ஏற்ப வாசித்தலைக் கேட்கிறோம் என்று கூறித் தாம் வாசித்ததையும் நிறுத்தி ரசித்தனர்.

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்குப் பங்குனிமாதத்தில் உத்திரப் பெருவிழா நடத்துவதற்கு அடிகளார் அவர்கள் ஆணையிட்டபடி பங்குனித் திருவிழா தொடங்கியது. அவ்விழாவிற்குப் பணிபுரியத் தம் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்துத்திருக்கோயில்களிலும் பணி புரியும் பணியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டது. நாராயண வயிராவிக்கும் வழங்கப்பட்டது.

நாராயண வயிராவிக்கு அருள்தரு சண்முகநாதப் பெருமான் கருவறையிலும், வெளிப்புறங்களிலும் திருவிளக்கு அணையாமல் பாதுகாத்து நன்கு குறைவிலாது எரியும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற பணி வழங்கப்பட்டது. இந்தப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர் அதற்குவேண்டி எண்ணெய், திரி ஆகியவற்றை அலுவலகப் பொறுப்பாளர்களிடம் பெற்றுக்கொண்டு தன் பணியைச் செய்துவந்தார். சில நாட்கள் கழித்து எண்ணெய் குறைந்து திருவிளக்கு எரிவதற்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. சிலமணிநேரங்களில் எண்ணெய் இல்லாது திருவிளக்கு அணைந்துவிடும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

அவர் அலுவலகம் சென்று அலுவலகப் பொறுப்பாளரைத் தேடினார். பொறுப்பாளர் இல்லை. அங்கே உள்ளவர்களிடம் எண்ணெய் தேவைப்படுகிறது. பொறுப்பாளரைக் காண வில்லையே என்று கேட்டார். அவர்களோ பொறுப்பாளர் வெளியில் சென்றுவிட்டார், எப்பொழுது வருவார். என்று சொல்லமுடியாது என்று கூறிவிட்டனர். திருவிளக்கு எரிப்பதற்கு ஒதுக்கப்பெற்ற எண்ணெயை வாங்கிவிட்டீர்களா? என்று கேட்டனர். ஆம் என்றார், அவர். இனிமேல் அவர் இங்கு இருந்தாலும் எண்ணெய் தரமாட்டார். ஒதுக்கப்பட்ட எண்ணெய்க்கு மேல் உறுதியாகக் கொடுக்கமாட்டார். ஆகவே, ஏதாவது ஏற்பாடு செய்துகொள்ளுங்கள் என்றனர். இதுகேட்ட அவர் மிகவும் மனவேதனைப்பட்டார்.

நமக்கு இட்ட பணியை ஒழுங்காகச் செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டு வந்துவிடுமே என்று அவர் வருந்தினார். இந்தக் குற்றச்சாட்டைக்காட்டிலும் திருவிளக்கு கருவறையில் எரியாமல் இருந்தால் தெய்வக் குற்றம் வந்துவிடுமே என்று மனம் பேதலித்து மிகவும் சோர்வடைந்தார். பின்னர், ஒருவாறாகத் தம் மனதைத் தேற்றிக்கொண்டு பலசரக்குக் கடையில் எண்ணெய் வாங்கிவரலாம் என்று எண்ணியவராய்ப் பலசரக்குக் கடைக்குச் சென்றார்.

திருக்கோயிலில் இறைவன் கருவறையிலும், வெளிப்புறங்களிலும் திருவிளக்கு எரிப்பதற்கு எண்ணெய் இல்லை. அணைந்துவிடுமோ? என்று அஞ்சுகிறேன். ஆகவே, இரண்டு படி எண்ணெய் கொடுங்கள். அதற்கு உரிய பணத்தை அலுவலகப் பொறுப்பாளரிடம் பெற்றுச் சீக்கிரமே தந்துவிடுகிறேன் என்றார். கடைக்காரரோ, பணம் இருந்தால் பெற்றுச் செல்லுங்கள். பணம் இல்லையென்றால், கடன் இல்லை. சென்றுவிடுங்கள் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

நாராயண வயிராவி தன்னிடம் பணம் இல்லை. என் செய்வது என நினைத்து வருந்தினார். திரு விளக்கு உரிய வைக்க முடியவில்லை என்றால் உயிரைவிட்டுவிடுவதே மேல் என்று நினைத்து மிகவும் சோர்ந்து ஒன்றும் செய்வதறியாமல் நின்று விட்டார்.

பின்னர் திடீரென்று அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தன் கழுத்தில் கட்டியிருக்கும் உருத்திராக்கத்தின் இரு பக்கங்களிலும் உள்ள தங்கத்தகடுகள் நினைவுக்கு வந்தது. அவர் மிகவிரைவாகத் தம் கழுத்தில் கட்டியிருந்த உருத்திராக்கக் கயிறை அவிழ்த்து அப்படியே கடைக்காரர் முன்பாக உள்ள கல்லாப்பெட்டி

மேல் வைத்தார். ஐயா, இந்த உருத்திராக்கத்தின் இருபுறத்திலும் இரு தங்கத்தகடுகள் உள்ளன. இதனை வைத்துக்கொண்டு எண்ணெயைக் கொடுங்கள். பின் உரிய பணத்தைக் கொடுத்துவிட்டு இதனைப் பெற்றுக் கொண்டேன் என்றார்.



நாராயண வயிராவியின் இச்செயலைக் கண்டவுடன் திகைத்துவிட்டார். என்ன செய்வது என்று புரியாமல் இருந்த அவர், "ஐயா, இதனை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொள்ளுங்கள். வேண்டிய அளவிற்கு எண்ணெயை வாங்கிச் செல்லுங்கள்" என்றார். நாராயண வயிராவி மிக்க மகிழ்ச்சி அடைந்தார். தாம் எண்ணியது கூடியது கருதி மகிழ்ந்தார். விழா முடியும் வரையிலும் அருள்தரு சண்முகநாதப்பெருமான் கருவறையிலும், வெளிப்புறங்களிலும்திருவிளக்குகள் அணையாமல் பார்த்துக்கொண்டார். தனக்கு இட்ட கட்டளையைச் சிறப்பாக நிறைவேற்றி விட்டோம் என்று மகிழ்ந்தார்.

இந்த வியத்தகு செய்தியைத் தமக்கு வேண்டியவர்மூலம் அறிந்திருந்த தவத்திரு அடிகளார் அவர்கள், நாராயண வயிராவி சிறந்த சிவபக்தர்கள் மட்டுமல்ல, சிறந்த சிவத்தொண்டர் என்பதையும் கண்டுகொண்டார். இவ்வுணர்வும் செயலும், இறைவன்மீது உண்மையான நேசங்கொண்டோருக்கு மட்டுமே வரும். பழங்காலத்தில் வாழ்ந்த சிவனடியார்கள் போன்று இவர்செயலும் அமைந்துள்ளது. ஆகவே, இவரைப் பாராட்ட வேண்டும் என்று தவத்திரு அடிகளார் அவர்கள் கருதினார்.

பங்குனி உத்திரத்திருவிழா முடிந்த பின்னர்க் கொடுத்த பணிகளைச் சிறப்பாக முடித்த பணிகளைப் பாராட்டி, பரிசிலும் வழங்குவதை இயல்பாகக் கொண்ட அடிகளார் அவ்விழா நடத்த ஆணையிட்டார். அந்த விழாவில் நாராயண வயிராவியின் திருத்தொண்டினைச் சிறப்பாக நினைவுகூர்ந்து பாராட்டினார். சேக்கிழார் பெருமான் பாராட்டிய இறைத்திருத்தொண்டில் பகையும் துன்பமும் பாராமல் தம் பணியில் நிலை நின்ற முனையடுவார் நாயனாரைப் போலத் தொண்டுசெய்த நாராயண வயிராவியைப் பாராட்டிப் பழுத்த மனத்து அடியார் என்று பாராட்டிப் பட்டயச் சான்றிதழை வழங்கினார். அந்தச் சான்றிதழ் இங்கு தரப்பெற்றுள்ளது. அத்துடன் பழுத்த மனத்து அடியாரான நாராயண வயிராவிக்கு வெள்ளித்திருநீற்றுச் சிமிழையும், வெள்ளிக் குத்துவிளக்கையும் பரிசிலாக வழங்கிப் பாராட்டினார்.

இவ்வாறு திருநாவுக்கரசர் பெருமான் வழிநின்று திருத்தொண்டு புரிந்த நாராயண வயிராவி, தம் வாழ்நாள் முழுதும் இறைத்தொண்டு புரிந்து ஏகாதசித் திதியன்று சிவனடி சார்ந்தார்.

வாழ்க, பழுத்த மனத்தடியார், வாழ்க, அவர் சிவத்தொண்டு.

இல்லாத இடமே இல்லை

'நற்றமிழ் நாவலர்' சுகி. சிவம்

கடவுளை மிகவும் சிறுமைப்படுத்தியவர்கள், நாத்திகர்கள் அல்லர். குறுகிய மதவாதிகள், மத வியாதிகள்... இறைவனை நெருங்க ஒரே வழிதான் இருக்கிறது... அது தங்கள் மதம் அல்லது மார்க்கம் மட்டும்தான் என்பதுபோல் அநாகரிகமான பிரசாரம் எல்லா மதங்களிலும் நடக்கிறது.

நாலு வழியாகவும் கடவுளை நெருங்கலாம் என்பதைப் புரிய வைக்கவே சிதம்பரம் போன்ற பெரிய கோயில்களில் நாலு கோபுரங்கள், நாலு வாசல்கள் வைத்திருக்கிறார்கள். அப்படியும் புரிந்து கொள்ளாமல், 'கடவுளை உணர ஒரே வழி... அது தங்கள் வழிமட்டுமே...' என்று கூச்சலிடுவது, மூளைச் சலவை செய்வது நேர்மையான காரியமா?

விக்கிரக ஆராதனை என்னும் உருவவழிபாடு, எளிய, இனிய பக்திநிலை பெருவாரியான மக்களுக்குப் பிடித்த (பீடித்த) சந்தோஷநிலை. வடக்கே மீராவையும், தெற்கே கண்ணப்பனையும் உருவாக்கி, உருக்கியது உருவவழிபாடு. ஒரு சின்னச் சிலை என்று நம் அறிவு அறிவிக்கும் கண்ணன் சிலை, மீராவின் காதல் சின்னம். அதில் மகிழ்ந்து, நெகிழ்ந்து, கரைந்துபோனது மீராவின் அந்தராத்மா.

மீராவைப் புரிந்து கொண்டவர்கள் உருவவழிபாடு சிறுபிள்ளைத்தனம் என்று சொல்வார்களா? கல்லால் ஆன சிவலிங்கம் சாப்பிடவேண்டுமே, என்று சதையால் ஆன கண்ணப்பன் கவலைப்பட்டது அதிர்ச்சியாக இல்லையா? உருவவழிபாட்டை ஒப்புக் கொள்ளாதவர்கள் மீராவின் காதலையும் கண்ணப்பன் கண்ணீரையும் கேவலப்படுத்துகிறார்கள். இது சரியா?

காளத்தி மலையில், குடுமித்தேவராக இருந்த சிவலிங்கத்திற்கு உணவு கொண்டு வந்தான் கண்ணப்பன். வருவதற்குத் தாமதம் ஆனது. பசியால் சிவபெருமான் இளைத்து விட்டார் என்று சிவலிங்கத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்ட கண்ணப்ப நாயனாரின் அன்பு நிலை ஆழமானது. இதயம் உள்ளவர்களால் மட்டுமே அந்த அன்பைப் புரிந்து கொள்ள முடியும்.

சித்தர்பாட்டைப் படித்துவிட்டு, உருவ வழிபாட்டைக் கேலிபேசுகிற அரைவேக்காடுகள் வாய்க்கு வந்தபடி பேசக்கூடாது. குண்டலினியோகம், ராஜயோகம் என்பவற்றைப் பணங்கட்டிப் படிக்கும் அறிவுஜீவிகள் பக்திமான்களை மூடர்களாகக் கருதும் முழுமூடர்களாக வளர்வது எனக்கு வருத்தம் தருகிறது.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற அந்தக் கரணம் நான்கில் மனம்வழி இறைவனைத் தொடுதல் பக்தியோகம்.

புத்திவழி இறைவனைத் தொடுதல் கர்மயோகம். சித்தம்வழி இறைவனை அடைதல் ராஜயோகம். 'நான்' என்கிற அகங்காரத்தைப் பார்த்து நான் யார் என்று குடைந்து குடைந்து நானே இறைவன் என அறிதல் ஞானயோகம். யாருக்கு எந்த வழி லயமோ, சுலபமோ, இயல்போ அதன்வழி பயணம் செய்யலாமேயொழிய அடுத்தவர் வழியைக் குறைசொல்ல நாம் யார்?

பழனியாண்டவருக்கு பாலும், பஞ்சாமிர்தமும் அபிஷேகம் செய்யும் பரமபக்தனை, ஒரு அற்பப்புழு மாதிரி அவமதிக்கும் அறிவுஜீவிகள் இந்து மதத்தில் பெருகுகிறார்கள். அபிஷேகம் செய்யாமலிருக்க ராஜயோகிகளுக்கு உரிமை உண்டு. அபிஷேகம் செய்பவனை அவமதிக்க அவர்களுக்கு உரிமை இல்லை.

இருந்த இடத்தில் இருந்தபடி தன்னில் இறைவனை உணரும் ராஜயோகிகள், சித்தர்கள், ஞானிகள் மார்க்கம் சரியானதே. ஆனால், தாம் சரியாக நடப்பதாலேயே பிறர் நடப்பது தவறான வழியென்று சிறுபிள்ளைத் தனமாக ஏன் நினைக்க வேண்டும்?

சிலைக்கு அபிஷேகம் செய்து கரைந்து போகிற பக்தனை முட்டாளாக அறிவிக்கும் அதிகாரம் ராஜ யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் யார் கொடுத்தது? அபிஷேகம் செய்யும் பக்தனின் பக்தியைக் கேலி பேசும் ஒரு ஞான யோகி எழுதுகிறார், 'இந்தப் பத்துப் பாத்திரம் தேய்க்கிற வேலையை (சிலைக்கு அபிஷேகம் செய்வது) எத்தனை நாள் செய்யப் போகிறீர்கள்?' என்று. இது முறையா?

இதைவிடக் கொடுமை, பக்தியோகம் ஏதோ முதல்நிலை என்றும், குண்டலினியை எழுப்பும் ராஜயோகம் உயர்நிலை என்றும் தானே இறைவன் என்று உணரும் ஞானயோகம் மிக

உயர்நிலை என்றும் படித்தரம் பேசுகிறார்கள் சில அறிவுஜீவிகள். எம்.ஏ, தமிழும் எம்.ஏ, ஆங்கிலமும் எப்படிச் சமமோ அப்படித்தான் ராஜயோகமும் சமம். பக்தி எலிமெண்ட்ரி ஸ்கூல், கர்மயோகம் ஹைஸ்கூல், ராஜயோகம் பி.ஏ, ஞானயோகம் எம்.ஏ, என்பதெல்லாம் வெறும் பிதற்றல்.

ஒரு வட்டத்தின் மையப்புள்ளியிலிருந்து அந்த வட்டத்தின் எல்லாப் புள்ளிகளும் சம தூரத்தில் இருப்பது போலவே, கடவுள் என்ற மையப் புள்ளியிலிருந்து பக்தியோகம், ராஜயோகம், கர்மயோகம், ஞானயோகம் எல்லாமே சம தூரத்தில் உள்ளன. குண்டலினி யோகம் படிப்பிக்கும் அரைகுறை வாத்தியார்கள் உடனே நிறுத்த வேண்டும்.

பக்தியோகம் பயிலும் பக்திமான்களுக்கும் ஓர் அறிவிப்பு. வீட்டில் பூசை செய்யாது நாள், கிழமை என்று ஆர்ப்பாட்டம் செய்யாது. கோயிலில் கூட்டத்தில் முண்டியடித்துத் தம் பக்தியைப் பறைசாற்றிக் கொள்ளாது, ருத்திராட்சம், துளசிமாலை, திருநீறு, திருமண் என்கின்ற வெளிவேலைப்பாடுகளில் அக்கறை வைக்காது. அமைதியாகத் தன்னில் இறைதேடும் ஆத்மப்பசி உள்ளவர்களை நாத்திகர்கள் என்று கிசுகிசுக்கும் அசட்டுத்தனத்தைப் பக்திமார்க்கத்தார் விட வேண்டும்.

அஷ்டோத்திரம், லட்சார்ச்சனை, சண்டி ஹோமம் – இவை மட்டுமே வழிபாடு போலவும், சடங்குகள் சம்பிரதாயங்கள் இவற்றைப் பெரிதாகக் கொள்ளாதவர்கள் மகாபாவிகள் என்று நினைக்கும் சிற்றெல்லையைப் பக்தர்கள் தாண்ட வேண்டும். கோயிலுக்கு நன்கொடை கேட்டு ஒருவர் தரவில்லை என்றால், அவசர அவசரமாக அவருக்குப் பெரியார் திடலில் இடம் ஒதுக்கும் வேலையை வறட்டுப் பக்தர்கள் நிறுத்த வேண்டும்.

'பக்தி, வழிபாடு என்பது ஆஞ்சநேயர் வடை மாலைக்குள் மட்டும் இல்லை... ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தாமல் ஆஞ்சநேயர் போல் ஒழுக்கமாக இருக்கும் வாழ்வியல், ஒரு வழிபாடே' என்பதை உணர வேண்டும். சிலைகள் என்ற சிற்றெல்லையைக் கடந்து கடவுளை உணரும் சித்த புருஷர்களைப் பக்தர்கள், பாவிகளாகப் பாவிக்கக் கூடாது.

ஔவைப்பாட்டி, அதிகம் நடந்த களைப்பில் ஒரு கோயிலில் கால்நீட்டிப் படுத்தாள். கால்நீட்டிய திசையில் கால காலனான சிவபெருமான் சந்நிதி இருந்தது. பதறிப்போன பக்தர், ஒருவர், "அபசாரம்... அபசாரம்... சிவன் இருக்கும் திசை நோக்கிக் கால் நீட்டலாமா?" என்று கத்தினா. நிதானமாக அவரைப் பார்த்து, "சிவபெருமான் இல்லாத திசை எது என்று சொல்... அந்தப் பக்கமாகக் கால்நீட்டிக் கொள்கிறேன்" என்று அசராமல் அறிவித்தாள் ஔவைக் கிழவி.

பக்தியோகம் பயிலும் பக்தர்களும் ராஜயோகம் பயிலும் சித்தர்களும் பரஸ்பரம் முட்டாள் பட்டம் கட்டி விடுகிறபோது, ஞானயோகம் பயிலும் சிலரோ, இருவரையும் கேலி பேசுகிறார்கள். பக்தர்கள் பொம்மை விளையாட்டு (உருவவழிபாடு) நடத்துவதாகவும் சித்தர்கள் குண்டலினியை எழுப்பும் சுவாசப் பயிற்சி மூலம் அடுப்பூதும் வேலை செய்வதாகவும் அவர்கள் அறிக்கை விடுகிறார்கள். இடது சுவாசம், வலது சுவாசம் என்று மாற்றி மாற்றிச் செய்யும் குண்டலினி யோகத்தைக் கேலி பேசுவோர் சொல்வதைச் சொல்லவா?

"மாறி மாறி மூக்கைப் பிடித்தால், சளி வேண்டுமானால் வரும். ஞானம் எங்கே வரும்?" என்பார்கள்.

பகவான் ரமணர் ஞானயோகம் பயின்றவர். ஆனால், அண்ணாமலை அண்ணல்மீது பக்தி உடையவர். மூச்சை ஒடுக்கும் ராஜயோகம் பயின்றுதான் பலநாட்கள் தவம் செய்திருக்கிறார். கர்மயோகத்தை விளக்கும் பகவத்கீதை மீது பெரும் மதிப்பு வைத்திருந்தார். உண்மை உணர்ந்தவர்கள் நான்கு யோகங்களையும் அவமதிப்பதே இல்லை. ஒன்றை உயர்வாகவும், பிறவற்றைத் தாழ்வாகவும் பேதம் பிரிக்கும் படித்தரம் கட்டும் வேலைகள் செய்வதில்லை.

தாயுமானவர் அனுபவம் சொல்லட்டுமா? அவர் சிவபக்தர். கடுந்தவம் இருந்த யோகி. எனவே, சித்தர். தான் யார் என்பதை உணர்ந்த ஞானி. எல்லா நிலைகளும் அடைந்தமையால் எதையும் அவர் குறைத்துச் சொன்னதில்லை.

அழகான பூவைப் பார்த்ததும், "ஆஹா, இதைப் பறித்து ஆண்டவனுக்கு அணிவிக்கலாம்" என்பான் பக்தன். ஞானியின் அறிவோ, வேறுசொல்லும். பூவின் அழகே அவனுக்கு இறைவனை உணர்த்தும். அழகான பூ இறைவனுக்கு என்றான் பக்தன். பூவின் அழகின் இறைவன்தான் என்கிறான் ஞானி. ஞானிக்குப் பூவும் இறைவன். கோவில்சிலையும் இறைவன். பறிக்கிற தானும் இறைவன். இறைவனைப் பறித்து இறைவன்மீது இறைவனே போடும் இந்த வேலை ஏன் என்று அமைதியாகிறான். அவனது

அமைதியும் உன்னதமான வழிபாடே என்பதை பக்தன் புரிந்து கொள்ள வேண்டும்.

நாலு மார்க்கத்தாரும் அடுத்தவர் தவறு செய்வதாகக் குற்றம் சொல்வதை விடுத்து, அவரவர் வழியில் பயணம் தொடர்வது நல்லது. இதற்கு நான் ஒரு கதை சொல்வது உண்டு.


சிவராத்திரி இரவு... கயிலாயம் போகும் எண்ணத்தில் நான்கு துறவிகள் விளக்கு ஏற்றிவைத்துத் தியானம் செய்தபடி, மௌனவிரதம் இருந்தார்கள். திரி கருகி அணையத் தொடங்கியது. தீபத்தைத் தூண்டி திரியை உயர்த்தும்படி ஜாடை காட்டினார் பெரிய சாமியார். மௌனமல்லவா. அடுத்த சாமியாரோ திரியை உள்ளே இழுக்க தீபம் அணைந்தது.

“தீபத்தை அணைச்சுட்டியே” என்று முதல்சாமி கத்த, “ஐயையோ சிவராத்திரி அன்னைக்குப் பேசிட்டிங்களே.. உங்க மௌனம் போச்சு” என்று தம் மௌனம் கலைத்தார் இரண்டாம் சாமி.

“ஹஹ்ஹா” இரண்டுபேருந்தான் பேசிட்டீங்க என்று பேசித்தொலைத்தார் மூன்றாம் சாமி.

“இங்க இருக்கிறதிலேயே பேசாம இருக்கிறது நான் ஒரே ஆள்தான்” என்று வாய்திறந்து சொல்லிவிட்டு மௌனவிரதம் காத்தார் நான்காம் சாமி.

நாலுபேருமே கயிலாயம் போனதாகத் தெரியவில்லை.



கொங்கேழ் தலங்கள்

முனைவர் இரா. சந்திரசேகரன்
தமிழாய்வுத் துறைத்தலைவர், கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரி திருச்செங்கோடு

முன்னுரை

கொங்குநாட்டில் உள்ள கோயில்களுள் தனிப்பெருஞ் சிறப்பினைக் கொண்ட ஏழு தலங்கள் "கொங்கேழ் தலங்கள்" என அழைக்கப்படுகின்றன. அவை அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருச்செங்கோடு, பவானி, கொடுமுடி, கரூர், வெஞ் சமாக்கூடலூர் என்பனவாகும். இத்தலங்கள் பாடல் பெற்ற தலங்களாக விளங்குகின்றன.

கொங்கேழ்தலங்கள் என்று பெயர் பெற்றுள்ள இக்கோயில்களான அவிநாசியப்பர் திருக்கோயில், திருமுருகன்பூண்டி முருகநாதர் திருக்கோயில் ஆகியன கோவை மாவட்டத்திலும் திருச்செங்கோடு அர்த்தநாதீசுவரர் திருக்கோயில் ஈரோடு மாவட்டத்திலும், கருவூர் பசுபதீஸ்வரர் திருக்கோயில், வெஞ் சமாக் கூடலூர் விகிர்தேசுவரர் திருக்கோயில் ஆகியன கரூர் மாவட்டத்திலும் அமைந்துள்ளன.



இக்கோயில்களைப் பற்றித் தேவாரப்பாடல்களில் அப்பர், திரு ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடியுள்ளனர். பெரிய புராணத்தில் சேக்கிழாரும், திருப்புகழில் அருணகிரிநாதரும் இத் தலங் களைப்பற்றிப் பாடியுள்ளனர். கொங்கேழ் தலங்களில் ஒன்றான அவிநாசியப்பர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை மாணிக்க வாசகர் தம்முடைய திருவாசகத்தில் பாடியுள்ளார்.

கோயில்கள் பற்றிய ஆய்வுகள் இறைவன்மீது கொண்டுள்ள பக்தியை மேலும் விரிவடையச் செய்கின்றன. மேலும் இவ்ஆய்வுகளால் மக்களின் எண்ணம், கலை உணர்ச்சி, பண்பாடு போன்றவற்றை அறிய முடிகின்றது.

கோயில்களின் அமைப்பு

1. அவிநாசியப்பர் திருக்கோயில்

கொங்கு நாட்டிலுள்ள சிறப்புப் பெற்ற ஏழு சிவன் கோயில்களில் அவிநாசியும் ஒன்று. கோயமுத்தூருக்கு வடக்கே 40 கி.மீ. தொலைவில் ஈரோடு செல்லும் சாலையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இன்றைக்கு அவிநாசி என்று அழைக்கப்படும் இவ்வூரினை இலக்கியங்கள் திருப்புக்கொளியூர் என்று குறிப்பிடுகின்றன.

இக்கோயிலின் இராஜகோபுரம் கிழக்கு திசை நோக்கியபடி இருக்கிறது. கோயிலின் முன்புறம் 70 அடி உயரத்தில் ஒரே கல்லால் அமைக்கப்பட்ட தீபஸ்தம்பம் காணப்படுகிறது. இதன் அடியில் கிழக்குப் புறத்தில் கிழக்கு நோக்கிய விநாயகர் கோயிலும், மேற்குப்புறத்தில் கிழக்கு நோக்கிய சுந்தரமூர்த்தி சுவாமி கோயிலும் இருக்கின்றன. வடபுறத்திலும் தென்புறத்திலும் முதலை வாயிலிருந்து பிள்ளை வெளிப்படுவது போன்ற சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. தீபஸ்தம்பத்திற்குத் தெற்குப் பகுதியில் தெப்பக்குளமும் அதன் எதிரே அம்மன் கோயிலும் அதன் அருகில் பாதிரிமரமும் அமைந்துள்ளன. இப்பாதிரி ஏரியில்தான் முதலையுண்ட சிறுவனை அதன் வாயிலிருந்து சுந்தரர் மீட்டார் என்ற செய்தி வழக்கில் உள்ளது. தீபஸ்தம்பத்திற்கு முன்புறம் மண்டபம் உள்ளது.

அவிநாசியப்பர் சந்நிதி

கோயிலின் உள்ளே சென்றால் மூலஸ்தானமான இறைவனின் திருச்சந்நிதியை அடையலாம். அங்குள்ள உள் சுற்றை வலம் வரும்போது தெற்குச்சுவரில் பஞ்சலிங்கங்களுடன் ஏழு கன்னியர் திருவுருவங்களும் வடகிழக்குப் பகுதியில் காரைக்கால் அம்மையார் சந்நிதியும், வடக்குச் சுற்றின் வடமேற்குப் பகுதியில் முருகன் சந்நிதியும் காணப்படுகின்றன.

இக்குமரக்கடவுள் சந்நிதியைக் கடந்து சென்றால் கருவறையில் கருணைக்கடலாகிய அவிநாசியப்பரின் சிவலிங்கத் திருமேனி காட்சி அளிக்கிறது. இங்குள்ள மூலவர் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றியவர் ஆவார். இம்மூர்த்தியையே அன்னை கருணாம்பிகை பூசித்து வழிபட்டார் என்று கூறப்படுகிறது.

வெளிச்சுற்றின் தெற்குப்பகுதியில் கருணாம்பிகை அம்மன் சந்நிதி காணப்படுகிறது. வழக்கமான பிற கோயில்களில் இறைவனுக்கு இடது பக்கம் அம்மன் கோயில் அமைந்திருக்கும். இக்கோயிலில் மட்டும் இறைவனுக்கு வலப்பக்கம் அம்மன் காட்சி தருவது தனிச்சிறப்பாகும்.

சுந்தரர் கோயில்

அவிநாசியிலுள்ள இறைவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது தேவாரப்பாடலில் பாடியுள்ளார். சுந்தரமூர்த்திசுவாமிகள் முதலையுண்ட பிள்ளையை மூன்றாண்டுகள் கழித்து மீண்டும் முதலை வாயிலிருந்து வரவழைத்து அருளற்புதம் நிகழ்த்தினார். அதன் நினைவாக இங்குள்ள குளக்கரையில் சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில், சுந்தரமூர்த்திகளின் திருவுருவச் சிலையும் இதன்முன் முதலை ஒன்று தான் உண்ட குழந்தையை வாயிலிருந்து மீட்டுத் தருகின்ற வகையில் அழகிய சிற்பம் ஒன்றும் உள்ளது. இக்கோயிலின் அருகே பாதிரி மரம் உள்ளது. இது தலவிருட்சம் ஆகும்.

அவிநாசித் திருத்தேர்

இத்திருத்தலத்தில் பெரிய தேர் ஒன்றும் சிறிய தேர் ஒன்றும் ஆக இருதேர்கள் உள்ளன. திருவிழாக் காலங்களில் ஊர்வலமாகக் கொண்டுவரப்படும் தேர்கள் மீண்டும் தன்நிலைக்கு வருவதற்குப் பல நாட்கள் எடுத்துக் கொள்கின்றன.

தீர்த்தச் சிறப்புகள்

இக்கோயில் நாககன்னிகை தீர்த்தம், ஐராவதத் தீர்த்தம் என இரண்டு தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

2. திருமுருகன் பூண்டி

கொங்கேழ் தலங்கள் என்று குறிப்பிடப்படும் தலங்களுள் திருமுருகன் பூண்டியும் ஒன்றாகும். அவிநாசியிலிருந்து திருப்பூர் செல்லும் சாலையில் இத்தலம் அமைந்துள்ளது. இத்தலம் முருகன் சிவபெருமானைப் பூசித்து வழிபட்ட தலமாகும். மேலும், இத்தலத்தில் அகத்தியர், மார்க்கண்டேயர், துர்வாசர் ஆகியோர் சிவபெருமானை வழிபட்டுள்ளனர். இத்தலம், சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரப் பாடலில் இடம் பெற்றுள்ள தலமாகும். சுந்தரமூர்த்தி நாயனார் தம் தேவாரப் பாடலில் இவ்வூரை,

கல்லினால் எறிந்திட்டு மோதியும் கூறைகொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டிமா நகர்

என்று குறிப்பிடுகின்றார்.



இத்தலம், முருகன் வழிபட்ட தலம் என்பதால் இங்குள்ள இறைவனுக்கு முருகநாதர் என்ற பெயர் வழங்கப் பெறுகிறது.

இக்கோயில் மேற்குமுகமாக அமைந்துள்ளது. மற்ற கோயில்களைப்போல் முன்வாயில் கோபுரங்கள் ஏதுமில்லை. கோயிலுக்குச் செல்லும்போது உள்நுழைவாயிலில் வலதுபுறம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவுருவச்சிலைகள் காணப்படுகின்றன. இச்சிலைகளில் ஒன்று, தம்மிடம் இருந்த பொருளைக் களவு கொடுத்த தோற்றத்திலும், மற்றொன்று களவு போன அப்பொருள், மீண்டும் கிடைக்கப்பெற்ற நிலையிலும் அமைந்துள்ளது.

முருகன் சந்நிதி

உள்மண்டபத்தில் இடப்பக்கம் ஆறுமுகப் பெருமானின் சந்நிதி உள்ளது. இச்சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இங்கு முருகன் மயில்மீது அமர்ந்து காட்சியளிக்கிறார். முருகன் சந்நிதி கடந்து உள்ளே சென்றால், முருகனாதேசுவரர் சிவலிங்கத் திருமேனியாக எழுந் தருளியுள்ளார். மூலவர் மேற்கு முகம் பார்த்த நிலையில் அமர்ந்திருக்கிறார்.

முருகநாதர் கோயில் வெளிப்பிரகாரத்தில் ஆடல் வல்லான் சபை உள்ளது. இச்சபையில் இறைவன் பிரம்ம தாண்டவம் ஆடியதாகக் கூறப்படுகிறது.

சூரியன் சந்நிதி மேற்குப் பார்த்தும் தட்சிணாமூர்த்தி தெற்குமுகம் நோக்கியும், பவானி ஈசுவரர் கிழக்கு முகம் நோக்கியும் உள்ளனர். இங்கு சண்டிகேசுவரிக்கு நூல்போட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

கோயிலுக்கு வெளியே மாதவிவனேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் முருகநாதர் திருக்கோயிலுக்குத் தெற்கே கிழக்கு நோக்கி உள்ளது. இங்கு மாதவி நாதரும் மங்களாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர்.

திருமுருகன்பூண்டி கேது தலமாக விளங்குகிறது.

இக்கேது சந்நிதி மாதவிவனேசுவரர் திருக்கோயில் உட்புறம் உள்ளது.

3. அர்த்தநாரீசுவரர் திருக்கோயில்

அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் திருச்செங்கோடு என்னும் ஊரில் அமைந்துள்ளது. கொங்கு நாட்டில் சிறப்புப்பெற்ற,ஏழுசிவத்தலங்களில்அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலும் ஒன்று. இத்திருக்கோயில் மலை உச்சியில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலில் அர்த்தநாரீசுவரர், செங்கோட்டு வேலவன், ஆதிகேசவப் பெருமாள் ஆகிய மும்மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். இம்மூர்த்திகளுக்குத் தனித்தனிச் சந்நிதிகள் அமைந்துள்ளன. திருஞானசம்பந்தரால் இவ்வூர் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்று பாராட்டிப் பாடப்பட்டுள்ளது. இதனை,

மலையார் இளவாழைக் குலைமலி தண்பொழில் சூழ்

கொடிமாடச் செங்குன்றூர்

என்னும் பாடல் அடிகளால் அறிய முடிகின்றது.

இத்திருக்கோயிலிலுள்ள அர்த்தநாரீசுவரர் ஆணாகவும், பெண்ணாகவும் இரண்டறக் கலந்திருக்கிறார். அர்த்தம் என்றால் பாதி, நாரி என்றால் பெண்.

மலையின் மேல் உள்ள கோயிலை மலைத் தம்பிரான் கோயில் என்றும், மலையின் கீழ் உள்ள கோயிலை இறக்கத்துக் கோயில் என்றும் அழைக் கின்றனர்.

திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல் செல்லும் சாலையில் சிறிது தொலைவு சென்று மலை அடிவாரத்தை அடைந்து நுழைவின் வளைவு வழியாகச் சென்று திருமலையின் முதற்படியை அடையலாம்.

முதற்படியில் விநாயகப்பெருமான் காட்சி யளிக்கிறார். தென்புறத்தில் சங்கத் தமிழ் வளர்த்த எம்பெருமான் முருகப்பெருமான் குடிகொண் டிருக்கும் ஆறுமுகச்சாமி கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் முன்புறத்தில் இருக்கும் கிணற்றிலிருந்து மலைமேல் உள்ள கோயிலுக்குக் குழாய்மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. முதற்படியை அடுத்துச் செங்குந்தர் மண்டபமும் அதனருகில் காளத்தி சுவாமிகள் மண்டபமும் அதனைத் தொடர்ந்து திருமுடியார் மண்டபமும் தயிலி மண்டபமும் உள்ளன.

தயிலி மண்படத்தை ஒட்டி, கீழ்ப்புறம் வீரபத்திர சுவாமி கோயில் மேற்குநோக்கி அமைந்துள்ளது. அதற்கடுத்து மேல்புறம் பசுவின் கோயில் தெற்குப் புறம் இருக்கின்றது. பசுவின் கோயிலிலிருந்து கீழே இறங்கினால், பெரிய மலைக்கும் (நாகமலை) சிறிய மலைக்கும் (நந்தமலை) இடையில் இருக்கும் பள்ளம் நகர்பள்ளம் ஆகும். வளைந்து நெளிந்து ஐந்து தலைகளும், விரிந்துபடம் எடுத்த நிலையில் லிங்க உருவினைச் சுமந்து கொண்டிருக்கும் நாகதேவனின் வியத்தகு உருவம் 60 அடி நீளம் கொண்டதாக உள்ளது.

அர்த்தநாரீசுவரர் ஆலயம்

இங்குள்ள தீர்த்தம் சிவதீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இத்தீர்த்தத்தைப் பற்றி நிற்கும் திருமேனியே அர்த்தநாரீசுவரர். இம்மூலவர் பால்போன்று வெண்ணிறத்தில் உள்ளார். ஓர் உருவில் இடப்பாகம் பெண்ணாகவும், வலப்பாகம் ஆணாகவும் காட்சி தருகிறார். இதை,

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பி னல்ல

பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்

கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற

அந்தணனைத் தொழுவார் அவல மறுப்பாரே.

என்று ஞானசம்பந்தப் பெருமான் தம்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதொருபாகனின் தொன்மைக் கோலத்தை மாணிக்கவாசகரும் எண்ணி மனங்குளிர்ந்து பாடி யுள்ளார்.

செங்கோட்டு வேலவர் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவ்வேலவன் வலது கையில் சக்தி வேலும் இடது கையில் சேவலும் தாங்கி நின்ற கோலத்தில் காட்சி தருகிறான். இம்முருகன் கண்கண்ட தெய்வம். கலியுக வரதன். பைந்தமிழ்ப் பாவலன். பார்வதியின் மைந்தன். குன்றுதோறும் ஆடும் குமர வடிவேலன். குன்றக்குடியிலே இனிக்கும் பண்டார வடிவினன். சுவாமி மலையிலே ஞான பண்டிதன். திருப்பரங்குன்றத்தில் தெய்வானையைக் காத்தவன். கொடிமாடச் செங்குன்றூரிலே படைவீடு அமைத்த பாலசுப்பிரமணியன் என்று பலவாறு அழைக்கப்படுகின்றான்.

திருச்செங்கோட்டில் அமைந்திருக்கும் அர்த்த நாரீசுவரர் திருக்கோயில் அடிவாரத்திலிருந்து ஏறக்

குறைய, 650 அடி உயரத்தில் 1206 படிகளைக் கொண்டதாய் அமைந்துள்ளது. சிவனும் பார்வதியும் ஓர் உருவில் கலந்த காட்சி வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத சிறப்பு இங்குதான் உள்ளது என்பதை அறியலாம்.

4.சங்கமேசுவரர் திருக்கோயில்

கொங்கு நாட்டில் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் குறிப்பிடத் தக்கது. பவானி ஆறும், காவிரி ஆறும் கூடும் இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் பழமையான பெரிய கோயில் ஆகும். பவானி எனும் இவ்வூர், பவானிக்கூடல், பவானிமுக்கூடல், வதரிகாசிரம் என்று பல பெயர்களால் அழைக்கப் பெறுகின்றது.

இத்தலத்தைப் பற்றி, திருஞானசம்பந்தர் தம் தேவாரப்பதிகத்தில்,

நாட்டம் பொலிந்திங்கு நெற்றியினான் மற்றொரு வீணையயேந்தி
ஈட்டுந் துயரறுக்கு யெம்மானிடம் போலுமிலை சூழ்கானில்
ஒட்டந்தருமருவி வீழும் விசை காட்டமுந்தூ ழோசைச்
சேட்டார் மணிகளணியுந் திரைசேர்க்குந் திருநணாவே.

என்று பாடியுள்ளார்.

கோயிலின் அமைப்பு

சங்கமேசுவரர் திருக்கோயில் பவானி நதிக்கரையில் அமைந்துள்ளது. இந்த இடம் பவானிமுக்கூடல் என்று பெயர் பெற்றுள்ளது. வடநாட்டில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்றாகச் சேரும் இடம் "திரிவேணி சங்கமம்" என்றும், "பிரயாகை" என்றும் அழைக்கப்பட்டது. அதேபோல் இத்தலமும் பவானி, காவிரி, அமுதநதி ஆகிய மூன்றும் கூடுவதால் "தென்பிரயாகை" என்று பெயர் பெற்றது. ஆரம்ப காலத்தில் பூவாணி என்று அழைக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

சங்கமேசுவரர் ஆலயம்

சங்கமேசுவரர் கோயிலுக்குச் செல்ல நான்கு வழிகள் உள்ளன. கூடுதுறைக்கு நேர்எதிரில் ஒன்று உள்ளது. அடுத்து வடபுறத்தில் இரண்டு வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று வேதநாயகி அம்மன், முருகன் கோயில் வழியாக நேராக சனீசுவர பகவானுக்கு அருகில்வந்து சேரும் வழியாகும். மற்றொன்று இதன் கீழ்ப்புறம் அமைந்துள்ளது. இதன் வழியாகச் சென்றால் நவக்கிரகம் அமைந்துள்ள மண்டபத்தை அடையலாம். இவ் வழியே செல்லும் போது வலம்புரி விநாயகர், குமார மூர்த்தி ஆகியோரைக் காணலாம். நான்காவது வாயிலின் முன் பலிபீடம், கொடிமரம், தீபத்தம்பம் ஆகியன உள்ளன.

மகாமண்டபத்திலிருந்து உள்ளே நோக்கினால் அர்த்த மண்டபமும் அதன்பின் கருவறை எனப்படும் கர்ப்பக்கிரகமும் தெரியும். அங்குதான் சங்கமேசுவரர் எழுந்தருளியுள்ளார். இம்மூலவர் சுயம்பாக ஆனவர். இந்த சங்கமேசுவரர் இங்கு லிங்கமாகக் காட்சியளிக்கிறார். இவருக்கு சங்கமுக நாதர், மருந்துலிங்கம், திருநண்ணாவுடையார் போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

இங்குள்ள சிவபெருமான் வேதநாயகி எனும் தன் துணைவியாரைத் தம் இடப்பாகத்தில் வைத் திருக்கின்றார்.

5. மகுடேசுவரர் திருக்கோயில்

கொங்குநாட்டுத் திருத்தலங்களில் மிகவும் புகழ் பெற்று விளங்குவது கொடுமுடி மகுடேசுவரர் திருக்கோயில் ஆகும். கோவையிலிருந்து 64 மைல் கி.மீ. தொலைவில் ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் சாலையில் 23 கி.மீ. தொலைவிலும் இக்கொடுமுடி திருத்தலம் உள்ளது. இத்தலம் மூவர்பாடல் பெற்ற தலமாகும். திருஞானசம்பந்தரும், சுந்தரரும் வருகைபுரிந்த தலமாகும். பெரியபுராணமும் தேவாரமும் இத்தலத்தைத் திருப்பாண்டிக் கொடுமுடி என்று குறிப்பிடுகின்றன.

கோயில்களில் கொங்குநாட்டிலுள்ள ஆற்றங் கரையில் உள்ள கொடுமுடியும் ஒன்றாகும். காவிரி ஆற்றங்கரையில் கோயில் அமைந்துள்ளது. இப்பாண்டிக் கொடுமுடி ஆலயத்தைத் தேவர்களும், சித்தர்களும் வணங்கியதாகக் கூறப்படுகிறது. இக்கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. இக்கோயில் பாண்டிய மன்னர்களால் பராமரிக்கப்பட்டுள்ளது. அப்போது ஒரு பாண்டிய மன்னனுக்கு குற்றம் (கறை) தீர்ந்ததால் இத்தலத்திற்குக் கரையூர் என்றும் பெயர் உண்டு.

இக்கோயிலில்உள்ளஇறைவனுக்குமகுடேசுவரர், கொடுமுடிநாதர், கொடுமுடீசுவரர், கொமுடிலிங்கர், திருப்பாண்டி மகாதேவர், ஆளுடையநாயனார் என்னும் பெயர்கள் உண்டு.

மகுடேசுவரர் கோயில்

பிரம்மன், திருமால், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இக்கொடுமுடித் திருக்கோயில் மூன்று கோபுரங்களைக் கொண்டதாக அமைந் திருக்கிறது. நடுவில் இருப்பது மகுடேசுவரர் கோயில் ஆகும். இத்திருவாயில் உள்ளே சென்றால் இடதுபுறம் சந்திரனும், வலப்புறம் சூரியனும் காணப்படுகின்றனர். இறைவன் கருவறையில் சுயம்புத் திருமேனியுடன் காட்சியளிக்கிறார். இச்சிவலிங்கத்தின் தலைக்குமேல் ஐந்து தலை கொண்ட நல்லபாம்பு உருவம் இருப்பதைக் காண முடிகிறது. இதனால்தான் மகுடேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. இச்சிவலிங்கத்தை அகத்திய முனிவர் தழுவியதால் உண்டான கைவிரல் அச்சு இன்றும் இவர்மீது உள்ளது. திருநாவுக்கரசர் இங்குள்ள இறைவனைப் போற்றும் வகையில்,

சிட்டானைச் சிவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே”

என்று பாடியுள்ளார்.

வடிவுடைநாயகி கோயில்

வடிவுடைநாயகி கோயில் இறைவனுக்குத் தென் பகுதியில் அமைந்திருக்கக் காணலாம்.

வீரநாராயணப் பெருமாள் கோயில்

மகுடேசுவரர் கோயில், அம்பிகை கோயில், வடிவுடைநாயகி கோயில் ஆகியவற்றின் நடுவில் வீரநாராயணப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் வீரநாராயணப் பெருமாள் பள்ளி கொண்ட நிலையில் வீற்றிருக்கின்றார்.

பிரம்மா கோயில்

கோயிலின் பின்புறம் பிரமனுக்குத் தனியாகக் கோயில் அமைந்துள்ளது. இது தனிப்பீடமாகவும் காட்சியளிக்கின்றது. இக்கோயில், தலவிருட்சமான வன்னிமரத்திற்கு அடியில் அமைந்துள்ளது.

காவேரி கண்ட விநாயகர்

காவேரிகண்ட விநாயகர் கோயிலுக்கு எதிரில் காவிரிக்கரையில் சக்தி விநாயகர் காட்சி தருகிறார்.

பசுபதீசுவரர் திருக்கோயில்

கொங்கு நாட்டிலுள்ள பாடல்பெற்ற சிவத் தலங்களுள் கருவூர்ப் பசுபதீசுவரர் திருக்கோயிலும் ஒன்றாகும். இங்குள்ள கோயிலைப் பற்றித் திருஞானசம்பந்தர், சேக்கிழார், அருணகிரிநாதர் ஆகிய மூவரும் பாடியுள்ளனர். இத்திருத்தலம் ஈரோட்டிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 64 கி.மீ. தொலைவில் உள்ளது. கருவூர் என்பது காலப்போக்கில் மருவி, கரூர் என்று அழைக்கப்படுகிறது.

கோயிலின் அமைப்பு

கருவூர்த் திருவானிலை என்று அழைக்கப்படும் இத்திருக்கோயில் ஏழு நிலைகள் கொண்ட இராஜ கோபுரத்துடன் காணப்படுகிறது. இக்கோயில் கிழக்கு முகம் பார்த்து காணப்படுகிறது.

பசுபதீசுவரர் சந்நிதி

வடக்குப் பிரகாரத்தில் அம்பிகை சந்நிதிக்குச் செல்லும்வழியில் இடது பக்கம் இறைவன் சந்நிதி காணப்படுகிறது. இச்சந்நிதியின் உள்ளே சென்றால் இறைவன் காட்சி தருகின்றார். இவ் விறைவன் சுயம்புத்திருமேனி கொண்டவராக எழுந்தருளி யுள்ளார். இங்குள்ள சிவலிங்கத் திருமேனி சற்று சாய்ந்து காட்சி தருகின்றது. இறைவன் சற்று சாய்ந்து கருவூர்த் தேவருக்கு இடம் கொடுத்ததால் இவ்வாறு காணப்படுகிறது என்றும் கூறகின்றனர். இங்குள்ள மூர்த்தி கிழக்கு நோக்கிய நிலையில் காணப்படுகிறார். இவ்விறைவன் பசுபதீசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். இத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனைத் திருஞானசம்பந்தர்,

விண்ணு லாமதி சூடிவேதமே
பண்ணுளார் பரமாய பண்பினர்
கண்ணுளார் கருவூரு ளானிலை
அண்ண லாடியார்க்கு நல்லரே”

என்று தம் பாடலில் பாடியுள்ளார்.

இங்குள்ள இறைவனை, காமதேனு என்ற பசுவானது வழிபட்டதால் பசுபதீசுவரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணம் வாயிலாக அறிய முடிகின்றது. இக்காமதேனு இறைவனை வழிபட்ட சமயத்தில் தனது கொம்புகள் உரசியதால் ஏற்பட்ட தழும்பு அடையாளம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. அலங்காரவல்லி சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சௌந்தர நாயகி அம்மன் கோயில் தெற்குநோக்கி அமைந்துள்ளது.

விகிர்தேசுவரர் திருக்கோயில்

கொங்குநாட்டில் உள்ள பாடல்பெற்ற தலங்களுள் வெஞ்சமாக்கூடல் விகிர்தேசுவரர் திருக்கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் கரூரிலிருந்து அரவக்குறிச்சி செல்லும் சாலையில் 13 கி.மீ. தொலைவில் உள்ளது.

இத்தலத்திற்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகை தந்து இறைவனைப் பாடியுள்ளார். அதுமட்டுமில்லாது அப்பரும், சேக்கிழாரும், அருணகிரிநாதரும் தம் பாடலில் இவ்விறைவனைப் பாடியுள்ளனர்.

கோயிலின் அமைப்பு

விகிர்தேசுவரர் திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் நுழைவாயிலில் ஐந்துநிலை இராஜகோபுரம் அமைந்துள்ளது. நுழைவாயிலைக் கடந்து செல்லும்போது வலது புறத்தில் சூரியனும், இடது புறத்தில் சந்திரனும் உள்ளனர். முன்புறத்தில் கொடிமரம் உள்ளது. அதனருகில் நந்திதேவர் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலை வலம் வரும்போது நால்வராகிய அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் சிலைகளும் அறுபத்திமூன்று நாயன்மார்களின் சிலைகளும் காணப்படுகின்றன. இவர்களின் பெயர், குலம், காலம், நட்சத்திரம் குறித்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. கோயில் சுற்றில் விநாயகர் சந்நதியும் பஞ்சலிங்கங்களும் உள்ளன.

இங்கு முருகப்பெருமான் மயிலின்மீது காலை வைத்து ஊன்றிய நிலையில் காட்சி தருகின்றார். மற்றும் இங்குள்ள மண்டபத்தில் நடராசர் ஆலயம் தனியே அமைந்துள்ளது. இதைக் கடந்து உள்ளே சென்றால் கருவறையில் இறைவன் சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளியுள்ளார்.

விகிர்தேசுவரி அம்மன் சந்நதி

விகிர்தேசுவரி அம்மன் சந்நதி இறைவன் சந்நதிக்கு இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

முடிவுரை

கொங்கேழ் தலங்கள் என்று அழைக்கப்படும் அவிநாசி, திருமுருகன், பூண்டி, திருச்செங்கோடு, பவானி, கொடுமுடி, கரூர், வெஞ் சமாக்கூடலூர் ஆகிய தலங்கள் பாடல் பெற்ற தலங்களாகும்.

சமயக்குரவர்களான அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் மூவரும் இத்தலங்களைப் பற்றித் தேவாரப் பதிகத்தில் பாடியுள்ளனர். சேக்கிழார் தம்முடைய பெரியபுராணத்திலும் அருணகிரிநாதர் திருப்புகழிலும் பாடியுள்ளார்.



திருச்செங்கோடு, பவானி, கொடுமுடி ஆகிய இம்மூன்று சிவன் கோயில்களில் பெருமாளுக்கும் கோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்கள் சைவ, வைணவ சமயங்களின் ஒற்றுமைக்கு வழிகோலுகின்றன.

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் ஆண்பாதி, பெண்பாதி, தோற்றமுடையவர். இத்தோற்றம் உலகில் வேறு எங்கும் இல்லை.

கொங்கேழ் தலங்களில் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள தலம் அவிநாசி மட்டுமே மனநோய் நீங்குவதற்கு திருமுருகன்பூண்டி முருகநாதர் திருக்கோயில் சிறந்த தலமாக விளங்குகின்றது.

கொடுமுடித்தலமாகிய மகுடேசுவரர் திருக் கோயிலுக்கு அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் வருகைபுரிந்து இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர்.

கொங்கேழ் தலங்கள் கொங்குநாட்டில் சிறப்பு வாய்ந்த கோயில்களாகக் காணப்படுகின்றன.

துணைநூற்பட்டியல்

கார்மேகக்கவிஞர்–கொங்குமண்டல சதகங்கள்

கோவை கிழார் – கொங்குநாட்டு வரலாறு

மகாலிங்கம் நா. (பதிப்பாசிரியர்) – கொங்குத் திருக்கோயில்கள்

முத்துசாமிக் கோனார் தி.அ. – கொங்குநாடு

வெள்ளைவாரணர் – பன்னிரு திருமுறை வரலாறு

மூவர் தேவாரம்

ஐயசெந்தில்நாதன் பு.மா. –திருமுறைத் தலங்கள்.

யார் காரணம்?

- டாக்டர் இரா. கலைக்கோவன்

இயக்குநர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம், திருச்சிராப்பள்ளி

அன்புள்ள வாருணி, உன் மடல் கிடைத்தது. 'திராவிடக் கட்சிகளின் ஆட்சியில்தான் கோயில்கள் சீர்குலைந்தன என்று எங்கோ படித்தேன். அக்கூற்றுச் சரிதானா?' என்று கேட்டிருக்கிறாய். கோயில்களின் சீர்குலைவிற்கும் கல்வெட்டுக்கள் அழிக்கப்பட்டதற்கும் திராவிடக்கட்சிகளையோ அவற்றின் ஆட்சிக்காலத்தையோ யாரும் எந்தவிதத்திலும் குறைகூற முடியாது. அப்படிக் கூறுபவர்கள் அதற்குரிய வரலாற்றுச் சான்றுகளை முன்வைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கோயில்களின் சீர்குலைவு பற்றிய காலநிரலான ஆய்வை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் மேற்கொண்டு தெளிவான முடிவுகளை முன்வைத்துள்ளது. (காண்க இரா. கலைக்கோவன், சுவடழிந்த கோயில்கள், பாரி நிலையம், சென்னை, 1987, பக்.1-30, 98-123) சங்க காலத்திலேயே கோயில்கள் சீர்குலைந்திருந்த நிலைகளை, மக்கள் வரத்தின்றி அவை அழிந்து கொண்டிருந்த காட்சிகளைப் பாடல்களின் படப்பிடிப்பாகப் பார்க்க முடிகிறது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் புலவர் கோயில் ஒன்றின் சீரழிவை,

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறா துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை"

என்ற அகப்பாடலில் மிக விரிவாகக் காட்டியுள்ளார். இதுபோல், பலி இழந்த பலித்தளங்கள், சுவர் சாய்ந்த பொதியில்கள், புதர் மண்டிய இறைத்திருமுன்கள் எனச் சங்க இலக்கியங்கள் படம் பிடிக்கும் கோயில் சீர்குலைவுகள் ஒன்றிரண்டல்ல.

மக்கள் வரத்தின்றிக் கோயில்களில் புல்லும் முள்ளும் மண்டியதால்தான் அப்பர், அவற்றை அகற்றும் தொண்டராக நேர்ந்தது. ஒருபுறம் கோச்செங்கணான் எழுபத்தெட்டு மாடக் கோயில்களை எடுத்தாலும், மறுபுறம் இறைக்கோயில்கள் மக்கள் ஆதரவிழந்த நிலையையும் பார்க்க முடிகிறது.

இதற்கான சமுதாயப் பண்பாட்டுக் காரணியங்கள் எண்ணற்றவை. அவற்றையெல்லாம் இப்போது விரிவாக எழுதினால், கி.பி. 3-6ஆம் நூற்றாண்டுக் கால இறைக்கோயில் எழுச்சி வீழ்ச்சிக் கட்டுரையாக இக்கடிதம் மாறிவிடும். என் நோக்கம் கல்வெட்டழிப்பில் திராவிடக் கட்சிகளுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை என்பதைத் தெளிவுபட விளக்குவது மட்டுமே. உனக்குக் கால நிரலாக இந்தப் புறக்கணிப்பு வரலாறு வேண்டுமென்றால், அடுத்த கடிதத்தில் எழுத முயல்வேன்.

வாருணி, தமிழ்நாட்டுக் கோயில்களில் நிகழ்ந்த, நிகழும் கல்வெட்டழிப்புகளுக்கு முதல் காரணமும் முழுமையான காரணமும் கோயில் திருப்பணியாளர்களே என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தியாவைத் தம் ஆட்சியின்கீழ் கொணர்ந்த ஆங்கிலேய அரசாங்கம், இங்குள்ள கோயில்கள் வரலாற்றின் விடிவிளக்குகளான கல்வெட்டுகளின் புதையல்களாய் விளங்குவது கண்டு, அவற்றையெல்லாம் படியெடுத்து இந்தத் திருநாட்டின் வரலாற்றை உருவாக்க அரசுசார் கல்வெட்டியல் அமைப்பொன்றை உருவாக்கியது.

அந்த அமைப்பில் தொடக்கக் காலத்தில் பணியாற்றிய வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்கள், தாங்கள் கண்டதை, தங்களுக்கு நேர்ந்ததை எல்லாம் தாங்கள் பதிப்பித்த கல்வெட்டறிக்கைகளில் பதிவு செய்துள்ளனர். அவற்றுள் ஒரு பதிவு இருண்ட வீட்டில் ஒரு விளக்காய் உனக்கு உதவும்.

'Information having been recieved from the Tahsildar of Trichinopoly that the Panchavarnesvara temple at Uraiyur is to be rebuilt shortly, all the inscriptions found in it have been copied and the temple authorities have been instructed to number and arrange the inscribed stones in some order. The Collector has been requested to prohibit the practice followed in the Jambukesvaram and Kilambil temples of using some of the inscribed stones in the new buildings and throwing away the rest.'

கல்வெட்டுகளை அவர்கள் படியெடுத்த காலத்திலேயே (1890) பல கல்வெட்டுகள் சிதைந்திருப்பதாகவும் தொடர்பற்றிருப்பதாகவும் இருக்க வேண்டிய இடங்களில் கல்வெட்டுக் கற்கள் இல்லாமல், இருக்கக் கூடாத இடங்கள் இணைக்கப்பட்டிருப்பதாகவும் தெளிவாகச் சுட்டியுள்ளனர். இந்த அவலங்களுக்கெல்லாம்

முந்து திருப்பணியாளர்களே காரணர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

என் இருப்த்தைந்து ஆண்டுகால ஆய்வு அநுபவத்தில் திராவிடக் கட்சிகளைச் சேர்ந்த யாரும் கோவில் சீரழிவிற்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ காரணமாக இருந்ததைப் பார்த்தறியேன். 'நாத்திகவாதம் மக்களைத் திசைதிருப்பியது. அதனால் கோயில்கள் புறக் கணிக்கப்பட்டன' என்பது தெளிவற்றவர்களின் கூற்றே தவிர, கள ஆய்வாளர்களின் முடிவன்று.

எந்தக் காலத்திலும், திருக்கோயில்களுக்குச் செல்பவர்கள் சென்றுகொண்டுதான் இருந்தார்கள். அதுபோல் புறக்கணிப்பும் உடன்விளைவாக இருந்துகொண்டுதான் இருந்தது. நாத்திகவாதம் உச்சத்தில் இருந்த காலத்தில்கூட மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டமையை நானே பார்த்திருக்கிறேன். இது பல ஊர்க் கோயில்களுக்கும் பொருந்தும்.

கோயிலாய்வில் முழுவீச்சில் ஈடுபட்ட பிறகுதான், கோயில்களின் சீரழிவிற்கு முழுமையான காரணர் கள் திருப்பணியாளர்களுக்கும் கோயிலைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே என்பதைக் கண் ணெதிர்க் காட்சிகளாக என்னால் கண்டறிய முடிந்தது. சில சான்றுகளை முன்வைத்தால் உனக்கு எளிதாகப் புரியும்.

திருச்சிராப்பள்ளித் தஞ்சாவூர் சாலையில் உள்ள திருநெடுங்களம் பாடல் பெற்ற கோயிலுள்ள ஊர். இக்கோயிலைத் திருப்பணி செய்ய முற்பட்ட காலத்தில் நானும் எங்கள் மைய ஆய்வாளர்களும் இக்கோயில் ஆய்வில் முனைந்திருந்தோம். திருப்பணியில் ஈடுபட்டிருந்த குழுவினர் கழுத்தில் ருத்திராக்கமும், நெற்றி நிறையத் திருநீறும் பூசியிருந்தனர். அவர்கள் வாயைத் திறந்த போதெல்லாம் உதிர்ந்த சொல் 'சிவா' எத்தனை சைவ எழுச்சி என்று நானே வியந்து போனேன்.

இந்தக் கோயிலின் உள்திருச்சுற்றின் தென்புறக் கரையில், முதலாம் ஆதித்தர் காலக் கல்வெட்டுள்ள கல்லொன்று முந்து திருப்பணியாளர்களால் பதிப்பிக்கப் பெற்றிருந்தது. அந்தக் கல்வெட்டைப் படித்த பேராசிரியர் மு. நளினி, அது புதிய கல்வெட்டு என்றும் தமிழ்நாட்டின் மிகச்சில திருக்கோயில்களில் மட்டுமே வழக்கில் இருந்த மூக்கு மத்தளம் இக்கோயிலில் இயக்கப்பட்ட செய்தியை அக்கல்வெட்டுத் தருவதாகவும் கூறி மகிழ்ந்தார்.

அக்கல்வெட்டைப் படியெடுக்க நாங்கள் முயன்றபோது திருப்பணிக்குழுவினரில் ஒருவர் தடுத்தார். அவரிடம் கல்வெட்டின் அருமையைச் சொல்லித் தரையில் பாவப்பட்டிருப்பதால் மிதித்து மிதித்தே அக்கல்வெட்டுப் பெரும்பாலும் அழிந்திருப்பதைச் சுட்டி, இப்போது படியெடுக்காவிட்டால் இந்த அரிய வரலாற்றுச் செய்தி பதிவாகாமல் போகும் ஆபத்து இருப்பதை விளக்கிப் பெரும் போராட்டத்திற்குப் பிறகு கல்வெட்டைப் படியெடுத்தோம்.

திருப்பணித் தொண்டர்களின் தலைவரைச் சந்தித்து அக்கல்வெட்டின் அருமையைக் கூறி அதைக் காப்பாற்ற வேண்டும் எனச் சொல்லி, நடைபாதையிலிருந்த அதை அகழ்ந்தெடுத்து வேறு கல் பாவச்செய்தோம். இதுபோல் அரிய கல்வெட்டுகள் பத்திற்கும் மேல் எங்களால் கண்டறியப்பட்டு இக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

குழுவின் தலைவர் கல்வெட்டுகள் உள்ள கற்பலகைகளைக் கோயில் திருச்சுற்றில் பாதுகாப்பாக இருத்துவதாகக் கூறினார். அவருக்கு இக்கல்வெட்டுகளின் தரவுகள் அடங்கிய குறிப்புரையும் தரப்பட்டது. பாதுகாப்பாகத் தந்த கல்வெட்டுகளுள் ஒன்று நந்திவர்மர் காலத்தது. மிக அரிய வகையில் நந்திகளும் சூலமும் புடைப்புச் சிற்பங்களாக அமைந்த கல்வெட்டு அது.

மற்றொன்று கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த வணிகக் குழுவினரின் காவல் வீரர்கள் பற்றியது. இன்னொன்று அதுவரை அறியப்படாத பிற்சோழர் கால நாடகங்கள் பற்றிய கல்வெட்டு. பிறிதொன்று ஒரு காலத்தே இங்கிருந்து அழிவுற்ற ஸ்ரீபுறக்குடிப்பள்ளி என்னும் சமணர் இருக்கைப் பற்றிப் பேசும் கல்வெட்டு.

திருப்பணியாளர்களை நம்பி, அவர்கள் இக்கல்வெட்டுகளைப் பாதுகாப்பார்கள் எனக் கருதி நாங்கள் பணிமுடித்து விடைபெற்றோம். திருப்பணி முடிந்து ஒருமாத அளவில் ஊர்க்காரர் ஒருவர் கண்பரிசோதனை செய்து கொள்ள என்னிடம் வந்தார். அவரிடம் கல்வெட்டுகள் பற்றிக் கேட்டேன். திருப்பணியாளர்கள் அக்கற்களை எல்லாம் தூக்கிக் கோயிலுக்கு வெளியே வீசிவிட்டதாகவும் அவை இப்போது வேண்டப்படாதனவாக ஒதுக்கப்பட்ட கற்குவியலில் எங்கோ சிக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

என் கண்களில் நீர் கசிந்தது. திறக்க நேர்ந்த நேரங்களில் எல்லாம் வாய்மணக்கச்

சிவபெருமானின் பெயரை உச்சரித்தவர்களின் கைகள் எத்தகு அவலத்தை இந்த மண்ணின் வரலாற்றிற்கு இழைத்துள்ளன என்று வருந்தினேன். உடன் பேராசிரியர் நளினிக்குத் தொலைபேசி செய்தேன். நானும் அவரும் பிறருடன் நெடுங்களம் சென்றோம்.

கோயில் வெளிச்சுற்றெங்கும் கற்குவியல்கள் அவற்றில் எங்கென்று அந்தக் கல்வெட்டுப் புதையல்களைத் தேடுவது? எங்கள் துன்பமறிந்த உள்ளூர் அன்பர்கள் சிலர் உதவிக்கு வந்தனர். எல்லாருமாக மூன்று மணிநேரம் தேடி அக்கல்வெட்டுகள் பலவற்றைக் கண்டறிந்தோம். நாடகக் கல்வெட்டு மட்டும் கிடைக்கவே இல்லை.

எங்களுடன் உழைத்த உள்ளூர் நண்பர் திரு. குருசாமி அக்கல்வெட்டுகளை எப்பாடுபட்டாகிலும் கோயிலுக்குள் சேர்ப்பதாக உறுதி அளித்தார். குப்பையாள் அள்ளி வீசப்பட்ட அந்தக் கல்வெட்டுகள், நம் முன்னோர்களின் வழங்கல்கள். வாக்குறுதிகள், வாழ்க்கைச் சம்பவங்கள் என்பதுடன் நம்முடைய தலைப்பெழுத்துகளும் கூட என்பதைச் 'சிவா, சிவா' என்று எப்போதும் கூவிய வாய்களின் சொந்தக்காரர்கள் மறந்துபோனதை நினைக்கும்போது கோயிலுக்கு வராத நாத்திகர்கள் நூறுமடங்கு தேவலாம் என்றே தோன்றுகிறது. அவர்களால் கல்வெட்டுகளுக்கோ, கோயில்களுக்கோ எந்தக் காலத்திலும் எந்த இழப்பும் நேர்ந்ததில்லை.

இந்து அறநிலையத்துறையின் ஆட்சியில் இருக்கும் கோயில்களுக்குத்தான் இந்த நிலைமை என்று கருதிடல் வேண்டா. மடாதிபதிகள் என்று தங்களைப் பெருமையோடு அழைத்துக் களிக்கும் மடத்தலைவர்களின், சமயாச்சாரியார்களின் ஆளுகையில் இருக்கும் கோயில்களிலும் இதேநிலைதான். அமரர் குன்றக்குடி அடிகளார் ஒரு விதிவிலக்கு.

திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் கோயிலில் ஆய்வு மேற்கொண்டபோது. திருப்பணியாளர்களால் அங்குள்ள கல்வெட்டுகளுக்குப் பெருஞ் சேதம் விளைந்திருந்ததை நாங்கள் கூறக் கேட்ட அப்பெருந்தகை, திருக்கோளக்குடிக் கோயில் கல்வெட்டுகளைக் காப்பாற்ற எங்கள் வேண்டுகோள்களுக்கெல்லாம் செவிசாய்த்தார். தாமே நேரிடையாக வந்து பலமுறை திருப்பணியைப் பார்வையிட்டார். அவர் ஒத்துழைப்பால், வரலாறு இதுவரை கண்டிராத கேட்டிராத செய்திதரும் கல்வெட்டுகளை எல்லாம் நாங்கள் கண்டறிய முடிந்தது.

'பதப்பிலீசுவரம்' எனும் தென்தமிழ்நாட்டின் மிகப்பழமையான தமிழ் எழுத்துக் கல்வெட்டைத் திருக்கோளக்குடி மலையில் நாங்கள் கண்டறிந்து வெளிப்படுத்தியபோது மகிழ்ந்த அப்பெருமகனார் அதைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்தார். என்னுடைய இருபத்தைந்து ஆண்டுக்கால களஆய்வு வரலாற்றில், ஆய்வாளர்களைக் கேட்டுக் கோயில் திருப்பணி செய்த ஒரே மனிதர் அமரர் குன்றக்குடி அடிகளார்தான். ஆனால் அவராலும் கூடச் சில கல்வெட்டுகளைக் கட்டுமானப் பணியாளர்களிட மிருந்து காப்பாற்ற முடியாமல் போனது என்பது வேதனைக்குரிய உண்மை.

நூற்றுக்கணக்கான கோயில்களில் திருப் பணியாளர்கள் கல்வெட்டுகளை அழிப்பதைப் பார்த் திருக்கிறேன். தடுக்க முயன்றிருக்கிறேன். அரசுக்கும் அறநிலையத்துறைக்கும், அதிகாரிகளுக்கும் ஊர் மக்களுக்கும் எடுத்துச் சொல்லி வேண்டி யிருக்கிறேன். ஆனால் பல இடங்களில் தோல்வி யையே சந்தித்திருக்கிறேன். ஒவ்வொரு கல்வெட்டு அழியும்போதும் நம் உடம்பின் ஓர் உறுப்பு வெட்டப்படுகிறது என்பதை இவர்களுக்கு எப்படி உணர்த்துவது?

தமிழ்நாட்டுக்கோயில் சிற்பிகள் மாநாட்டில் பேசியிருக்கிறேன். திருமடங்களில் உரையாடி யிருக்கிறேன். அறநிலையத்துறை அலுவலர்களிடம் வேண்டியிருக்கிறேன். திருப்பணியாளர்களிடம் போராடியிருக்கிறேன். என்றாலும் கல்வெட்டு அழிப்பைத் தடுக்க முடியவில்லை.

ஒரு கோயிலைத் திருப்பணி செய்வதற்கு முன் திருப்பணியாளர்கள் தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறையின் அனுமதியும் வழிகாட்டலும் பெறவேண்டும் என்று அரசுக் குறிப்புக் கூறுகிறது. ஆனால் இத்துறையினரைத் திருப்பணி செய்வோர் யாரும் கண்டுகொள்வதே இல்லை.

இலட்சம் இலட்சமாகப் பணம் கொடுப்பவர்களோ, அப்பணத்தைப் பெற்று முன்நின்று திருப்பணி நடத்துபவர்களோ கல்வெட்டுகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. அவர்களுக்குத் திருக்கோயில் பற்றிய அடிப்படை அறிவுகூட இருப்பதில்லை. கட்டட அமைப்பு, கல்வெட்டு, சிற்பங்கள் என்று திருக்கோயில் சார்ந்த எந்தத் துறை பற்றியும் தெளிவான பின்புலமற்ற கோயில் கட்டுமானப் பணியாளர்களின் துணையோடு

மனம்போன போக்கில் வண்ணங்களை அள்ளி வீசிச் சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் இவர்கள் அழிக்கும் போக்கிற்கு இரையாகி அழிந்த பழங்கோயில்கள் நூற்றுக்கணக்கில் அடங்கும்.

அற்புதமான சோழர் கால ஆடற்பெண்களின் சிற்பங்களை, அலங்கோலமான வண்ணப் பூச்சால் விலைமகளிர் போல மாற்றிவிட்ட திருச்செந்துறை சந்திரசேகரர் கோவில் விமானக் காட்சியைப் போய்ப் பார். அதே கோயில் கோபுரத்தில் இருந்த அதி அற்புதமான சக்திசதுஷ்கா சிற்பத்தைச் சிதறடித்துப் புதிதாகக் கோமாளிப் பொம்மை போல் ஒரு சிற்பத்தை அண்மைக் குடமுழுக்கு உருவாக்கி வைத்திருக்கிறது. (இந்தியாவில் இரண்டு சக்தி சதுஷ்கா சிற்பங்கள்தான் இருந்தன. ஒன்று ராஜஸ்தான் மாநிலத்தில் பிஜோல்யாவில் உள்ளது. மற்றொன்று திருச்செந்துறையில் இருந்து அழிந்தது.)

வாருணி, குட்டைப் பாவாடையும் நவீன மார்க் கச்சுமாகப் பார்வதியைப் பார்க்க வேண்டும் என்றால் திருவாரூர் செல்லலாம். தார்பூசிய கல்வெட்டுகள், கருப்பு வண்ணத்தால் படிக்க முடியாதபடி செய்யப்பட்ட கல்வெட்டுகள், சிமெண்டுகளால் விழுங்கப்பட்ட கல்வெட்டுகள் என்று இந்தத் திருப்பணியாளர்களின் கோரப்பசிக்கு இரையான கல்வெட்டுகள் தமிழ்நாடெங்கும் உள்ளன.

திருவிசலூர் சிவயோகநாதசாமி கோயில் நூறுகல்வெட்டுகளைத் திருப்பணியாளர்களிடம் பறி கொடுத்துள்ளது. திருச்சிராப்பள்ளி பஞ்சவர்ணசாமி கோயில் ஒரு செட்டியார் திருப்பணியால் இருபது கல்வெட்டுகளை இழந்தது. திருப்பராய்த்துறை தாருகாவனேசுவரர் கோயில் நாற்பது கல்வெட்டு களைச் செட்டியார் திருப்பணியில் இழந்தது.

அழகாதிரிப்புத்தூர் திருக்கோயில் சம்பந்தர் பாடல் பெற்ற கோயில். அதில் பதினாறு கல்வெட்டுகள் அழிக்கப்பட்டுள்ளன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் திருக்கோயில்களில் தொடரும் இக்கல்வெட்டழிப்புத் தமிழர்களின் அடையாளங்களை முற்றிலுமாக அகற்றி வருவதை நீ மட்டுமல்ல. உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் மனங்கொள வேண்டும்.

கோயில்களைத் திருப்பணி செய்வது முறைப் படுத்தப்பட வேண்டும். அமரர் தமிழ்க் குடிமகன் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த போது ஒரு குழு அமைக்கப்பட்டது. புலவர் செ. இராசு முதலிய அறிஞர்கள் பலருடன் நானும் நளினியும் அதில் உறுப்பினர்களாக இருந்தோம். பல நல்ல திட்டங்கள் அரசிற்கு எடுத்துரைக்கப்பட்டன.

ஆனால் அவற்றுள் ஒன்றைக்கூட அரசு நடை முறைப்படுத்தவில்லை. அறநிலையத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கோயில்களின் சொத்துகளைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சியில் ஒரு விழுக்காடு முயற்சியைத்திருப்பணியின்போது கைக்கொண்டால் கல்வெட்டுகள் பிழைத்துவிடும்.

மக்களுக்குக் கோயில்களின்பால் உண்மையான ஈடுபாடு இல்லை. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தின் மேற்கிலுள்ள தோட்டம் மக்களுக்காகத் திறந்து விடப்பட்டபோது அந்த நாள் மாலையில் கோயில் ஊழியர்கள் கூட்டிச் சேர்த்த குப்பை ஒரு லாரியில் ஏற்றுமளவு இருந்தது.

நாச்சியார்கோயில் திருநறையூர் மணிமாடப் பெருமாள் கோயிலில் ஒருமுறை ஆய்வு மேற்கொண்டபோது, கோயில் மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்ந்து நிர்வாக அலுவலரிடம் அதன் ரகசியம் கேட்டேன். சிரித்த படியே, 'மக்கள் அதிகமாக வருவதில்லை. அதனால் தான் இது முடிகிறது' என்றார் அவர். என் மகிழ்வு வருத்தமாக மாறியது.

மக்கள் கோயிலுக்கு வரவேண்டும். ஆனால் கோயிலில் எப்படி இயங்கவேண்டும் என்ற தெளிவு அவர்களுக்கு இருக்க வேண்டும். தஞ்சாவூர் இராஜ இராஜீசுவரத்தில் காவலுக்கு வந்திருந்த ஒருவர் முருகன் கோயில் அருகே சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தடுத்திருக்கிறேன்.

அதே கோயிலின் அம்மன் திருமுன்னில் அங்கு ஊழியம் செய்யும் அர்ச்சகரே மட்டமான திரைப்படப்பாடலொன்றைப் பாடியபடி குதித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து வருந்தி அவரைக் கண்டித்திருக்கிறேன். நாகர் வடிவங்களைப் பார்த்து வருந்தி அவரைக் கடிந்திருக்கிறேன். நாகர் வடிவங்களை நாகர் கன்னிகைகள் என்று கூறித் திருமணமாகாத இளம் பெண்களைப் பூசைக் கழைத்து ஏமாற்றும் கொடுமையும் இங்குண்டு. இதையும் கூட்டங்களில் மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறேன். என் கோயில் அனுபவங்கள் என்னை நாத்திகனாக்கிவிடுமோ என்று பலமுறை உள்ளம் சோர்ந்திருக்கிறேன்.

தமிழனின் வரலாறு கோயிலில் இருக்கிறது என்பதை நன்கு உணர்ந்திருப்பதாலேயே என்னால் இன்னமும் கோயில்களை இரசிக்க

முடிகிறது. மணிமங்கலம் விஷ்ணுகோயிலில் அருமையான சோழர் காலச் சிற்பங்கள் உள்ளன. அவை அனைத்திலும் உச்சந்தலை முதல் திருவடிவரை எண்ணெய் வண்ணத்தால் நாமம் போட்டிருக்கிறார்கள்.

இதே கதிதான் நாமக்கல் அரங்கநாதர் குடைவரையிலும் எதுபக்தி, எது அலங்கோலம் என்பது கூடப் புரியாத ஆத்திகர்கள், நம் கலையும் பண்பாடும் மிளிரும் இறைக்கோயில்களுக்குச் செய்யும் தீமைகளைப் பார்க்கும்போது நாத்திகர்கள் வணங்கத் தக்கவர்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் இறைமறுப்புக் கொள்கையோடு நின்று விடுகிறார்கள்.

ஆத்திகர்களை இறைவனைப் புகழ்ந்தபடியே தங்கள் வரலாற்றையும் நாட்டின் வரலாற்றையும் ஏன் இறைவனின் வரலாற்றையும்கூடக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் அழித்து விடுகிறார்கள். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவு எப்போது வரும் வாருணி?

பக்தியை அரசியலாக்கி வரும் இயக்கங்கள் மக்களை மேன்மேலும் மூடர்களாக்கி வருகின்றன. பிழைப்புக் கருதிப் பலர் கோயில்களை மூட நம்பிக்கைகளின் கூடமாக்கியுள்ளனர். அரைக்கால் சட்டையும், 'கட்' பனியனும் போட்டபடி கிடார் வாசிக்கும் பிள்ளையாரைச் சிராப்பள்ளியில் உருவாக்கியிருக்கிறார்கள். ஸ்பைடர்மேன் பிள்ளையாரைத் தினமணி படம்பிடித்து வெளியிட்டிருந்தது. இவற்றைச் செய்திருப்பவர்கள் நாத்திகர்கள் அல்லர். ஆத்திகர்களே.

பிள்ளையாரே வருத்தப்படும் அளவிற்கு அவரைத் திரைப்படக் கேளிக்கை போல உருமாற்றியிருக்கும் செயல்களைப் பார்க்கும்போது மனம் நோகிறது. பிள்ளையார் வழிபாட்டை இத்தனை இழிநிலைக்கு இறக்குவது மதஞ்சார்ந்த இயக்கங்களுக்கு என்ன நன்மையைத் தந்து விடும் என்பது புரியவில்லை.

நம்முடைய அடையாளங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனை தமிழர்களுக்கு என்று வருமோ தெரியவில்லை. பழைமையின் பெருமையை, அதன் முக்கியத்துவத்தை, அதுதான் எந்தக் காலத்திலும் நம் வேரை வெளிப்படுத்தவல்ல ஊடகம் என்பதை இளஞ்சிறார்கள் நெஞ்சில் என்று பதிய வைக்கிறோமோ அன்றுதான் தமிழ்நாட்டின் வரலாற்று அடையாளங்கள் காப்பாற்றப்படும்.



வாருணி, நாத்திகர்கள் அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தபோதும், எந்த அமைப்பினராக இருந்தபோதும், எந்தக் காலத்திலும் இறைக் கோயில்களைச் சீர்குலைத்ததில்லை. வரலாற்றின் ஊற்றுக்கண்களான கல்வெட்டுகளை, சிற்பங்களை அழித்ததில்லை. ஆனால், ஆத்திகர்கள் சமயப்பூசல், சாதிப்பூசல், தனிமேலாண்மை எனும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டுக் கோயில்களுக்கும் கல்வெட்டுகளுக்கும் சிற்பங் களுக்கும் உள்ளிருந்தே கொல்லும் நோயாக ஊறு செய்து வருகின்றனர்.

இவர்களிடமிருந்தும், பொறுப்பற்ற கோயில் அலுவலர்களிடமிருந்தும் திருப்பணியாளர் களிடமிருந்தும் முறையான கோயில்கலைப் பயிற்சியற்ற கட்டுமானப் பணியாளர்களிடமிருந்தும் கோயில்களைக் காப்பாற்ற வரலாற்று ஆர்வமுள்ள, தமிழன் என்ற உணர்வுள்ள ஒவ்வொரு மனிதரும் கையிணைக்க வேண்டும்.

திருப்பணிகளை முறைப்படுத்தச் சட்டம் இயற்றுமாறு அரசை வற்புறுத்த வேண்டும். அனைத்துக் கோயில்களும் வரலாற்றுக் களங்கள் என்று அறிவிக்கப்பட வேண்டும். மக்களுக்குக் கோயில்களைக் காப்பாற்றும் நெறிமுறைகளில் பயிற்சி தரப்பட வேண்டும். கோயில்களைப் பாதுகாப்பது எத்தனை இன்றியமையாதது என்பதை இந்த மண்ணின் மைந்தர்கள் உணரும்வரை, தமிழ்நாட்டின் வரலாறு காப்பாற்றப்படும் என்பது உறுதியில்லை.

ஆழ்வார்கள் காட்டும் சமுதாய நெறி

திருமதி **இரா. அகிலா**
தமிழ் விரிவுரையாளர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி புதுச்சேரி

இறைவன் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான். இதனை, நம்மாழ்வார் 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துள்ளான்' என்கிறார். இறைவன் என்ற சொல்லை, 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்' என்று வள்ளுவர் கையாளுகிறார். இறைவன், அஞ்ஞானத்தால் உண்டாகும் நல்வினை, தீவினை ஆகிய இரண்டிற்கும் அப்பாற்பட்டவனாக விளங்குகிறான். அவன், தனக்குவமை இல்லாதவன், பிறவித்துன்பத்தைப் போக்குபவன், எண்ணில் பல்குணத்தன், ஐம்பெரும் பூதங்களானவன், இயற்கையைப் படைத்தவன், அவனே இயற்கையாகவும் விளங்குகிறான்.



காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமாதலின் அந்நிலத்திற்குரிய இறைவன் திருமாலாவான். அவன் மக்களைக் காக்கும் தொழிலைச் செய்பவன். மாயோன் மேய காடுறை உலகம் எனத் தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடுகிறார். அத்தகைய இறைவன்மீது ஆழமான பக்தி கொண்டு நிற்பவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாசுரங்களே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகும்.

பக்தி நெறி

சமணர்களும், பௌத்தர்களும் புலனடக்கம், உண்ணாநோன்பு, இன்பவெறுப்பு முதலியவற்றை மக்களிடம் வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இவர்களது கொள்கைகளும் கருத்துகளும் வெறுப்பு ஏற்படுத்தவே அக்காலத்தில் சைவமும், வைணவமும் கிளர்ந்தெழுந்தன. இல்லற நெறியைப் பின்பற்றி அதில் இன்பமுற்றிருந்தாலும் எந்தத் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் உள்ளத்தை இறைவனுக்கே வைத்து வாழ்க்கை நடத்தினால் போதும் என்று ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைநெறியைப் பரப்பினர். இறைவனைப் பாமாலை பாடியும், பூமாலை சூட்டியும் அவரவர் விருப்பம்போல் வழிபடலாம் என்றனர். இதன்விளைவாக, இவ்விரு சமயங்களும் தழைத்தோங்கத் தொடங்கின.

பிரபந்தத்தை அருளிய ஆழ்வார்கள் பக்திநெறியோடு சமுதாயத்திற்கு நல்லபல செய்திகளையும் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை இங்குக் காணலாம்.

பிறப்பால் வேற்றுமை இல்லை

நான் சொல்கிறபடி செய், செய்கிறபடி செய்யாதே என்று உபதேசம் செய்து வரும் குருபரம்பரையைப் பலர் அறியலாம்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்பார் வள்ளுவர். இக்கருத்தை மனதில் கொண்டு உரைவேந்தரான பெரியவாச்சான்பிள்ளை, 'அடியார்களைக் குலம்பாராது வழிபடல் வேண்டும்' என்கிறார்.

மேலும், தாழ்ந்தார்க்கும் முகம் கொடுக்கிற நீர்மை ஸ்ரீரங்கநாதனுக்கு உண்டு என்பதை,

'இத்தனை அடிய ரானாரக்கு இரங்கும்நம்
அரங்க னாயப்
பித்தனைப் பெற்றும் அந்தோ பிறவியுள்
பிணங்குமாறே' (திருமாலை – 4)

என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

பிறப்பு எல்லா உயிர்களுக்கும் ஒன்றே. ஆனால்

அவரவர் செய்யும் செயல்களின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்றவாறு வேறுபடும். இதை,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' குறள்– 972

என்கிறார் வள்ளுவர். இழிகுலத்தில் பிறந்த பாணர், இறைபக்தியில் பெரிதும் ஈடுபட்டவர். ஆழ்ந்த தியானத்திலேயே அவர் இறைவனைக் காண்கிறார். அவருக்கு அந்தணர்கள் தீங்கிழைக்க, திருமால் அவர்களை நோக்கிச் சொன்னதாக, தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுகிறார்.

'பழுதிலா ஒழுகலாற்றுப் பலசது பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேனும் எம்மடி யார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின்'

திருமாலை – 42

எனவே, மேன்மைக்குக் காரணம் பிறப்பன்று என்பது ஆழ்வார்களின் உறுதியான கருத்து. அதனால்தான் திருவரங்கனைப் பாடிய பாணர், அவரைக் கண்டவுடன்.

'அண்டர்கோன் அடியரங்கன் என்ன முதனைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'


அமலனாதி – 10

என்ற பாசுரத்தைப் பாடி முடித்தவுடன் இறைவனிடம் சோதியாகச் சென்று விட்டார். அத்தகைய இறைவன், குலத்தைப் பாராமல் தன் அடியார் என்று ஏற்றுக் கொண்டான். எனவே, பக்தியோடு இருக்கும் இறையடியார்களுக்குத் தொண்டு செய்வதுதான் சிறந்தது என்று திருமங்கை மன்னர் பாடுகிறார்.

ஏழை ஏதனன் கீழ்மகன் என்னாது
இரந்துமற்று அவற்கு இன்னருள் சுரந்து

பெரிய திருவாய் மொழி – 5:8:1

என்பது அவர்தம் பாடலடிகள். எனவே, இறைவன் சாதிவேறுபாடின்றி அனைவரையும் சமமாய்க் கருதி அருள்பாலிக்கிறான் என்பதை ஆழ்வார் பாசுரங்களின் வாயிலாக, இனிது உணரலாம்.







பொய்யும் மெய்தான்!

நாவரசர் முனைவர் **சோ. சத்தியசீலன்**
முன்னாள் முதல்வர், உருமுதனலட்சுமி கல்லூரி, திருச்சி.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒருசமயம் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு பிச்சைக்காரச் சிறுவன், "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று பாடிக் கொண்டே வந்தான்.

கவிஞர் அவனை அழைத்தார். ஒரு ரூபாயை அவனிடம் கொடுத்தார். "பையா, நான் சொல்வது போல் இனி நீ பாடவேண்டும். சரியா?" என்றார். அவனும் "சரி" என்றான்.

"காயமே இது மெய்யடா, இதில் கண்ணும் கருத்தும் வையடா" என்று கூறி, அவனை அப்படியே பாடச் செய்தார்.

தமிழ் மொழியிலேயே மிகப்பெரிய பொய், நம் உடலுக்கு "மெய்" என்று பெயர் இடப்பட்டதுதான்!



"நேற்றைக்கிருந்தானை இன்றைக்கிருப்பான் என்று எண்ணவோ திடமில்லை" என்று கூறியுள்ளார் –கள்.

"வருகணத்து வாழ்ந்திடுமோ, விழுமோ என்று அறிஞர்களெல்லாம் வருந்தக் கேட்டும்" என்று பாடுகிறார் வள்ளல் இராமலிங்க அடிகளார்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை யெனும்
பெருமை படைத்திவ் வுலகு"

என்று யாக்கை நிலையாமையை வள்ளுவப் பேராசான் கூறுகின்றார்.

இப்படிப்பட்ட உடம்புக்கு 'மெய்' என்று பெயரிட்–டால் அது எப்படிப்பட்ட, வடிகட்டிய பொய்தானே?

'சமைத்தான், சாப்பிட்டான். மனைவியோடு மகிழ்ந்திருந்தான். இடப்பக்கம் சிறிது வலிக்கிறது என்றான். படுத்து எழுவேன் என்றான். படுத்தே போனான்' என்று திருமூலர் கூறுகின்றார்.

"அடப்பண்ணி வைத்தான் அடிசிலை யுண்டார்
மடக் கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றான்
கிடக்கப்படுத்தார் கிடந்து ஒழிந்தானே"

என்பது திருமூலர் பாடல். இப்படிப்பட்ட உடம்பிற்கு, நிலையில்லாத இந்த உடம்புக்கு என்றும் நிலைத்து நிற்கும் 'மெய்' என்னும் பெயரினை இட்டது எந்த விதத்தில் பொருந்தும்?

வாரியார் சுவாமிகள் இதற்கு ஓர் அற்புதமான எளிய விளக்கங் கொடுத்தார்.

"விளக்குமாறு சுமந்து விற்கும் பெண்ணை எப்படி அழைப்போம்?"

"ஏய் விளக்குமாறு" என்றுதானே.

"விறகுக்கட்டைச் சுமந்து செல்பவளை, ஏய்விறகு" என்றுதானே.

எதைச் சுமக்கிறார்களோ அதைச் சொல்லித்தானே அழைக்கிறோம். அப்படித்தான் இதுவும்.

மெய்ப்பொருளாகிய இறைவனைச் சுமந்து கொண்டிருப்பதால் நம் உடம்பை 'மெய்' என்று அழைக்கின்றோம் என்று அழகிய விளக்கம் அளித்துத் தமிழ்மொழியின் பழியைத் துடைத்தவர் வாரியார் சுவாமிகள்.

உடம்பைப் பெற்றதன் பயன்தான் என்ன?

வள்ளுவப் பேராசான் அருமையாக விளக்கம் தந்திருக்கிறார்.

மனித உடம்பு அழியக் கூடியது. அழுக்கு நிறைந்

தது. நோய்களுக்கு இடமாக இருப்பது, தாழ்ந்தது.

ஆனால் ஆன்மாவோ அழியாதது. அழுக் கில்லாதது. நோய்கள் அணுகாதது. உயர்ந் தது.

இந்த உயர்ந்த ஆன்மா ஏன் தாழ்ந்த உடலோடு இணைந்திருக்கிறது.


அழியாத ஆன்மா ஏன் அழியக்கூடிய உடலோடு சேர்ந்திருக்கிறது?

நோயற்ற ஆன்மா ஏன் நோயோடு கூடிய உடம்போ ஒன்று பட்டிருக்கிறது?

ஒரே ஒரு காரணந்தான். ஆன்மா மட்டும் தனித்து இருந்தால் மற்ற உயிர்களுக்கு அன்புசெய்ய இயலாது. நன்மை செய்ய முடியாது.

மற்ற உயிர்களுக்கு அன்புசெய்யவும், நன்மை செய்யவும் ஆன்மாவிற்கு ஓர் உடம்பு தேவை. எனவேதான், உயர்ந்த ஆன்மா, தாழ்ந்த உடம்போடு இணைந் திருக்கிறது. தொடர்பு கொண்டிருக்கிறது என்று கூறுகின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"



உடம்பு பெற்ற நாம், அன்பை எப்படி வெளிப்படுத்துவது? அன்பின் மறு உருவமாகவே வாழ்ந்த திருமூலர் நமக்கு எளிய வழியைக் காட்டுகின்றார்.

ஆன்மாவையும் உடம்பையும் இணைத்தானே இறைவன், அவனுக்கு எப்படி அன்பு காட்டுவது? நன்றி உரைப்பது?

துன்பப்பட வேண்டாம். தவம் செய்ய வேண்டாம். காணிக்கை ஏதும் செலுத்த வேண்டாம். உன் காலருகே முளைத்திருக்கிறதே செடி. அதில் ஒரு பச்சை இலையைக் கிள்ளி இறைவனுக்கு இடு. "இறைவா, இயற்கை வடிவத்தில் எத்தனைகோடி இன்பங்களைத் தந்திருக்கிறாய்' என்று ஒரு பச்சிலையை இடு. அதுபோதும்.

"மனிதா. உன்தாயின் மார்பில் பால்வற்றிப் போனபோது, உன்பசிக்குப் பால்தந்து உன்னைக் காத்ததே பசு. அந்தப் பசுவிற்கு ஒரு பிடி பில்லைப் போடு.

நீ வயிறார உண்ணும்போது, 'பசி' என்று வருகிறானே ஏழை அவனுக்கு, உன் உணவில் ஒரு கைப்பிடி அன்னத்தை அன்போடு கொடு.

"முடியாது ஐயா, இறைவனுக்குப் பச்சிலை போடமாட்டேன். பசுவிற்குப் புல்தர மாட்டேன். உண்ணும்போது எவனுக்கும் வழங்கமாட்டேன்" என்று கூறுகிறாயா. ஏ, மனிதா அந்த மூன்றையும் செய்ய முடியாவிட்டாலும், அடுத்தவர்க்கு ஓர் அன்பான, இனிய சொல்லைக்கூறு. 'ஐயா, நலந்தானே' இந்தச் சொற்களையாவது அடுத்தவர்க் -குக் கூறு. நீ மானுட உடம்பைப் பெற்ற பயனை அடைவாய் என்று திருமூலர் பெருமான் கூறுகின்றார்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

இவற்றைச் செய்தால் உள்ளம் பெருங் கோயிலாகும்.

ஊனுடம்பு ஆலயமாகும்.
வாய்கோபுர வாசலாகும்.
சீவன் சிவலிங்கமாகும்.

கள்ளத்தைச் செய்யும் ஐம்புலன்களும் அருள்ஒளி சிந்தும் மணிவிளக்குகளாக மாறும். பிறவிப்பயனை நாம் பெறுவோம்.

மனிதா நீ புனிதமடைய வேண்டாமா?

திரு. **சிங்கை ம. மந்திரி**
தமிழ்நாடு மாநில உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் துறை, சிங்கம்புணரி

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று நம் மூதாட்டியார் சொல்லி வைத்துள்ளார். ஆலயங்கள் மதங்களின், சமயங்களின் அடிப்படையில் தொழப்படுகின்றன என்பது வெளிப்படையானவை. சமயம் என்றாலே மூடநம்பிக்கை அல்ல. சமயம் என்றால் சமைப்பது, மனிதப்பண்பை, நல்ல நெறிகளை உருவாக்குவதுதான் என்பர். மேலும், மனிதர்களைப் பண்பாளர்களாக மாற்றுவது என்றே பொருளாகும்.

இறைவன் எல்லா உயிர்களிலும் இருக்கிறான் என்பதே இந்து மதத்தின் தத்துவம். அதாவது பல்லி, பாம்பு, விலங்கு, மீன், பறவை, செடி, கொடி, தாவரம் அனைத்திலும் பேதம் இல்லாமல் இறைவன் உறைகிறான். ஆகவேதான் எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்ட வேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தை மனதில் இறுத்தியே, வள்ளலார் பெருமான் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வாடுகிறார். மேலும்,

'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்அன்பு செயல் வேண்டும்'

என்றார். திருமூலரும்,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே

என்றார்.

வள்ளலாரும், கடவுளை அடைய அன்புதான் திறவுகோல். ஜீவகாருண்யம் மூலமே அன்பு வெளிப்படும். முக்தியடைவதற்கு மானிட தேகமே தக்கது. வேறு தேகத்தால் அதை அடைவது அரிது. ஆகவே, தேகம் நீடித்திருக்குமாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

ஆண்டவன் சந்நிதிக்கு முன் அனைவரும் சமம் என்பது உலக வழக்கு. இதை உணர்ந்தாலே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நிச்சயம் தழைத்தோங்கும். வெடிகுண்டு கலாச்சாரம், தீவிரவாதம் இவை செத்தொழியும். மனிதனை, மனிதனாக மனிதநேய உணர்வோடு பார்க்க வேண்டும். மாறுபட்ட சிந்தனைகளால் மனிதன் வேறுபட்டு நிற்கும்போதுதான், சமுதாயம் ஊறுபடுகிறது.

'அஞ்ஞான இருளில் மனிதனை மனிதன்
தின்று வாழ்ந்தான். இன்றோ,
விஞ்ஞான ஒளியில் மனிதனை மனிதன்
கொன்று திரிகின்றான்'


என்றும்,

'அணிமலர்த் தோட்டம்தான் எனினும் சமுதாயம்
தனிமலர் ஒவ்வொன்றும் நறுமணம் பெறுதல் வேண்டும்'

என்றும் மூதறிஞர் கலைஞர் அவர்கள் கவிதை பாடுகிறார்.

ஆலயங்கள் மனித நேயத்தொழிற்சாலைகளாகத் திகழ்கின்றன என்பது காலத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. மனித வாழ்க்கை மண்ணோடு இணைந்தது.

மண்ணிலேதான் பிறக்கிறோம், மண்ணிலேதான் மறைகிறோம். மண்சேர்ந்ததுதான் மனித அமைப்பு. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று நம் முன்னோர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லி இருக்கிறார்கள். பஞ்சபூதங்களால்



ஆனதுதான் இந்த உலகம். இதைச் சொல்வது தொல்காப்பியம் என்று முழுதுணர் அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர்.

1. காஞ்சியிலே இருக்கிற ஏகாம்பரநாதர் ஆலயம்தான் மண்ணுக்கு உரிய ஆலயம்.

2. திருவண்ணாமலையில் இருக்கிற அருணாசல ஈஸ்வரர் ஆலயம் நெருப்புக்குரிய ஆலயம்.

3. திருவானைக்காவலில் உள்ள ஆலயம் நீருக்குரிய ஆலயம்.

4. திருக்காளத்தியிலே இருக்கிற ஆலயம் காற்றுக்கு உரியது.

5. சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயம் விண் – ஆகாயத்திற்கு உரிய ஆலயம்.

ஆகவே விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டது அல்ல. இன்றைக்கு விண்வெளி ஆய்வுகள் வெகுவாக முன்னேறியுள்ளது. ஆனால் 65 ஆண்டுகளுக்கு முன்பே கவிச்சக்கரவர்த்தி பாரதி, 'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்றார். சூரியன்ன வைத்துத்தான் மனிதன் வழிபாடுகள் செய்கிறான். இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் 'ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும்' என்றே பாடுகிறார். இதிலிருந்து நம் முன்னோர்களின் விஞ்ஞான அறிவும் நமக்குப் புலப்படுகிறது. ஆகவே, ஆற்றலும் அறிவும் நம் ஆன்மீகத்தில் குடிகொண்டிருக்கிறது என்பது புலனாகிறது. "விஞ்ஞானி எங்கே தோற்கிறானோ, அங்கே மெய்ஞ்ஞானம் பிறக்கிறது. விஞ்ஞானிக்கு எங்கே சந்தேகம் வருகிறதோ அங்கே இறைவழிபாடு அல்லது ஆலய வழிபாடு என்று ஓர் விஞ்ஞானியே கூறுகிறார்.

இறைவழிபாடு அல்லது ஆலய வழிபாடு என்பது மனித சமுதாயத்தில் ஆதிகால்ம் தொட்டே இருந்து வருகிறது. அத்தகைய இறைவழிபாட்டுக்குத் தமிழன்தான் ஓர் வழிகாட்டி என்றால் அது மிகை இல்லை. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியம், 'கோயில்' என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறியதோடு, அக்கோயில்களில் உள்ள திருவுருவங்களான 'படிமைகள்' என்னும் விக்கிரகங்களை வைத்து வழிபட்டதையும் தொல்காப்பியம் கூறுகின்றது. அரசனும் மக்களும் அறநிலையங்களைத் தோற்றுவித்து, பல அறச்செயல்களும் அங்கு செயல்பட ஏற்பாடுகளும் செய்து வந்தனர். அதற்கு, 'அறப்புறங்காவல்' என்ற பாதுகாப்பும் செய்துள்ளனர்.

உலகிலேயே கட்டடக்கலையில் கைதேர்ந்தவர்கள் என்ற பெருமையும், கோபுரங்கள் அமைப்பதில் சிறந்தவர்கள் என்ற புகழையும் பெற்றவர்கள் தமிழர்களே என்று ஆங்கிலக்கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. தொன்று தொட்டே தமிழகத்தில் திருக்கோயில்கள் அறநிலையங்களாகச் செயல்பட்டு, பலதுறைகளிலும் உதவிகரமாகத் திகழ்ந்திருக்கின்றன. கல்விக்கூடங்களாகவும், இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாதசுரம், மேளம் ஆகிய கலைகளை வளர்க்கும் பல்கலைக்கழகமாகவும் இன்றும் செயல்பட்டு வருகின்றன. மேலும் நூலகங்களாகவும், நீதிமன்றங்களாகவும், ஆவணங்களின் காப்பகமாகவும், பிணியாளர்களுக்கு மருத்துவ உதவிபுரியும் மருத்துவமனைகளாகவும், திகழ்ந்து வருகின்றன. போர்க்காலங்களில் பாதுகாப்பு அரணாகவும் படைவீடுகளாகவும் பயன்பட்டு வந்திருக்கின்றன.

பசியோடு வந்தவர்க்கு, அன்னதானம் செய்யும் பசிப்பிணி அகற்றும் அறநிலையங்களாகவும் இன்றும் செயல்பட்டு வருவதை நாம் நன்கறிவோம்.

கம்பர் பெருமான், 'வண்மையில்லை. ஓர் வறுமை இன்மையால்' என்பார். 'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை. உடையார்களும் இல்லை' என்றும் பாடினா்ர். சமுதாயத்தில் அனைவரும் வளம் பெற்று பசிநீங்கி வாழவேண்டும். வறுமை இல்லா வாழ்வு வாழவேண்டும் என்பதே அவர் எண்ணம்.

இளங்கோஅடிகள் 'பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி' என்றுதான் கூறுகின்றார். மணிமேகலையோ, 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டிகொடுத்தார் உயிர் கொடுத்தாரே' என்று பசியைப் பற்றிச் சொல்கிறார். வள்ளுவரும்,

'உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்

சேராதியல்வது நாடு' என்றே கூறுகின்றார். இதையெல்லாம் உணர்ந்த வள்ளலார்,

உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்

உறுபசி உழந்து வெந்துயரால்

வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ'

என்று சிந்தித்ததன் விளைவால், சத்தியதருமச் சாலைகள் நிறுவினார். ஆன்மநேய ஒருமைப்பாடு காண விழைந்தார். அந்தப் பெருமானால்

அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங்கருணை என்ற தத்துவம் கண்டார். இதனால் இன்று பல திருவிடங்களில் சத்திய தருமச்சாலைகள் தோன்றி, பசியகற்றி வரும் காட்சியைப் பார்க்கின்றோம்.

இப்படி ஆலயங்கள்தோறும் அன்னதானம் வழங்கும் திட்டங்களை அரசும் ஏற்று நடத்தி வருவது மனிதநேயத்தின் வளர்ச்சிக்கு ஒருசான்று என்றே கூறலாம்.

இத்திருக்கோயில்களுக்குப் பெருவேந்தர்கள் பலரும் ஆர்வத்தோடு கொடை செய்து வந்திருக்கின்றனர். கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் தென் காசிக் கோயிலைக் கட்டுவித்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்பவன், தான் 17 ஆண்டுகள் அரிதின் முயன்று, சிற்பக்கலை சிறந்தோங்கக் கட்டிய கோயிலைப் பற்றித் தன், மரணப்படுக்கையில் இருந்து பாடிய பாடல், கல் மனத்தையும் கரைக்க வல்லது. 'இத்தென்காசி ஆலயம் என் ஆற்றலை மட்டும் நம்பிக் கட்டப்பட்டதல்ல. தெய்வச் செயலாலே அமைந்தது. இதனை இன்னும் விரிவு செய்து போற்றுகின்ற பெருமக்களை, அவர்களின் திருவடிகளிலே வீழ்ந்து நான் வணங்குகின்றேன்' என்ற பொருள்பட,

சேலேறிய வயல் தென்காசி ஆலயம்,

தெய்வச் செயலாலே அமைந்தது

இங்கென் செயலல்ல, அதனை இன்னும் மேலே விரிவு செய்தே

புரப்பார் அடிவீழ்ந்து அவர்தம் பால் ஏவல் செய்து பணிவேன் பராக்கிரம பாண்டியனே' எனத் தென்காசி விஸ்வநாதர் கோயிலைக்கட்டிய கோமான் கூறுகிறார்.

தஞ்சைப் பெரியகோயிலை எழுப்பிய மாமன்னன் இராசராசசோழன் 'இந்த அறம் காப்பவர்களின் அடி, என் முடிமேலது' என்று அம்மன்னன் கூற்றைக் கல்வெட்டு நமக்குக் காட்டுகிறது. இச்சான்றுகள் நம் கோயில்களைக் காத்தும் போற்றிவர வேண்டியது நம் கடமை என்று உணர்த்துகின்றன.

அந்தமுறையின் அடிப்படையில்தான் அ.காளாப்பூர் தெய்வத்திரு. இராமுயாதவர் பெருந்தகை, அ.காளாப்பூர் சுனைக்கண்மாய் என்ற இடத்தில் அமைந்துள்ள மிகத்தொன்மை வாய்ந்த அருள்தரு இலங்கமுடைய அய்யனார் திருக்கோயிலைத் திருப்பணி செய்திட முற்பட்டு, பாதிக்கும் மேற்பட்ட திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்தபோது அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். தந்தை தொட்டபணி இடையில் நின்றுவிடாமல் சீர்பட, செம்மையுற நிறைவு செய்திட அன்னாரின் குடும்பத்தினர்களோடு கிராமப் பெரியோரும் முன்வந்தமை பாராட்டுக்குரிய ஒன்று. அவர்களைப் பக்தகோடிகள் சார்பில் வணங்கி மகிழ்வோமாக. அவர்தம் புதல்வர்களுள் ஒருவரும் அ. காளாப்பூர் ஊராட்சி மன்றத் தலைவருமான திரு.இரா. செல்வக்குமார் அவர்களின் தொண்டும் ஆர்வமும் அணுகுமுறையும் இத்திருக்கோயிலின் திருப்பணிக்கு மிகவும் உதவிகரமானதாகவும், ஆதாரமாகவும் நிற்பது குறிப்பிடத்தகுந்ததோடு பெரிதும் போற்றுதற்குரிய செயலாகும்.

ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் கோயில்களை நிருவகித்தவர்கள் வருவாயை முறைப்படி பயன்படுத்தாமல் வீணடிப்பதை அறிந்து, நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, தமிழ்நாட்டில், அறநிலையங்கள் நல்லமுறையில் இயங்கவும், கோயில் சொத்துகள் காக்கப்படவும், ஆலயங்களில் வழிபாடுகள் முறையாக நடைபெறவும், விதிமுறைகளும் சட்டங்களும் இயற்றப்பட்டு, அறநிலையத்துறை அமைக்கப்பட்டு, அதற்கெனத் தனி அமைச்சுப் பொறுப்பும் தரப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. தற்போது தமிழக அமைச்சரவையில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சராக, நம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு கரு. பெரியகருப்பன் அவர்கள், பொறுப்பேற்றுப் பல கோயில்களின் திருப்பணிகளையும் நடத்திப் பெருமை பெற்றுள்ளார்கள். அதைப்போல இந்த அருள்திரு. இலங்கமுடைய அய்யனார் திருக்கோயிலுக்கும் திருப்பணி செம்மையுற நடைபெற, தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கரு. பெரியகருப்பன் அவர்கள் மனமுவந்து ஒரு கணிசமான தொகையை அத்துறையின் சார்பில் வழங்கியுள்ளதை எண்ணி நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்நாட்டில் சுமார் 33,620 திருக்கோயில்கள் இந்து அறநிலையத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. பலகோயில்களில் நாதசுரம், தவில் போன்ற இசைப் பயிற்சிகளும், ஆதிதிராவிட மக்களுக்கு இலவச திருமணங்களும் நடத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சாதி, வேறுபாடுகளை ஒழித்துச் சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துகிற இடம் ஆலயம். ஆலயம். ஆலயம். ஒன்றேதான். மனிதா நீ புனிதம் பெற உரிய இடமும் ஆலயம்தானே.

அருவியூர் ஆராய்ச்சி

டாக்டர் **சி. ஜெயபாரதி**
சிங்கம்புணரி (இருப்பு – மலேசியா)

மதுரை மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதுதான் முதன்முதலில் அருவியூரைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

எங்கள் பூர்வீக ஊராகிய சிங்கம்புணரி மிகவும் புராதனமானது. பாரிவள்ல் ஆண்ட பறம்புமலை என்னும் பிரான்மலை அருகிலேயே இருக்கிறது. 2500 ஆண்டு பழமை பெற்றுள்ள திருப்பத்தூர், குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருக்கோஷ்டியூர் போன்றன அந்த வட்டாரத்தில்தான் இருக்கின்றன. பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரை மாநகர் இருபத்தாறு மைல் தூரத்திலும் மாணிக்கவாசகரின் திருவாதவூர் பதினெட்டே மைல் தூரத்திலும்தான் உள்ளன. பண்டைக்காலப் பாண்டியநாடு, சோழ நாடு, பல்லவப் பேரரசு ஆகியவற்றின் எல்லையில் விளங்கியதால் இவ்வட்டாரத்தில் சராசரி மூன்று மைல்களுக்கு ஒரு கோட்டை வீதம் விளங்கின. நாகரீக முயற்சி பெற்ற இடம்.

சிங்கம்புணரியிலிருந்து 2 மைல் தூரம் உள்ள பிரதேசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக அருவியூர் என்ற ஊர் இருந்ததாகவும், அந்த ஊரில் பதினெட்டு வீதிகளும், பதினெட்டுத் தெருக்களும், பதினெட்டுக் கோயில்களும் இருந்ததாகவும் செவி வழிச் செய்தி விளங்கியது. அவ்வட்டாரத்தில் அரிகுரிச் செட்டியார் என்றும், 'அரிவையூர்ச் செட்டியார்' என்றும், அழைக்கப்பட்ட தனவசியச் சமூகத்தினர் வசித்து வந்தனர்.

பிரான்மலை வட்டாரத்திலோ, 3000 ஆண்டுகளுக்கு முன் இறந்தவர்களை வைத்துப் புதைத்த முதுமக்கள் தாழிகள் ஏராளமாக இருந்தன. காராளன் காலத்தவை என்று கூறப்பட்ட பழங்காலச் சுவடிகளும் நிறைய இருந்தன. அங்குள்ள கோயில்களின் சுவர்களிலெல்லாம் பலவகைப்பட்ட கல்வெட்டு சாஸனங்கள் இருந்தன. இவையெல்லாமே நிச்சயமாக ஏதோ முக்கியமான செய்திகளைக் கூறுவனவாகத்தான் இருக்க வேண்டும்மெ என்று அப்போது தோன்றியது.

இதனாலெல்லாம் அவ்வட்டாரத்து வரலாற்றை ஆராய வேண்டும் என்று அவா மேலிட்டது.

கல்வெட்டுகளில் கண்ட செய்திகளை எல்லாம் பார்க்கும்போது அடிக்கடி 'கேரள சிங்க வளநாட்டு, அருவியூரான குலசேகரப்பட்டினம், தேசி உய்யவந்த திருப்பத்தூர் மட்டியூர் கோயில்களிலும் சிவபுரித் திருத்தான்றீசுவரர் கோயிலும் இருக்கும்' கல்வெட்டகளில் அவை அதிகம் காணப்பட்டன.

அந்த ஊரில் வசித்த பெருவணிகர்கள் அவ்வட்டாரத்திலுள்ள பல கோயில்களில் கோடிக்கணக்கான பொன் மதிப்புள்ள பெரும் திருப்பணிகளைச் செய்திருப்பது தெரிந்தது. பல நிலமானியங்களும் இருந்தன. அந்த நிலங்களின் எல்லைகள் கூட குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த விபரங்களையெல்லாம் வைத்துப் பல வரைபடங்களைத் தயாரித்தேன். அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி இணைத்தேன். Common Factor என்ற பொதுத்தன்மைகள் உடையனவெல்லாம் பொருந்தி வந்தன. மாஸ்டர் பிளான் (Master Plan) ஒன்றையும் உருவாக்கினேன். அந்த வட்டாரத்தின் தற்கால வரைபடத்தையும் தயாரித்துக் கொண்டேன். அந்தப் படங்களின் உதவியோடு ஆங்காங்கு சென்று சிறிய அளவில் அகழ்வாராய்ச்சிகளைச் செய்தேன்.

நான் எதிர்பார்த்ததை விட, மிக மிக அதிகமான புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து விட்டேன்.

அருவியூரைக் கண்டுபிடித்து விட்டேன். அது பாமர மக்களின் கற்பனையல்ல. செவிவழிச் செய்தியுமல்ல. புராணக் கதையுமல்ல. நம் போன்ற இரத்தமும் சதையும் கொண்டு புத்தியையும் தைரியத்தையும் துணைகொண்டு, நாகரீக உலகெங்கும் சென்று தமிழின் புகழை நாட்டின் உண்மையான மனிதர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்த இடம். அவர்கள் 'திசையாயிரத்து ஐநூற்றுவர்' என்னும் வணிகக் குழுவொன்றை வைத்திருந்தனர். இந்த ஐந்நூற்றுவரின் கல்வெட்டுகளும் கோயில்களின் சிதைவுகளும், சயாமில் தாக்குவாப்பா, சுமத்ராவில் பாலெம்பாங், சீனாவில் காண்டன் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அருவியூரில் விளங்கியதாகச் சொல்லப்பட்ட பதினெட்டுக் கோயில்களின் துவராபதீச்சுரம் முதலிய ஐந்து கோயில்கள் இருந்த இடத்தையும் கண்டு பிடித்தேன்.

அருவியூர்ப்பட்டினம் - ஓர் ஆய்வு

அமரர் புலவர் **சீ. இலட்சுமணன்**
சிங்கம்புணரி

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனாகிய சிவபெருமான்மீது இடையறாத பக்தியும், நித்தம் மரகத விநாயக பூசையும், உலகெங்கும் இரத்தின வணிகம் செய்யும் உரிமையும், மன்னவர்களுக்கு மணிமுடி சூடும் பெரும்பேறும் தமக்கெனத் தனிக்கொடி வைத்துக்கொள்ளும் தகுதியும் உடையவர்கள் சந்திரகுல தனவைசியராகிய அருவியூர் நகரத்தார் எனப் பழைய சுவடியொன்று எடுத்தியம்புகிறது. "நகரத்தார் என்ற சொல் இக்காலத்தில் பெரும்பான்மையாக, செட்டிநாட்டுப் பகுதியில் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களை இச்சொல் குறித்தாலும் பழங்காலத்தில், வணிகர்கள் அனைவரையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவே இச்சொல் விளங்கியது. முற்காலக் கல்வெட்டுகளில் "இந்நகரத்தோம்", "மணிக்கிராம நகரத்தார்", ஐநூற்றுவ நகரத்தார்", "நாகநாட்டு நகரத்தார்", அருவியூர் நகரத்தார்" போன்ற சொற்களைக் காண்கிறோம்.

ஆதியில் சீர்மிகு சம்புத்தீவில் நாகநாட்டில் சத்தியாபுரி என்ற நகரத்தில் இச்சந்திரகுல கோத்திர வைசியர்கள் மரகத விநாயகர் பூசையும், கோபதீசுவரர் வழிபாடும், சதாசிவகுரு பீடத்தில் தீட்சா கிரியையும் இரத்தின வியாபாரமும் செய்து கொண்டு மன்னர்களால் சிறப்பாக மதிக்கப்பட்டு விபூதி, ருத்திராட்சம். தரித்து சைவ சித்தாந்திகளாக வாழ்ந்து வந்தனர். நாகநாட்டு மன்னன் கொடுங்கோலனாகிக் கடுந்தண்டனைகளை இவர்களுக்கு வழங்கவே அந்நாட்டை நீத்து தொண்டை நாட்டுக் காஞ்சிபுரத்தை வந்தடைந்தனர். வைசியர்களின் வரவறிந்த அரசன் அகமகிழ்ந்து அன்போடு வரவேற்று, உபசரித்து ஆதரவளித்து தன்னாட்டிலேயே வாழுமாறு வேண்டிக் கொண்டான். வேந்தனின் வேண்டுகோளை ஏற்று நகரத்தார் அவ்வூரிலேயே தங்கினர். மன்னன் வேண்டுகோளின்படி புஷ்கர நதியில் நீராடி சத்யபுரீசுவரரைத் தரிசித்து, அருணகிரி சிவாச்சாரியாரிடம் தீட்சாகிரியைப் பெற்றுக் கொண்டனர். மரபு வழாமல் அறம் பிறழாமல், எல்லாருக்கும் இனியராய், ஈர நெஞ்சினராய் பன்னெடுங்காலமாய் அந்நகரிலேயே வாழ்ந்து வந்தனர். காலத்தின் கோலத்தால் தோன்றிய பிரதாபராசன் என்ற மன்னன் அநீதியின் உற்ற தோழனானான். வணிககுல மக்களின் துன்பத்தை இன்பமெனக் கொண்டான். ஆகவே, கலிவருடம் 2312-இல் விருகிருதி ஆண்டில் ஆண்டு வருபவனுக்கஞ்சி ஆண்டவனை வணங்கி வேண்டிச் சோழநாடு ஏகினர்.

சோணாடாண்ட மனுநீதிச்சோழன் புதிதாகத் தன்னாட்டிற்கு வந்தவர்கள் நன்னாட்டம் கொண்டவர்கள் என்பதை அறிந்து அவர்களை அவைக்கு வரவழைத்து விசாரித்தான். பன்னாட்டு வணிகர்களும் வாழும் தன்னாட்டிற்குப் புதிதாக வந்த இவ்வணிகப் பெருங்குடியினர் தென்னாட்டிற்குச் செல்லும் திட்டத்துடன் வந்திருப்பதை உணர்ந்தான். "இக்காவிரிப்பூம்பட்டினத்தில் வடக்குத் தெருவில் பலவகை வணிகர்களுமிருப்பதால் இரத்தின வணிகர்களாகிய நீங்கள் ஏனைய மூன்று தெருவிலும் குடியமருங்கள். சிங்கக்குடையும், உங்கள் மாளிகையில் தங்கக் கலசங்களும் வைத்துக் கொள்ளுங்கள். காவிரியில் நீராடலும், தில்லைப்பதியில் ஈசானியச் சிவாச்சாரியாரிடத்து தீட்சா கிரியையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று மிகவும் வேண்டினான். நகரத்தார் கூடி நன்கு ஆலோசித்து, வேந்தனின் வேண்டுகோளை ஏற்று எண்ணாயிரம் வைசியக் குடும்பத்தினரும், பூம்புகாரில் குடியேறி அரச விசுவாசத்துடன் "இரத்தின தனமகுட வைசியர்கள்" என்ற பெயருடன்



சிவநெறியும் அறநெறியும் வழுவாது வாழ்ந்து வந்தனர். பூவந்திச் சோழன் ஆட்சிக்காலத்தில் மிகப்பெரிய சோதனையொன்று இம்மரபினர்க்கு வந்தது. வைசியப் பெண்கள் அனைவரையும் அம்மன்னன் சிறைவைத்தான். உயிரினும் மானத்தைப் பெரிதாக நினைக்கும் வணிகர் சிந்தை நொந்து வைசியக்குடும்பத்தினர் எண்ணாயிரம் குடும்பத்தினரும் தங்கள் தீட்சாகுருவாகிய ஆத்மநாத சாஸ்திரியை அடைந்தனர். "குருநாதா எங்கள் வம்சத்துச் சிசுக்களையும், மரகத விநாயகர் பூஜையையும் காத்து வாருங்கள்" என்று பணிந்து கண்ணீருடன் கூறி அக்கினி பகவானுக்கு ஆகுதியாக்கினர்.

குழந்தைகள் ஈன்றோரை இழந்தனர். குரு சீர்களை இழந்தார். மேற்குத் தெரு ஆறுவழியைச் சார்ந்த அறுநூறு ஆண்பிள்ளைகளையும் தெற்குத் தெரு நான்குவழியைச் சேர்ந்த நானூறுபிள்ளைகளையும், கீழத்தெரு ஏழுவழியைச் சார்ந்த ஐந்நூற்றிரண்டு சிசுக்களையும் ஆத்மஞான சாஸ்திரிகள் கண்ணெனக் கருத்துடன் காத்து, அறிவுபுகட்டி, வளர்த்து வந்தார். ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் மன்னவன் தன் மகனுக்கு மகுடம் சூட்ட விரும்பினான். ஆத்மநாத சாஸ்திரி பக்கமிருந்த ஆயிரத்து ஐநூற்றியிரண்டு வைசியகுல மக்களை அணுகி மரபின்படி தன் மகனுக்கு மகுடஞ்சூட்டுமாறு வேண்டினான். "மன்னவனே உங்கள் செய்கையால் எங்கள் பெற்றோர்களால், பெண்டிர்களும் மானம் காக்க உயிர்த்தியாகம் செய்தனர். நாங்களோ பிரமச்சாரிகள் எங்களுக்கு விதிப்படி மகுடஞ்சூட்ட உரிமையில்லை" என்று கூறி மறுத்து விட்டனர். பெற்றெடுத்த பிள்ளைக்குப் பட்டஞ்சூட்டத் தடை ஏற்பட்டதைக் கண்ட வேந்தன் வேதனையுற்று வேதம் வல்ல வைசிய குலகுருவாகிய ஈசானர் சிவாச்சாரியாரையும் ஏனையோரையும் கலந்தாலோசித்தான். அறநூலின்வழி ஆய்கின்றபோது, "வைசியகுலத்தார்



வேளாளர்குலத்தில் பெண் கொள்வது குற்றமில்லை. ஆகவே, வைசியயர் வேளாளர் குலப்பெண்களைத் திருமணம் செய்யலாம்" என்றனர். சோழமன்னன் உழுது உலகு புரக்கும் வேளாளர்களையும் அவர்கள் தம் குருக்களையும் அழைத்து கால்வழி தவறாது தழைக்க உதவுமாறு வேண்டினான். வேளாளர்களும் பெண்கொடுக்க இசைந்தனர். வைசியர்கள் "நாங்கள் வேளாளர் பெண்களை எடுக்கிறோம். ஆனால் பிற்காலத்தில் பெண் கொடுக்க இயலாது" என்றனர். அரசனும் ஆதீனக் குருக்களும் வேளாளர்களைச் சம்மதிக்கச் செய்தனர். ஆனால் வேளாளர்கள் தங்கள் பெண்களுக்கு வேளாளர் குருக்கள் தம் தீட்சாகுருக்களாக இருக்க வேண்டுமென்றார். இருதரப்பினரும் இசைந்தனர். மேலத்தெரு ஆறுவழியைச் சார்ந்த அறுநூறு பிள்ளைகள் கீழத்தெரு ஏழுவழிப்பிள்ளைகள் சோழிய வேளாளப் பெண்களையும் திருமணஞ் செய்தனர். இப்பெண்கள் முறையே திருவாரூர் திருநாவுக்கரசு குருக்களையும், கும்பகோணம் சிவஞானக் குருக்களையும், ஸ்ரீவாஞ்சியம் நிரம்பவழகிய குருக்களையும் தீட்சாகுருக்களாகக் கொண்டனர்.

இல்லறத்தார்களாகிய வைசியர்கள் சோழனாகிய இராஜபூஷணனுக்கு மணிமகுடஞ் சூட்டிர். மன்னவனின் மரியாதையையும் பெற்றுக் கொண்டனர். வேளாளர்கள் தங்கள் பெண்களுக்குச் சகல சீர்வரிசைகளையும் செய்ததுடன், வேலை செய்வதற்குவெள்ளாட்டி(பணிப்பெண்கள்)களையும் அனுப்பினர். பிற்காலத்தில் 'உபயகுல பூபால வைசியர், இரத்தின தன மகுட பூபால வைசியர்,' கங்கை குல வேளாளர் வீட்டுப் பெண்களைத் திருமணஞ் செய்ததால் 'சந்திர கங்காகுல வைசியர்' என்ற சிறப்புப் பெயர்களும் பெற்றனர். விபூதி, உத்திராட்சமணிந்து சிவநெறிச் செல்வர்களாக வாழ்ந்து வரலாயினர்.

பாண்டிய மன்னன் 'சௌந்திரபாண்டியன்' சோழனின் விருந்தாளியாகக் 'காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்தான். சோணாட்டு மக்கள் அவனுள்ளத்தைக் கவர்ந்தனர். சோழனோடு உரையாடும்போது 'கீர்த்திபூஷண பாண்டியன்' காலத்தில் கடல் பெருக்கெடுத்துத் திருப்பூவனம்வரை அழிந்து விட்டது. பின்னர் பதினெட்டு பாண்டியர்களின் ஆட்சிக்காலம் வரை எங்கள் நாட்டில் நற்குடிகள் இல்லாது போயினர். தற்போது பல்வேறு திசைகளிலிருந்து நற்குடிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். நாடும் வளஞ்

செறிந்ததாகவுள்ளது. மேலும் நாடு நன்னாடாக வைசியர்களையும் வேளாளகளையும், வேதம் வல்லார்களையும் என்நாட்டிற்கு அனுப்பி உதவுங்கள். அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தருவேன்" என்று வேண்டினான். சோழன் மூன்று தெரு வைசியர்களையும் அழைத்துப் பாண்டிய மன்னின் வேண்டுகோளைக் கூறி, அவர்கள் உதவியை நாடினான். "நாங்கள் மூன்று தெருவினரும் ஒருவரை ஒருவர் விட்டு மற்றொருவர் பிரிவதில்லை. அவ்வாறு நாங்கள் பாண்டியதேசம் சென்றால் எங்களைத் தாங்கள் எவ்வளவு மரியாதையுடன் நடத்துகிறீர்களோ, அவ்வாறே பாண்டிய மன்னனும் மரியாதையுடன் நடத்த வேண்டும். மேலும் நாங்கள் வாழ்வதற்குரிய இடம், தேவாலயங்கள், குருமார்கள் தங்குவதற்கு மடலாயம் அமைக்க வசதி இவற்றைச் செய்துதர வேண்டுமென்று கூறினர். சௌந்திர பாண்டியனும் உறுதி கூறி வைசியர்கள்களைத் தன்னாட்டிற்கு அழைத்து வந்தான்.

பாண்டிய நாட்டெல்லையை அடைந்தவுடன் மன்னன் வணிகப் பெருங்குடியினரை நோக்கி "வைசியகுலச் செம்மல்களே, கடலுக்கு மேற்கும் பிரான்மலைக்குக் கிழக்கும், வைகைக்கு வடக்கும், வெள்ளாற்றிற்குத் தெற்குமாக அமைந்துள்ள இப்பூமி வேளாளர் பகுதியாகும். உழுதும், உழுவித்தும் விருந்தோம்பும் பண்பினர் வேளாளர். ஆகவே, "மூன்று தெருவைச் சார்ந்தவர்களாகிய நீங்கள் இப்பகுதியில் எங்கு வேண்டுமானாலும் தங்கிச் சீரும் சிறப்புமாக வாழுங்கள்" என்றான். மேலைத் தெருவைச் சேர்ந்த ஆறுவழியினருக்கு அரிவையூரும் பிரான்மலைக் கோயிலும், தெற்குக்குடி நான்குவழியினருக்கு உத்தரபட்டணமும் அவ்வூர் கோயிலும், கீழத்தெரு ஏழுவழியாருக்கு இளையாற் றங்குடியும் அவ்வூர் கோயிலும் உரிமை யுடையதாக வகுத்துக்கொண்டனர். தாங்கள்



பரம்பரையாக வழிபட்டு வரும் மரகதவிநாயகரை அரியூரில் பிரதிஷ்டை செய்து வழிபடுவதென' வைசியர்கள் முடிவெடுத்தனர். அரியூரில் வாழ்ந்து வந்த வணிகப் பெருங்குடியினர் 'அரியூரார், அரியூரார்' என்றழைக்கப் பெற்றனர்.

சிற்றூராகிய அருவியூர் அருவிமாநகர மாயிற்று. 'குலசேகரப்பட்டினம்', 'தேசிஉய்ய வந்த பட்டினம்' என்ற சிறப்புப் பெயர்களும் ஏற்பட்டன. திசையாயிரத்தைந்நூற்றுவர், நானாதேசிகன் என்ற வணிகக் குழுவினரும் அங்கே குடியேறினர். ஏறிபடை நல்லூர் (செட்டிக்குறிச்சி) ஐந்நூற்றுவ மங்கலம் (ஐநூத்திப்பட்டி) எனும் வணிகப் பதிகளும் தோன்றின. திசையாயிரத்தைந்நூற்றுவர் பெயரால் ஐநூற்றீசுவரர் கோவில், துவராபதீசுவரர் கோயில் ஆகியன கட்டப்பெற்றன. பழைய ஆலயங்களில் புதிய இறைத்திவுருவங்களும், அடியார்கள் திருவுருவங்களும் எழுந்தருளுவித்தனர். நித்திய பூஜைக்கு நிலங்கள் அளித்தனர். மடாலயங்களைத் தோற்றுவித்தனர். இப்பகுதியிலுள்ள நகரத்தார்கள் பலருங்கூடி பொருள்களுக்குத் தீர்வை விதித்தனர். தீர்வைப் பணம் ஆலயங்களுக்கும் அறநிலையங்களுக்கும் அளிக்கப்பட்டது.

சகாப்தம் 1210 (கி.பி.1288) அரியூர்ப்பட்டினம் எடுபட்டுப் போனதால் மேலைத்தெரு வைசியர்கள் கோட்டாற்றைச் சென்றடைந்து மரகதப் பிரதிஷ்டை செய்து வாழ்ந்து வந்ததாகப் பழஞ்சுவடி குறிக்கிறது. இன்றும் கோட்டாற்றில் மரகதவிநாயகர் எனும் தேசி(க) விநாயகர் கோவிலுள்ளது. அப்பகுதியில் செட்டியார் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் சைவர்கள். அருவியூர் நகரத்தாரில் ஒரு பிரிவினர் சைவ உணவைக் கைவிட்டு விட்டதால் அருவியூர் தெற்குவளவு நகரத்தார் எனப்படுகின்றனர். இப்பிரிவு எப்போது தோன்றியது என்பதற்கான குறிப்பு ஒன்றும் இதுவரை கிடைக்கவில்லை. கோட்டாற்றுத் தேசிவிநாயகர் கோவிலில் தூணொன்றில் மூவரின் உருவங்கள் காணப்படுகின்றன. ஒருவர் தலையில் மட்டும் சிவலிங்கமுள்ளது. 1288-இல் அருவியூர் அழிந்துவிட்டதாகக் கூறப்பட்டாலும் கி.பி.15ஆம் நூற்றாண்டு வரை அச்சிற்றூர் இருந்ததாகக் கல்வெட்டில் குறிப்புள்ளது. கோட்டாற்றிற்குச் சென்ற அருவியூர் நகரத்தார்கள் காலப்போக்கில் தங்கள் பழையவூரை மறந்து விட்டார்கள். அங்குள்ள சைவ வேளாளர்களுடன் மணவினை வைத்துக் கொண்டனர். தற்போது சைவச்செட்டியார்கள், கோட்டாற்றுச் செட்டியார்கள்

தலைமைச் சிறப்புப் பற்றி மூப்பனார்கள் என அழைக்கப்படுகின்றனர். நெல்லை மாவட்ட இலைவணிகர்களாகிய மூப்பனார் இவர்களில் ஒரு பிரிவினர் சைவ உணவினர். இவர்கள் கேரள நாட்டிலும் பரவி மிகச்சிறுபான்மையாக வாழ்ந்து வருகின்றனர். இன்றும் இவ்வகுப்பாரிடையே வாணிபமே முதன்மைத் தொழிலாக விளங்குகிறது. பொன், நவதானிய வணிகத்தில் சிறந்து விளங்குகின்றனர். பக்தி, பண்பாடு, நேர்மை ஆகியவை இச்சமூகத்தார்க்குரிய சிறப்பம்சங்களாக இன்றுமுள.

அருவியூரா? அரிவியூரா?

அருவியூர் சிற்றூரன்று. மாநகர். வீரசோழனின் 35-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1213) கல்வெட்டு ஒன்றில் "அருவி மாநகரத்து வியாபாரி திருமணிக்கிழார் தேவன் உமையொரு பாகன்" என்ற வணிகன் குறிக்கப்படுகிறான். மேலும் தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதி 8-இல் கல்வெட்டு எண் 442 'அருவிமாநகரமான குலசேகரப் பட்டினத்தோம்' எனக் குறிக்கிறது. அருவியூர், கி.பி. 1106-இல் நானாதேசிப் பெருந்திரு என்றும் கி.பி. 1117-இல் தேசி உகந்த பட்டினம் என்றும், கி.பி. 1204-இல் ஸ்ரீவல்லபபுரம் என்றும், கி.பி. 1288-இல் குலசேகரப்பட்டினம் என்றும் அழைக்கப் பட்டதாக சிவபுரிப்பட்டித் திருப்பத்தூர் திருக்கோஷ்டியூர் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

அருவியூரில், அருவியூர் நகரத்தார் மட்டுமன்றி திசையாயிரத்து ஐநூற்றுவர், நானாதேசிகள் போன்ற பல்வகை நகரக் குழுவினரும் வாழ்ந்து வந்தனர். இம்மாநகரைச் சுற்றி திசையாயிரத்து ஐநூற்றுவ மங்கலம் (ஐநூத்திப்பட்டி) எறிபடை நல்லூர் (செட்டி குறிச்சி) கூடலூர் (தற்போது அழிந்து விட்டது) ஆகிய வணிகப் பகுதிகளும் இருந்தன. இவ்வூரிலிருந்து எறிபடை நல்லூருக்கு ஒரு பெருவழி (Hai way) சென்றது. இந்நகர் ஒருமைல் நீளமும் முக்கால் மைல் அகலமும் கொண்டதாக அமைந்திருந்தது. இங்கு பதினெட்டுப் பெருந்தெருக்கள் அமைந்திருந்தன. துவராபதீசுவரர் ஆலயம், ஐநூற்றீசுவரர் ஆலயம், சுந்தரபாண்டீசுவரம், அருனை கண்ட விண்ணகர், மரகத விநாயகர் திருக்கோயில், வடக்குவாசல் செல்வி கோயில் ஆகியன இருந்தன. காலப்போக்கில் அருவிமாநகர் சிற்றூராய்ச் சிதைவுற்று அழியவே ஆலயங்களும் அழிந்தன. இவ்ஆலயத்தைச் சேர்ந்த திருவுருவங்கள் சிலவற்றைக் காளாப்பூர் ஆற்றங்கரையிலும் சிங்கம்புணரிக்கு வடபாலுள்ள விழுப்புணிக் களத்திலும் இன்றும் காணலாம். கோவிலின் கற்கள் ஆங்கிலேயர் காலத்தில் அணைகள் கட்ட எடுத்துச் செல்லப்பட்டன. மருது பாண்டியர், காளையார் கோயிலுக்கு வண்டியில் கொண்டு சென்றதாகச் செவி வழிச் செய்தியும் உண்டு. அருகிலுள்ள ஊர்களின் ஆலயங்களில் இவ்வூர்க் கல்வெட்டுகளையுடைய கற்றுண்டுகளையும் காணலாம்.

இத்தகைய வணிகப் பெருநகர் எங்கிருந்தது எனும் வினா எழுவது இயற்கையே. இது சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரிக்குக் கிழக்கே உள்ள காளாப்பூருக்குத் தென்பால் அமைந்திருந்தது. காளாப்பூரும் அந்நகரின் ஒருபகுதியாக ஒருகாலத்தில் இருந்திருக்கலாம். அப்பகுதி இன்று அருவிக்காடு என வழங்கப் பெறுகிறது. அப்பகுதியிலுள்ள புன்செய் நிலங்களை உழும்போது அம்மி, குழவி, பழைய மணபாண்டப் பகுதிகள் கிடைத்துள்ளன. பழஞ்செப்புக் காசுகள் கிடைத்ததாகச் சிலர் கூறுவர். களிமண்ணால் செய்யப்பட்டுச் சுடப்பட்ட உறைகளால் அமைக்கப்பட்ட கிணறு ஒன்றும் இப்போது அங்கு உள்ளது. ஆல ஊருணி அல்லது மரகத ஊருணி எனும் பெயருடைய அகன்ற குளம் ஒன்றும் அப்பகுதியில் உள்ளது.

இத்தகைய செல்வமும் அறமும் இணைந்து வாழ்ந்த நகர் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து உலகறியச் செய்த உரிமையும் பெருமையும் உடையவர் சிங்கம்புணரியைச் சார்ந்த மலேயா வாழ் மாமேதை திரு. டாக்டர்.சி. ஜெயபாரதி எம்.பி.பி.எஸ் ஆவார். அவரது குறிப்புரை கண்டுதான் இக்கட்டுரை எழுதப் பெற்றது.


அரசோ, பல்கலைக்கழகமோ செய்ய வேண்டிய பெரும்பணியைத் தனியொருவர் தம் முயற்சியால் பிறர் தூற்றுதலுக்கஞ்சாது போற்றுதலை எதிர்பாராது கண்டுபிடித்து வெளியிட்டார் என்பது உலகு போற்றத் தகுந்த செயலாகும்.



வரலாற்றின் சுவடுகள் தேடி...

கிருங்கை சேதுபதி

வள்ளல்பாரி ஆண்ட காலத்தில் பறம்புநாட்டின் உட்பகுதியாய் அமைந்திருந்த காளாப்பூர், பாரியின் மறைவுக்குப் பிறகு பாண்டிய நாட்டின்கீழ் வந்திருக்கக்கூடும். அக்காலத்தில், பாண்டிய மன்னனால் சோழ நாடாகிய காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அழைத்து வரப்பெற்ற வணிககுலத்தவர் நற்குடி நாலாயிரம் பேரில் ஒருகுழுவினர் இப்பகுதியில் சாலிவாகன சகாப்தம் 629 (கி.பி.707)இல் வந்து குடியேறினர். தமக்கெனக் கோவில் குளங்களை வடிவமைத்துக் கொண்டனர். அக்காலத்தில், இவ்வூர் பெருநகராக அமைந்திருந்திருக்கின்றது.



பறம்புமலைச்சாரலில் வீழ்ந்த அருவி ஆறாய்ப் பெருக்கெடுத்து வந்த இப்பகுதியில் அமைந்த ஊர் ஆதலின் அருவியூர் எனப் பெயர் பெற்றிருக்க வாய்ப்புண்டு. அரிவையாகிய சக்தியைப் பாகத்தனாக உடைய சிவனை நினைவூட்டி, அரியூர், அரிவையூர், அருவியூர் என்றெல்லாம் அழைக்கப்பெற்ற இப்பகுதி, குலசேகரபாண்டிய மன்னன் பெயரால், ‘குலசேகரப்பட்டினம்’ என்றும், வணிகர்களாகிய தேசிகள் வாழ வந்த பட்டினம் என்ற பொருளில், ‘தேசிஉய்ய வந்த பட்டினம்’ என்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்தது.

பிரான்மலையிலுள்ள குலசேகரபாண்டியனின் 16-ஆவது ஆட்சியாண்டுக்(கி.பி.1226)கல்வெட்டு, ‘கேரளவளசிங்கநாட்டு அருவியூரான குலசேகரப் பட்டினம்’ (S.I.I.Vol.VIII.No.440) என்றும், பிரான்மலையிலுள்ள சொக்கநாதர்கோயில் கல்வெட்டு, ‘கேரளசிங்க வளநாட்டு அருவிநகரமான குலசேகரப்பட்டினத்து நகரத்தோடும்’ என்றும் இதனைக் குறிப்பிடுகின்றன. திருப்புத்தூர்க் கல்வெட்டுக்கள், ‘கேரளசிங்கவளநாட்டு அருவியூரான குலசேகரப் பட்டணம்’ என்றும், ‘அருவியூரான குலசேகரப்பட்டணம்’ என்றம் கூறுகின்றன. இங்கு சுட்டப்பெறும், அருவியூர் முதல்மாறவர்மன் குலசேகரபாண்டியன் காலத்தில் (கி.பி.1268-1310) அவன் பெயரால் குலசேகரப்பட்டினம் என்றும் வழங்கிவந்திருக்கின்றது. இந் நகரம், சாலிவாகன சகாப்தம் 1210 (கி.பி.1268) இல் கலகத்தால் அழிவுற்றது என்று நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு குறிப்பிடுகின்றது. இதுகுறித்து ஆராய்ந்த கவிஞர் மரு. பரமகுரு அவர்கள். “கி.பி. 1288இல் குலசேகரபாண்டியன் கொடிகட்டி ஆண்ட காலமாகும். அவன் மகன் சுந்தரபாண்டியன், தந்தையின்மீதிருந்த தீராத சினத்தால் கி.பி.1310இல் குலசேகரபாண்டியனைக் கொன்று பட்டத்திற்கு வந்தான். இந்தச் சுந்தரபாண்டியனும் மற்றொரு பாண்டியனான வீரபாண்டியனும் ஒரே காலத்தில் வெவ்வேறிடங்களில் இருந்து ஆட்சிபுரிந்தனர். இவ்விருவருக்கும் நிகழ்ந்த போரில் தோல்வியுற்ற சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்கபூரைத் தென்னாட்டின் மீது படையெடுத்து வருமாறு அழைத்தான். இது கி.பி.1310 ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்தது என்று மகம்மதிய சரித்திர ஆசிரியன் வாசப் என்பவன் கூறியுள்ளான் என்பர் வரலாற்றாசிரியர். எனவே, சுந்தரபாண்டியனும் மாலிக்கபூரும் சேர்ந்து குலசேகரபாண்டியன் பெயரால் அமைந்திருந்த அருவிமாநகரை, கி.பி.1310இல் அழித்துவிட்டனர் என்பதே வரலாற்றுக்கு இசைந்ததாகும்.






"முன்னாள் இராசராசன் சுந்தரபாண்டிய தேவர் துலுக்கருடன் வந்த நாளிலே ஒக்கூருடையாரும் இவர் தம்பிமாரும், அனைவரும்...... செத்துங்கெட்டும் போய் அலைந்து ஊரும் வெள்ளத்தாலும், கலகத்தாலும் பாழாயிருக்கிற அளவிலே......என்பது கல்வெட்டுச் செய்தி. இது அக்காலத்து நிகழ்ந்த பேரழிவை அறிந்துகொள்ளக் கிடைத்த பதச்சோறாகும்" (மரு. பரமகுரு, பறம்புமலை– திருக் கொடுங்குன்றம் வரலாறு, பக்.82–83) என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு அழிந்துபோன அருவியூர் நகரின் எச்சங்களை இன்றளவும் காளாப்பூர்ப் பகுதிகளில் காண முடிகின்றது.




காளாப்பூர் செங்கல் உற்பத்தியில் தலைசிறந்து விளங்குவதால் அதற்குரிய மண் வெட்டப்பெறும்போது புதைந்துபோய்க் கிடக்கும் அருவியூர் நகரத்து எச்சங்கள் காணக் கிடைக்கின்றன. அக்காலமக்கள் பயன்படுத்திய உறைகிணறுகள், அவர்களது வீட்டுச் சுவர்கள் உள்ளிட்ட செங்கற்கட்டடங்கள் பல இடங்களில் வெளிப்பட்டு நிற்கின்றன. வரலாற்றைப் பேணுவதில் ஈடுபாடு உடைய இவ்வூர் மக்கள் அவற்றைச் சிதைக்காமல் பாதுகாத்து வருவதோடு இதுதொடர்பான செய்தி களையும் சேகரித்து விளக்குவது மனதுக்கு ஆறுதல் அளிக்கின்றது. திருக்கோயில்கள் பல மணலுள் புதையுண்டு கிடக்கும் காட்சி வருத்தத்தைத் தருகின்றது. மண்டபத்திலிருந்து சிதைவுற்றுக் கிடக்கும் கல் துண்டுகளில் தெரியும் கொடுங்கைகளில்அழகும் நேர்த்தியும், மூல மூர்த்தங்களைத் தாங்கி நின்ற பீடங்களின் சிதைந்தபகுதிகளும் மனத்துள் விரிக்கும் திருக்கோவில்களின் பிரம்மாண்டம் எழுதி முடியாதது. அதிலும் ஆல ஊருணியினை அடுத்துள்ள அருவிக்காட்டுப் பகுதியில் முழுக்கக் காட்டுச்செடிகளுள் புதைந்து கிடக்கும் பெருமாள் கோயிலின் பகுதிகள் அதுதொடர்பாக அப்பகுதி மக்கள் தரும் செய்திகள் வியப்பூட்டுவன. மணலில் புதைந்துபோய்க்கிடக்கும் மண்டபக்கல் ஒன்றை நிமிர்த்தி அதன் கல்வெட்டுத் தொடர்களை அப்படியே சொல்லி அவற்றைக் காட்டுவதில் அப்பகுதிமக்கள் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும் பாராட்டுதற்குரியது.

மேலும், இப்பகுதிகுறித்து ஆராய்ச்சி மேற்கொள்ள வரும் கல்லூரிக் குழுவினர்க்கும் ஆய்வாளர் களுக்கும் வழிகாட்டுநராக இருந்து நெறிப்படுத்தி விளக்கும் இவர்களது பண்பு போற்றத்தக்கது. அருவியூர் நகர ஆய்வின் முன்னோடியான டாக்டர் ஜெயபாரதி அவர்களுடன் உதவியாளராக இருந்து இப்பகுதி சார்ந்த உண்மைகளை வெளிக்கொணர உதவிய உள்ளூர் அன்பர் உதவியோடும் திருப்பணி மற்றும் மலர்க்குழு அன்பர்களோடும் வரலாற்றின் தடங்களில் சென்று பார்க்க முனைந்தோம். அவற்றைத் தேடித் தொகுத்துப் படங்களோடு பதிவுசெய்ய முனைந்தபோது பல கல்வெட்டுகள் அடங்கிய கற்கள் காணப்படவில்லை. மண்ணில் புதையுண்டும், சிதைவுற்றும் போயிருப்பதை அறிய வருத்தம்தான். இந்நகரத்தின் பெருங்கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் தற்சமயம் வானமே கூரையாகத் திசைகளே திருச்





சுற்றுக்களாகக் கொண்டு விளங்குவதையும் பார்க்க முடிந்தது. இப்பகுதிமக்கள் தங்கள் வசதிக்கேற்ப, இலிங்கடிவில் அருள்புரியும் சிவனார்க்குக் கோவில் அமைத்து வழிபாடு நடத்திவருவதையும் பார்க்க முடிந்தது. பல இடங்களில் சிதைந்த நிலையில் இலிங்கத் திரு மேனிகளும், முருகன், வயிரவர் திருமேனிகளும் காணக் கிடைக்கின்றன. அறக்கொடை களைப் பதிவு செய்த கல்வெட்டுக்கள் இவ்வூரின் மையத்தில் உள்ள ஊருணியின் மடைக்கற்களுக்கிடையே காணக் கிடைக்கின்றன.



இதற்குப் பின்னர் விடுதலைப் போராட்டவரலாற்றுக் காலத்திலும் இவ்வூர் தனிச்சிறப் பிடத்தைப் பெற்றிருக்கின்றது. சிவகங்கைச்சமஸ் தானத்திற்கு உட்பட்ட இவ்வூர் மருதுபாண்டியர் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்புரிந்த காலத்தில் தகுந்த வீரர்களை வழங்கிய வீரபூமியாகத் திகழ்ந்திருக்கின்றது. ஆனந்த வருடம் ஆனிமாதம் ஆறாந்தேதி நடந்த ஆனந்தூர்ச் சண்டையின்போது, வாராப்பூர், நெடுவயல் ஜமீன்தார்கள் உள்ளிட் டோரின் படைகள் கிளம்பிவருவதைப் பாடும் சிவகங்கைச் சரித்திரக்கும்மி மற்றும் அம்மானைப் பாடல் அடிகளில்,

மறையூர் வேந்தன் முன்னூறு செனமதுவும்
வாளில் வலியோன் வஞ்சகத்தில் மிச்சமுள்ள
காளாப்பூர் மன்னன் காலாட்கள் முன்னூறும்

(சிவகங்கை சரித்திரக்கும்மியும் அம்மானையும், ப.173)

என்ற தொடர் இடம்பெறுகின்றது. இத்தொடரில் சுட்டப்பெறும் காளாப்பூர் மன்னன் யார் என்பது விரிவான ஆய்வுக்குரியது. அம்மன்னனது படையில் காலாட்படை வீரர்கள் மட்டும் முன்னூறு பேர் பங்கேற்றனர் என்றால் ஏனைய படைக்குரிய வீரர்கள் எவ்வளவு பேர் இருந்திருக்க வேண்டும். ஒட்டுமொத்தப் படைபலத்தைக் கணக்கிட, காளாப்பூரின் வரலாறு இன்னும் விரிவுறத் தெரிய வரும். இந்தநோக்கோடு புதிய தகவல்கள் பெறுதற்காக இரண்டாம்முறை இப்பகுதியில் தேடல் மேற்கொண்டபோது, ஒரு புதிய கல்வெட்டு ஒன்றைக் காணமுடிந்தது. முதன்முதலாக நம்மால் கண்டறியப் பெற்ற இது போரில் வீரமரணம் எய்த வீரன் ஒருவனின் நினைவாக நாட்டப்பெற்றிருக்கும் நடுகல் என்று கருத இடமளிக்கின்றது. முக்கால் பகுதிக்கும் மேல் பூமியுள் புதைந்து கிடக்கும் இந்நடுகல்லின் செய்திகளை முற்றாகக் கண்டுணர் கின்றபோது காளாப்பூர் வீர வரலாறு வெளிச்சத்திற்கு வருவது உறுதி.

புதையுண்டுகிடக்கும் மொகஞ்சதரோ, ஹரப்பா போல், அரிக்கமேடு போல் இப்பகுதியும் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பெற்றால், டாக்டர்இரா.கலைக்கோவன் தலைமையிலான டாக்டர் இராச மாணிக்கனார் வரலாற்று ஆய்வுமையத்தினர் போன்ற ஆய்வாளர்கள் களமிறங்கித் தேடத் தொடங்கினால், பல அரிய செய்திகளையும் வரலாறுகளையும் உலகம் அறியக் காட்ட முடியும். அந்த வகையில் சரித்திர பூமியான காளாப்பூர் தம்முள் தாங்கிக் காத்திருக்கும் வரலாற்றுப் புதையல்கள் ஏராளமானவை.



மருதுநாயுடு காதல்

தேசிய விருது நல்லாசிரியர் புலவர் **அ. பாண்டியன்**
சிங்கம்புணரி

தமிழன்னை பெற்றிருக்கும் தன்னிகரற்ற நல் அணிகள்பல.தமிழ்மொழிக்குப்பிற்காலத்தில் ஏற்றமும் எழிலும் தந்தவை, சிற்றிலக்கியங்களே ஆகும். தொல்காப்பியர் காலத்தில் வித்திடப் பெற்ற சிற்றிலக்கியச் செல்வங்கள், சங்க காலத்திலேயே முளைவிட்டு கி.பி5ஆம் நூற்றாண்டு முதல் மெல்லத் தழைத்து வளர்ச்சியுற்றன. சிற்றிலக்கியங்கள் தொன்னூற்றாறு என்றும் வரையறையைக் கடந்து பல்கியிருந்தபோதிலும், பொருட்சிறப்பால் புதுமை பெற்று, உலா, சதகம், பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, பரணி, அந்தாதி, தூது, அம்மானை, ஆற்றுப்படை, பள்ளு,. காதல் முதலிய சிற்றிலக்கி யங்களே பெரும்பான்மை வழக்கில் இருந்து வந்திருக்கின்றன. இம்மரபின் வழியிலே இன்று காளாப்பூர் இலக்கியமாக மலர்ந்துள்ள இனிய நூல்தான் 'காளைநகர் மருதுநாயுடு காதல்'

காளாப்பூர்

சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்த காளப்பன் ஆசாரி என்பவருக்கு அதிகமான நிலபுலன்கள் இருந்த பகுதியில் உருவான ஊர் அவரது பெயரா –லேயே காளாப்பூர் என அழைக்கப்பட்டது.

உப்பாறும், பாலாறும் ஒன்றாகக் கலக்கின்ற கரையில் அமைந்துள்ளதால் இருநதிகளின் கலப்பூர் என்று பெயர் ஆகி, அதுவே காளாப்பூர் என்று பெயர் ஆகியது.

பாண்டியமன்னர்களுக்கும் சோழவேந்தர் –களுக்கும் இடையே நடந்த பெரும் போர்களின்போதும், பிரிட்டிஷ்காரர்களுக்கும் மருதுபாண்டிர்களுக்கும் நடந்த கடுமையான போர்களின்போதும், வீரம் செறிந்த இந்த மண்ணே போர்க்களமாகக் அமைந்திருந்தது. போர்க்களத்திலே உருவான ஊர் போர்க்களம் என்பது களம்போர் என்று காளாப்பூர் என்று மாறி ஆகியது.

சிவபெருமான் சுயம்ஜோதி தான்தோன்றீஸ்வரர் ஆகிய சிவாலயத்தின் பெருமையை நிலைநாட்டுகின்ற வகையிலே மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருப்பெயரால் உருவான ஊர் சிவன்புரி– சிவபுரி! சிவபெருமானின் திருமுன் கம்பீரமாக காட்சிதரும் நந்தியம்பெருமானாகிய காளையின் பெயரால் உருவான ஊர், காளையூர். அது பிற்காலத்தில் காளாப்பூர் என்று மருவியது.

ஊரின் பெயர்க்காரணம் அறியப் பேட்டி கண்டபோது வயதில் மூத்த பெரியவர்கள் இத்தனை செய்திகளை ஆர்வமுடன் தெரிவிக்கின்றனர்.

காளைநகர்

தெய்வமணம் கமழும் திருத்தலம் காளாப்பூர். இது இயற்கை எழில்நிறைந்த இனிய சிற்றூர். ஊர் என்று கூடச் சொல்லாமல், நகர் என்று பெருமையுடன் ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் பாராட்டப் பெற்ற சிறப்புடைய ஊர். தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி கு.ம. கதிரேசஞ்செட்டியார் அவர்கள் தமது நேரிசை வெண்பாவில் காளாப்பூரை "சீராறுங் காளை நகர்" என்று பாடியிருக்கின்றார்.

பழைய ஜில்லா போர்டு காலச் சிங்கம்புணரி தலைமை உபாத்தியார் வெள்ளைச்சாமி வேளார் தமது அறுசீர் விருத்தப்பாவில் 'உலகி லதிவள நிலவுங் காளைநகர்' என்று உயர்வாகப் போற்றியுள்ளார். சிங்கம்புணரி முத்துவடுகன் என்று பெயர் விளங்கிய சேவுகப் பெருமாள் உபாத்தியாயர்,

"எக்குறையுஞ் சேராதிருக்க நலமேவு உபாத்தியாயர்
மெய்குறை யிலாகமிளிர் காளைமா நகர்" என்றும்,

"ஞானமிகு தாரென்று நண்ணுமுயர் காளை மாநகரம்" என்றும் வாழ்த்திப் பாடியுள்ளார். இங்ஙனம் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய காளைமாநகருக்கு மேலும் புகழ்சேர்க்கும்வண்ணம் பேரோடும் புகழோடும் கொடை வள்ளலாகத் திகழ்ந்திருக்கிறார் மருதுநாயுடு.

மருதுநாயுடு

ஏறத்தாழ நூற்றியிருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் காளாப்பூர் என்று பெயர் வழங்கிவரும் காளைநகரில் பெரும் செல்வராகத் திகழ்ந்த கொடைவள்ளல் மருது பூமான். மண்டலமேல் வேண்டிவரும் வறியோர்க்குக் கற்பக விருட்சமும் கார்மேகமும், இவரது கொடைத்தன்மைக்குக் கீழ் என்று சொல்லும்படியான ஈகையாளன். தேவை இது என்று தெரிவிப்பதற்கு முன்னாலேயே வாரிக் கொடுப்பவன். அளவில்லாத, புகழ்படைத்து வளர்ந்து வரும் மருதுநாயகன். ஞாலம் புகழும் அளவிற்கு நன்கு தெளிந்தவன். மெய்ப்பொருளாகிய பரம்பொருளைச் சிந்திக்கும் சீலர்களான ஆன்மீக ஆன்றோர்களின் நடுவிலே வீற்றிருப்பவன். தேசமெங்கும் உள்ள சான்றோர்களின் மனதிலெல்

–லாம் நிலைத்திருப்பவன். அன்னத்தைப் பாலோடு அந்தணர்க்கு ஈவோன், ஆற்றல் மிக்க பெரிய வேந்தர்களெல்லாம் மதிக்கும் மருதேந்திர துரை.

பெரும்புலவர் முத்துவடுகன் தமிழ்மணம் கமழ அழகாகப் பேசும் கவிதைகளைக் கேட்பதில் பிரியமுடையவன். வண்ணமும் வாசமும் மிகுந்த மலர் மாலையை மார்பிலே அணிந்திருப்பவன். நாமாது என்னும் கலைமகள் வாழும் நாவினை உடையவன். பலநாட்டு கோவேந்தர்கள் யானை கொண்டுவந்து முற்றத்தில் கட்டும் அளவிற்குப் பெரிய மாளிகையையும் அகன்ற வாயிலையும் உடையவன். தன்னை ஈன்ற தாய், தந்தை, தனது குரு, இறைவன் ஆகிய இந்நால்வரைத் தவிர மூன்று உலகம் முழுவதையும் ஆள்பவரேயானாலும் அவர்முன்பு சிறிதும் வணங்கிடாத முடியை உடையவன்.

தமிழ்த்தேன் அருந்தும் திருச்செவியை உடையவன். சொல்லாற்றல் மிக்க வல்லவர்கள் சபையிலேறிப் பிறர் வெல்ல முடியாத சொற்களையே பேசிடும் நாவன்மை மிக்க திருவாயான். வெற்றி வீரமகள் ஏறிவிளையாடும் பொன்மலை போன்ற தோள்களை உடையவன். வருவோர்களுக்கெல்லாம் முகம் கோணாமல் பொருள்நிதியை அள்ளி அள்ளித் தந்து சிவப்பான மலர்போன்ற கைகளை உடையவன்.

போர்க்களமாம் ரணகளத்தில் பகைவர்களை வெட்டி வெற்றி கண்ட வீரவாளைச் செருகும் இடுப்பினை உடையவன். தரும நியாயத்திற்கு மாறாக, நடப்பவர் யாராக இருந்தாலும், அவர்களுடைய தலை மண்மேல் புரளும்படி மிதிக்கின்ற திருப்பாதங்களை உடையவன். பண்பாளர் போற்றும் இந்நூலின் பாட்டுடைத் தலைவன்.

மருதுநாயுடு காதல்

ஒருவனும் ஒருத்தியும், தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடியிணைந்து நுகரும் இன்பத்தின் பொருட்டு உள்ளத்தில் உந்தியெழும் ஆழமான உணர்ச்சியே காதல் எனப்படும். இத்தகைய அகப் பொருளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தமிழில் கோவை, உலா, தூது, மடல், பள்ளு, காதல் முதலிய அமைப்புகளில் 96 வகைப் பிரபந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இவற்றுள் காதல் சுவையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சுப்ரதீபக் கவிராயர் "கூழப்பநாயக்கன் காதல்" என்ற நூலை இயற்றி –யுள்ளார். இராமநாதபுரம் சமஸ்தானம் ராமசாமிக் கவிராயர் மதுரைப் பிள்ளை என்பவர்மீது 'மதுரைக் காதல்' என்ற நூலைப் பாடியுள்ளார்.

இங்கு சிங்கம்புணரியில் வாழ்ந்து வந்த முத்துவடுகன் என்ற சேவுகப்பெருமாள் உபாத்தியாயர், காளைநகர் மருதுநாயுடுமீது 'மருது நாயுடு காதல்' என்னும் இன்ப இலக்கியத்தை இயற்றியுள்ளார். இந்நூல் பாட்டுடைத் தலைவன் மருதுநாயுடுமீது பருவப்பெண் ஜெகன்மோகினி என்னும் கன்னி ஒருத்தி கொண்ட காதல் என்ற பொருளில் அமைந்துள்ளது.

நூலாசிரியர்

இந்நூலை இயற்றியுள்ள ஆசிரியர் சிங்கம்புணரி முத்துவடுகன் என்று பெயர் விளங்கிய சேவுகப் பெருமாள் உபாத்தியாயர், வாத்தியார் ஐயா என்று மக்களால் வாய்மணக்க அழைக்கப்படும் சிங்கம்புணரி சித்தர், அருள்மிகு முத்துவடுகநாத சுவாமிகளின் பேரன். இவர் மருதுநாயுடு காதல் என்ற இந்நூலைத் தவிர இன்னும் பல அற்புதமான நூல்களையும் அருமையாக இயற்றியுள்ளார். இவை

1. மகாமந்திர மூர்த்தியாகிய ஸ்ரீமுத்துவடுக சுவாமிகள் சரிதாம்ர்த அம்மானை
2. இதோபதேச சதகம்
3. மஹாமந்திர மூர்த்தியாகிய முத்துவடுக சுவாமிகள் தரிசன பல சந்த வழிநடைச் சிந்து
4. ஸ்ரீசேவுகமூர்த்தி ஊஞ்சற் பிரபந்தம்
5. ஸ்ரீமுருகக்கடவுள் தோத்திர கீர்த்தன மாலை
6. ஸ்ரீசேவுகமூர்த்தி கப்பற்சிந்து
7. ஸ்ரீசேவுகமூர்த்தி கப்பற்பாட்டு

முதலியனவாகும்.

இந்நூலாசிரியர் "தாராரு மார்புடையன் முத்துவடுகநாதன்" என்று பண்டிதமணி அவர் களாலும், "ஆனந்தனந்தருசப் பதஞ்சொல் முத்து வடுகனெனும் அறிஞரேறு" என்று சிவகங்கை வெண்ணிமலைப்பிள்ளை அவர்களாலும்,

"தமிழ்ப் பரவைணையினைத் தெரிந்தேறிய கவிஞர் இதயத்துள்ளே விலகி நில்லாது உலவும் முத்துவடுகனெனும் நாவலன்" என்று சிங்கம்புணரி –யின் புகழேந்திப்புலவர் கவிகாளமேகம் என்று பாராட்டப்படும் வெள்ளைச்சாமி வேளாளர் அவர்களாலும் உளமாறப் பாராட்டப்பட்டுள்ளது.

இலக்கிய அமைப்பு

இந்நூல் சாற்றுக்கவிகள் நேரிசை வெண்பாவில் 8வரிகளும், அறுசீர் விருத்தத்தில் 8 வரிகளும், 479 கண்ணிகளில் 958 வரிகளுமாக மொத்தம் 974 வரிப்பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் சிறப்பாக அமைந்திட அருள்புரியுமாறு மழுமானேந்தி பெற்றெடுத்த வேழமுகத்தானாகிய விநாயகப்

பெருமான் வாசவனாகிய திருமால் வெள்ளானை வாகனனாகிய ஐயனார், காளை வாகனமுடைய சிவபெருமான் பூமாதுவாகிய இலக்குமி, நாமாது – வாகிய சரசுவதி, அன்னை பாகம்பிரியாள், வடிவேல –னாம் குமரன், வாழவைக்கும் வடக்குவாசச் செல்வி அம்மன் ஆகிய தெய்வங்களைப் போற்றி வணங்கியபின் அவையடக்கம் கூறப்பட்டுள்ளது. 'தசாங்கம்' என்ற நூல்மரபின்படி மலை, நதி, நாடு, நகர், குதிரை, யானை குடை, முரசு, மாலை, ஆனை ஆகியனீ அழகுபட வருணிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து காதல்நிலைகளின் காட்சிகளை வரிசைப்படுத்தி முறையாகக் கொண்டு சென்று இறுதியில் குமரதேசிகன் திருவடிகளில் சரணமாகி மருதுநாயுடு காதல் பிரபந்தம் நெஞ்சம் குளிர நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பாட்டுடைத் தலைவனின் குடி, குலம், குணம், கொடை, வீரம் அழகு, பரிவாரங்களின் சிறப்புகள், நல்ல குதிரைக்குரிய அங்க அம்சங்கள், குதிரைமீதமர்ந்து நகர் உலாவரும் கம்பீரம், அழகு, மாடத்தின் முற்றத்தில் தோழியருடன் அமர்ந்து பந்து ஆடிக்கொண்டிருந்த தலைவி ஜகன்மோகினி நகர் உலாவந்த தலைவன் மருதுநாயகன் அழகில் மயங்கி அவன்மேல் காதல்கொண்டு காமுற்றுப் பெரும்வேட்கையால் மயங்குதல் ஆறாக்காதலில் தான்படும் பாட்டையெல்லாம் தன் தோழி காமவல்லியிடம் கூறி மடல் எழுதித் தலைவனிடம் தூது அனுப்பும்தன்மை, தலைவனைச் சந்தித்துத் தலைவி கொண்டுள்ள காதலின் உச்சத்தை அவன் மனம் மகிழ்ந்து மணம் கொள்ளுமாறு எடுத்துக்கூறும் தோழியின் சொல்வன்மை, மயங்கிக் கிடந்த மகளைக் கண்ட தாயின் தவிப்பு, தலைவன் அனுப்பியுள்ள பல்லக்கில் தலைவி ஏறி நாயகனின் மாளிகை மண்டபத்தை அடைதல், அங்கே தனிப் பள்ளியறையில் மலர் மஞ்சத்தில் கொக்கோகம் என்னும் இன்ப இலக்கண நூலுக்கு இலக்கியம் படைத்திட்ட மன்மத லீலைகள் ஒவ்வொன்றும், நூலினைப் படிப்போரில் பலபேரை, நிலை தடுமாறும்படி போதை ஏற்றுகின்றது.

சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பில் மன்மதன் எரிந்து சாம்பலான காமன்கதை, துரியோதனன் கூட்டத்தார் கண்களில் படாதவாறு பாண்டவர் ஓராண்டுக்கு மறைந்து வாழ்ந்த காலத்தில் அர்ச்சுனன், பெண்வேடமிட்டு, அந் நாட்டு அரசிக்கு துணைப் பெண்ணாக மறைந்து வாழ்ந்த மகாபாரதக்கதை, பெருநாடு ஆண்ட மன்னன் சுடுகாடு ஆண்ட அரிச்சந்திரன் கதை, ஜனகனது மாளிகையில் இராமனும் ஜானகியும் பார்த்த முதல் பார்வையின்போது, இதயம் மாறிப்புகுந்த இராமாயணக் கதை, முத்தமிழ் மொழிந்த குருமுனியாம் அகத்தியரின் கதை ஆகிய இதிகாச புராணக் கதைகள் உரிய இடங்களில் தெளிவூட்டுகின்றன. மேலும் வராகம், மார்க்கண்டேயம் முதலிய நூல்களை மேற்கோள் நூல்களாகக் கையாண்டிருப்பது கவியின்பச் சுவைக்கு மெருகூட்டுகின்றது.

அறியவரும் செய்திகள்
(அன்றைய பழக்க வழக்கங்கள்)

முதல்தரமான உயர்ந்த ஜாதிக்குதிரை, என்னென்ன அங்க அம்சங்களுடன் இருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் "அசுவதநூல்" பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

வயது வந்த ஆண்களும் பெண்களும், கொக்கோகம் என்ற இன்ப நுகர்வு நூலினைப் பிறர் மகிழும்படி பிரசங்கிக்கும் அளவிற்கு கற்று அறிந்திருந்தார்கள்.

தலைவன், தன்னை வெகுவாக அலங்கரித்துக் கொண்டு, அழகான குதிரையின்மேல் கம்பீரமாக அமர்ந்து, நகர்வலம் வரும் பழக்கம் நடைமுறையில் இருந்திருக்கின்றது.

ஒருவர் மயங்கி விழுந்துவிட்டால், மற்றொருவர் சுக்கைத் தின்று மயங்கிக் கிடப்பவரின் காதில் ஊதி மயக்கம் தெளிவிக்கும் வைத்திய முறை புழக்கத்தில் இருந்திருக்கின்றது.

கண்ணேறுபடுதல், நாவேறு சுடுதல், பிசாசு மருட்டுதல், பகையாளர் செய்வினை செய்தல் முதலியவற்றில் மிகுந்த நம்பிக்கை கொண் – டிருந்தனர். இத்தீமைகளில் இருந்து விடுபட, குலதெய்வத்திற்குப் பொங்கல் வைத்து, ஆட்டுக் குட்டி வெட்டிக் கும்பிடுதல், செஞ்சோறும் நீரும் மிகச் சேர்ந்து திருஷ்டி சுற்றிப் போடுதல், வடக்கு வாசல் செல்வி அம்மனின் இருபாதங்களை நினைத்தும் சங்கரனை, வேலவனை, வீரபத்திரனை, ஐங்கரனை, வாசுகியைப் பணிந்தும் வேண்டி, விபூதி பூசுதல் ஆகிய பரிகாரங்களைப் பயபக்தியுடன் செய்திருக்கின்றனர்.

தலையெழுத்து, ஊழ்வினைக் கொடுமை, விதிபோல்தான் நடக்கும். பெண்பாவம் பொல்லாதது, தவம் செய்தால் விரும்பியதைப் பெறலாம் என்ற கருத்துகளை அழுத்தமாக நம்பினர்.

கடுங்கோபத்தில், உயிரை வெறுத்து, விஷம் தின்னும் அவசரப்புத்திக் கொடுஞ்செயல்கள் ஆங்காங்கே நடந்திருக்கின்றது.

பல்லியின் குரல்கேட்டுப் பலன் பார்ப்பதும், பழமா, காயா? என்று விரைவாக கேட்கும் பழக்கமும் இருந்திருக்கின்றன.

பெண்களைப் போலவே, ஆண்களும் தங்கள் தலைமுடியை நீளமாக வளர்த்து, அழகாகப் பராமரித்து, அம்சமாக எடுத்துச் சொருகியும், தலைப்பாகையாக குஞ்சம் வைத்து உறுமால்கட்டி, கம்பீரமாகக் காட்சி தருவதும் சிறப்பாக நடைமுறைப் பழக்கமாக இருந்திருக்கின்றன.

வீட்டின் முற்றத்தில் கருங்கல் சவுக்கைக் கட்டுவதும், அச்சவுக்கையில் இருந்து, தமிழ் அறிஞர்களுடன் பாரதம், இராமாயாணம் மற்றும் ஊர்காரியங்கள் பற்றிக் கலந்து உரையாடுவதும், நடந்திருக்கின்றது.

சைவ சமயத்தினரும், வைணவ நெறியினரும், திருமண உறவு கொண்டிருந்தனர்.

ஆண்கள், காதில் வைரமணிக்கடுக்கன், தோளில் மணிக்கெடுவு, இடுப்பில் தங்க அரைஞாண், விரல்களில் வண்ணக்கல் மோதிரங்கள், கழுத்தில் முத்துமாலை, இரத்தினமாலை, மணிக்கட்டில் தங்கத்தோடா முதலிய அணிகலன்களை மகிழ்ச்சியுடன் அணிந்திருக்கின்றனர். இவ்வாறே பெண்களும் கங்கணம், ஒட்டியாணம், மேகலை, விரலாழி, கொலுசு, முத்துமாலை, மாணிக்கமாலை, வைரத்தோடு, வைர மூக்குத்தி, முத்துப்பல்லாக்கு ஆகிய அணிகலன்களைக் கவர்ச்சிகரமான அழகுடன் அணிந்திருந்தார்கள்.

மங்களம் பொங்கும் மருதுநாயுடுவின் கருங்கல் சவுக்கையில் அன்று சுப்பையா அம்பலம், பெரியணன் அம்பலம், பெரிய கருப்பன் அம்பலம், வெள்ளக்குப்பான் அம்பலம், சுகுணன் அம்பலம், குருசாமி அம்பலம், குப்பான் பரதர், முத்திருளப்பப் பிள்ளை, முத்துச்சாமி நாயக்கர், வெள்ளையன் அம்பலம், முத்துவடுகு வாத்தியார், வெள்ளைச்சாமி வேளாளர் இவர்களுடன் காளைநகர் வளர் விவேகர் பலர் கூடியிருந்து உயர்வான பொருட்கள் பற்றி உரையாடி மகிழ்ந்திருக்கின்றார்கள்.

கொடுப்பதற்கு என்று ஆண்டவன் கருணை காட்டிவிட்டால், அதைத் தடுப்பதற்கு, அவனியில் யாராலும் முடியாது என்ற தத்துவத்தையும், அற்பர்கள் செல்வாக்குடன் உயர்வு அடையும் காலத்தில், அறிஞர்கள் தாழ்ந்து தணிந்திருப்பார்கள் என்ற மெய்ப்பொருளையும் தெளிவாக உணர்ந்து நெறியுடன் வாழ்ந்திருந்தனர்.

பெரும்புலவர் முத்துவடுகு உபாத்தியாயர் இயற்றிய சிந்துகளையும், வண்ணங்களையும், பாமாலைகளையும், கவிகளையும், கீர்த்தனங்களையும், கடுகளவுகூட தாளராகங்கள் தவறாமல் இசைஅமுதப் பேரின்பமாகப் பாடவல்ல கெட்டிக்காரர்கள், இசைவாணர்கள் காளைநகரில் பலர் இருந்திருக்கின்றார்கள்.

பதிப்பு

மருதுநாயுடு காதல் எனும் இந்நூலின் ஆசிரியர் முத்துவடுகன் என்ற சேவுகப்பெருமாள் உபாத்தியாயர் அவர்களின் அற்புதமான மொழிப்புலமை, சுவையான சொல்லாட்சி, காலமெல்லாம் நிலைத்து நிற்கும் கற்பனை முதிர்ச்சி, எதுகை, மோனை, உவமை, சந்தம், அணி போன்ற இலக்கணச் செழுமை, சொல் நடைஅழகு, ஆகிய அனைத்து அமைப்புகளும் அளவிலா இன்பம் ஊட்டி, பைந்தமிழ்ப் பேழையாகத் திகழ்கிறது. இந்நூல் காளைநகரின் காலப் பெட்டகம். அடக்கமான நூல்தான். ஆனால் அழகு தமிழ் இலக்கியம். கற்போர் மகிழ்ந்து போற்றும் காளாப்பூர்க் காவியம்.

"மருதுநாயுடு காதல்" நூல் இதுவரை ஒரே ஒருமுறைதான் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதுவும் 1909ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1909லிருந்து இன்றுவரை ஏறத்தாழ நூறு ஆண்டுகளைத் தொடுகின்ற நிலையிலும் மறுபதிப்பே செய்யப்படவில்லை. அதனால் இப்போது 5 தலைமுறைகள் ஆனதனால் இந்த நூல் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்டது என்பது மட்டும் அல்ல. இப்படி ஒரு நூல் இருப்பதாகவே பலபேருக்குத் தெரியாமலேயே மறைந்துபோய் விட்டது. பல்லாண்டுத் தேடுதல்களின் பயனாக, பாட்டுடைத் தலைவன் மருதுநாயுடுவின் பேரன், பேரன்வழிப் பேரன் திரு. தாயுமானவர் அவர்களிடமிருந்து ஒரே ஒரு மிகப்பழமையான பிரதிமட்டும், அரிதாகக் கிடைத்திருக்கின்றது. இதற்கு மேலும், அழிந்து விடாமல் இந்நூலினைக் காப்பாற்றியாக வேண்டும். ஒரு சின்ன சுடர் விளக்கைக் கொண்டு, ஓராயிரம் விளக்குகளில் ஒளி ஏற்றுவதைப் போல், அரிதாக் கிடைத்திருக்கின்ற இந்த ஒரே ஒரு பிரதியை அச்சேற்றி, ஓராயிரம் அன்பர்களுக்கும் அறிஞர்களுக்கும் வழங்கி, உயிர் உண்டாக்கவேண்டும். இறைவன் திருப்பணி மகிழ்ச்சியுடன் நடந்தேறும் இந்தப் புனிதமான வேளையில் இந்த இலக்கியத் திருப்பணியும் ஆரம்பமாகியிருக்கிறது. இது சக்கரைப்பந்தலில் தேன்மழை பொழிவது போன்ற மிகுந்த இனிமை உடையதாகும்.

மு.சூரக்குடி அருள்மிகு செவிட்டையனார் மாணிக்கக் கும்மி

ஆசிரியர் மகாஸ்ரீ **மா.சங்கிலி** உபாத்தியாயர் முறையூர்

பதிப்பாசிரியர். நிருபர் **வே. அழகப்பன்**

மு.சூரக்குடி அருள்மிகு செவிட்டையனார் மாணிக்கக் கும்மி
ஆசிரியர் மகாஸ்ரீ மா.சங்கிலி உபாத்தியாயர் அவர்கள் முறையூர்
செப்பமிட்டவர்கள் ச.கருப்பையா உபாத்தியாயர் அவர்கள், முறையூர்

அருள்மிகு செவிட்டையனார் சுவாமி மீது, மாணிக்கக் கும்மி 15ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றுள்ளது. முறையூர் மகாஸ்ரீ_மாணிக்க உபாத்தியாயர் அவர்களால் இயற்றப்பட்டுள்ளதால் மாணிக்கக்கும்மி எனப் பெயர் பெற்றுள்ளது. பல நூற்றாண்டுகள் ஓலைச்சுவடியாகப் பாதுகாக்கப்பட்டு வந்து கடந்த நூற்றாண்டில் நோட்டுப் புத்தகத்தில், பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்காலத்தில் ஆன்மிக இலக்கியங்கள், மருத்துவ முறைகள் போன்ற அரிய தகவல்கள் அடங்கிய ஏராளமான ஓலைச்சுவடிகள் வெளியுலகிற்கு வராமல் அழிந்துபோனதை நாம் அறிவோம். பலகாலம் புதையலாக இருந்து 600 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு ஐயனின் அருளால் இந்நூல் வெளிவரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அருள்மிகு செவிட்டையனார் சுவாமி புரவி எடுப்புவிழா, வர்ணனைகள் நம்மை அக்காலத்திற்கே அழைத்துச் செல்கிறது. நமது பகுதித் தெய்வங்கள் பற்றிய பாடல்வரிகள் நம்மைப் பரவசமடையச் செய்கிறது. மு.சூரக்குடி அருள்மிகு படைத்தலைவி அம்மன் திருக்குடமுழுக்கு விழாக் காணும்போது, வெளியிடப்பெற்ற இந்நூலினைச் செப்பம் செய்துதந்தவர், பேராசிரியர் திரு. பொ. கண்ணன் அவர்கள். வெளியிட நிதியுதவி நல்கியவர் காந்திமதி நகைமாளிகை உரிமையாளர் திரு. ரெங்கநாதன் அவர்கள் அவர்கள் அனைவர்க்கும் நன்றி.

பதிப்பாளர் - நிருபர் **வே. அழகப்பன்**

உ
குகமயம்
கணபதி காப்பு

சீராரும் சூரைச் செவிட்டையர் மேற்கும்மி
பாராருஞ் செந்தமிழாற் பாடவே- பேராரும்
பத்திவழி நத்திவர பித்தனருள் முத்தாண்டி
அத்திமுகா இத்ததிவந்து ஆள்!

கும்மி

சீர்வளர் சூரைநகர் சிறக்க- எங்கள்
செவிட் டையர்கும்மி யான் உரைக்கவே
தார்வளர் சீலர்மிக மதிப்பாம் - முத்
தாண்டி விநாயகன் அருள்துதிப்போம்!

பூரணை நாதா! வரந்தருவாய்- நல்ல
புகழ்க்கும்மி சொலமுன் வருவாய்
தரணி யெங்கும் திடமுருவாய் - வாணித்
தாயே என்நாவில் நடம்புரிவாய்!

அரிகரத்தில்மிகக் கோர[1] வந்த
ஐயன்மேல் கும்மி தமிழ் கூற
கரி[2]யுரித்தருள் சொக்கர் மீனாட்சி
கமல பொற்பாதங் காப்பாமே!

எட்டும்[3] இரண்டும்[4] அறிந்திருக்க - இல்லா
ஏழை அடியேன் தமிழுரைக்க
சிட்டர் பணியும் தென்கயிலை வாசருந்
தேனிரப் பொழியும் உமை காப்பாமே!

சூரையூர் ஐயன்புகழ் தேட - நல்ல
சொல்லுயர் கும்மி தமிழ்ப் பாட
சீருயர் சிங்கையில் சேவகராயர்
திருப்பதம் எந்நாளும் காப்பாமே!

தாருநிகரான சூரை நல - பதி
தழைக்கும் மாணிக்கக்கும்மி சொல
மேருநிகரான கூடலிலே சிறை
மீட்டவர் பாதமுங் காப்பாமே!

வேதப்பொருள் எனவே ரசிக்க- சூரை
வெற்றிசேர் ஐயன் தமிழிசைக்க
ஆதிபராபரி எங்கள் படைத்தலை
அம்பிகை பாதம் துணையாமே!

அன்னதருக்கிணை சேரவே- சூரை
அண்ணல் கும்மி தமிழ்க் கூறவே,
மன்னர் மகிழ்ந்திடும் தென்முறையூரில்
மகா சாத்தையருங் காப்பாமே!

ஆதிப் பரம்பொருள் மாநிலவே செவிட்
டையன்மேல் கும்மி யான் சொலவே
பாதிப் பிறையணிந்த ருத்ரகோடீசர்
பாதமலர் எந்நாளும் காப்பாமே!

அஞ்சுநிலை நாடு சூரை வேத- செவிட்
டையன்மேல் கும்மி தமிழ் ஒத
செஞ்சொல் வளரும் குரம்பை வைத்தீசர்
சேவடி கொண்டாடிப் போற்றுவமே!

மாசறக் கற்ற புலவரைத்தான் - சிறு
மைந்தன் வணங்கித் தமிழுரைத்தேன்
தேசமெல்லாம் பணி[5] தான்தோன்றி நாதர்
திருப்பாதம் போற்றிப் பணிதல் செய்வாம்!

தண்மைசேர்[6] சூரை நகர் தேற - செவிட்
டையன்மேல் கும்மிதமிழ்க் கூற
வன்மனதாகிய சூரரை வென்ற
வடிவேலன் தாளைத்தினம் துதிப்போம்!

வாரண[7] வாகன மேல் ஏறிடவே- ஐயன்
வளமை யான்சொல்லிக் கூறிடவே
நாரணிமங்கைப் பதியில் படைத்தலை
நாயகி பாதந் துணை நமக்கே

வெத்திபொருந்திய சூரையூரே - நன்றாய்
விளங்கு முத்தையன் நற்பெயரே
சத்திகொண்டு சொல பொட்டலியானுடன்
சந்திவீரனனுங் காப்பாமே!

மண்டலம் மெச்சிய சூரைப்பதி - ஐயன்
மகிழும் செந்தமிழ்க் கும்மிநிதி
தெண்டிரை[8] சூழும் சுண்ணாம்புக் கருப்பர்
திருப்பதம் எந்நாளும் காப்பாமே!

வேதம் பொருந்துஞ் சூரைநகர் - மதில்
விளங்கும் ஐயன் தமிழ்ப் பகர
மாதவஞ்சேர் பொன்னாண்ட கருப்பர்
மலர்பதம் நாளும் உளத்தில் வைப்பாம்!

இட்டமுடனே இருப்பறியேன் ஏழை
என்பேர் தனக்கும் எழுத்தறியேன்
திட்டமுடனே செவிட்டையன் மேல்கும்மி
செப்பிய செந்தமிழ் மீதிலேதான்

குற்றங் குறைகள் இருந்தாலும்- நல்ல
குணமுள பெரியோர் மகிழ்ந்து
நற்றமிழ் என்று புவியோர் புகழ்ந்திட
நாவலரே மிகக் கொண்டருள்வீர்!

மாணிக்கக்கும்மி

நாரணன் மேவுகரத்து உதித்தோன்- சூரை
நகரில் பாரோர்மிகத் துதித்தோன்
பூரணமாகவே வந்தநல் முத்தையன்
புதுமை கேளடி தோழியரே!

வள்ளிக்குழியில் முளைத்தெழுந்தான்- அதை
வல்வேடன் கண்டு அகமகிழ்ந்தான்
தெள்ளிமையாய்ச் சூரையூர் நிறைந்தார்- வந்து
சிந்தை குளிரப்பதம் பணிந்தார்

காசினியோர் வந்து உயர்வாகப் போற்ற
கலியுகத்தில் சுயம்பாகி ஐயன்
தேசம்புகழும் செவிட்டையர் நாட்டுச்
சிறப்புக் கேளடி தோழியரே!

கோங்கு பலா புன்னை தேக்குடன் சூதமுங்[9]
கொண்டு அலைஓங்கி வளர்ந்தோங்கும்
பாங்குடன் இஞ்சியும், மஞ்சளும் ஏலமும்
பண்புடனே வளர்நன்நாடு

வன்னியும் குவளையும் மாதுளையும் - நல்ல
வாதுகள் தாலே அலைபோடும்
பன்னீரும் நெல்லியும் வாதாவுமேபுக
வானை மறைத்திடும் நன்நாடு

கன்னல் கதலி கமுகுடனே - நல்ல
கற்பகத் தருவுக்கு இணையுடனே
வன்னிதமாகிய முல்லையும் செண்பகமும்
வாசம் மிகுந்திடும் நன்நாடு

சந்தனம் பிச்சி மருக்கொழுந்து- பச்சை
தாழை செவ்வந்தி இருவாட்சி
அந்திமல்லியுடன் வெட்டிவேர் குங்குமம்
அன்புடன் வாசிக்கும் நன்நாடு

தென்கயிலாய மலையுளதாம்- அதில்
தோன்றும் நூற்றெட்டு சுனையுளதாம்
பங்கயம்சேரும் பேரில்லா விருட்சத்தில்
பாகாவெனும் கூகை தானுளதாம்

முத்தளக்கும் வாசல் தானுளதாம் - அதில்
முன்னே உறங்காப்புளி உளதாம்
அத்தர் மகிழும் அடையவனஞ்சாரு
ஆறுகால் மண்டபம் தானுளதாம்

மாலவன் இந்திரன் தேவர்கோடி- சித்தர்
மாமுனிவோர்களும் தான்கூடி
ஆலத்தை[10] உண்ட அரனார்க்கு[11] - மணக்
கோலத்தை செய்யும் தலமுளதாம்

பூமியும் மந்திர சொர்க்கமதை வந்து
புகழும் அன்பர்கள் போற்றியதை
சாமிகொண்டு கொடுங்குன்றமதில்[12] நாளும்
தானே வளர்கின்ற நன்நாடு

சுத்தன, சுத்தனெனத் தெரிய - வந்து
சூரையில் மன்னவர் தானறிய
சத்தியஞ் செய்து குரு உதவிவருஞ்
சாமி வளர்கின்ற நன்நாடு

மானும் புலியும் சேரப்பொருந்தும் -கூடி
வாவியிலே வந்து நீரருந்தும்
மீனும் பழனந்தனில்[13] உழுவோரை
விஸ்தாரமாய்ப் பாயும் நன்னாடு

நாகமும் கீரியும் தான்கூடும் - வெகு
நன்மையதாக விளையாடும்
வேகமுடன் எலி பூனையைப் பாய்ந்துமே
வெல்ல நினைத்திடும் நன்னாடு

தேனாறு பாலாறு ஓர்நிலையில் கூடி
திரண்டு வந்து விரிசிலையில்
மீனினஞ்சூழ ரசமொழுகிச் சேர்ந்து
மேலாக வாவிகள் தான்பெருகி

வயலுழவர் மடைதிறந்து - வெகு
வாக இருபோகந்தான் விளைந்து
தயவுடன் பரதேசிக்கு அன்னம்
தானே கொடுத்திடும் நன்னாடு

மாதமும் மாரி பொழிந்திடுமே - நல்ல
மாமறை வேதம் முழங்கிடுமே
ஆதுலர்[14] பாவலர்க்கு அன்னமும் சொர்ணமும்
அன்பாய் ஈந்திடும் நன்னாடு

அன்னம் உதவியே தோத்தரிப்பார் - வந்து
அடைக்கலம் என்போரை ஆதரிப்பார்
சொன்ன மொழிகள் தவறாத- சூரை
மன்னவர்கள் வளர் நன்னாடு

இல்லை என்பவருக்கில்லை என்றே - சொல்லா
இருந்துதவிய நீதர் என்றே
வல்லமை உள்ளவர்கள் சூரைப்பதியினில்
மாதவர்கள் வளர் நன்னாடு

முல்லை குறிஞ்சி பாலை நெய்தலாம்- நல
மோங்கும் மருதநிலம் உளதாம்
செல்வச் செவிட்டையன் நாட்டுவளஞ் சொல
திங்கள் ஈராறுமே செல்லுமடி

ஊரணி நந்தவனமுஞ் சோலைகளும் - ஜெய
மோங்கிய சேமங் குதிரைகளும்
தாரணிபோற்றுஞ் செவிட்டையனாருடைய
சந்நிதி சிங்காரம் கேளுங்கடி

சந்நிதி வாசலும் பொன்னாலே - நல்ல
தந்தி[15] வாகனமும் பொன்னாலே
நன்னயமாகிய பூரணைபுட்கலை
நாயகி யாருமே பொன்னாலே

சுத்துமதில்களும் பொன்னாலே - நல்ல
சூழ் பரிவாரமும் பொன்னாலே
கொத்துச்சரமணி முத்தையன் சந்நிதி
குதிரை வாகனமும் பொன்னாலே

கூடகோபுரம் பொன்மயமே- நல்ல
கொடிமரங்கள் உயர் நயமே
மாடமண்டபம் பிரகாசமே -ஒங்கு
மடப்பள்ளிகள் விலாசமே

சங்கீத மேளங்கள் தான்முழங்க- நல்ல
சங்குசேகண்டியுமே துலங்க
குங்குமம் கஸ்தூரி தான்பூசி -கும்மி
கொட்டிய பெண்கள் மகராசி

கொடிமுரசுகள் தான்தொனிக்க- குறி
கொம்பு மல்லாரியுமே கர்ச்சிக்க
அடியவர் சூழுஞ்சூரைநகர் வளர்
அன்புள்ள மன்னரும் தாஷ்டிகரே

வெத்தி மதகரி மேலேறி இந்த
மேதினி எல்லாம் பணிகூறி
பத்தி மறவாத முத்துக் குடைக்காரன்
பவனி வாரதைப்பாருங்கடி

பெரியகருப்பணன் முன்நடக்க -நல்ல
பேரணியாய்த் தளம்[16] பின்நடக்க
வரிசையாகச் செவிட்டையனார் வார
வளமை பாரடி தோழியரே!

சின்னக்கருப்பர் சமையணனும் -நல்ல
சீராய்ச் சூழ்ந்துவர வீரனும்
வன்னப்[17] பரியில் செவிட்டையனார் வரும்
மகிழ்ச்சி பாரடி தோழியரே!

ஆண்டி அரசொடு மாட்சியுடன் -துர்க்கை
அழகு ராக்கச்சி பேச்சியுடன்
வேண்டிய தெய்வங்கள் சூழவருகிற
வேடிக்கை பாரடி பெண்ணரசே!

முன்னோடி நொண்டி உளிவீரன்- நல்ல
முத்துக்கருப்பன் முனிசூரன்
சன்னாசி துந்துமி கன்னிமார் சூழவே
சாமி வருகிறார் பாருங்கடி!

பொங்கும் வடகரை தென்கரையான் - சேர்ந்து
புகழும் வீரர்கள் சூழ்ந்திடத்தான்
தங்கச்சிவிகை மீதேறி வருகிற
தாஷ்டீகம் பாரடி தோழியரே!

கட்டிய கச்சையெழ மணியும் - நல்ல
கைஅரி வாளும் வீர தண்டையும்
பொட்டலியானுடன் முப்புலியான் வார
புதுமை கேளடி மங்கையரே!

கண்ணுக் கடங்காக் கரிபரியும் - பந்தி
இருபால் பூதகணம் விரியும்
வண்ண வெள்ளானைமேல் முத்துக்குடைக்காரன்
வார சிங்காரத்தைப் பாருங்கடி!

பக்கத்துக்கு ஆயிரம் தீவெட்டியும் - பகல்
பார்வைக்கேற்ப மிகவொட்டியும்
திக்குளோர் போற்றும் முத்தையன் வருகிற
சிங்காரம் பாருங்கள் தோகையரே!

சங்கீத மேளம் முழங்கிடவே - தூபம்
சாம்பிராணி வாடை இலங்கிடவே
இங்கிதக் கட்டியங்கூறி வருகிற
ஏகாந்தம் பாரடி தோழியரே!

பாடும் புலவர்கள் பாடிவர- இரு
பக்கமும் நாட்டியம் ஆடிவர
வேடுவர் பந்தம் பிடித்துவருகிற
வேடிக்கை பாருங்கள் மாதரசே!

சந்தன வாடை கமகமவென- பன்னீர்
சவ்வாது வாசங் குமுகுமென
சுந்தரச் சக்கரச் சூலமுடன் எங்கள்
சுவாமி வருவதைப் பாருங்கடி!

பாவலர் காவலர் கொண்டாடி - ஐயன்
பாதத்தைப் போற்றி இசைபாடி
நாவலர் பூவலர் தந்திரிகள் வரும்
நடத்தை பாரடி கம்பீரமாய்!

கவரி இருபுறம் வீசிவர- மாதர்
காளாஞ்சி ஒர்புறம் ஏந்திவர
கவனமாய் வேதியர் வேதமோத எங்கள்
கர்த்தன் வருவதைப் பாருங்கடி!

மாதர்கள் ஆராத்தி ஏந்திநிற்க - சூரை
மன்னவர்கள் காணிக்கை கொண்டுவர
பாதாரவிந்தம் பணிந்தேத்த ஐயன்
பவனி வாரதைப் பாருங்கடி!

செந்தூரப் பொட்டும் இலங்கிடவே -நல்ல
சிங்கார ஆடல்கள் துலங்கிடவே
நந்தகோபாலர் பணிந்திடவே ஜெய
நாதன் வருவதைப் பாருங்கடி!

கொம்புடன் வாங்கா[18] டமராட - தப்பு
குரவைச் சத்தம்மிகக் கூட
வம்பு செய்வோர்களுக்கு எட்டாத சுவாமி
வரும் வேடிக்கை பாருங்கடி!

அத்தம் பொருளதுவைக் கொடுத்தோர் -முத்
தையனே கேள் என்ற சொல் தொடுத்தோர்
குத்தம் விசாரித்துச் சத்திப்பூசைகள்
கொண்டு வருகிறார் பாருங்கடி!

அன்னமின்னே! அதிரூபமின்னே! அடி
ஆதிமுத்தே! இந்திராணிப் பொன்னே!
ஒன்றுக்கொன்று மிச்சமாக விளையாட
ஒய்யாரப் பெண்களும் வாருங்கடி!

சிங்காரவள்ளி பிழை பொறுத்தாள் -முத்து
தேனாட்சி சந்திரமதி முகத்தாள்
பங்கயஞ் சேர்கின்ற மாதரசே கூடிப்
பாங்காய் விளையாட வாருங்கடி!

படிக்கும் மாணிக்கக் கும்மியடி சூரைப்
பதியில் மன்னவர் கேட்கும்படி
வடிப்பமாகவே சொல்லி விட்டால் உங்கள்
வாய்முத்துச் சிந்துமோ தோழியரே!

கொண்டை மாலை அசைந்தாட - இரு
கொங்கை இரண்டும் இசைந்தாட
தண்டமிழ் புகழ் சூரைப்பதி வளர்
சாமியைப் பாடிக் கொண்டாடுங்கடி!

கன்னியர் எல்லோரும் வாருங்கடி! - ஒரு
காரியஞ் சொல்கிறேன் கேளுங்கடி!
வண்ணம் கலித்துறை சிந்துகள் தோடி
வாகான ராகம் பலவிசைத்து

மாணிக்கக் கும்மி அடியுங்கடி - ஐயன்
மாமலர் போற்றி நடியுங்கடி
வேணுவரங்கள் மிகக்கொடுப்பார் - சூரை
வெற்றிப் பதியில் தினமிருப்பார்

அஞ்சன மைகள் கரைந்தோட - தங்க
ஆபரணங்கள் அசைந்தாட
பஞ்சிறு மெல்லடி மெல்லியரே கூடிப்
பாங்காகப் பாடிக் கொண்டாடுங்கடி!

காதினில் கம்மல் பளீர் எனவே - செங்
கையில் வளையல் கணீர் எனவே
சோதிமூக்குத்தி மோகன மாலை அணி
தோகையரே நல் உல்லாசமதாய்

செங்கனி வாய்கள் இசைபாட - நெற்றியில்
சிந்தூரப் பொட்டுக் கரைந்தோட
சிங்களதேசத்து ரம்பை மாதுவந்தாள்
சேர்ந்து கும்மி அடியுங்கடி!

கழுத்தில் கண்டசர மிலங்க - நெற்றி
கஸ்தூரிப் பொட்டு மிகத்துலங்க
அழுத்தமாகவே சூரைப்பதி வளர்
ஐயனைப் பாடிக் கொண்டாடுங்கடி

முன்கை முதாரி[19] வளை குலுங்க - தங்க
மோதிர மிட்ட கை துலங்க
அங்கசனை[20] வெல்லும் பெண்ணரசே - நல்ல
அன்புள்ள மாணிக்கக் கும்மி சொல்வீர்!

கொங்கைக்கு இசைந்த ரவிக்கை தொட்டு- ராம
குச்சிலியச் சேலைகட்டி விட்டு
மங்களம் சொல்லியே சூரைப்பதி வளர்
மங்கையரே விளையாடுங்கடி!

ரம்பை திலோத்தமை மேனகையோ - மக
ராசர் மதிக்கும் குணரதியோ
கும்பஸ் தனங்கள் குலுங்கக் குலுங்கவே
கும்மி அடிப்போம் வாருங்கடி!

பாதச்சிலம்புகள் கொஞ்சிடவே - தங்க
பாடகந் தண்டை கலீரெனவே
மேதினியோர் புகழ் சூரைநகர் வளர்
மெல்லியரே விளையாடுங்கடி!

பத்தியுடன் விளையாடும் இந்நாள் - முறைப்
பதிவளர் கல்யாணி வந்தாள்
சித்திரமாயவள் பாடியாடல் சொலச்
சேட நாவாயிரம்வேணுமடி!

வேடிக்கையாய் விளையாடயிலே - கூடல்
மேவு மதனாபிசேகம் வந்தாள்
பாடிக்கொண்டாடி விளையாடுவாள் அதை
பார்க்கக் கண்ணாயிரம் வேணுமடி!

சொர்ணமுத்தே! அடி சோதிமுத்தே! - பசுந்
தோகை முத்தே! மகமாயிமுத்தே!
அன்னமுத்தே! அதிருபமுத்தே! - செவிட்
டையனைப் போற்றுவீர் இன்பமுத்தே!

துட்டப்பிசாசுகள் அண்டாது- வெடி
சூன்யம் பில்லி அணுகாது
மட்டுப்படாத் தெய்வத்து அதிபனைப் பாடி
மகிழ்ந்து கும்மி அடியுங்கடி!

வஞ்சனை சூது கொடிய ஏவல்- வந்து
வைத்தவர் நெஞ்சைப் பிளந்திடுவார்
தஞ்சமென்றோர்களை ஆதரிக்கும் எங்கள்
சாமியைப் போற்றிக் கொண்டாடுங்கடி!

அடைக்கலம் என்ற பொருள்கள்தனை - சோரர்[21]
அண்டாமல் காத்திடுஞ் சிங்கமடி!
கொடைக்கு முத்துக்குடையுடையோன் தனை
கும்பிட்டுக் கொண்டாடிப் பாடுங்கடி!

தீராத வல்வினை தீர்ப்பாண்டி - நல்ல
செல்வாக்கு உதவிக் கொடுப்பாண்டி
கோரும் வரத்தைத் தருவாண்டி நமக்கு
உற்ற துணையாய் இருப்பாண்டி!

மாயன் கரத்தில் உதித்தாண்டி- இந்த
மாநிலம் எங்கும் மதித்தாண்டி
தூயன் சொல்லுக்கு இசைத்தாண்டி - நல்ல
சூரைநகரில் உறைந்தாண்டி!

கன்னியர் எல்லோரும் வாருங்கடி - நல்ல
கர்த்தனை நெஞ்சினிலே கோருங்கடி
உன்னதமாகவே வாழிபாடி ஆட
ஒருங்கே மங்கையர் சேருங்கடி!

தாலஞ் செழித்துமிக வாழிமுத்
தாண்டி விநாயகன் தாள்வாழி!
மாலா இலங்கிய மாமலரோன் நாவில்
மகிழும் வாணிபதம் வாழி!

வன்னிய ராசனுக்காகவே - திரு
ஆலவாய் விட்டிங்கு சேரவே
கின்னரர் போற்று முறைசைப் பதிச்சொக்
கேசர் மீனாட்சி பதம்வாழி!

ஆழிசூழ் உலகந்தான் வாழி! - நல்ல
ஐந்துநிலை நாடு தான் வாழி!
நாளும்புகழ் முறையூர் வாழி! - பொன்
ஆண்ட கருப்பர் மிக வாழி!

கோலமிகு தேவர் போற்றி அருள்சேர் - திருக்
கோஷ்டியூர் மாதவன் தாள் வாழி!
மேலான கூடலில் தேடிச்சென்று - சிறை
மீட்டவர் பாதம் தினம் வாழி!

அன்பான சூரை நகர்தனிலே - நாளும்
அதிபதியாக வாழ்ந்திடுவோர்
இன்பமுடைய நாடுடையம்பலம்
என்றைக்கும் நீடுழி தான்வாழி!

சீருயர் தென் குழந்தாபுரி- மேவிய
செல்வன் கௌரி வல்லபேந்திரன்
தாருயர் புத்திரன் நமச்சிவாயத் துரை
தழைக்க எந்நாளும்தான் வாழி!

செப்பமுடன் ஒப்பந்தானே செலுத்திடும்
தீரன் கங்காகுல மாரனெனும்
அப்பாபிள்ளை மதிமந்திரி என்றைக்கும்
அன்பாகவே நித்தம் தான் வாழி!

மன்னர் புகழும் நமச்சிவாயத் துரை
மனமகிழுங் கனயோகன்
அன்னதரு மணிய முனியப்பனும்
அன்புடன் மெத்தவுத் தான்வாழி!

முத்தைய வேள முத்துராமலிங்கத்துரை
முகில்மகிழுங் கனயோகன்
புத்தியில் யூகி நமச்சிவாயத்துரை
பூபாலர் மெச்சிய நாகரிகன்

மைக்கண் மின்னார் மடலெழுத - வரு
மாறனாங் கங்கைக் குலதிலகன்
சொக்கலிங்கம்பிள்ளை சம்பிரதி நாளுந்
துலங்கவே நிதந்தான் வாழி!

ஆயர் குலங்கள் மிகவாழி! - சூரை
அம்பலகாரர் பல குடிகள்
நேயமதாக அனைவோரும் நன்றார்
நீடூழி காலமும் தான்வாழி!

வர்த்தகம் செய்யும் தொழில்வைத்து நீதி
வழங்குஞ் சூரைநகர் மிகுத்து
விருத்தி பெருகும் வணிகருமே நன்றாய்
வெற்றியால் எந்நாளும் தான்வாழி!

ஆதுலர் கொண்டாடும் சூரைப்பதிச் செவிட்
டையனைப் பூசனை செய்பவர்கள்
நீதமுடைய வல்வேடுவர் சுற்றங்கள்
நீடூழி காலமும்தான் வாழி!

முத்தமிழுக்கு இணைசேர் முறையூர்
முகுந்தன் சீர்குடி வேளாளன்
சத்தமுகில் இணைமாணிக்கன் ஈன்றருள்
சங்கிலி சொல்தமிழ் வாழியதே!

பாடிய பெண்களும் தான் வாழி!- புத்ர
பாக்கியம் பெற்று மிகவாழி!
சூடிய பாவலர் தான்வாழி!- ஐயன்
துய்ய சந்நிதி வாழியதே!

சுபம்

விளக்கக்குறிப்புகள்

1. குதிரை
2. யானை
3. அகரம்
4. உகரம்
5. அருளல்
6. குளிர்ச்சி சேர்
7. யானை
8. கடல்
9. பாக்கு
10. நஞ்சு
11. பாம்பு
12. பிரான்மலை
13. பொய்கை
14. வறியவர்
15. ஆண்யானை
16. கூட்டம்
17. தங்கம்
18. ஓர் ஊதுகுழல்
19. முன்கை அணி
20. மன்மதன்
21. பகைவர்



மலர்க் குழுவினர்



இராம. அருணகிரி




இரா. செல்வக்குமார்



இரா. சேது



சுப. பார்த்திபன்



இராம. இராசுத்தேவர்



சிங்கை ம. மந்திரி



அ. பாண்டியன்



சேதுபதி



வே. அழகப்பன்



கரு. பிச்சையா அம்பலம்



ச. சேதுராமன் அம்பலம்



கரு. சி. இராமநாதன்



சே. காந்திஅம்பலம்



நா. குழந்தைவேலு


திருப்பணிக் குழுவினர்


சொ.சி.இராமன்


கரு.பிச்சையா அம்பலம்


சொ.சாமிநாதன்



கரு.சி.இராமநாதன்


பெரி.பெருமாள்


சுப.சேது



அழ.பழனிச்சாமி


கரு.ராஜாமணி


சொ.பெரியசாமி


அ.கலையரசு


பெரி.முத்தழகு


மு.கதிரேசன்


திருப்பணிக் குழுவினர்



ம.அ.சி.சக்திவேல் அம்பலம்



ச.சேதுராமன்




ம.க.வே.அழகு



ம.வெ.மகாலிங்கம்



ச.க.பழ.இராமசாமி



ச.சி.சேவுகரத்தினம்




சி.பெரி.கணேசன்



சி.பு.கரு.சேவுகப்பெருமாள்



ச.பெ.சி.வேலுச்சாமி



தி.சி.செல்வசேகரன்



ச.க.பழ.கே.தமிழரசு



சு.மனோகரன்

உ

சிவமயம்

ஸ்ரீவடக்கு வாசல் செல்வி அம்மன் துணை ஸ்ரீசின்னியம்மன் துணை ஸ்ரீஇலங்கமுடைய அய்யனார் துணை



முன்னாள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், அ. காளாப்பூர் கிராமம், வடக்குத்தெரு, அறிவகம் இல்லத்தில் வசித்துவரும் வா.அ.கரு. வடிவேல் அம்பலக்காரர் வரைவது. சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானம், அறங்காவலர் இராணி சாஹிபா டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார் நிர்வாகத்திற்குட்பட்ட அ.காளாப்பூர் அருள்மிகு இலங்கமுடைய அய்யனார் திருக்கோவில் குடமுழுக்கு விழாவிற்கு வந்து அருள் பெற்ற பக்தகோடிப் பெருமக்களுக்கும், வர இருக்கும் பக்தகோடிப் பெருமக்களுக்கும் காளாப்பூர் மக்களின் சார்பாகவும், எங்கள் இல்லத்தின் சார்பாகவும் வணங்குகிறோம். வாழ்த்துகிறோம். நன்றி சொல்கிறோம். அருள் வணக்கம்.

சுதந்திரத் தாய்க்கு என்றும் முதல் வணக்கம் செய்திடுவோம். பாரதத்தின் அன்னைதனை பாரெல்லாம் வணங்கிடுவோம். உண்மையும், நேர்மையும் இரு கண்கள் என பாதுகாப்போம். உத்தமர்தாம் பிள்ளையென உறுதிதனை செய்திடுவோம். பல்மொழி, பல்தேசம், பாரதத்தின் முழுதேசம் என உறுதிகொள்வோம்.

உலகதேச மக்களுடன் என்றும் உறுதுணையாய் என்றும் உறவினராய் கைகொடுப்போம். தேசப்பணி புரிவதிலே இரவு, பகல் விழித்திருப்போம். நம்மை நம்பி வரும் பக்தர்களுக்கு என்றும் கைகொடுப்போம். நம்பிக்கை துணையிருந்தால், நம்பிக்கைத் துரோகி வந்தால் அதுதனை முறியடிப்போம். தேசமக்கள் எல்லோரும், சுகம் வாழ தேடித்தந்த சுதந்திரத்தைப் பாதுகாப்போம்.

உயிர் நாட்டுக்கு உடல் மண்ணுக்கு என உறுதிகொள்வோம். நம் பண்பாட்டைக் காத்துவரும் பரம்பரைக்கும் நன்றி சொல்வோம். எங்கள் ஊர், குக்கிராமம் என்றபோதிலும், எல்லாரும் ஒற்றுமையுடன் வழிபடுவோம். எங்களின் முன்னாள் மாவட்டம் பெற்றுத் தந்த ஜனாதிபதி அப்துல்கலாம் ஆண்ட மண்ணும் இதுதான். எங்களின் சிவகங்கைச் சீமை மருதுபாண்டியர் ஆண்ட மண்ணும் இதுதான். பாரிமன்னன் ஆண்ட மண்ணும் இதுதான். மண்ணின் பெருமைக்குச் சற்றுப் பெருமை சேர்க்கும் விதத்தில் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துத் துவக்கநாளில் முதல்முதலாக நியமனத் தலைவர் எனது பெரியப்பா வா.அ.பெரியணன் அம்பலம் ஆட்சிசெய்து வாழ்ந்த மண்ணும் இதுதான். ஸ்ரீ இலங்கமுடைய அய்யனார் குடமுழுக்கு விழாவிற்குச் சிறப்புமிக்க பணியாற்றிச் சென்ற எனது மருமகன் சொ.சி.இராமன் அவர்களுக்கு அருள்பணித் தியாகி என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கிறேன்.

மேலும் குடமுழுக்கு விழாவிற்கு நன்கொடை வழங்கிய அனைவருக்கும் பொன்னாடை அணிவித்துக் கௌரவப்படுத்திய திருப்பணிக்குழுத் தலைவர் சொ.சி.இராமன் மகனும், ஊராட்சிமன்றத் தலைவருமான திரு. இரா.செல்வக்குமார் அவர்களுக்கு நன்றியுடன் மனம் நிறைந்து பாராட்டுகிறேன்.



நன்றி தெரிவிக்கும் இல்லத்தார்கள்

வா.அ.கரு.வடிவேல் தேவர் _ அம்பலகாரர் வ.தேவசுந்தரி

வ.வாசுதேவன் சே. சாந்தி எம்.ஏ., தமிழ்.

வ. நீதிதேவன் **B.B.A, M.B.A**

வ.அமுதாதேவி எம்.ஏ., பி.எட்(தமிழ்) பழ.பழனியப்பன்

வ.கங்காதேவி **B.B.M, PGDCM** அழ.நாகராஜன்

வ.மகாதேவி **B.Sc. Nursing**

வ.குருதேவன் **D.C.E, ACAD B.E (ECE)**

3/70 அறிவகம், அ.காளாப்பூர்